2932

T.N.L.A. Debates

Official Report

VOL 23 NO 1

April 23, 1986

D
V211, 31 N86
N86.23.1
136477

வெளியீடு 3–2–1987 Issued 3-2-1987

905/86

2932

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை ஏப்ரல் 23, 1986 தொகுதி 23 எண். 1
Wednesday the April 23, 1986-Volume 23 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136477
சென்னை-600 008.
D
V211,31 N86
N86.23.1

உள்ளடக்கம்.

23-4-1986

| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu. | v—vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | ix—x |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல். | xi—xviii |
| 1. வினாக்கள்-விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 1—36 |
| 2. கவன ஈர்ப்பு : | |
| (அ) இராமநாதபுரத்தில் சீருடை தைத்ததற்கான கூலி முழுவதும் வழங்கப்படாமல் இருப்பது. | 36—42 |
| (ஆ) வேலையற்றோருக்கு வழங்கப் பெறும் உதவித்தொகை குறித்து. | 42—44 |
| 3. அறிவிப்பு : | |
| பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.) | 45 |
| 4. அரசினர் சட்டமுன்வடிவு : | |
| பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1986. | 45 |
| 5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) : | |
| (அ) கோரிக்கை எண். 24—தொழில்கள் (ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 45—161 |

மாண்புமிகு திரு. க. இராசாராம்

திரு. பெ. செங்கோட்டையன்
திரு. த. பழனி
திரு. பொன் முத்துராமலிங்கம்
திரு. எம். அண்ணாதாசன்

திரு. வி. பி. சிந்தன்
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்

திரு. கே. குப்புசாமி
திரு. மா. கதிர்வேலு
டாக்டர் கே. சமரசம்
திரு. கு. சுப்பராயன்
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
திரு. கே. அன்பழகன்

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

2932

நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொழிலாளர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல் மற்றும் பயண இசைவுச் சீட்டு.

5. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம் மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு.

10. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுபடுத்தல்.

11. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

13. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (ஆயத் துறை மற்றும் கைத்தறி துறை அமைச்சர்)—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

14. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

15. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

16. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி (வீட்டு வசதித் துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

17. மாண்புமிகு திரு. ஆறூர் பு. கோ. ஜகதீசன் (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராமக் குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.



18. மாண்புமிகு திரு. த. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

19. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

20. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

21. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

22. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர் , பூமிதானம் மற்றும் கிராமதானம்.

23. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப் பணித் துறை அமைச்சர்)—பொதுப் பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

24. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The **HON. DR. M. G. RAMACHANDRAN** **(Chief Minister)**—Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

2. The **HON. DR. V. R. NEDUNCHEZHIAN** **(Minister for Finance)**—Finance, Revenue, General Administration, Legislature, Elections, Statistics, Youth Service Corps, Ex-Servicemen and Labour.

3. The **HON. THIRU S. RAMACHANDRAN** **(Minister for Electricity)**—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The **HON. THIRU R. M. VEERAPPAN** **(Minister for Information and Religious Endowments)**—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits, Planning, Archaeology and Passport.

5. The **HON. THIRU K. RAJARAM** **(Minister for Industries)**—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

6. The **HON. THIRU P. U. SHANMUGAM** **(Minister for Local Administration)**—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

7. The **HON. THIRU C. ARANGANAYAGAM** **(Minister for Education)**—Education, Official Language, Tamil Development and Culture.

8. The **HON. DR. K. KALIMUTHU** **(Minister for Agriculture)**—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

9. **The HON. THIRU C. PONNAIYAN (Minister for Law)**—Law Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.

10. **The HON. DR. H. V. HANDE (Minister for Health)**—Health and Environmental Pollution Control.

11. **The HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)**—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

12. **The HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Food)**—Food, Price Control and Census.

13. **The HON. THIRU V. V. SWAMINATHAN (Minister for Excise and Handlooms)**—Prohibition excluding grant of Liquor Permits, Excise, Handlooms and Textiles.

14. **The HON. THIRU R. S[illegible]ARARAJAN (Minister for Nutritious Meals)**—Nutritious Mea[illegible]

15. **The HON. THIRU T. VEERASAMY (Minister for Commercial Taxes)**—Commercial Taxes.

16. **The HON. THIRU N. NALLUSAMY (Minister for Housing)**—Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

17. **The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN (Minister for Rural Industries)**—Rural Industries including Village, Cottage and Small Industries.

18. **The HON. THIRU T. RAMASAMY (Minister for Rehabilitation and Employment)**—Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees.

19. **The HON. THIRU A. ARUNACHALAM (Minister for Adi Dravidar Welfare)**—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.



20. **The HON. THIRU M. R. GOVENDAN (Minister for Backward Classes)**—Backward Classes and Fisheries.

21. **The HON. TMT. GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)**—Social Welfare including Women and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.

22. **The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)**—Khadi, Bhoodan and Gramdhan.

23. **The HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Public Works)**—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

24. **The HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation)**—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. சைதை சா. துரைசாமி
திரு. டி. ஆர். வேங்கடரமணன்
திரு. பொன் முத்துராமலிங்கம்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

இணைச் செயலாளர் :

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

துணைச் செயலாளர்கள் :

திரு. வெ. சீதாராமன், பி.காம், பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்கள் :

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள் :

திரு. ப. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.
திரு. மா. கு. ஜோசப், பி.ஏ.

### எஸ்டேட் அலுவலர்கள் :

திரு. சு. சேசவராம், பி.ஏ.
திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் :

திரு. கோ. வெங்கட்டராமன்.

### தலைமை நிருபர் :

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்) :

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், எம்.ஏ. (தமிழ்.)

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்
களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் என்னும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 1. | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 2. | அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி |
| 3. | அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 4. | அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5. | அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 6. | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7. | அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 8. | அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 9. | அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 10. | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 11. | அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 12. | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 13. | ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி திரு. | ஆண்டிமடம் |
| 14. | ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 15. | ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 16. | ஆறுமுகம், திரு. எச்.ஜி. | பென்னாகரம் |
| 17. | ஆறுமுகம், திரு. ஆர்.எஸ். | ஓட்டப்பிடாரம்(.செவ.) |
| 18. | ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | விருதுநகர் |
| 19. | ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 20. | ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 21. | ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 22. | ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 23. | இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 24. | இரத்தினம், திரு. எம்.வி. | பொள்ளாச்சி |
| 25. | இரத்தினவேலு, திரு. செ. | முசிறி |
| 26. | இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27. | இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. | இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல் |
| 29. | இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 30. இராசாங்கம், திரு. மு. | .. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி. தா. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 32. இராசாராம், திரு. க. .. | .. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | .. | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி.கே. .. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ்.என். | .. | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம்.ஜி. | | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே.எஸ்.எம். | | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. | .. | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | .. | பன்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ.மா. | | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப.ந. | | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ்.என். | .. | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. .. | .. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | .. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | | சத்தியமங்கலம் |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். .. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. .. | .. | கூடலூர் |
| 49. உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி. (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. .. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ). |
| 51. கணபதி, திரு. கே.ஆர். | .. | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. .. | .. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா.வே. | .. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பி. .. | .. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. .. | .. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர் கா. | .. | மதுரை கிழக்கு |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | .. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | .. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | .. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்—1 |
| 62. குப்புசாமி, திரு. கே. .. | .. | ஒட்டன்சத்திரம் |
| 63. குப்புசாமி, திரு. வே. .. | .. | செய்யாறு |
| 64. குமரகுருபர ராமநாதன் திரு. ச. | .. | விளாத்திகுளம் |
| 65. குமரி அனந்தன், திரு. | .. | ராதாபுரம் |
| 66. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | .. | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | .. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ஆர். | .. | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. .. | .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. .. | .. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். .. | .. | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | .. | மேல் மலையனூர் |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. எம். | | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | .. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. .. | .. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம் திரு. வி.எஸ்.டி. | .. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம் டாக்டர் கே. .. | .. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் (செ.வ.) |
| 82. சிந்தன், திரு. என்.எஸ்.வி. | .. | திருமங்கலம் |
| 83. சித்தன், திரு. வி.பி. .. | .. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆர். | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | .. | கூனூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. ந. .. | .. | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். .. | .. | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | .. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. .. | .. | தர்மபுரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 92. சின்னசாமி, திரு. வே. கு. .. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. .. .. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. .. .. | விளவன்கோடு |
| 96. சுப்பராயன், திரு. கு. .. .. | திருப்பூர் |
| 97. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். .. .. | திருச்செந்தூர் |
| 98. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 99. சுப்பிரமணியன், திரு. வி. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100. சுப்புராயர், திரு. சி. .. .. | கம்பம் |
| 101. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 104. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி.கோ. .. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 109. சேகர், திரு. கே.பி.கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 111. சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை |
| 112. சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி |
| 113. சௌந்திரராஜன், திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. .. | தியாகராயநகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. .. .. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே.எம். .. | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 122. தங்கவேலு, திரு. வி. .. .. | வால்பாறை (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. .. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. தனபால், திரு .ப. .. .. | சங்கரி (செ.வ.) |
| 126. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி.ஆர். .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 130. திருமலைச்சாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. .. | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன், திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி திரு. .. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ்.பி. .. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி.எம். .. | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. .. .. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. .. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ.மு. .. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். .. .. | திருச்சிராப்பள்ளி—2 |
| 145. நாச்சிமுத்து, திரு. கே.பி. .. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். .. | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு.கோ. .. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா.ந. .. | பல்லடம் |
| 151. பரிதி இளம்வழுதி, திரு. .. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. .. .. | ஆற்காடு |
| 153. பழனிச்சாமி, திரு. கா.செ. .. | காங்கேயம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 154. பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி.எச். | .. | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | .. | கலசப்பாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு. | | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | .. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. .. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வி. | .. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. | .. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி. | .. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. .. | .. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. .. | .. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | .. | நிலக்கோட்டை (செ.வ) |
| 170. பிச்சை, திரு. மு. .. | .. | அருப்புக்கோட்டை |
| 171. பிரணவநாதன், திரு. அ. | .. | கடலாடி |
| 172. பிரேம்குமார், திரு. ஆ. | .. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | .. | அரியலூர் |
| 174. புஷ்பராசு, திரு. த. .. | .. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம் |
| 177. பெருமாள், திரு. தெ. | .. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | | கன்னியாகுமரி |
| 179. பொன் முத்துராமலிங்கம், திரு. | | மதுரை (மேற்கு) |
| 180. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | | பழனி (செ.வ.) |
| 181. பொன்னுசாமி, டாக்டர் அ. | | பெருந்துறை |
| 182. பொன்னுரங்கம், திரு. ப. | .. | ராயபுரம் |
| 183. பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| 184. மணவாளன், திரு. எஸ்.பி. | .. | திருப்பத்தூர் |
| 185. மணிமாறன், திரு. மா. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 186. மலர்மன்னன், திரு. அ. | .. | திருச்சிராப்பள்ளி—1 |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 187. மனோகரன், திரு. கி. | .. | புரசைவாக்கம் |
| 188. மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | | திருநாவலூர் |
| 189. மாசிலாமணி, டாக்டர் ந. | .. | ஜெயங்கொண்டான் |
| 190. மாதவன், திரு. செ. | .. | திருப்பத்தூர் |
| 191. மாதையன், திரு. யு.பி. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 192. மாரிமுத்து, திரு. த. .. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 193. மாரிமுத்து, திரு. மு. | .. | திருப்பரங்குன்றம் |
| 194. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | .. | வேதாரண்யம் |
| 195. முகம்மது கனி, திரு. ஜே. | .. | புதுக்கோட்டை |
| 196. முகம்மது சலீம், டாக்டர் த. | .. | பெரியகுளம் |
| 197. முசிறிபுத்தன், திரு. பி. | .. | குளித்தலை |
| 198. முத்துசாமி, திரு. சு. .. | .. | ஈரோடு |
| 199. முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். .. | .. | உசிலம்பட்டி |
| 200. முத்துவேல், திரு. கே. | .. | முதுகுளத்தூர் |
| 201. முத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி |
| 202. முருகானந்தம், திரு. டி.என். | .. | செஞ்சி |
| 203. முனிரத்தினம், திரு. இரா. சா. | | கும்மிடிப்பூண்டி |
| 204. யசோதா, திருமதி டி. .. | .. | ஸ்ரீபெரும்பதூர் (செ.வ.) |
| 205. ரகுமான்கான், திரு. அ. | .. | சேப்பாக்கம் |
| 206. ரமணி, திரு. கு. .. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ.எஸ். | .. | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம.நா. | .. | வானூர் (செ.வ.) |
| 209. ராமன், திரு. கி. .. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. | .. | போளூர் |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். | .. | கோவில்பட்டி |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். | .. | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி பி. .. | .. | அவினாசி (செ.வ.) |
| 214. வடிவேல், திரு. கு. .. | .. | கரூர் |
| 215. வளர்மதி, திருமதி பா. | .. | மயிலாப்பூர் |
| 216. விஜயபாலன், திரு. என். | .. | பூம்புகார் |
| 217. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | | வீரபாண்டி |
| 218. வீரானம்பலம், திரு. க.வெ. | .. | மேலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 219. வீரய்யன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 220. வீராசாமி, திரு. தா. .. .. | ஒரத்தநாடு |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர் |
| 222. வெங்கடாசலம், திரு. அ. .. | ஆலங்குடி |
| 223. வெங்கடாசலம், திரு. கி. .. | லால்குடி |
| 224. வெங்கடாசலம், திரு. டி.எம். | பரகூர் |
| 225. வேங்கடரமணன், திரு. டி.ஆர். | தென்காசி |
| 226. வேணுகோபால், திரு. எஸ். .. | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் |
| 227. வேணுகோபால், திரு. கே .வி. | தல்லி |
| 228. வேலு, திரு. கூடலூர் இ.வி. .. | தண்டராம்பட்டு |
| 229. ஜகதீசன், திரு. ஆனூர் பு.கோ. | செங்கல்பட்டு |
| 230. ஜான் வின்சென்ட், திரு. மு. .. | நாங்குநேரி |
| 231. ஜெகதீசன், திரு. சு. .. .. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ், திரு. ஜி.கே. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே—அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப்—அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986 ஏப்ரல் 23, புதன்கிழமை

சித்திரை 10, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

" நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு ".

தொழில் செய்கின்றவன் கோணாதிருக்கும் வரையில் உலகம் கெடாது. ஆகையால் மன்னன் நாள்தோறும் அவனுடைய நிலைமையை ஆராய வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### போளூர் பேரூராட்சி

*534—(வினா எண். 4464) திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆம். போளூர் போன்ற பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றியமைப்பது சம்பந்தமான செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஊராட்சி மன்றத் தேர்தல்களுக்கு முன்னாலே இந்தப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகள் பிரிக்கப்பட்டன. இந்த பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகள் பிரிக்கப்படுவதற்கு அரசு ஏதாவது கால வரம்பு நிர்ணயித்திருக்கிறதா அல்லது இப்போது பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகள்

[1986 ஏப்ரல் 23

நடந்து கொண்டிருக்கும்போதே இது போன்ற பிரேரணைகள் கொடுக்கலாமா? ஏனென்று சொன்னால் நானே அமைச்சர் அவர்களிடத்திலே மனுக்கள் கொடுத்து சில பஞ்சாயத்துக்கள் பிரிந்தபோதும்கூட மற்ற சிலவற்றைப் பிரிக்கவேண்டுமென்று சொல்கிறபோது, தேர்தல்கள் வந்துவிட்டன, ஆகவே அவைகளை நிறுத்தி வையுங்கள் என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். ஆகவே இதுபற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலுக்கு முன்பு ஊராட்சி மன்றங்களையோ அல்லது பேரூராட்சிகளையோ நகராட்சிகளாக ஆக்குவதோ, ஊராட்சிகளை பேரூராட்சிகளாக ஆக்குவதோ, இதுபோன்ற காரியங்கள் விதிமுறைகளுக்கு ஏற்றபடி நாம் செய்திருக்கலாம். தேர்தல் முடிந்து விட்டது. முடிந்ததற்குப் பிறகு பேரூராட்சிகளை நகராட்சிகளாக, மாற்றுவது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் விடையிலே இப்போது நான் சொன்னேன். அப்படி பரிசீலித்து முடிவெடுக்கும்போது இப்போதுள்ள—தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற—பேரூராட்சிகள் என்ன செய்யும் என்பதைப்பற்றி அரசு சட்டத்துறையைக் கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டி வரும். ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால், ஊராட்சிகளைப் பிரிப்பதற்கு அந்த ஒன்றியங்கள் தீர்மானம் நிறைவேற்றவேண்டும். பிறகு சட்டப்படி நடக்க வேண்டிய சடங்குகள் எல்லாம் நடந்து முடிந்தால், அந்த இடத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் மறுபடியும் அரசு யோசித்து முடிவு எடுக்கலாம்.

## அம்பத்தூர் நகரியம்

535—(*வினா எண். 8802) திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அம்பத்தூர் நகரியத்தை, நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?



1986 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கு. ரமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அம்பத்தூர் நகரியத்தை ஒரு நகராட்சியாக மாற்றுவதில்லை என்று சொன்னார்கள். ஆனால், அம்பத்தூர் பெரிய தொழிற்சாலைகளும், நிரம்ப ஜனத்தொகையும் இருக்கக்கூடிய இடமாகும். சிறிய நகர பஞ்சாயத்துக்கள் கூட சில இடங்களில்,—உதாரணமாக பெரியார் மாவட்டத்திலே சத்திய மங்கலம் ஒரு முனிசிபாலிட்டியாக இருக்கிறது. இது அம்பத்தூர் நகரியத்தில் பாதி கூட இல்லை. அப்படி இருக்கும்போது என்ன 'கிரைடீரியா' வைத்து இப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன? இந்த அம்பத்தூரை ஏன் ஒரு நகராட்சியாக ஆக்கக் கூடாது ? அதை நகராட்சியாக ஆக்கினால் அரசுக்கு வருமானம் ஜாஸ்தியாக வரும் என்பதாலும், ஒரு நல்ல நிர்வாகத்தை நடத்த முடியும் என்பதாலும் இதை ஏன் அரசு மறுபடியும் பரிசீலனை செய்யக் கூடாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரியத்தை நகராட்சியாக ஆக்குவதால் அரசாங்கத்திற்கு ஒன்றும் வருமானம் வரப் போவது கிடையாது. எந்த வருமானமும் கிடையாது. ஆனால் நகரியத்தை நகராட்சியாக ஆக்குவது என்பது இப்போது இல்லை என்று நான் சொன்னேன். இது பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த ஒரு இடமாக இருக்கிறது. அங்கே தேர்தல்கள் வந்தால் டென்ஷன் அதிகமாகி சுமுகமாக இருக்கின்ற சூழ்நிலைகள் மாறுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. அதுவுமில்லாமல் இது போன்று வளர்ச்சி அடைய வேண்டிய பகுதிகளில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக்கொண்டு இந்த நகரியத்தை இயங்க வைத்திருக்கிறோம். மேட்டூர் இருக்கிறது. அதேபோன்றுதான், அம்பத்தூர், ஆவடி இவைகளையெல்லாம் நகரியங்களாக வைத்திருக்கிறோம். நகரியங்களாக வைத்திருப்பதன் நோக்கம்,—அவை தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் நிறைந்த பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், அவைகள் நகரியமாக இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர வேறு ரணம் எதுவும் கிடையாது.

[1986 ஏப்ரல் 23

இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு என்பதையும், இந்தத் திட்டப் பணி எவ்வளவு கால அளவுக்குள் முடிக்கப்பட இருக்கிறது என்ற அந்த விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியுடன் நடைபெறக் கூடிய இந்தத் திட்டம் சேலம் நகராட்சியினுடைய குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தோடு மற்றும் 11 நகரங்களுக்கான குடிநீர் வழங்குகின்ற திட்டமாகவும், 281 ஊரகங்களுக்கு குடிநீர் வழங்குகின்ற திட்டமாகவும் அமல்படுத்தப்பட இருக்கிறது. அதோடு தேவூர், அரசராமணி பேரூராட்சிகள் துணைத் திட்டமும் இதிலே அடங்குகிறது. இதனுடைய மொத்த திட்ட மதிப்பீடு ரு. 3,768.47 இலட்சங்கள் ஆகும். இதுஇரண்டரை ஆண்டு காலத்திற்குள் முடிக்க ப்படவேண்டும் என்ற வகையில் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

### தாம்பரம்—பம்மல் பகுதிகளில் குடிநீர்ப் பணிகளை விரிவுபடுத்துதல்.

539—(*வினா எண். 4073 ) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரம்-பம்மல் [illegible] வில் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செய[illegible] அரசின் பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் திட்டப்பணிகள் எப்பொழுது தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ): பம்மல் பகுதி ஏற்கெனவே ஆலந்தூர்—பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதுள்ள தாம்பரம் பகுதிக்கான குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்திற்கான ஆய்வுத் தொகையை செலுத்துமாறு தாம்பரம் நகராட்சியை தமிழ்நாடு குடிநீர் வடிகால வாரியம் கோரியுள்ளது. ஆய்வுத் தொகை செலுத்தப்பட்டவுடன் திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



1986 ஏப்ரல் 23]

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சிறப்பு குடிநீர் திட்டத்திற்கு ஆய்வுக் கட்டணத்தைக் கட்டமுடியாத சூழ்நிலையில் தாம்பரம் நகராட்சி நீண்ட நாட்களாக இருந்தது. கடந்த 9—4—1986-ஆம் தேதி அன்று ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபாயை ஆய்வுக் கட்டணமாகக் கட்டி விட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக் கட்டணம் கட்டிவிட்ட காரணத்தால் இந்தத் திட்டப் பணியை உடனடியாக துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி கட்டணம் கட்டப்பட்டதாக என்னிடத்தில் நேரிலே தெரிவித்தார்கள். ஆனால் அரசுக்கு இன்னும் அந்தத் தகவல் வரவில்லை. இருந்தாலும் தாம்பரம் நகராட்சியினுடைய தேவையை, நிலைமையை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னை நேரிலே அழைத்துச் சென்று உணர்த்தியிருக்கிறார்கள். வெகு விரைவில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மல் பேரூராட்சி குடிநீர் திட்டத்தை 7 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள் என்ற நிலையில் வகுத்தார்கள். ஆனால் இன்றையதினம் 75 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் பெருகி விட்ட அந்த இடத்தில் குடிப்பதற்கு கிணற்றிலிருந்தோ அல்லது வேறு நீரையோ அந்த ஊரிலே எடுத்து உபயோகிக்க முடியாது. காரணம் கிட்டத்தட்ட 60 தொழிற் பேட்டைகள், தோல்பதனிடும் தொழிற் பேட்டைகள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அதனுடைய கழிவு நீர் எல்லாம் அந்தப் பகுதிகள் பூராம் உள்ள தண்ணீரை நச்சு நீராக ஆக்கியிருக்கின்ற காரணத்தால், 7,000 மக்களுக்கு குடிநீர் கொடுக்கும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, உடனடியாக நடவடிக்கை எடுத்து 75,000 மக்களுக்கு நீர் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அந்தப் பகுதி பம்மல், ஆலந்தூர், பல்லவபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. விடுபட்ட பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் அமைக்கின்ற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 1984-ல் அதற்காக அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. அதற்காகும் மொத்த செலவான ரூபாய் 1,70,600-ல் ரூபாய் 1,30.000-ஐ மட்டும் பேரூராட்சி கட்டியிருக்கிறது. மீதித் தொகையைக்

கட்டவேண்டுமென்று அந்தப் பேரூராட்சியிடம் குடிநீர் வாரியம் கேட்டிருக்கிறது. அந்தப் பணம் வந்தவுடன் அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

பொன்னமராவதி, திருமயம் குடிநீர்த் திட்டங்கள்

540—(*வினா எண். 4600) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி, திருமயம், அரிமளம் ஆகிய நகரங்களுக்கு குடி தண்ணீர் வசதியை அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சி குடிநீர்த்திட்ட ஆய்வுப் பணிக்காக செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 1.35 இலட்சம். ஆனால் பேரூராட்சி ரூபாய் 5,500 மட்டுமே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியுள்ளது. பாக்கியுள்ள தொகை ரூ. 1,29,500 செலுத்தப்பட்டபின் குடிநீர்த்திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருமயம் ஊராட்சிக்கான குடிநீர்த்திட்டம் ஏதும் இந்த நிதியாண்டில் இல்லை.

அரிமளம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம் ரூபாய் 47.45 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதி பேரூராட்சியினுடைய பங்குத் தொகை ரூபாய் 5,000 தான் கட்டப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பேரூராட்சியிடம் நிதியில்லாத நிலையிலும், அதனுடைய பங்குத் தொகையான ரூபாய் 1,35,000-ஐ கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அதை அரசு கடனாகக் கொடுத்து அந்தக் குடிநீர்த் திட்டத்தை விரைவிலே செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா எனவும், அரிமளம் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் திட்டம் எப்போது செயல்படும்? ஏனென்றால் புதுக்கோட்டை மாவட்டத்திலே, திருமயம் தொகுதியிலே இந்த இரண்டு பேரூராட்சிகளான அரிமளம், பொன்னமராவதி ஆகிய பேரூராட்சிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, விரைவிலே இந்தத் திட்டத்தை அரசு மூலமாக எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பொன்னமராவதி திட்டத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஆய்வுக் கட்டணத் தொகையை இப்போது கட்டுவதற்கு நிதி வசதி இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரூராட்சி தீர்மானம் போட்டு நிறைவேற்றி, வாரியத்திற்கு அனுப்பினால், அதை வாரியம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும். அரிமளம் பேரூராட்சித் திட்டம் வாரியத்தினுடைய ஆய்வில் இருக்கிறது. திட்டப் பணிகள் வெகு விரைவிலே மேற்கொள்ளப்படும்.

திரு. த. புஷ்பராசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியது போல் விரைவிலே அந்தத் தீர்மானத்தைப் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்வேன் என்று சொல்லி, அத்தோடு திருமயம் சாதாரண கிராமப் பஞ்சாயத்தாக இருக்கிறது. அந்தத் தொகுதியின் தலைநகராகவும் இருக்கிறது. திருமயத்திற்குப் பக்கத்திலே பாம்பாற்றிலிருந்து குடிநீர் வழங்குகின்ற திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செயல்படாமல் இருக்கிறது. மேலும் அந்தத் திட்டம் என்னவாயிற்று? அந்தத் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் எடுத்துக் கொள்வதற்கில்லை என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. வே. கு. சின்னசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்கின்ற நேரத்தில், இது போன்று நிறையப் பேரூராட்சிகள் ஆய்வுக் கட்டணத்தைக் கட்ட முடியாத நிலைமையில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்களிடம் குறிப்பிட விரும்புவது, ஆய்வுக் கட்டணத்தை கடனாகக் கொடுத்து அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நேற்று கூட டி.டி.சி. மீட்டிங்கில் பெரியார் மாவட்டத்திற்கு அரசு ஆணைகள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆக குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கான நடவடிக்கை எடுத்து, அரசு ஆணை பிறப்பித்து, இதுபோன்று தமிழகத்திலுள்ள அனைத்துப் பேரூராட்சிகளையும் எடுத்து, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே; இது அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது.

[1986 ஏப்ரல் 23

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே நான் இந்த மன்றத்திலே இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கொடுக்காததால் பல திட்டங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்கிறபோது, இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸை கண்டிப்பாக புராஜக்ட் காஸ்ட்டோடு சேர்க்கவேண்டுமென்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பை அரசு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆண்டு ஒன்றாகி விட்டது. தண்ணீர்ப் பஞ்சத்திலே தமிழகம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே விரைவாக அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்டாமல் பல திட்டங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆய்வுக் கட்டணம் கட்டமுடியாத நிலையில் பல பேரூராட்சிகள் இருப்பதால் பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் நிறைவேற்ற இயலாமல் இருக்கின்றன என்பது உண்மைதான். அதை நாம் கண்டறிந்து விரைவில் அப்படிப்பட்ட பேரூராட்சிகளை நகர்ப்புற பேரூராட்சிகள், கிராமப்புறப் பேரூராட்சிகள் என்று பிரித்து கிராமப்புறப் பேரூராட்சிகளில் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்கு முக்கியத்துவம் தருவதைப்போல் முழு மானியத்தையும் நாம் கொடுத்து செய்து கொண்டிருக்கிறோம். நகர்ப்புற பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் அந்தப் பேரூராட்சிகள் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்புவார்களானால் அந்தத் தீர்மானங்களை அடிப்படையாக வைத்து ஆய்வுக் கட்டணத்தை அந்தத் திட்டத்திற்கு ஆகிற மொத்தச் செலவிலேயே சேர்க்க அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : தலைவர் அவர்களே, சுமார் 140 லெட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்து மேலப்பாளையம் குடிநீர்த் திட்டத்தை கடந்த ஆண்டே நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு கூட நிறைவேற்றாமல் காலதாமதம் ஆகிறது. கோடை காலத்தில் இருக்கின்ற நிலையை முன்னிட்டாவது அதைத் துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.



1986 ஏப்ரல் 23]

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, 30 இலட்சம் ரூபாய் இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் அம்பத்தூர் நகராட்சியிலிருந்து வசூல் செய்ததற்குப் பிறகும்கூட, 'டுவாடுபோர்ட்.' கடந்த 5 ஆண்டு காலமாக அந்த வேலையைச் செய்யாமல் கிடப்பிலே போட்டிருக்கிறது. அதைப்போலவே போரூரிலும் இலட்சக்கணக்கான ரூபாய் இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் வசூல் செய்து 3 ஆண்டுகள் ஆகியும்கூட, அந்த வேலை செய்யப்படாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. ஆகவே, இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்டியுள்ள இடங்களிலே விரைவிலே இந்தத் திட்டங்களை அமல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பிரச்சினை ஆய்வுக் கட்டணத்தோடு நிற்பதில்லை. பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நீர் ஆதாரத்தைக் கண்டுபிடிப்பது, அந்த நீர் ஆதாரத்தில் உள்ள நீர் குடிக்கத் தகுந்த நீராக உள்ளதா, அந்த நீரைக் கொண்டுவருவது போன்ற பல சிக்கல்கள் தொழில் நுட்பச் சிக்கல்கள் அதிலே இருக்கின்றன. அந்தக் காரணங்களால்தான் அம்பத்தூர் பகுதியில் தாமதம் ஏற்பட்டது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## ஆரஞ்சு பழத் தோட்டங்கள்

541—(*வினா எண் 4423) திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆரஞ்சு பழத் தோட்டங்கள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) எழாது.

## சிவலப்பேரி—பாளையங்கோட்டை இணைப்பு பாலம்.

348—(*வினா எண் 3845) திரு. ஆர். எஸ். ஆறுமுகம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—தாமிரபரணி ஆற்றுக்கு குறுக்கே சிவலப்பேரி—பாளையங்கோட்டையை இணைக்கும் பால வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இப்பால வேலை 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இப்பால வேலை ஆரம்பிக்கப்பட்டபொழுது இதன் முதல் மதிப்பீடு ரூ. 22.55 இலட்சம் ஆகும். பின், இப்பாலத்தை தாமிரபரணி ஆற்றுக்கு அருகே ஓடும் சிற்றாற்றிலும் விரிவுபடுத்தப்பட்டதால் இதன் மதிப்பீடு ரூ. 44.25 இலட்சங்கள் ஆகியுள்ளது.

## மோட்டார் வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலி எழுப்பும் கருவிகள், விளக்குகள்.

349—(*வினா எண் 6064) திரு. க. சோலைராசு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்துகளிலும் லாரிகளிலும் பொருத்தப்பட்டுள்ள பயங்கர ஓசை எழுப்பும் ஹாரன்கள் மற்றும் கண்களைக் கூசச் செய்யும் ஒளி விளக்குகளை அகற்ற அரசு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1940 ஆம் ஆண்டைய தமிழ்நாட்டு இயக்கூர்திகள் விதிகளின்படி எந்தவொரு இயக்கூர்தியிலும் கண்களைக் கூசும் வகையில் விளக்குகளையும் மற்றும் உரத்த ஒலி எழுப்பும் ஒலிப்பான்களையும் உபயோகப்படுத்தக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதிகளை மீறுபவர்கள் இயக்கூர்திகள் சட்டத்தின் பிரிவு 112-இன்படி தக்க தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, சட்டத்திலே கடுமையான விதிகளை இயற்றி ஒளி விளக்குகளையும்ஹாரன்களையும் தடைசெய்கிற நிலைமை இருந்தாலும் இன்றைக்கு அதிகமான விபத்துக்கள் அதனால்தான் ஏற்பட்டுக்கொண்





டிருக்கின்றன என்பதை உணர்ந்து அதிகமாக ஒளிவீசும் விளக்குகளையும் அதிகமாக ஒலி எழுப்பும் ஹாரன்களையும் பொருத்திக் கொண்டிருக்கிற பேருந்துகளின் பெர்மிட்டுகளை ரத்து செய்யும் முறையைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, குறைபாடுகள் குற்றங்களைப் பொறுத்து என்ன தண்டனை என்பதைப் பற்றி விதிகளை வகுத்து இருக்கிறோம். அந்த அளவுக்குத்தான் நாம் நடவடிக்கை எடுக்கலாமே தவிர பெர்மிட்டுகளைத் ரத்து செய்கிற அளவுக்கு நாம் போக முடியாது. விபத்துக்களைத் தடுக்க வேண்டுமென்ற முறையிலே இனிமேல் கடுமையான தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற ஒரு முடிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த 21 ஆம் தேதி நடந்த கூட்டத்திலே முடிவு எடுத்தார்கள். அந்த அடிப்படையில், இனிமேல் அவையெல்லாம் கடுமையாகக் கவனிக்கப்படும்.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, என்னதான் நாம் சட்டம் போட்டுத் தடுத்தாலும் அவர்கள் திட்டம்போட்டு அந்தச் செயல்களைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களைக் கண்காணிக்கிற காவலர்கள் சரியான முறையில் கண்காணிக்காவிட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதை முறையாக அவர்கள் செயல்படுத்தவில்லையென்றால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாம் சில முறைகளை வைத்து இருக்கிறோம். அதுவும் கடைப்பிடிக்கப்படும். இனிமேல் அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற வேண்டுமென்ற முறையிலே அந்த அதிகாரிகளை அரசு முடுக்கிவிட இருக்கிறது. நிச்சயமாக இவைகள் தடுத்து நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கையாக இந்த ஹாரனைப் பொருத்துவதால் மட்டும் சப்தம் அதிகமாக வருகிறது என்பது இல்லை. ஏற்கனவே அதில் உள்ள இயந்திரம் இயங்கும்பொழுது சைரன் மூலமாக அதிகமாக சப்தம் வந்து பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கிறது. மேலும் அந்த வண்டிகளிலிருந்து வெளிவருகின்ற புகையைச் சுவாசிக்கின்ற காரணத்தால் உடல் நலமும் கெட்டு விடுகிறது. ஆகவே, தனியார் கண்டு பிடித்திருக்கின்ற "எக்ஸாஸ்ட் பைப்" என்ற இயந்திரத்தைப் பொருத்தினால் இயந்திரங்களும் அதிக நாட்களுக்கு உழைக்கின்றன ; சப்தம் வருவதும் குறைகிறது. ஆகவே, அந்த இயந்திரத்தை அரசு

[1986 ஏப்ரல் 23

வண்டிகளில் பொருத்துகின்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அப்படி இல்லையென்றாலும்கூட, இனிமேலாவது பொருத்துகின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த சப்தம் என்பது ஒவ்வொரு இடத்திற்கும் மாறுபடுகிறது. உதாரணமாக, உங்களுடைய சப்தம் ஒரு மாதிரியாக இருக்கிறது; என்னுடைய சப்தம் வேறு ஒரு மாதிரியாக இருக்கிறது. ஆகவே, இதற்காக மெஷினைப் பொருத்துவது என்பது எதிர்காலத்திலே யோசிக்கப்பட வேண்டிய விஷயம். அதிகமாக புகை வரக்கூடாது என்பதற்காக அதிகமாக அக்கறை காட்ட வேண்டுமென்று சொன்னால் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஹாரனைப் பொறுத்த வரையில், அதிகமாக ஒலி எழுப்புகின்ற கருவிகளைப் பொருத்தக் கூடாது, பயமுறுத்தும் அளவில் ஒலி எழுப்புகின்ற ஹாரனைப் பொருத்தக் கூடாது என்று சில விதிகள் இருந்தாலும்கூட, பொதுமக்களும் ஒத்துழைப்பைத் தர வேண்டும். எவ்வளவு பெரிய ஹாரனை வைத்து அடித்தாலும் மக்கள் ஒதுங்காமல் சென்றால் ஓட்டுநர்தான் என்ன செய்வார் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். எனவே, இரண்டு பக்கமும் சேர்ந்து முடிவெடுத்தாக வேண்டிய விஷயமாக இது உள்ளது. (குறுக்கீடு) புகையைப் பற்றி ஏற்கனவே சொன்னேன். எதிர்காலத்தில் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒலியை அதிகமாக எழுப்புகின்ற ஹாரனை நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலிருந்து எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும், இரவில் குடித்துவிட்டு ஓட்டுவதால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், இதற்கு முன்பெல்லாம் அந்த விளக்குகளில் அரைப் பகுதியைக் கருப்பு வர்ணம் தீட்டி மறைப்பார்கள். ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. அதுமட்டுமல்லாமல் பெரும்பாலான ஓட்டுநர்கள் எதிரில் வண்டிகள் வரும்பொழுது விளக்குகளை அணைத்துக் காட்டுவார்கள். அதுவும் இப்பொழுது கடைப்பிடிக்கப்படுவதில்லை. இருந்தாலும் கூட சாலைப் போக்குவரத்துக் காவலர்கள் என்று வழி நெடுக இருந்தாலும், அவர்கள் இதைத் தடுத்து வழக்கு போடுவதில்லை. ஆனால், வேறு எதற்காகவோ அதைத் தடுத்து நிறுத்தி அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்காணித்து இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த விளக்குகளில் முன் பகுதியில் கறுப்பு வர்ணம் பூசப்பட வேண்டும் என்ற ஒரு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது சில வண்டிகளில் அப்படி இல்லாமல் இருக்கிறது. இனிமேல் அதைக் கடுமையாகப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சாலை விதிகளை யார் மீறுகிறார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அந்தச் சாலை விதிகளைக் கடைப்பிடிக்க வைக்க வேண்டுமென்ற உணர்வில் அரசாங்கம் இப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. இதன் காரணமாகத்தான் முதல்ரவர்கள் அந்தக் கூட்டத்தை அவர்கள் தலைமையில் நடத்தினார்கள். இதிலே இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. இப்படி நடவடிக்கைகளை எடுக்கின்றபொழுது, தவறாகப் பாதையைக் கடந்து சென்றால் இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுக்கிறார்களே, என்று நாளைக்கு யாரும் சொல்லிவிடக் கூடாது. அவர்களுடைய பாதுகாப்புக்காக - பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையிலே, சாலை விதிகளைப் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்ற உணர்வோடு கொஞ்சம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க இப்பொழுது அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தந்தால் இந்தப் பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்க முடியும். ஹாரனைப் பற்றிய கருத்தைச் சொன்னார்கள். ஹாரன் இருப்பது என்பது வேறு; அதை எந்தெந்த இடங்களில் பயன்படுத்த வேண்டும். எந்தெந்த இடங்களில் பயன்படுத்தக் கூடாது என்பதற்கு வரையறைகள் இருக்கின்றன. அந்த ஹாரன் இல்லாமல் இருந்தால் அதன் காரணமாகச் சில விபத்துக்கள் கூட ஏற்படக்கூடும். சிலவிடங்களில் விபத்தைத் தவிர்ப்பதற்காக அந்த ஹாரன்கள் பயன்படுகின்றன. ஆகவே, இருப்பதைத் தடுக்க வேண்டிய அவசியமில்லை. எங்கே பயன்படுத்தக்கூடாதோ அங்கே பயன்படுத்தாமல் இருப்பதில் கண்டிப்பாக இருக்கும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மலைப் பகுதிகளில் பேருந்துகள் செல்லும் பொழுது அங்கே மிஸ்ட் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் ஓட்டுநர்கள் வழியைப் புரிந்து கொள்ளாது பாதையை விட்டு, விலகிப் போவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அதைத் தடுக்கும்பொருட்டு, வாகனங்களில் - குறிப்பாக 'பஸ்', லாரி போன்ற வாகனங்களில், மலைப் பகுதிகளில் குறிப்பாக ஊட்டி கொடைக்கானல், என்னுடைய தொகுதியில் உள்ள திம்பம் போன்ற இடங்களில் அந்த வாகனங்களில் எல்லோ-மஞ்சள் விளக்கு கண்டிப்பாகப் பொருத்தப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அவசியத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சில தனியார் வாகனங்களில் ம்யூசிக்கல் ஹார்ன்ஸ் பொருத்தப்பட்டு வழியில் செல்பவர்களின், நடைபாதையில் செல்பவர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் அதிகமாக ஓசைப்படுத்திச் செல்கிறார்கள். எனவே அந்த ம்யூசிக்கல் ஹார்ன்ஸ் பொருத்தி உபயோகப்படுத்துவதை அறவே ஒழிக்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா? அதேபோல் சில வாகனங்களில் ரிவர்ஸ் கியர் போடும்போது சில சப்தங்களை எழுப்புகிற மாதிரி ஹார்ன்ஸ்களை பொருத்தியிருக்கிறார்கள். அத்தகைய ஹார்ன்களையும் ஒழிக்கிற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக வண்டிகளை ஷெட்டிலேயே வைத்து பூட்டிவிடலாம். ரிவர்ஸில் போவது என்று வைத்திருப்பது பாதுகாப்பிற்காக. ''ரிவர்ஸ் கியர்'' போடும்போது சவுண்ட் வந்தால் நடந்து போகிறவர்கள் அதைக் கேட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஹார்னைப் பொறுத்தவரையில் அதிகச் சப்தம் இல்லாமல் பொது மக்களுக்கு பெரிய பிரச்னை இல்லாத வகையில் இருக்க வேண்டும் என்பதுதான் நம் நோக்கம். அது அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் இங்கே இருக்கிற பிரச்னை—ம்யூசிக்கல் ஹார்ன்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதை வைத்தாலாவது ம்யூசிக்கல் ஹார்ன் என்ன என்று கொஞ்சம் திரும்பிப் பார்த்து ஒதுங்கிப் போக முடியும் என்ற உணர்வோடு அதை வைத்திருப்பார்கள். எனவே பொது மக்கள் இதில் ஒத்துழைப்பு தருவார்களானால் இந்தப் பிரச்னை முழுவதுமே இல்லாமல் போய் விடும். தேவை இல்லாமல் யாரும் ஹார்ன் அடிக்கமாட்டார்கள். நடைபாதையில் போகக் கூடியவர்கள் பற்றிச் சொன்னார்கள். இப்போதுள்ள பிரச்னை, ரோடுகளில் நடந்து போயக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் ஒதுங்க வேண்டும் என்பதுதான் பிரச்னை. எல்லோரும் வண்டிகளில் பயணம் செய்கிறோம். பெரும்பாலோர் வண்டிகளை ஓட்டக்கூடியவர்கள். ஆகவே இதை நிச்சயமாக நாம் அனுபவபூர்வமாக பார்த்திருப்போம். பொது மக்கள் ஒத்துழைப்பு தந்தால் இதை முழுவதும் இல்லாமல் செய்து விடலாம். பல நாடுகளில் ஹார்ன் அடித்துக் கேட்க முடியாது. காரணம் அங்கிருப்பவர்கள் அந்த ஒத்துழைப்பைத் தருகிறார்கள். ஹார்னே வேண்டாம் என்று கூட உத்தரவு போட்டு விடலாம். அதற்கான ஒத்துழைப்பை முழுமையாக எல்லோரும் தருவார்களேயானால் அந்த நிலையை உருவாக்க முடியும்.





**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சாலையில் லாரிகள் அதிகமாகப் போவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே அண்ணா சாலையில் லாரிகள் போவதற்கு தடை விதிக்கப்படுமா? அதுமட்டுமல்லாது, சேருகிற குப்பைகளை எல்லாம் கார்ப்பரேஷனிலிருந்து லாரிகளில் கொண்டு போகிறார்கள். அப்படி குப்பைகளை ஏற்றிக் கொண்டு வேகமாகப் போகும்போது மவுண்ட் ரோடில் அந்தக் குப்பைகள் சில கீழே விழுந்து விடுகிறது. ஆகவே லாரிகளில் குப்பைகளை கொண்டு போவதை, மவுண்ட் ரோடில் கொண்டு போவதற்கு தடை விதிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கேள்விகளையும் ஒரேயிடத்தில் கேட்டால் சரியாக இருக்காது. அந்தந்தத் துறைக்குப் போட்டால் தான் பதில் தர முடியும். தடை விதிப்பது பற்றி, இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அதையெல்லாம் ஆய்வு செய்துதான் சொல்ல வேண்டும். உடனடியாக தடை விதிப்பதால் ஒரு சின்னப் பிரச்னையைத் தீர்க்கமுடியுமே தவிர அதனால் பெரிய பிரச்னை உருவாக வாய்ப்பிருக்கிறது. எனவே ஆய்வு செய்துதான் சொல்ல வேண்டும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்களில் அதிகமாக, குறிப்பிட்ட எடைக்குமேல் ஏற்றினால் வழக்கு பதிவு செய்கிறார்கள். அதே போல் வண்டிகளில் அதிகப்படியாக சப்தம் எழுப்பும் ஹார்ன்கள், அதிகப்படியான விளக்குகள், அதேபோல் பாதிக்கு மேல் கறுப்பு வர்ணம் அடிக்காத வாகனங்கள் மீதும் உடனடியாக வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி எடுக்கப்பட்டால் அது குறைக்கப்படும் என்ற கருத்துக்கு ஒத்துவரும், ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். இனிமேல் அதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் பாதி அளவிற்கு காவல் துறை மற்ற துறைகளில் போதிய அளவிற்கு சில நேரங்களில் அதிகாரிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தினால் அதை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்கு இப்போது அரசாங்கம் முயற்சி எடுத்து அதை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

எனவே நிச்சயமாக எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விபத்துக்களின் கொடுமை குறைகிற அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் தயாராக இப்போது எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது.

**திரு. சு. பாலன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நடைபாதையில் நடக்காமல் ரோட்டில் நடப்பதால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகிறது. அதைச் சரி செய்ய கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்கிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நடைபாதைகள் பள்ளமும் குழியுமாக இருக்கிறது. அதனால் மக்கள் நடைபாதையில் நடக்கமுடியாததொரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதுவும் அல்லாமல் முன்பெல்லாம் ரோட்டில் 'கார்ட் ரெயில்ஸ்' போடுவார்கள். எனவே அப்படிப்பட்ட 'கார்ட் ரெயில்ஸ்' போட்டு நடைபாதைகள் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சிலயிடங்களில் நடைபாதைகளில் குறைபாடுகள் இருக்கும். நான் இல்லை என்று சொல்லவில்லை. 'ஆனால் சரியாக இருக்கிற இடத்தில் அவை சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதுதான் கேள்வி. இல்லாமல் இருக்கிற இடத்தில்— ஏற்கனவே சின்ன ரோடாக இருக்கும், நடைபாதை போட்டால் வண்டி போகமுடியாது என்ற நிலை இருக்கும். அவை ஏற்கனவே அமைந்து விட்ட காரணத்தினால், பல ஆண்டுகளுக்கு முன்பே அமைந்து விட்டதால் அதை இப்போது மாற்றமுடியாத இக்கட்டான நிலை இருக்கிறது. ஆனால் இப்படி பல கருத்துக்களைச் சொல்லி மக்கள் தவறை மீண்டும் மீண்டும் செய்து கொண்டு விபத்துக்களை அவர்கள் விளைவித்துக் கொண்டு இருப்பதை ஊக்குவிக்கக்கூடாது. இப்போது சுரங்கப் பாதைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பெரும்பாலும் சுரங்கப் பாதைகளை யாரும் பயன்படுத்துவது இல்லை. அதற்கு மேலேதான் நடந்து செல்கிறார்கள். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. விபத்து ஏற்படும்போது அரசாங்கத்தைத் தான் குறை கூறுகிறார்கள். ஆகவே எங்கெங்கே வசதிகள் இருக்கின்றனவோ அதைப் பயன்படுத்த ஆரம்பித்தாலே இப்போது நடக்கிற விபத்துக்கள் சென்னையில் மட்டும் 50 சதவிகிதம் அளவிற்குக் குறைய வாய்ப்பிருக்கிறது.

(முற்பகல் 9–30)

**திரு. செ. பட்டாபிராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்களுக்கு வயது வரம்பு உள்ளதா, அது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதா? அப்படி இல்லையெனில், அதை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, வாகனங்களைப் பொறுத்தவரையில் அவைகளை இயக்குவதற்கு வயது வரம்பு இல்லை. வாகனங்கள் இப்படிப்பட்ட கண்டிஷனில் இருக்க வேண்டுமென்ற கண்டிஷன் இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் இல்லாத வாகனங்கள் நிறுத்தப்படும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பேருந்துகளிலும், லாரிகளிலும் பொருத்தப்பட்டிருக்கின்ற பயங்கரமான ஹாரன்களால் எழுப்பப்படுகின்ற ஒலியினாலே இப்பொழுதே பலர் காதுகள் மந்தமாகி இருக்கின்றன என்றும், இந்தியாவில் இருக்கின்ற ஜனத்தொகையில் ஐந்தில் மூன்று பங்கினர் காதுகள் மந்தமாகி இருக்கின்றன என்றும் கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். 5 அடி தொலைவில் ஒரு ஆரன் சத்தம் கேட்குமானால், அதற்கு 30 டெசிபிள் என்று சொல்லுகிறார்கள். 5 அடிக்கு 30 டெசிபிள் என்று சொன்னால் மேலும் இப்படிப்பட்ட சப்தங்களை கேட்கின்ற போது, செவிப்பறைகள் கிழிந்து விடுகின்ற வாய்ப்பிருக்கிறது. ஏர் ஹாரன், பாஷ் ஆர்ன் எல்லாம் அரசாங்கப் பேருந்துகளிலேயே பொருத்தப் பட்டிருக்கின்றன. இவைகளின் மூலம் வருகின்ற சப்தத்தினால் செவிட்டுத் தன்மை ஏற்பட்டால், அது நீங்காது என்றும், இதே நிலை 15 ஆண்டுகள் தொடருமானால், பிறக்கின்ற குழந்தைகளில் 85 சதவிகிதம் செவிட்டுக் குழந்தைகளாகப் பிறக்கும் என்றும் ஒரு விஞ்ஞான ஆய்வு கூறுகிறது. எனவே, இந்த ஆரன்களை எல்லாம் உடனடியாக நீக்குவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன். சக்கரங்கள் உராய்கின்றதால் ஏற்படுகின்ற சப்தத்தை நீக்குவதற்கு ஜப்பானிலே அக்குவாடிக் பேனல் என்னும் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பேனலை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்றும் அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நம்முடைய நிலைமை என்னவென்றால், சப்தத்தைக் கேட்டுப் பழகிவிட்டோம். சப்தம் இல்லையென்றால் தூக்கம் வருவதில்லை. எனவே, பேருந்துகளில் இப்படிப்பட்ட ஆரன்கள் இல்லாமல் போகிறபோது, யாரும் ஒதுங்கிப் போவதில்லை. சாதாரணமாக ஒரு ஓட்டுநர் காலை 4 மணிக்கு வேலைக்குப் புறப்பட்டால், மதியம் 1½ மணி வரை அந்த வண்டியை இயக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலையில், இந்தப் பணியைக் காட்டிலும் கடுமையான தொழில் வேறு இருக்க முடியாது. இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமையில், அவர்களுக்கு ஒத்துழைப்பு வேறு இல்லாமல் இருக்கிறது. ஹாரன் சத்தம் கேட்டும், பின்புறம் திரும்பிப் பார்த்தும், வண்டி வருகின்றது என்பதைப் பார்த்தும், அதே பாதையில் போகிறார்களே தவிர, ஒதுங்கிப் போகின்ற தன்மையில் இலலை. ஒதுங்கிப் போகும் தன்மை எல்லா இடங்களிலும் வந்து விட்டால், ஆரன்களை எடுத்து விடலாம். அப்போது இந்தப் பிரச்னை இருக்காது.

[1986 ஏப்ரல் 23

## கொள்ளிடத்தின் குறுக்கே பாலம்

542—(*வினா எண். 4726)—திரு சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதியைச் சேர்ந்த நடுத்திட்டையும் ஜெயங்கொண்ட பட்டினத்தையும் இணைக்கும் வகையில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்படும் பணியை நிறைவேற்ற சுமார் ரூ. 37.00 இலட்சம் தேவைப்படும் . இப்பணி இதுவரை அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் வரவில்லை. அரசின் குறுகிய நிதி ஒதுக்கீட்டினால் இப்பணியினை உடனடியாக எடுத்துக் கொள்ள இயலவ்ல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலமானது அணைக்கரைக்கு 15, 20 கிலோ மீட்டர் கிழக்கே இருக்கிறது. அதற்கு கிழக்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் கொள்ளிடம் என்ற இடம் இருக்கிறது. அதற்குக் குறுக்கே ஒரு பாலம் இருக்கிறது. திடீரென்று ஒரு ஆபத்து ஏற்பட்டுவிட்டால், அதாவது கொள்ளிடத்தில் ஏதாவது ஒரு விபத்து ஏற்பட்டால், மாற்றுப் பாதை வழியாக அணைக்கரைக்குச் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட 50, 60 கிலோ மீட்டர் தூரம் அதிகம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, பாலத்தைக் கட்டும்போது, தடுப்பு அணையும் கட்டினால் கொள்ளிடத்திலிருந்து அதிகமாக விழுகின்ற தண்ணீரையும் தேக்கலாம். எனவே, பொதுப்பணித்துறையும், போக்குவரத்துத்துறையும் கலந்தாலோசித்து, இதை அணையாகவும், பாலமாகவும் கட்டுவதற்கு இனிமேலாவது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தப்பாலத்தைக் கட்டுவதற்கு 37 இலட்சம் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை காரணமாகத் தான், இந்தப் பணியை எடுத்துக்கொள்ள இயலாமல் இருக்கின்றது. எனவே, எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையின்படி என்ன செய்ய இயலும் என்பதைப் பற்றி யோசித்து, அரசு நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கும்.



1986 ஏப்ரல் 23]

## சின்னமலை போக்குவரத்துப் பணிமனை.

543—(*வினா எண். 5433) : திரு. சைதை சா. துரைசாமி மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை சின்னமலையில் உள்ள போக்குவரத்து பணிமனையை விஸ்தரிக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) விஸ்தரிப்பு பணிகள் நடப்பு நிதியாண்டில் துவங்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) தகுதியான நிலம் கையகப்படுத்திய பின்பு விஸ்தரிப்பு பணிகள் துவங்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை அண்ணா சாலையில் அமைந்துள்ள ஆசிரியர் கல்லூரி வளாகத்தில் இடம் கேட்டு, இந்த இடம் ஒதுக்கப்பட்டும், இன்னும் அந்த இடத்தில் இந்தப் பணி துவக்கப்படாமல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். எனவே இந்தப் பணி விரைவிலே துவங்கப்படுமா? ஆசிரியர் கல்லூரி வளாகத்தில் அந்தப் பணிமனை கட்டப்படுமானால், இன்றைக்கு அந்தப் பேருந்துகள் எல்லாம் பஜார் சாலை வழியாகச் சென்று' ஆசிரியர் கல்லூரி காம்பவுண்ட் வழியாகத் திரும்புகின்றபோது பல விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். எனவே, அந்தப் பணியை விரைந்து செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 90 சென்ட் நிலம் வேண்டுமென்று கேட்டு கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதிலே நீதிமன்றத்திலே ஒரு பிரச்சினை இருப்பதன் காரணமாக, இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் காவல் துறையினர் தங்களுக்கு அந்த இடம் தேவை என்று கேட்டிருப்பதாக எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, நிலம் கையகப் படுத்தப்பட்டு; தயாரான நிலையில், வேலை செய்யாமல் போக்குவரத்துத் துறை இல்லை. அந்த நிலம் கிடைக்காத காரணத்தால்தான் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நிலம் கிடைத்த உடனே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

[1986 ஏப்ரல் 23

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாற்று இடமாக, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இடத்தை ஏற்கனவே காட்டியிருந்தேன், அந்த இடத்தைச் சொன்னேன். அந்த இடத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அல்லது வெளியூர் செல்கின்ற வண்டிகளுக்கு இன்றைக்குப் பயணிகள் டிக்கட் எடுப்பதற்கு, ஒரே இடத்திற்குத்தான் வர வேண்டியிருக்கிறதுஎனவே, சைதையில், தாடன்டர் நகர் பகுதியில் டிக்சட் கொடுக்கும் இடத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்றுஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே மாற்று இடத்தைப் பற்றி அவர்கள் தனியாக எழுதிக் கொடுப்பார்களானால் அந்த இடத்தைப் பார்த்து, அது பொருத்தமாக இருக்குமானால், நிச்சயமாக எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். டிக்கட் கொடுப்பதைப் பொறுத்தவரை, பல இடங்களிலே வைத்தால் சிக்கல் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. காரணம்ஒரு வண்டிக்கு இரண்டு இடங்களிலே கொடுக்கப்படும்போது, அங்கே எவ்வளவு கொடுத்தார்கள், இங்கே எவ்வளவு கொடுத்தார்கள் என்று நாம் கணக்கிடுவது கடினம். எனவே, பல பிரச்னைகள் அதிலே உருவாகும் என்ற காரணத்தால், ஒரே இடத்திலே இருப்பதுதான் சரியாக இருக்கும். எதிர்காலத்திலே பெரிய சிக்கல்கள் வருமானால் அப்பொழுது அதைப் பற்றி யோசிக்கலாம்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெசன்ட் நகரிலே பேருந்து நிலையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும் இன்னும் பணி துவங்கப்படவில்லை. இந்த ஆண்டாவது பேருந்து நிலையம் கட்டுகின்ற பணியை முடித்துத்தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு முத்துசாமி : தலைவர் அவர்களே, எல்லா வகையிலேயும் பிரச்சினை எதுவும் இல்லாமல் இருக்குமானால் நடவடிக்கை எடுக்கலாம். தனியாகக் கேள்வி இருந்தால் அதைப்பற்றி கொஞ்சம் விளக்கமாகப் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.



1986 ஏப்ரல் 23]

## நாகப்பட்டினம் துறைமுகம்

544.—(*வினா எண். 7447) திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவது குறித்து மத்திய அரசிடம் மாநில அரசு தொடர்பு கொண்டுள்ளதா ?

(ஆ) அதன் விபரமென்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) சிறு துறைமுகங்களை மேம்படுத்துதல் என்பது மாநில அரசால் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என மத்திய அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்துள்ளதால் நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவது குறித்து மத்திய அரசோடு நம் அரசு எந்தத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபார முக்கியத்துவம் கருதி மீண்டும் வலியுறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கொள்கையின்படி அவர்களிடத்திலே நாம் கேட்க முடியாது. நம்முடைய அரசுதான் அதற்காகச் செலவிட வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. ஏற்கனவே, ரூ. 20 இலட்சத்தை அதனுடைய மேம்பாட்டிற்காக நாம் செலவழித்திருக்கிறோம். வருகிற ஆண்டிலே அந்த இடத்திற்காக மட்டும் மேலும் ரூ.20 இலட்சம் செலவழிப்பதற்கான நடவடிக்கையை நாம் எடுத்திருக்கிறோம். இது போக, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மொத்தமாக ரூ. 3 கோடி மைனர் போர்ட்சுக்காக மட்டும் ஒதுக்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலேயும் இந்தச சம்பந்தப்பட்ட துறைமுகத்தினுடைய முன்னேற்றத்திற்காக தொகை ஒதுக்கீடு செய்யப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. துரை. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரைக்கிற நேரத்தில், நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு மந்திய அரசிலேயிருந்து எந்தவித நிதி உதவியும் இல்லையென்றும் மாநில அரசே அதைக் கவனித்துக்

கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்து இருக்கிறார்கள் என்ற கருத்தினைத் தெரிவித்து இருக்கிறார்கள் இன்றைக்கு நாகப் பட்டினத்திற்குப் பக்கத்தில் நல்ல உயர்ந்த ரகப் பெட்ரோல் கிடைக்கிறது என்பதை மத்திய அரசு ஆராய்ச்சி நடத்தி கண்டு பிடித்திருக்கிறது. அதை சென்னை போன்ற பெரு நகரத்திற் குச் சுத்திகரிப்பதற்காகக் கொண்டு வர இருக்கிறார்கள். ஆகவே, பெட்ரோல் அதிகமாகக் கிடைக்கிற அந்த இடத்தில் இருக்கிற அந்தத் துறைமுகத்தை உடனடியாக விரிவுபடுத்துவதன் மூலம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்பு கிடைக்கும் என்பதோடு மட்டுமல்லாமல், கிடைக்கிற அந்தப் பெட்ரோலை உடனுக்குடன் நகரத்திற்கு கொண்டு செல்கிற ஒரு பெரிய வாய்ப்பு இருக்கிறது. அதைத் மனதிலே கொண்டு மறுபடியும் மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்து, அந்த இடத்திலே பெட்ரோல் கிடைக்கிற காரணத் தால், அந்த நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்தக் வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு வைக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அதுபற்றி ஏற்கெனவே நம்முடைய அரசு யோசித்துள்ளது. ஆனால், அங்கே பெட்ரோல் எந்த அளவுக்கு கிடைக்கிறது என்பதுபற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு இதை ஒரு மேஜர் போர்ட் என்ற அடிப்படையிலே மத்திய அரசே ஏற்று பணிகளைச் செய்வதா அல்லது மைனர் போர்ட்டாக வைத்து மாநில அரசே தேவை யான ஏற்பாடுகளைச் செய்யலாமா என்பது பற்றி முடிவு செய்யலாம். இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத் தால், ஒரு முடிவு ஏற்படாத நிலையில் மத்திய அரசைக் கேட் பதில் பயனில்லை. வேண்டுமானால் இப்போதே ' பிள்ளையார் சுழி ' என்பார்களே, அதைப்போல ஒரு கடிதத்தை எழுதி வைக்கலாம்.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவரவர்களே, நாகப்பட்டினம் துறைமுகத்தில் கப்பல்கள் வந்து நிற்கும்போது கரைக்கு அருகில் நிற்காமல்—காரணம் ஆழம் அதிகமாக இல்லை—தொலை வில் நிற்கின்றன. அதனால் படகுகளில் சென்று சரக்குகளை எடுத்து வரவேண்டியிருக்கிறது. இப்படி படகுகளில் சென்று சரக்குகளை எடுத்து வருகின்றபோது முறைகேடான முறை யிலே கடத்தல் போன்ற தொழில்கள் நடைபெற வழிவகை ஏற்படுகிறது. இதை கருத்திற்கொண்டு மறுபரிசீலனை செய்து கரைப்பகுதியை ஆழப்படுத்தி, கப்பல்கள் அருகில் வந்து நிற்க ஏற்பாடு செய்யப்படுமா ?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, கரைக்கு அருகில் கப்பல் வந்து நிற்பது கடினம், அதனால் கப்பல் நிற்கும் இடம் வரையில் பாலம் அமைக்க ஏற்பாடு செய்வார்கள். அதிக தூரம் இருந்தால் பாலம் அமைப்பதும் கடினம். ஆகவே, அந்த துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி எவ்வளவு என்ற விவரங்களைப் பார்த்து, எதிர் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### வத்திராயிருப்பு பகுதியில் நலிந்த பிரிவினருக்கு வீடுகள்

545—(*வினா எண். 3148) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதியில் ஏழை விவசாயிகள் இருப்பதால், பொருளாதார நிலையில் நலிந்தோ ருக்கு வீட்டு வசதி அளிக்கும் செயற் குறிப்பு உள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ) இல்லை. எனினும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிரிவினருக்கு வீடு கட்டு வதற்காக கடன் வழங்கப்படுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று வீடுகளைக் கட்டிக்கொள்ளத் தகுதி பெற்றுள்ளார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, 1984ஆம் ஆண்டு பெரு வெள்ளம் வந்தபோது வத்திராயிருப்புப் பகுதி பாதிக்கப் பட்டதை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் வந்து பார்த்து அந்தப் பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறினார் கள். அதன் பிறகு அங்கே எவ்வளவு வீடுகள், எவ்வளவு தொகை யில் கட்டிக் கொடுக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது அங்கே இடையான்குளம், மம்சாபுரம் ஆகிய கிராமங்கள் அந்த வெள் ளத்தால் பாதிக்கப்பட்டன. தாலுகா அலுவலகத்தில் அதற் கான ரிக்கார்டுகள் இருக்கின்றன. கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அந்த வாரியத்திடம் வெள்ள நிவாரண உதவியும் கடனும் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் மனு கொடுத் துள்ளார்கள். அந்த மனுக்களை எல்லாம் தொலைத்து விட்டு, உங்களுக்கு வெள்ள நிவாரணம் கிடையாது, ரெகுலர் நிவாரணம் தான் தருவோம் என்று கிராமப்புற வீட்டு வசதி வாரியம் சொல்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்

கள் அந்தப் பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரண உதவி அளித்து வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைசசர் அவர்கள் அந்தப் பகுதியைப் பார்வையிட்டதாகச் சொன்னார்கள். வத்திராயிருப்புப் பகுதியைப் பொறுத்தமட்டில் ஆதி திராவிடர் 684 பேர்களுக்கும், மற்றவர்கள் 135 பேர்களுக்கும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாயிலிருந்து 4,500 ரூபாய் வரையில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அங்கே வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மற்ற இரண்டு ஊர்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பம் கொடுத்ததாகவும் காணாமல் போய்விட்டதாகவும் சொன்னார்கள். அப்படிப்பட்ட விவரங்கள் என்னிடம் இல்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் புதிதாக மனுக்கள் தந்தால் அவற்றை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பொதுவாக கிராமப்புற வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டுவதற்கு 2, 3 தடவைகளாக பணம் தருகிறார்கள். அதனால் வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் அரை குறையாக இருக்கின்றன. ஆகவே, வீடுகளைக் கட்டுவதற்கு முழுத் தொகையையும் ஒரே தடவையில் வழங்குவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, வீடு கட்டுவதற்கான தொகையை ஒட்டுமொத்தமாக ஒரே தவணையில் கொடுத்தால் அவர்கள் வேறு காரியங்களுக்குச் செலவு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் வீடுகளைக் கட்டி முடிக்க முடியாமல், தாமதம் ஏற்படும். ஆகவே, அரசு மூன்று தடவைகளில் அந்தப் பணத்தைப் பிரித்து தருகின்ற சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டாவதாகக் குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்த மட்டில், ஏற்கனவே நிதி அளிக்கப்பட்டு. கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற வீடுகளின் கணக்கைப் பார்த்தால் கிட்டத்தட்ட 1,546 வீடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு 24,64,000 ரூபாய் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.



## நிலக்கோட்டையில் வீட்டுவசதிப் பணிகள்

546—(*வினா எண். 8861) திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் வீடுகட்டும் டிவிஷன் ஒன்று ஆரம்பித்து இந்தப் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ ):மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டையில் வீட்டுவசதி வாரியப் பிரிவு அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் தற்போது வீட்டுவசதி வாரியத்திடம் இல்லை. ஆனால் நிலக்கோட்டையில் வீடு கட்டும் திட்டம் வீட்டுவசதி வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூரல் ஹவுஸிங் சொசைட்டி என்பதைத் துவக்கி அதன் மூலமாக கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு 5,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். அந்தப் பணம் முழுமையாக வீடு கட்டுவதற்குப் போதவில்லை. அரசாங்கம் கட்டிக் கொடுக்கிற இலவச வீடு கட்டும் திட்டத்தின் மூலம் 7,500 ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். அதனை பத்தாயிரம் ரூபாயாக அறிவித்திருக்கிறார்கள். வீடு கட்டவேண்டும் என்றால் 10,000 ரூபாய் தேவை. ஓராண்டுக்காலம் ஆகியும் வீடுகளைக் கட்ட முடியவில்லை எனவே பத்தாயிரம் ரூபாயாக அந்த லோனைக் கொடுக்கவும் அதனை ஒரே முறையாகக் கொடுக்கவும் அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இல்லை என்றால் இனியாவது அவ்வாறு கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் ஒரே நேரத்தில் ஒட்டுமொத்தமாக நிதி தருகிற எண்ணம் தற்போது அரசிடம் இல்லை. மேலும் 10,000 ரூபாய் லோன் கொடுக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரசைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கும், வருவாய் குறைந்தவர்களுக்கும் அதாவது அதிகம் பேர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. எனவே 6 ஆயிரம் ரூபாய் தந்துகொண்டிருக்கிறார்கள். அரசு தரு

கிற பணத்தையும் வைத்துக்கொண்டு மேலும் பணம் போட்டு அவர்கள் 10,000 ரூபாய் அளவுக்கு அதைக் கட்டி முடித்து விடலாம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்காகத்தான் நாம் கடன் கொடுக்கிறோம். அபபடிக் கொடுக்கின்ற 6,000 ரூபாய் போதுமானதாக இல்லை. எந்தத் திட்டத்திற்காக நாம் பணம் ஒதுக்குகிறோமோ அந்தத் திட்டம் நிறைவு பெறவில்லை. ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் 1984லிருந்து பாதியிலேயே நின்றுகொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அந்தப் பகுதிக்கு வந்து பார்த்தார்கள். 10,000 ரூபாயாக அந்தத் தொகையை உயர்த்தினால்தான் அதைக் கட்ட முடியும். எனவே அப்படிப்பட்ட திட்டம் அரசிடத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் 6,000 ரூபாய் நிதியினை நாம் தந்தாலே போதும் என்ற வகையில் ஆர்வத்தோடு பல்லாயிரம் பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் மன நிம்மதியோடு இந்த நிதியினைப் பெற மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அந்த மகிழ்ச்சியைக் கெடுக்க விரும்பவில்லை.

திரு. கே. பாலாஜி : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இப்போது 6,000 ரூபாய் என்று கொடுக்கப்படுகிற நிலையில் அதை வைத்துக்கொண்டு முழுமையாகக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் பெரிய அளவில் கட்டி அது போதவில்லை என்ற நிலைமையில் நிறுத்தி விடுகிறார்கள். எனவே அரசாங்கமே சென்னையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுப்பது போல் கிராமப்புறங்களிலும் அரசாங்கமே கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா? அப்படிக் கட்டிக் கொடுத்தால் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறும். எனவே இனியாவது அவ்வாறு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில் பொதுமக்களுடைய நேரடிப் பங்கு சில திட்டங்களுக்குத் தேவை. அந்த அடிப்படையில் அடிப்படைத் தேவையான வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசே இலவசமாக வீடு கட்டுகிற திட்டமும் தமிழகத்தில் இருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் பல்லாண்டுக்காலமாகக் கடன் தந்து வீடு கட்டுகிற திட்டமும் அதே நேரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நாமே கட்டி பொது மக்களுக்குத் தருகிற திட்டமும் இருக்கின்றன. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது இப்போது இருக்கிற வீட்டுவசதிச் சங்கம் மூலமாக நாம் நடைமுறைக்குக்கொண்டு வந்து, கடனாகத்தந்து கிராமங்களில்எல்லாம் வீடு கட்டுகிற அந்தத் திட்டத்தையும் செயல்படுத்துகிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பொதுமக்கள் அதிகம் பேர் விரும்புகிற காரணத்தால் அதை மாற்றும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





### திருச்சியில் நவீன முறையில் குடிசைத் தொழில்கள்

547—(*வினா எண். 6987) திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் காவேரி படுகையில் உள்ள தொட்டியம், முசிறி, குளித்தலை, நொச்சியம் போன்ற பகுதிகளில் பாய்க்கோரைகள் அதிகம் விளைவதால் அங்கு ஜப்பானிய முறையில் குடிசைத் தொழில்களை அமைக்க அரசு நடவடிக்கைகள் ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் முசிறி, குளித்தலை, நொச்சியம் போன்ற பகுதிகளில் விளைகிற கோரைகள் வேறு மாநிலங்களுக்கும், வேறு மாவட்டங்களுக்கும் அதிகமாகக் கொண்டு செல்லப்படுகிறது. எனவே அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளியவர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையில் ஜப்பானிய முறையில் செய்ய இயலவில்லை என்றாலும் கூட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பாய் முடைகிற அந்தத் தொழிலை விரிவுபடுத்தி அங்கே இருக்கிற தாய்க்குலத்திற்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருட்களைக் கொண்டு கதர் கிராமத் தொழில் வாரியம் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறது. அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் அதிகமாகக் கோரை கிடைக்கிறது என்று இப்போது எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் கிடைக்கின்ற கோரையை வைத்து அந்தந்தப் பகுதிகளில்

கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அந்தந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது தமிழ் நாட்டில் சாதாரண முறையில் பாய் நெசவுத் தொழில் பின் பற்றப்பட்டு வருகிறது. அந்த வகையிலும் தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அதங்கோட்டையில் பனைப்பொருள் மையம்.

548—(*வினா எண். 7608) திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பதனீர் இறக்கும் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக விளவங்கோடு தாலுகாவில் அதங்கோடு என்னும் இடத்தில், பனைப்பொருள் தொழில் மையம் ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** இச்செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. ஆனால், அதங்கோட்டில் பனைத் தொழில் மையம் ஏற்படுத்துவது குறித்து கதர் வாரியமும் மாநில பனை வெல்ல இணையமும் பரிசீலித்து வருகின்றன.

(முற்பகல் 9—50)

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, பதநீரில் என்னென்ன சத்துப் பொருள் உள்ளன. என்னென்ன வியாதிக்கு அது நல்லது என்று எல்லோரும் அறியும் வகையில் அரசு விளம்பரம் செய்யுமா? அது மட்டும் அல்லாமல் இப்போது வெயில் காலமாக இருக்கிறகாரணத்தால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூடகுடிதண்ணீருக்குப் பதில் பதநீர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் குடிதண்ணீருக்குப் பதில் பதநீர் குடிப்பதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா எனஅறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க எற்கெனவே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக வானொலி மூலம் பதநீர் குடிப்பதைப் பற்றியும் அது உடலுக்கு குளிர்ச்சியளிக்கிறது என்பது பற்றியும் விளம்பரம் செய்து இருக்கிறோம். அடுத்தாற்போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதநீர்





குடிக்க கேட்டிருக்கிறார்கள். அதற்கும் நான் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கேட்டு உறுப்பினர்களுக்குப் பதநீர் கிடைக்க வேண்டிய ஏற்பாட்டை செய்து கொடுக்கிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் வீட்டிலிருந்துதான் பதநீர் கொண்டு வந்து குடிக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** இன்னும் பல்வேறு பொருட்களை இந்த பனைத் தொழில் மூலம் நாம் உற்பத்தி செய்கிறோம். அது பற்றிய விவரம் முழுவதும் தற்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் அளிக்கப்படும்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதங்கோட்டைப் பொறுத்த வரையில் கதர் வாரியத்திற்குச் சொந்தமாக நிலம் அங்கே இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டாலும் சரி, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டாலும் இங்கேதான் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன அதன் காரணமாகத்தான் 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அங்கே பாம்-காம்ப்ளக்ஸ் உருவாக்கும் திட்டம் ஒன்று இருந்தது முதலிலே. ஆனால், அதை இப்போது கைவிட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அவ்வளவு தொகை ஒதுக்கப்படவில்லை என்று சொன்னாலும் கூட, குறைந்த செலவிலாவது ஒரு பாம்-காம்ப்ளக்ஸ் அங்கே உண்டாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கேள், மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று ஏற்கனவே 38.452 இலட்சத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த அதங்கோடு பனை வெல்ல மைய திட்டத்திற்காக கோரப்பட்டு, அப்போது அது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய நிதியோடு, வங்கிக் கடன், மற்றும் மாநில பனை வெல்லம் தும்பு பொருள் விற்பனைச் சம்மேளனம் என்னும் நிறுவனத்தின் நிதியுடன் நடத்தப்படலாமா என பரிசீலிக்கப்பட்டது. ஆனால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இந்தத் திட்டத்தை செயல்படுத்த இயலாத நிலையில், அந்தத் திட்டத்தை சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாமா என பரிசீலிக்கப்பட்டது. ஆனால் சிறப்புக் கூட்டுத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறுவதற்காக அனைவரும் ஆதித் திராவிடர்களாக இருக்கவேண்டும் என்பது விதிக்கப்பட்டிருந்தமையால், இந்தப் பனையேறும் தொழிலாளர்கள் அனைவரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அந்தத் திட்டத்தை வேறு எந்த நிறுவனத்

தின் நிதி உதவி பெற்று நடத்தலாம் என்ற முறையில், அதன் வழி முறைகளைப் பரிசீலிக்கலாம் என்பது பற்றி இணை இயக்குநர் அவர்களோடும், சிறப்பு அலுவலர் அவர்களோடும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்ப ஒரு திருத்திய திட்டம் தயாரிக்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பதநீர் இரக்கும் தொழிலாளர்கள் அனைவரும் கூடுமானவரையில் ஏழைகளாகவே இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டு வசதித்துறையின் மூலம் ஏழைகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் நிறைவேற்ற இருப்பதில் அவர்களையும் சேர்ப்பதற்கு பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தற்போது என்னிடம் விவரம் இல்லை. அப்படி அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க வேண்டுமானால், கதர் கிராமத் தொழில் வாரியம் நிச்சயமாக பரிசீலனை செய்யும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் அ. பொன்னுசாமி :** பெருமை பெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, பதநீர் சாப்பிடுவதால் மனிதனுக்கு உடலில் குளிர்ச்சி ஏற்படுகிறது. என்று சொன்னார்கள். பதநீர் சாப்பிடுவதால் குளிர்ச்சி ஏற்படுகிறது என்பதைப் பற்றி மருத்துவ ரீதியாக ஆராய்ச்சி செய்யப்பட்டதா ? அத்துடன் நுங்கு சாப்பிடுவதால் குளிர்ச்சி ஏற்படுகிறதா என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான ஒரு டாக்டர் என்ற முறையில் இந்த வினாவை எழுப்பி இருக்கிறார்கள். அது பற்றி நான் துறையிடம் கலந்து ஆலோசித்துத்தான் பதில் கூற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ந.. மாசிலாமணி :** தலைவர் அவர்களே * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரின் துணை வினா அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





## வீரசோழன் ஆற்றில் தடுப்பணை

549—(*வினா எண் 7557) திரு திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டதில் வீரசோழன் ஆற்றில், கோயல் தலைப்பு வாய்க்கால் அருகே பெட் டாம் ( Bed Dam ) ஒன்று கட்டி பாசனத்தை அதிகப்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** இல்லை.

## மங்கனங்காட்டில் நசுவினியாற்றின் குறுக்கே அணை.

550—(*வினா எண் 8908)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மங்கனங்காடு அருகில் நசுவினியாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) ஆம்.

(ஆ) திட்டம் முடிவு செய்யப்பட்டு, திட்ட அறிக்கை அரசின் ஒப்புதலுக்காக தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து பெறப்பட்ட பின்பே இதன் விவரம் தெரியும்.

## வெள்ள நிவாரணத்திற்கான மாதிரி மசோதா

551—(*வினா எண் 8208) திரு. சு. பாலன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளம் ஏற்படக்கூடிய பகுதிகளின் சம்பந்தமாக மாதிரி மசோதா ஒன்று 1975 ஆம் ஆண்டு மாநில அரசுக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக மத்திய அரசுக்குப் பதில் அனுப்பப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். :** (அ) மற்றும் (ஆ) ஆம்.

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, ஓட்டேரி, புளியந்தோப்பு, காலனி சத்திரம், வியாசர்பாடி, பி. அண்ட் சி. மில் ஏரியா போன்ற அந்தப் பகுதிகளில் ஆண்டுதோறும் மழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு தொழிற்சாலைகளுக்கு பாதகம் ஏற்பட்டு தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த இந்தத் திட்டத்தின் மூலம் அரசு எண்ணியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, ஓட்டேரி நல்லா போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய பிரச்னைகள் எல்லாம் அடிக்கடி இந்தச் சட்டப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களாலும் மற்றவர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டு உரிய நடவடிக்கைகளை அதன் மீது மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும், ஒரு சில நாட்களுக்கு முன்னால் தான் 2.30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்து இருக்கிறேன். மூலக்கேள்வியைப் பொறுத்தவரையிலும் வெள்ளம் ஏற்படுகிற பகுதிகளில் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்காக, வெள்ளத்தடுப்புப் பணிகள் அல்லது வெள்ளம் மனிதனால் உருவாகக்கூடிய அளவிற்கு நிலைமைகள் உருவாகக்கூடாது என்ற அளவிற்கு இருக்கக்கூடிய நீர்நிலைகளை பாதுகாப்பதற்காக உரிய சட்டங்களை ஏற்படுத்துவது சம்பந்தமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, மக்களை வெள்ள பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் டாக்டர் அம்பேத்கார் சாலை, பெரம்பூர் சாலை ஆகிய இரண்டு சாலைகளிலும் வெள்ளக் காலங்களில் மக்களும், வாகனங்களும் செல்ல முடியாத அளவிற்கு போக்குவரத்துத்தடை ஏற்படுகிறது. அந்தத் தடையைப் போக்குவதற்கு வேறு ஏதாவது மாற்று ஏற்பாட்டைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, மாநகராட்சி உள்ளிட்ட அத்தனை உள்ளாட்சி நிர்வாகங்களையும் கவனிப்பதற்காக இன்றைக்கு தனியாக அமைச்சரும் இருக்கிறார்கள், அமைச்சகமும் இருக்கிறது, ஆகவே, கேள்வியை அந்தத் துறையிடத்தில் கேட்டால் விடை கிடைக்கும்.





**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்திருக்கிறார்கள். இந்தக் கேள்வியின் அடிப்படையே 1975 ஆம் ஆண்டு மாநில அரசுக்கு மத்திய அரசு அனுப்பியுள்ள மசோதா பற்றியதாகும் அது சம்பந்தமாக மத்தியஅரசுக்கு என்ன பதில் அனுப்பப்பட்டது? மத்திய அரசு என்னென்ன வகையில் சிபார்சுகளை மாநில அரசுக்கு செய்திருக்கிறது ? இந்த நிலையில் எதிர்காலத்தில் திடீரென்று ஏற்படுகிற வெள்ளங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க விசேஷமான ஒரு திட்டத்தை உருவாக்கி அதற்காக தனி நிதி உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன.

(முற்பகல் 10–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு அனைத்து மாநிலங்களின் பாசன அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் பரிந்துரை செய்யப்பட்ட பல்வேறு பரிந்துரைகளில் ஒன்று தான் இத்தகைய ஒரு வரைவு மசோதாவைக் கொண்டு வந்து, அதை இந்த நாட்டில் ஒரே முகமாக சட்டமாக்கி அந்தந்த மாநிலங்களின் வாயிலாக நடைமுறைப்படுத்துவது என்பதாகும். அந்த அடிப்படையில் எல்லை வரையறை வெள்ள மண்டலம் மாநில அரசு தயாரிக்கவும், ஆறுகள், வடிகால்கள் ஆகியவற்றில் ஏற்படுத்துகிற ஆக்கிரமிப்புக்களைத் தடுக்கவும், சட்டங்களைத் தீட்டுவதற்காக வரைவு மசோதா ஒன்றை தயார் செய்து மத்திய அரசு மாநில அரசினுடைய ஆலோசனைகளைப் பெறுவதற்காக அனுப்பியது.

பொதுவாக மாநில அரசைப் பொறுத்தமட்டிலும் பல்வேறு அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு இந்த அரசைப் பொறுத்தமட்டிலும், மேற்கொண்ட முடிவு என்னவென்றால் வரைவு மசோதாவை நாம் பொதுவாக அங்கீகரித்தாலும் கூட, இந்த மாநிலத்தின் அமைப்புகளுக்கு ஏற்ப, இப்போது இருக்கக்கூடிய விதிமுறைக்கு ஏற்ப, இங்கே இருக்கக்கூடிய மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப, நாம் ஒரு சில மாறுதல்களை அந்த வரைவு விதிகளில் ஏற்படுத்தியாக வேண்டும் என்ற அளவிற்குத்தான் நாம் முடிவுகளை மேற்கொண்டோம். அந்த முறையில் மத்திய அரசுக்கு நாம் பொதுவாக ஏற்றுக்கொள்கிறோம் என்ற விவரத்தைத் தந்திருக்கிறோம். வரைவு விதியை தயாரிக்கிற நேரத்தில் மாநிலத்தில் உள்ள அத்தனை நடைமுறைச் சிக்கல்களையும் கருத்தில் கொண்டு, விதிமுறைகளை தயாரிக்க நாம் முடிவு எடுத்து இருக்கிறோம்.

[1986 ஏப்ரல் 23

இந்த மசோதாவின் முக்கிய நோக்கமே ஆறுகள், ஓடைகள், கால்வாய்க்கள் போன்ற நீர் நிலைகளில் இருந்து நீர் வழிந்து, வெள்ளம் வந்து, அந்த வெள்ளத்தின் காரணமாக பாதிப்பு ஏற்பட்டு அந்த இடங்களில் ஏற்படும் வெள்ள மண்டலம், இத்தகைய நீர் நிலைகளை அழிப்பதால், அல்லது அழியக்கூடிய அளவிற்கு நடவடிக்கை இருப்பதால், அத்தகைய நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக, அத்தகைய நடவடிக்கைகளில் இருந்து மக்களைத் தடுப்பதற்காக ஒரு சட்டத்தைத் தீட்டுவது என்பது இந்த மசோதாவின் நோக்கமாகும். மத்திய அரசு தந்திருக்கின்ற இந்த மாதிரி மசோதாவில் வெள்ள மண்டலம் அமைத்தல், வெள்ளக் கட்டுப்பாடு, மற்றும் ஈட்டுத் தொகைக்கான விதிகள் ஆகிய மூன்றும் நம்முடைய மாநில முறைகளுக்கு மாறுபட்டதாக அல்லது இந்த மாநிலத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாகத்தான் இந்த மாநிலத்திற்கு ஏற்ப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு முடிவு எடுத்தது. அத்தகைய வரைவு விதி தயாரிக்கப்பட வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள பணிக்கப்பட்டு உள்ளார்கள். விவர அறிக்கையை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து இந்த எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### (அ) இராமநாதபுரத்தில் சீருடை தைத்ததற்கான கூலி முழுவதும் வழங்கப்படாமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி ஜே. ஹேமச்சந்திரன், வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனை சம்பந்தமாக, நம்முடைய அரசியல் சட்டம் ........



1986 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் தாங்கள் அனுமதி கேட்கவில்லை. மேலும் கேள்வி நேரம் முடிந்தவுடன், கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் கேட்பது சரியல்ல.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இராமநாதபுரத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை தைக்கும் பணியில் அமர்த்தப்பட்டவர்களுக்கு பல மாதங்களாக வேலைக்கான கூலி வழங்கப்படாமையால் அம்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் சென்ற ஆண்டு செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஒரு சோடி சீருடை வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு காக்கி அரைக்கால் சட்டையும், வெள்ளை அரைக்கை சட்டையும், மாணவியர்களுக்கு நீலநிறப் பாவாடையும், வெள்ளை ரவிக்கையும் அளிக்கப்பட்டுள்ளது. ஏழு மற்றும் எட்டாம் வகுப்புகளில் பயிலும் மாணவியர்களில் கல்வி ஆண்டுத் தொடக்கத்தில் தாவணி அணிந்த மாணவியர்களுக்கு, ஒரு வெளிர் நீல தாவணியும் அளிக்கப்பட்டது.

இச்சீருடைகள் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மகளிர் மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் தைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டு, அவ்வாறு தைத்து வழங்கும் பொறுப்பு சமூக நல இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டது. மாணவர்களுக்கு ஒரு சோடி சீருடை தைக்க ஏழு ரூபாயும், மாணவியர்களுக்கு ஒரு சோடி சீருடை தைக்க ஐந்து ரூபாயும், தாவணி ஓரம் தைக்க ஒரு தாவணிக்கு ஒரு ரூபாயும் தையற் கூலியாக நிர்ணயிக்கப்பட்டது. சீருடைகள் தைக்கும் பணி தரப்பட்ட நிறுவனங்களுக்கு, தையற் கூலியில் 90 சதவீதம் முன்பணமாக பட்டுவாடா செய்யப்பட்டது. எல்லா துணிகளையும் தைத்து ஒப்படைக்கப்பட்ட பிறகு மீதிப் பணமாகிய 10 சதவீதத் தொகை வழங்கப்படும். தைக்கப்பட்ட சீருடைகள், அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள், அல்லது மாவட்ட கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1986 ஏப்ரல் 23

இராமநாதபுர மாவட்டத்தைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் சீருடைத்தைக்கும் பணி முடிவடைத்துள்ளது. ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தில் இப்பணி இன்னும் முடிவுற வில்லை. இராமநாதபுர மாவட்டத்தில் இரண்டு தையற் கூட்டுறவு சங்கங்களுக்குச் சீருடைகள் தைக்கும் பணி ஒப்படைக்கப் பட்டது. அவை :

1. பெண்கள் தையற் பயிற்சி மையம்.

2. கீழ்க்கரை தையற் தொழிலாளர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், கீழ்க்கரை.

இராமநாதபுரம் மாவட்டத்தில், தைக்கப்பட வேண்டிய மற்றும் தைத்து முடிக்கப்பட்ட சீருடைகளின் விவரங்கள் கீழ்கண்ட வாறு :—

| தைக்கப்பட வேண்டிய துணியின் விவரம். | தைக்கப்பட வேண்டிய மொத்த துணிகள். | தைத்து முடித்துக் கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட மொத்தத் துணிகள். | கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டியத் துணிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அரைக்கால் சட்டை ... | 94,391 | 81,726 | 12,665 |
| அரைக்கை சட்டை .. | 94,391 | 85,185 | 9,206 |
| பெண்களுக்கான பாவாடை | 75,182 | 74,693 | 489 |
| பெண்கள் ரவிக்கை .. | 75,182 | 70,220 | 4,96 |
| தாவணி .. .. | 6,953 | 6,862 | 91 |

இம்மாவட்டத்தில், சீருடை தைக்கும் பணி முழுமை பெறாத காரணத்தால், சீருடை தைத்ததற்கான தையற் கூலி முழுவதும் கொடுக்கப்படவில்லை. தைத்து முடித்து, கல்வித்



1986 ஏப்ரல் 23] [திருமதி கோமதி சீனிவாசன்]

துறைக்கு ஒப்படைக்கப்பட்ட துணிகளுக்கு மட்டும் தையற் கூலியாக ரூ. 7,36,044-ஐ தையல் அலகுகளுக்கு அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தைக்கப்படாத துணிகளைத் தைத்து, கல்வித்துறைக்கு ஒப்படைத்தபின் மீதித் தொகை வழங்கப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீருடை தைப்பதற்காக மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மகளிர் மன்றங்கள் ஆகியவற்றின் மூலமாக இவைகளைத் தைக்க வேண்டும் என்று சமூக நலத்துறை இயக்குநர் அவர்கள் மூலமாக இந்த வேலைகள் முழுவதும் ஒப்படைக்கப்பட்டு உள்ளது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளதுவேலையில்லாதபெண்களுக்கும், விதவைகள் போன்று எந்தவிதமான ஆதரவும் இல்லாத பெண்களுக்கும் இப்படிப்பட்ட வேலைகளைக் கொடுப்பதற்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி அரசு செய்வது ஒரு நல்ல நடவடிக்கை ஆனால்நிலைமைகள் என்ன ஆகியிருக்கிறது என்றால், மிகப் பெரிய முறைகேடுகளும் தவறுகளும் இந்த விஷயத்தில் நடைபெறுகின்றன என்று எனக்கு ஏற்கனவே பெரியார்மாவட்டத்தில் அமைத்திருக்கக்கூடிய அந்த சங்கத்தில் இருந்து வெளியிட்ட ஒரு சுற்றறிக்கை என் கையில் கிடைத்தது. நான் அதைப் பார்த்தேன். பல இடங்களில் அவர்களுக்கு கூலி கொடுக்கப் படாமல் மிகுந்த கஷ்டங்கள் ஏற்பட்டு, பட்டினிக்கு ஆளாகக் கூடிய நிலையில் இன்றைக்கு தைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்போது இராமநாதபுரம் ஜில்லாவில் இந்த வேலைகள் முடியாமல் இருப்பதற்கான காரணம், இதிலே கூட அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை பூராவும் கொடுக்கப்பட வில்லை. 1 கோடி மாணவர்களுக்கு உடைகள் தைக்க 7 கோடி ரூபாயும், அதேபோல் 1 கோடி மாணவிகளுக்கு உடைகள் தைக்க 5 கோடி ரூபாயும், தாவணி தைப்பதற்கு 1 கோடி ரூபாய் என்றும் மொத்தம் 13 கோடி ரூபாய் இந்த உடை தைப்பதற்காக செலவாகிறது என்று சொன்னால், இது ஒரு மிகப் பெரிய தொகையை உள்ளடக்கிய ஒரு பெரிய தொழிலாக இருக்கிறது.

இப்படி 13 கோடி. ரூபாய் இந்த உடை தைப்பதற்காகச் செலவு என்று சொன்னால், இது மிகப் பெரிய தொழிலாகவும் இருக்கிறது. இப்படிப்பட்டதில், 90 சதவீதம் முதலிலே பணம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலே பல இடங்களில் 90 பர்செண்ட் அல்ல, நூலும், சிட்டமும் வாங்குவதற்குக்கூட அவர்களுக்கு காசுகொடுக்காமல் அவர்கள் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆகவே இந்த விஷயம் ரொம்ப கடுமையானது. இதுபற்றி, என்ன நடந்திருக்கிறது என்ற உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை

எடுக்க வேண்டியதிருக்கிறது. இப்போது பள்ளிக்கூடத்திலே பூரா உடையையும் தைத்துக் கொடுத்தும், இராமநாதபுரத்திலே இன்னும் கூட 10 வருடங்களாக கூலி பாக்கி இருக்கிறது. 10 வருடங்கள் அல்ல, அங்கே பல இடங்களில் கூலியே கிடைக்கமல் இருக்கிறது. இடையிலே இருக்கக்கூடிய ஆட்கள், உத்தியோகஸ்தர்களாக இருக்கிறவர்களோ அல்லது சங்கத்தினுடைய பொறுப்பாளர்கள் என்று சொல்லக்கூடியவர்களோ இப்படிப்பட்ட முறைகேடுகளை செய்வதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? அந்த ஏழை எளிய பெண் மக்களுக்குப் பணம் கிடைப்பதற்கு, 90 பர்செண்ட் முதலிலே கிடைப்பதற்கு என்ன உத்தரவாதம் செய்யப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 90 சதவீதம் முன் பணமாக அளித்ததால், எல்லா மாவட்டத்திலும் இருக்கின்ற தையல் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைத்து அதன் மூலமாக தையல் துணிகளை தைத்து அரசுக்கு ஒப்படைத்திருக்கின்றார்கள்; மாணவ மாணவிகளுக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரத்தில் முறைகேடுகளும், தவறுகளும் நடந்திருப்பதாகவும், பல இடங்களில் 90 சதவீதம் கொடுத்திருப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டும் கொடுக்கப்படவில்லையென்றும் இன்றைக்கு அந்த அதிகாரிகள், இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே இருக்கின்ற சமூக நல அலுவலர் அவர்கள், அதேபோல பயிற்சியாளர்கள் என்று கூறப்படுகின்ற, விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற நாச்சி அம்மையார் என்பவரும் தவறான முறையிலும், முறைகேடான முறையிலும் சீருடைகளை அவர்கள் தவறான முறையிலே பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதை விற்றதற்கான விவரங்களையும் நமக்கு இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் அவர்கள், தைத்த துணிகளை முறைகேடான முறையில் பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில்தான் அவர்களோடு சம்பந்தப்பட்ட 12 நபர்களையும் காவல் துறையில் பதிவு செய்து அவர்களை கைது செய்ய வேண்டுமென்ற உத்தரவையும் இன்றைக்கு அரசு பிறப்பித்திருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் 31—3—1986 அன்று அவர்கள் இருவரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இதுமாதிரி எந்த மாவட்டத்தில், எந்த சமூக நல அலுவலர் அல்லது பயிற்சியாளராவது இதுமாதிரி முறைகேடான, தவறான முறைகளைக் கையாண்டார்களேயானால் நிச்சயமாக அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.





திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, முறைகேடுகள் நடத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது வரவேற்கத்தக்கது; நல்லது. அதை நான் தவறு என்று சொல்லவில்லை. அதைச் செய்ய வேண்டியதுதான். ஆனால் பிரச்சனை அதோடு நிற்க வில்லை. உள்ளே நடக்கக்கூடிய இத்தனை விஷயங்களும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கே வந்து சேருவதில்லை என்பதுகூட என்னுடைய கருத்து. காரணம், நான் ஒரு சுற்றறிக்கையைப் பார்த்தேன். ஈரோடு கூட்டுறவுத் தையல் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை. அங்கே சங்கம் இருக்கிறது. அதனுடைய சில ஏஜெண்டுகள் கோயம்புத்தூரிலே அல்லது இராமநாதபுரத்தில் ஒரு வீட்டிலே வந்து உட்கார்ந்துகொண்டு சுற்றுவட்டாரத்திலே தைத்துள்ள துணிகளையெல்லாம் கொண்டுவந்து கொடுக்கச் சொல்லி, துணி தைக்கக்கூடிய பெண்களுக்குச் சொல்லியனுப்பி, அவர்கள் துணிகளை கொண்டுவரவில்லையென்று சொன்னால், அவர்கள் போய் விடுகிறார்கள். அவர்கள் கொண்டுவந்ததைக் கொடுப்பதற்கு வேறு இடம் கிடையாது அதற்குமேலே அந்த 90 பர்செண்ட் பணம் கட்டாயமாக அவர்கள் கையிலே கிடைக்கிறது. அந்தத் தையல் வேலை செய்யக்கூடிய பெண்கள் கையிலே பணம் கொடுக்கப்படுகிறது என்பதற்கான உத்தரவாதம் தேவை. அந்த உத்தரவாதத்திற்குப் பிறகு கண்காணிப்பு தேவை. அவர்களிடத்திலே மிரட்டிகூட கையெழுத்து வாங்க முடியும். அதனாலேதான் அப்படிப்பட்ட உத்தரவாதம் செய்வதற்கு, கண்காணிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால்தான் இதற்கு முடிவு கட்டமுடியும் என்பது என்னுடைய கருத்து.

(முற்பகல் 10-10)

அந்த முறையில் அந்த ஈரோடு சங்கத்தைப் பற்றியும் ராமநாதபுரத்தில் நடந்து இருப்பதற்கு நடவடிக்கை எடுத்து நிறுத்தியிருந்தாலும் அங்கே நடந்து இருக்கிற முழு உண்மையையும் அந்த ஏழை பெண்கள் தையல் வேலை செய்யும் பெண்கள் முழு விவரத்தையும் சொல்வதற்கு ஒரு விசாரணையை ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த பட்சம் மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் அதிகாரிகளைப் போட்டு விரசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி விசாரிப்பதற்கு மாவட்ட அட்சித் தலைவர் மூலமாக விசாரணை குழு

[திருமதி கோமதி சீனிவாசன்] [1986 ஏப்ரல் 23

ஒன்று அமைக்கப்படும். அதோடு மட்டும் அல்லாமல் 90 சதவீதம் அவர்களுக்கு முன் பணமாக கொடுப்பதற்கு வேண்டிய உத்தரவும் சமூக நல அலுவலர்களிடத்தில் ஒப்படைத்து அவர்கள் கையெழுத்தும் பெற்றுக் கொள்கிறார்கள். அதைப் போல சமூக நல இயக்குநரகத்திலிருந்து துறை அதிகாரிகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி விசாரணைச் செய்து, ஆலோசனை செய்து துணிகளை தைத்து முடித்து விட்டார்களா? ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக அதிகாரிகள், அல்லது மாவட்ட கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டார்களா என்று இதை எல்லாம் விசாரிப்பதற்கு அதிகாரிகள் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படி எல்லாம் சரியான முறையில் செய்யவில்லை என்றால் அதற்காக முன்பு குறிப்பிட்ட படி நடவடிக்கை எடுப்பதற்கு உண்டான வழிவகைகளை அரசு இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது. ராமநாதபுரத்தில் நடவடிக்கை எடுத்து விட்டார்கள். அங்கே பாக்கி இருக்கின்ற துணிகளைத் தைப்பதற்கு வழி வகை செய்து 30–4–1986-க்குள் முடித்து விடுவார்கள். அதையும் முதன்மை கல்வி அதிகாரிகளிடம் அல்லது மாவட்ட கல்வி அதிகாரிகளிடம் அதை ஒப்படைத்து விடுவார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். துணிகளை தைப்பதற்கு முன்பு 90 சதவீத பணம் கொடுக்கப்படுகிறது. பிறகு துணிகளை எல்லாம் தைத்து முடித்து கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைத்த பிறகு மீதி 10 சதவீத பணம் கொடுக்கப்படும்.

(ஆ) வேலையற்றோருக்கு வழங்கப்பெறும் உதவித் தொகை குறித்து.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலை வாய்ப்பற்றோர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகை ரூ. 100/75/50 மார்ச் 1985க்குப் பிறகு வழங்காமையால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த் நிகழ்வினை மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1986 ஏப்ரல் 23] [திரு. த. இராமசாமி]

அறிக்கை.

வேலையற்றோர் உதவித் தொகை கீழ்க்கண்டவர்களுக்கு பொருந்துமாறு செயல்படுத்தப்படுகிறது :—

(1) பட்டதாரிகள்—பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகள் (எல்லா தரத்தினரும்) ரூ. 100 ஒரு மாதத்திற்கு.

(2) இடைநிலை, இளநிலை ஆசிரியர்கள், ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(3) உயர்நிலை ஆசிரியர்கள் ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(4) உடற்பயிற்சிக் கல்வியில் தகுதிபெற்ற ஆசிரியர்கள் (உயர்நிலை மற்றும் கீழ் நிலை) ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(5) தமிழ்ப் பண்டிதர்கள் மற்றும் பிறமொழிப் பண்டிதர்கள் ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(6) கை வினைஞர்கள் ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(7) பொறியியல் டிப்ளமோ உடையவர்கள் ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(8) எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் ரூ. 50 (ஒரு மாதத்திற்கு).

(9) பிளஸ் 2, பி.யு.சி. தேறியவர்கள், ரூ. 75 (ஒரு மாதத்திற்கு).

2. இந்த நிவாரணம் பெற கீழ்க்கண்ட நிபந்தனைகள் உள்ளன:

(அ) வேலை வாய்ப்பகத்தில் தொடர்ந்து 5 (ஐந்து) ஆண்டுகள் உயிர் பதிவேட்டில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) பெற்றோர் மாத வருமானம் ரூ. 2,000 அதாவது ஆண்டு வருமானம் ரூ. 24,000க்கு மேற்படக்கூடாது.

(இ) 35 வயது நிரம்பியிருக்கக் கூடாது. ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினராயின் 40 வயது நிரம்பியிருக்கக் கூடாது.

(ஈ) விணண்ப்பதாரர் பள்ளி அல்லது கல்லூரி படிப்பினை தமிழ்நாட்டில் முடித்திருக்க வேண்டும் அல்லது விணண்ப்பதாரரின் பெற்றோர் அல்லது காப்பாளர் தமிழ்நாட்டில் 15 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர் ஊதியம் பெறும் பணியாளர் என்ற முறையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50-க்கு மேல் வருமானம் பெறுபவராக இருக்கக்கூடாது.

(ஊ) விண்ணப்பதாரர் எந்தவொரு வாயிலிலிருந்தும் அதாவது தனியாரிடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ ஆண்டொன்றுக்கு ரூ. 600-க்கு மேல் உதவித் தொகை பெறுதல் கூடாது.

(எ) எந்த ஒரு கல்வி நிலையத்திலும் முழுநேர மாணவராக இருத்தல் கூடாது.

3. தமிழகம் முழுவதும் மார்ச் 1985-க்குப் பிறகு இத் தொகை வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டிருப்பது சரியல்ல. ஒவ்வொரு நிதி ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செல்வழிக்கபபட்டு வருகிறது.

4. 31-3-1985க்குப் பின் தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செல்லுபடி பதிவேட்டிலுள்ள தகுதி வாய்ந்த 32,526 பேர்களுக்கு புதிதாக வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கப்பட்டது. இப்பயன்தாரர்கள் அல்லாமல் ஏற்கெனவே அதாவது 31–3–1985க்கு முன்னர் உதவித் தொகை வழங்கப்பட்டு தொடர்ந்து உதவித் தொகை பெற தகுதி வாய்ந்த 62,269 பேர்களுக்கும் உதவித் தொகை 31–3–1986 வரை வழங்கப்பட்டது. காரணம் இத் திட்டத்தின் படி, நிவாரணம் பெறத் தகுதி வாய்ந்தோர், வேலையில்லாமல் இருப்பின் மொத்தம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் உதவித் தொகை பெறலாம்.

5. இத் திட்டத்தின்கீழ் உதவித் தொகையாக 31–3–1985-க்குப் பின் 31–3–1986 வரை ரூ. 654 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவினருக்கும் வழங்கப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், இனமும். | பயன் பெறுவோர் எண்ணிக்கை. | 1985–86 உதவிப் பணமாக அளிக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள். | 34,333 | 130 |
| 2 புகுமுக வகுப்பு .. .. | 11,664 | 135 |
| 3 பள்ளியிறுதி வகுப்பு .. | 48,798 | 389 |
| மொத்தம் .. | 94,795 | 654 |



### 3. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (அ. இ).

மாண்புமிகு பேரவை தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 4. அரசினர் சட்ட முன் வடிவு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன வடிவு, 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாணபுமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 5. வரவு—செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண. 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24— தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,43,76,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கிடைக்கும் தரமான இரப்பரைப் பயன்படுத்தி இரப்பர் தொழிற்சாலை நிறுவுதல் சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

''மானியக் கோரிக்கை எண். 24— தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,43,76,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவேரி படுகையில் எண்ணெய் கிடைப்பதும் நரிமணத்தில் எண்ணெய் எடுத்து வருவதாலும் தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்று அமைப்பது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,43,76,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன :

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,43,76,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 51-- தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,65,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். '

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,65,17,000—இல் ரூ 100 குறைக்க வேண்டும்''.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அரசின் தொழிற் கொள்கை குறித்தும், திட்டங்கள் குறித்தும், விரிவாக அச்சடிக்கப்பெற்று, அறிக்கையாக** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னமேயே அனுப்பப்பட்டுள்ளது. அதை இந்த அவையிலே நான் பேசியதாகக் கருதி, ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தவுடன் என்னுடைய பதிலையும் அரசின் முடிவுகளையும் இந்த அவைக்கு அளிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

திரு. பெ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கையிலே குறிப்பாக நான் சர்க்கரை ஆலைகள் பற்றிய சில விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் விவாதத்திலே ஈடுபட்டிருக்கின்ற நாம் இப்போது தமிழகத்தில் பூராவும் இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்யக் கூடிய கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காத காரணத்தால் சென்ற 18 ஆம் தேதி தழுவிய பல்வேறு மாவட்டங்களில் இருக்கக் கூடிய விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அரசினுடைய கவனத்தை அவர்கள் இன்னும் இழுக்கமுடியாத நிலையில், அதன் தொடர்பாக வருகின்ற 24 ஆம் தேதி சென்னை கோட்டைக்கு முன்பாக, தமிழகத்தின் பல இடங்களிலிருந்தும் வருகின்ற பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்து, விவசாயிகளுடைய கோரிக்கைகள் கவனிக்கப்படாத நிலையிலே விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்து அரசினுடைய கவனத்தைத் தங்கள்பால் திருப்ப வேண்டிய சூழ்நிலையில் நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு மத்திய அரசு அறிவித்த கொள்கையையும் இந்த ஆண்டு அறிவித்த கொள்கையையும் பார்த்தால், ஏராளமான சர்க்கரை ஆலைகளுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

** 163–261ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

உதாரணமாக 1984–85 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகளுக்கு சப்ளை செய்யக் கூடிய கரும்பு விவசாயிகளுக்கு ரூ. 140 டன்னுக்கு கொடுக்கப்பட்டு, 8.5 கட்டுமானம் உள்ளதற்கு ரூ. 145 தந்தார்கள். இந்த ஆண்டு அதே 8.5 சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு ரூ. 165 ஆக நிர்ணயத்திருக்கிறார்கள். அதற்கு மேலும் மாநில அரசு பரிந்துரை செய்யக்கூடிய அளவிற்கு அதிக லாபம் ஈட்டக்கூடிய அளவிலே சர்க்கரை ஆலைகள் லாபம் பெறவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். உதாரணமாகசென்ற ஆண்டு சர்க்கரையினுடைய கொள்முதலில் 100-க்கு 65 சதவீதம் லெவியாகவும் 35 சதவீதம் வெளிமார்க்கெட்டில் விற்கவும் அனுமதி தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 100-க்கு 55 சதவீதம் லெவியாகவும், 100க்கு 45 சதவீதம் பகிரங்க வெளிமார்க்கெட்டில் என்ன விலையில் விற்கின்றார்களோ, அதே விலையில் விற்கலாம் என அனுமதியளித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10–20)

சென்ற ஆண்டு தமிழகத்தில் உற்பத்தியான சர்க்கரையில் லெவிக்கு கிடைக்கக் கூடிய சர்க்கரைக்கு ஒரு மூட்டைக்கு ரூ. 341.61 காசுதான் தந்தார்கள். இந்த ஆண்டு அதே சர்க்கரைக்கு ஒரு மூட்டைக்கு ரூ. 390.92 காசாக நிர்ணயித்துக் கொடுத்து வருகிறார்கள் அந்த அடிப்படையிலே லெவி சர்க்கரையில் 51 சதவீதம் கிடைக்கக்கூடிய நேரத்தில், ஒரு மூட்டை சர்க்கரைக்கு சுமார் ரூ 48.31 அதிகமாக லாபம் கிடைக்கிறது. அதேபோன்று சென்ற ஆண்டு 100-க்கு 35 மூட்டைகளை வெளி மார்க்கெட்டில் விற்பதற்கு வாய்ப்பு வசதிகளைச் செய்திருந்தார்கள். 100-க்கு 45 சதவீதம் வெளி மார்க்கெட்டில் விற்றுவருகிறார்கள்.

சென்ற ஆண்டு 35 சதவீத மூடைகள் கொடுத்தார்கள். இந்த ஆண்டு 45 சதவீத மூடைகள் கொடுக்கிறார்கள், ஆகவே 10 சதவீதம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். வெளிமார்க்கட்டிலே ரூ. 465 ரூபாய் அளவுக்கு சென்ற ஆண்டு இருந்தது. இந்த ஆண்டு 525 ரூபாய்க்கு மேலாக விற்கிறது. நாலாம் தேதி வரை சராசரியாக அந்த விலைக்கு விற்பதால் ஒரு மூடைக்கு ஏறத்தாழ 60 ரூபாய் வரையில் லாபம் உண்டாகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி லெவிக்கு கொடுக்கக்கூடிய சர்க்கரை மூலமாகவும் வெளிமார்க்கட்டிலே விற்கக்கூடிய சர்க்கரை மூலமாகவும் ஆலை முதலாளிகளுக்கு மிகப் பெரிய லாபம் கிடைக்கிற போது அந்தச் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்கிற விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு கொடுத்த விலையேதான் இந்த ஆண்டும் கொடுக்கப்படுகிற நிலை இருக்கிறது. 8.5 சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு ரூ. 185 என்று சென்ற ஆண்டு விலை நிர்ணயம் செய்து. அந்த விலை கட்டுபடியாகாத நிலையிலே அரசாங்கம்





10 ரூபாய் மானியம் கொடுத்தது. அப்படி அதிகமாகக் கொடுத்த காரணத்தினாலே தமிழகத்திலே உள்ள கரும்பு விவசாயிகள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டினார்கள். இந்த அரசை அவர்கள் சென்ற ஆண்டு பாராட்டிய காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, இந்த ஆண்டு அப்படிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. போன ஆண்டு 8.5 ரிக்கவரி உள்ள கரும்புக்கு 185 ரூபாய் விலை நிர்ணயம் செய்தார்கள். அதற்குப் பிறகு அது கட்டுபடியாகாது என்று அரசு கருதி டன் ஒன்றுக்கு 10 ரூபாய் மானியமாக அளித்தது. இந்த ஆண்டு அப்படி அளிக்கவில்லை. அந்த கரும்பு விவசாயிகள் எல்லாம் சேர்ந்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக நான்கு நாட்கள் கரும்பு அனுப்பாமல் நிறுத்திவைத்து அதன் மூலமாக அரசாங்கத்திற்கு தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்தும்கூட அரசாங்கம் பிரமாதமாக ஒன்றும் செய்துவிடவில்லை. 8.5 ரிக்கவரி உள்ள கரும்புக்கு 10 ரூபாய் அதிகப்படுத்தி 195 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். இந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடியதல்ல. ஒருவேளை கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டு ஆலை முதலாளிகள் பேரம் பேசலாம், எங்களுக்குக் கட்டுபடியாகவில்லையே என்று சொல்லலாம். ஆலை முதலாளிகளுக்கு ஒரு டன் ஆக இருந்தாலும் செலவினங்கள் எல்லாம்போக ஒரு டன்னுக்கு 100 ரூபாய் லாபம் எடுக்கக்கூடிய நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அப்படி லாபம் எடுக்கக்கூடிய சர்க்கரை முதலாளிகளுக்குச் சாதகமாக இந்த அரசு இருந்துவிடாமல் விவசாயிகளைக் காப்பதற்கு உடனடியாக முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டிலே கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் தனியார் துறையின் மூலமாகவும் பொதுத்துறையின் மூலமாகவும் ஏறத்தாழ 24 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த 24 சர்க்கரை ஆலைகளிலும் குறைந்த பட்சம் 24 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஒரு சர்க்கரை ஆலையில் நேரடியாகப் பயன்பெறக்கூடிய நேரடித் தொடர்புள்ள விவசாயிகள் ஏறத்தாழ 10 ஆயிரம் விவசாயிகள் இருக்கிறார்கள். அப்படிக் கணக்குப் பார்த்தால் 24 சர்க்கரை ஆலைகளிலும் 2 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் ஈடுபட்டு இருக்கிற நிலைமை இருக்கிறது. இதைத்தவிர சர்க்கரை ஆலைகளிலே வேலைசெய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் என்ற முறையிலே பல ஆயிரம் பேர்கள் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தி அந்த மக்களுக்கு நல்லது செய்கின்ற முறையிலே கிராமப்புற மக்களுக்கு அந்த நன்மைகள் போய்ச் சேருகிற வகையிலே எப்பாடு பட்டாகிலும் எவ்வளவு சிரமப்பட்டாகிலும் அந்த விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை

அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டும். சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் இயங்குகின்றன. தனியார் துறையிலே கொடுக்கப்படுகிற கரும்புக்கு அரசு கட்டுபடியாகக் கூடிய விலை நிர்ணயம் செய்து கொடுத்தாலும் அந்த ஆலை முதலாளிகள் கொடுக்கமாட்டோம் என்று கோர்ட்டுக்குப் போவார்களே என்று வாதம் செய்யலாம். ஆனால் பொதுத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் உள்ள சர்க்காரால் நடத்தக்கூடிய சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் பணம் எவ்வளவு கொடுக்க முடியும் என்று முன்கூட்டியே ஒரு தொகையை நிர்ணயம் செய்துவிட்டால் தனியார் சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு அது ஒருவழிகாட்டியாக இருக்கும். எழுத்து மூலமாக நிர்ப்பந்தப்படுத்த முடியும். கூட்டுறவுத் துறை வாயிலாகவும் பொதுத் துறை வாயிலாகவும் இவ்வளவு கொடுத்திருக்கிறார்கள், நீங்கள் ஏன் கொடுக்கக்கூடாது என்று தனியார் முதலாளிகளை நிர்ப்பந்தப்படுத்தலாம்.

கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகளிலே இன்றைய தினம் ஏராளமான லாபம் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலே உடனடியாக 8.5 ரிக்கவரி உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு 30 என்று அதிகப்படுத்தி நிர்ணயித்து 225 ரூபாய் என்று கொடுப்பதற்கு அரசு உத்திரவிடவேண்டும். அப்படி உத்திரவிட்டால்தான் சாதாரண ஏழை எளிய கிராமப்புற விவசாயிகள், கரும்பு விவசாயிகள் நலனைப் பாதுகாக்கமுடியும். ஏழை எளிய விவசாயிகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. மிக அபரிமிதமாக இலாபம் சம்பாதிக்கின்ற இந்த நேரத்தில் தமிழக அரசில் உள்ள பொறுப்பான அமைச்சர்கள் இதில் தலையிட்டு கிராம விவசாயிகளுக்கு உரிய விலையைக் கிடைக்கச் செய்தால்தான் இந்த அரசை அமர்த்தியதற்கு ஏதோ ஒரு நல்ல பலன் கிடைத்தது என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். அப்படியில்லாமல் கோடிக்கணக்கான ரூபாய்கள் இலாபம் கிடைக்கும் இந்தத் துறையில் அவர்கள் இலாபத்தைப் பெற்றுக் கொண்டே இருக்கட்டும், நாம் பார்த்துக் கொண்டே இருப்போம் என்று பேசாமல் இருந்தால், நிச்சயமாக அந்த மக்கள் தங்கள் அதிருப்தியைத்தான் காட்டுவார்கள்; பிறகு ஆத்திரப்படும் சூழ்நிலை ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, கரும்புக்கு நியாயமான விலையைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே சொன்னேன்.



அதேபோன்று தமிழகத்திலே வரப்போகின்ற ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே முப்பது புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க இருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. இந்த முப்பது ஆலைகளை அமைக்கின்றபொழுது அரசின் கொள்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் அமைக்கப் போகிறீர்களா அல்லது பொதுத் துறையிலே அமைக்கப் போகிறீர்களா அல்லது தனியார் துறைக்கே தத்தம் கொடுக்கப் போகிறீர்களா என்பதைக் கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் சர்க்கரை ஆலைத் தொழில் என்பது பொன்முட்டையிடும் வாத்தாகும்; தங்கச் சுரங்கமாகவும் அது இருக்கிறது. சர்க்கரைத் தொழிலில் ஈடுபடுகின்ற ஆலை முதலாளிகள் கோடி கோடியாகச் சம்பாதிக்கின்ற இந்த நிலைமையில் தனியார் துறைக்கே இந்தச் சர்க்கரை ஆலைகளை விற்றுவிடுவதற்கு இந்த அரசு முன்வந்தால், இந்த அரசுக்குத் தனியார் துறையோடு ஏதோ உடன்பாடு இருக்கிறதோ என்ற ஐயப்பாடு நிச்சயமாக கிராமப்புற விவசாயிகளுக்கு ஏற்படும்; அப்படி நிச்சயமாக சந்தேகப்படுவார்கள் என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஏதோ மிகப் பெரிய தொழில் நுட்பங்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை. 1,500 டன் அறவைத் திறன் உள்ள ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க வேண்டும் என்றால் பத்து கோடி ரூபாய் இருந்தால் போதும். இந்தப் பத்து கோடி ரூபாயில் 4 கோடி ரூபாயை மட்டும் முதலீடு செய்தால் 6 கோடி ரூபாயைக் கடனாகப் பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்த 30 ஆலைகளைக் கூட்டுறவுத் துறையிலேயோ அல்லது பொதுத் துறையிலேயோ எடுத்து நடத்தினால் போதும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனியார் துறையிலே எந்தத் தொழிலுமே வேண்டாமென்று மைய அரசு முடிவெடுத்திருக்கிறதா அல்லது இது உங்கள் கொள்கையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பெ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசின் கொள்கை என்பது......

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, பேசும்பொழுது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தனியார் துறையில் கொடுத்தால் சந்தேகம் வரும் என்று சொன்னார்கள். மத்தியிலே கொடுப்பதெல்லாம்

எப்படி என்று கேட்கிறேன். தனியார் துறைக்குக் கொடுக்கலாமா? வேண்டாமா? மத்திய அரசாங்கத்தின் கொள்கை தனியார் துறைக்குக் கொடுக்க வேண்டாம் என்றால் நிறுத்தி விடலாம். எனவே கொள்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. பெ. செங்கோட்டையன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில், இந்தச் சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கமாக இருந்தாலும், இதற்கு முன்பு இருந்த அரசாங்கமாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கம் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த அரசும்கூட அப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கும் என்று கருதுகிறேன். கூட்டுறவுத் துறை, பொதுத்துறை ஆகியவைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள், கூட்டுறவுத் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதை பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், தனியார் துறைக்குக் கொடுத்தால் விவசாயிகள் சந்தேகப்படுவார்கள் என்று சொன்னார்கள். தனியார் துறையும் இருக்கிறது, பொதுத் துறையும் இருக்கிறது, கூட்டுறவுத் துறையும் இருக்கிறது. தனியார் துறை பூராவையும் நிறுத்தி விடலாம் என்று சொன்னால் வி.பி. சிந்தனோடு சேர்ந்து பேசலாம் நீங்கள்.

**திரு. வி. பி. சிந்தன் :** துணைத் தலைவரவர்களே, தொழில் அமைச்சரவர்கள் என்னையும், என் கட்சியையும் பற்றி புரியாமல் பேசுவதைக் கண்டு வருந்துகிறேன். தனியார் துறை முழுவதும் ஒழிக்கப்பட வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை அல்ல. தனியார்துறைக்கு இன்றைக்கு நிச்சயமாக இடம் உண்டு என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். எனவே, இனிமேலாவது இப்படிச் சொல்லாமல் இருந்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவரவர்களே, தனியார் இருக்க வேண்டுமென்பது அவர்களுடைய கட்சியின் கொள்கைகளில் ஒன்றா அல்லது அதை கம்யூனிச தத்துவம் ஏற்றுக்கொள்கிறதா, மார்க்சீயம் அதை ஏற்றுக் கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





**திரு. வி. பி. சிந்தன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள்மார்க்சீய தத்துவத்தைப் படித்தால் நல்லது என்பது என் கருத்து. மார்க்சீயத்தில் இந்த மாதிரி உள்ள நாட்டில் தனியார் துறைக்கு இடம் உண்டு என்பதுதிருப்பித் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்களுக்கு வேண்டுமானால் அந்த நூலைக் கொடுப்பதற்குக் கூட தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவரவர்களே, அப்படியானால் இந்த நிலைமைகளில் இந்தத் தத்துவத்தை வளர்ப்பது என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்களா? புதிய தத்துவம் எதையும் ஒத்துக் கொள்ளவில்லையா?

**திரு. வி. பி. சிந்தன் :** துணைத் தலைவரவர்களே, இந்த நிலைமையில் மாற்றம் இருக்கும். மாற்றத்திற்கேற்ப நடவடிக்கைகள் இருக்கும். ஒருக்காலும் கம்யூனிச இலட்சியத்தில் தனியார் துறைக்கு இடமில்லை. ஆனால் இன்னும் அந்த நிலைக்கு நம்முடைய நாடு போகவில்லை என்பதை அமைச்சரவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவரவர்களே, நடவடிக்கைகளின் மூலம்தான் மாற்றத்தை உண்டாக்க வேண்டுமே தவிர, மாற்றத்திற்கேற்ப நடவடிக்கைகள் இருப்பது என்பது கம்யூனிச தத்துவத்தை ஒப்புக் கொள்வதாக ஆகாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இப்பொழுது இருக்கும் கொள்கையை அப்படியே தொடர்ந்து நீடித்துக் கொண்டு, நடத்திக் கொண்டு வருவதுதான் நாட்டுக்கு நல்லது.

(முற்பகல் 10–30)

**திரு. வி. பி. சிந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, அதைத் தீர்மானிக்க வேண்டியது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான், இந்தச் சட்டமன்றம் அல்ல.

**திரு. பெ. செங்கோட்டையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் தொழிலிலே கடந்த 30 ஆண்டு காலமாக உள்ள அனுபவத்தின் அடிப்படையிலே சொல்கிறேன், இப்பொழுது கூட தமிழகத்திலே ஆரம்பிக்கக் கூடிய அத்தனை சர்க்கரை ஆலைகளும் கூட்டுறவுத் துறை

யிலோ அல்லது பொதுத் துறையிலோ இருந்தால், மக்களுக்கு, சாதாரண விவசாயிகளுக்கு உதவி செய்வதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே, பொதுத் துறையிலே இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகள் அனுபவிக்கக்கூடிய இலாபத்தைத் தனியார் துறையிலே இருக்கக்கூடிய விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் கஷ்டம் இருப்பதை நான் நேரடியாக உணர்ந்தவன். ஆகவே, குறைந்தபட்சம் சர்க்கரையைப் பொறுத்தவரையிலும், முழுக்க, முழுக்க, கூட்டுறவுத் துறையிலாவது, அல்லது பொதுத் துறையிலாவது நடத்துவது நன்றாக இருக்கும். அப்படி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30 ஆலைகளையும் மத்திய அரசுக்கு பொதுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் தான் ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கிருந்து பரிந்துரை செய்வாரானால், நிச்சயமாக, நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாகச் சொல்லி, அந்த 30 ஆலைகளை, பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ, ஆரம்பிக்க நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்பதை நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 'தமிழகத்தில் 30 புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் 22 இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்க 28 விண்ணப்பங்களை மாநில அரசிற்கு சர்க்கரைத் துறை இயக்குநரகம் பரிந்துரை செய்ய அனுப்பியுள்ளது' என்று குறிப்பிட்டுவிட்டு, '7 தான் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். ஏற்கனவே, நீங்கள் 30 ஆலைகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பி விட்டோம் என்று கூறியுள்ளீர்கள். ஆனால், உங்களுடைய குறிப்பிலே கூறுவது, 7 ஆலைகளுக்கு மட்டும்தான் அனுப்பி விட்டோம் என்பது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாக எண்ணக் கூடாது. 30 ஆலைகள் வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். விண்ணப்பம் அனுப்புவதற்கும் ஆலைகள் வேண்டுமென்று கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நான் அந்த விவரத்தைத் திரும்பத் திரும்ப இந்தச் சபையிலே சொல்லியிருக்கிறேன்.

திரு. பெ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, நான்தான் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். நான் 30 ஆலைகளுக்கு அனுப்பியிருப்பதாகக் கருதினேன். 7 ஆலைகளுக்குத்தான் பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த 7 ஆலைகளும் எந்தத் துறைக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம். இந்த 7 ஆலைகளும் கூட்டுறவுத் துறைக்கா, அல்லது 7 ஆலைகளுமே பொதுத் துறைக்கா, அல்லது, 7 ஆலைகளுமே





தனியார் துறைக்கா, அல்லது மூன்றும் கலந்த மாதிரியான நிலைமை ஏற்படுமா என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் எங்களுக்கெல்லாம் ஒரு நல்ல விளக்கமாக இருக்கும். அமைய இருக்கும் சர்க்கரை ஆலைகளை, கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் ஏற்படுத்த வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாக, என்னுடைய கட்சியின் கருத்தாக நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், சர்க்கரைத் தொழிலிலே மிகக் குறைவான செலவிலே அதிகமான இலாபம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

நான் சேலத்திலே இருக்கிற மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே, சுமார் 25 ஆண்டுக்காலமாக, ஆரம்ப காலத்திலேயிருந்து உறுப்பினராக உள்ளேன். நான் கரும்பு விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். பக்கத்திலேயிருக்கிற புகளூரிலே, தனியார் துறையிலே இருக்கக் கூடிய சர்க்கரை ஆலையிலே கரும்புக்கு என்ன விலை கிடைக்கிறதோ, அதைக் காட்டிலும், நிச்சயமாக, உறுதியாக, டன்னுக்கு ரூ. 20, ரூ. 25, ரூ. 30 அதிகமாகக் கிடைக்கிறது, மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே. இதை நான் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் பெருமைப்படலாம். நாம் நிர்வகிக்கக் கூடிய ஆலையிலே அதிகமான விலை கிடைக்கிறது என்பதற்காக அமைச்சர் பெருமைப்படலாம், நானும் பெருமைப் படுகிறேன். ஆகவே, மற்ற, தனியார் துறையிலே இருக்கிற ஆலைகளை நாம் எடுத்துக் கொள்ள முடியாவிட்டாலும், இனி அமைய இருக்கிற ஆலைகளை, கூட்டுறவுத் துறையில் ஆரம்பித்தோமானால், நம்முடைய ஆலைகள் நன்றாக நடக்கின்றன என்பதோடு மட்டுமல்ல, கிராமப்புற விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ. 20, ரூ. 25, ரூ. 30 கரும்புக்கு கூடுதலாக விலை கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும் என்ற காரணத்தால், கூட்டுறவுத் துறையிலோ, பொதுத் துறையிலோ அவற்றை அமைக்கும்படி நான் வலியுறுத்துகிறேன்.

அதோடு, கரும்பிலேயிருந்து கிடைக்கின்ற உப பொருள்களையும், வெளி மார்க்கெட்டிலே விற்று, விவசாயிகளுக்குப் பங்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன். உதாரணமாக, கரும்பிலேயிருந்து 4 சதவீத மொலாசஸ் கிடைக்கிறது. அந்த மொலாசஸ் வெளி மார்க்கெட்டிலே, டன் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு விற்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால், கன்ட்ரோல் விலை என்று சொல்லி, டன் ஒன்றுக்கு ரூ. 60-க்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ரூ. 20 தள்ளிவிட்டு, ரூ. 40 கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலே, ரூ. 1,000 விற்கக்கூடிய ஒரு பொருளை ரூ. 40-க்கு கொடுத்தால் அந்த ஆலை எப்படித் தாக்குப் பிடிக்கும் ? அப்படியாவது, அதை வாங்கக் கூடிய எரிசாராய உற்பத்தி செய்யக் கூடிய ஆலைகள் பொதுத் துறையிலோ,

கூட்டுறவுத் துறையிலோ இருக்கின்றனவா என்று பார்த்தால் ஒன்று கூட இல்லை. தமிழகத்திலே, எரி சாராயம் காய்ச்சும் ஆலைகள் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு ஆலையும் ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் இலாபம் சம்பாதிக்கிறது. அப்படிச் சம்பாதிக்கின்ற ஒரு ஆலையும் பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்கப்படவில்லையென்பது வருத்தப்படக்கூடிய சமாச்சாரம். உதாரணமாக, சேலத்திலே இருக்கக்கூடிய மோகனூர் சர்க்கரை ஆலையிலும், புகளூரிலே இருக்கிற சர்க்கரை ஆலையிலும் கிடைக்கக்கூடிய மொலாசஸைக் கொண்டு 6,000 கிலோ லிட்டர் எரி சாராயம் உற்பத்தி செய்ய முடியும். அதற்கு லெட்டர் ஆப் இன்டென்ட் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழகத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது என்று நினைக்கிறேன். அது இங்கே இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படி 'லெட்டர் ஆஃப் இன்டன்ட்' கிடைத்த பிறகு நீங்கள் அனுமதி வழங்குவதுதான் நியாயம். சேலம் கூட்டுறவு ஆலையில் தேவையான பணம் இருக்கிறது. சர்க்காரிடம் அவர்கள் கடன் கேட்டார்களா? இல்லை. போதுமான அளவுக்கு கரும்பும் இருக்கிறது. இருந்தாலும்கூட இந்த இரண்டு ஆலைகளுக்கும் எரிசாராயம் உற்பத்தி செய்யும் தொழிலை ஆரம்பிக்க தமிழ்நாடு அரசு ஏன் அனுமதி மறுக்க வேண்டும்? மறுக்கச் சொன்னவர் யார்? விவசாயிகள் வேண்டாம் என்று சொன்னார்களா? இல்லை என்றால் பங்குதாரர்கள் வேண்டாம் என்று சொன்னார்களா? இல்லை. தமிழ்நாட்டிலே எரி சாராயம் காய்ச்சுகின்ற சில தனிப்பட்ட முதலாளிகள் சேர்ந்துகொண்டு, எரிசாராயம் காய்ச்சுகின்ற உரிமை எங்களுக்குத்தான் இருக்கிறது, மற்றவர்களுக்கு இந்த உரிமையை வழங்கினால் எங்களுடைய வருமானம் பாதிக்கும், ஆகவே, வேறு யாருக்கும் உரிமை வழங்க வேண்டாம், அனுமதி அளிக்கக்கூடாது என்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது. அது பற்றிய விவரங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். அதன் காரணமாகத்தான் ஓமலூரிலும், பெரம்பலூரிலும் சர்க்கரை ஆலைகளில் எரிசாராயம் தயாரிக்கும் திட்டம் தடை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. தனியார் இலாபம் சம்பாதிப்பதற்காகத் தடை செய்வது நியாயம் அல்ல. இந்த இரண்டு ஆலைகளிலும் எரி சாராயம் தயாரிக்க அனுமதி அளித்தால் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆலையும் ஒரு கோடி ரூபாய் இலாபம் ஈட்ட முடியும். அந்தத் தொகையிலிருந்து கரும்பு விவசாயிகளுக்கு பல வசதிகளைச் செய்துகொடுக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





நான் ஏற்கெனவே சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டும் இதேக் கருத்தைக் கூறும்போது தருமபுரியில் அரூரில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அங்கே நிறைய கரும்பு உற்பத்தியாகிறது. சர்க்கரை ஆலை ஆரம்பிக்கத் தேவையான முதலீடுகள்தர மக்கள் தயாராக இருக்கிறார்கள். பங்குபணம் தருவதற்கு பலர் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால் இப்போது அங்கே ஒரு தனியாருக்குப் பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். கூட்டுறவுத் துறையிலேயே சர்க்கரை ஆலை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று நம்முடைய கௌரவப் பிரச்சனையாக விளங்குகின்ற புகளூர் பத்திரிகை காகிதம் மற்றும் எழுதுவதற்கு அச்சிடுவதற்குத் தேவைப்படும் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைக்குத் தேவையான 'ரா மெட்டீரியல்' கரும்பு சக்கை. இந்த கரும்புச் சக்கையை பக்கத்தில் இருந்து பெற்றால் இன்னும் அதிக இலாபம் கிடைக்கும். அந்த அடிப்படையில் கொடுமுடிக்குப் பக்கத்தில் தாமரைப்பாளையம் என்ற இடத்தில் ஒரு சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறையில் அல்லது பொதுத் துறையில் ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தால் இந்த காகித ஆலைக்கு 15 மைல் தூரத்திலிருந்து கரும்புச் சக்கையைப் பெற வாய்ப்பு ஏற்படும். குறைந்த செலவில் எடுத்துவரலாம். இப்போது தஞ்சை மாவட்டத்தில் நீண்ட தூரத்திலிருந்து கரும்புச் சக்கையை எடுத்துவர வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு டன் கரும்புச் சக்கை கொண்டுவர வண்டிச்சத்தம் 120 ரூபாய், 130 ரூபாய் செலவாகிறது. கொடுமுடியிலிருந்து கொண்டுவர 30 ரூபாய்தான் செலவாகும். அதனால் ஆலைக்கு நல்ல வருமானம் கிடைக்கும். ஆகவே, கொடுமுடிக்குப் பக்கத்தில் தனியாருக்கு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் உரிமையை வழங்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியாருக்கு அனுமதி அளித்தால் அவர்கள் புகளூர் காகித ஆலைக்கு கரும்புச் சக்கையைத் தராமல், அந்தப் பக்கத்திலே யாராவது தனியார் காகித ஆலை ஆரம்பித்தால், அவர்களுக்குத்தான் தருவார்கள். தனியார் ஆலைக்குத்தான் பகாஸை அனுப்புவார்களே தவிர புகளூர் ஆலைக்கு அந்தப் பகாஸ் வராது. ஆகவே, அங்கே கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று எங்களுடைய பகுதியில் எங்கு பார்த்தாலும் ஏராளமாக வெங்கற்கள் என்று சொல்லக்கூடிய வெள்ளைக் கல் கனிமம் கிடைக்கிறது. சேலம் மாவட்டத்தில் நாமக்கல் பகுதியில் ஏராளமாக வெள்ளைக்கல் கனிமம் கிடைக்கிறது. அவற்றை இப்போது தனிப்பட்ட வியாபாரிகள் உரிமம் பெற்று, அங்கிருந்து எடுத்து சென்னைக்குக் கொண்டுவந்து வெளிநாடு களுக்கு அனுப்புவதாகச் சொல்கிறார்கள். அங்கே ஏராள மாக வெள்ளைக்கல் கிடைக்கிற காரணத்தால் மழை இல்லாமல் விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கக் கூடிய நேரத்தில், பெரிய அளவில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தால் ஏராளமான கிராமப்புற விவசாயிகளுக்கு வேலை கொடுக்க வாய்ப்பு ஏற்படும். எங்கள் பகுதியில் ஒரு தொழிற் சாலை ஏற்பட்டது என்ற பெருமையும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

புகளூரிலே இருக்கக்கூடிய பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை யைப் பொறுத்தவரையில் அது மிகச் சிறப்பாகச் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட அங்கே உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதன் காரணத்தால் அந்த உற்பத்திச் செலவைக் குறைக்க முடியுமா என்பதுபற்றிப் பரி சீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும் என்றால் மிக அருகாமையி லிருந்தே கரும்புச் சக்கை போன்றவை கிடைக்க வேண்டும். அந்தப் பகுதியிலொரு பொறுத்தவரையில் அது முதலிலே ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஆலையாக இருப்பதன் காரணத்தால் அந்த ஆலை சிறப்பாகப் **பணி** புரிய உதவவேண்டும். ஏதா வது ஒரு வகையில் அதாவது மத்திய அரசினிடத்திலே இருந்தோ அல்லது மாநில அரசினிடத்திலே இருந்தோ சலுகைகள் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்து உரிய கெப்பாசிட்டி கிடைக்கக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அந்தப் பகுதியில் இருக்கின்ற ஒரே ஆலை அது என்பதால் அது சிறப்பாக நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப் பளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் எண்கள் 24, 51 என்பதன் கீழ் தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவைமீது பேசுகின்ற அரிய வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தமைக்காக மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் பல்





வேறு தலைப்புக்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் பேசி னாலும்கூட தொழில் துறையினைப் பொறுத்தமட்டில் மிகச் சிறப்பாக முன்னேறி தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்ற வகையில் பெருமைகளைச் சொல்லக்கூடிய நிதிநிலை அறிக்கை யாக இருப்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ் நாட்டில் பல்வேறு தொழில்களின் வளர்ச்சி கடந்த காலங் களில் எப்படி இருந்திருக்கின்றன என்பதைப் பற்றியும், இப் போது இருக்கிற வளர்ச்சி பற்றியும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. இராசாராம் அவர்கள் புள்ளி விவரங்களுடன் தன்னுடைய அறிக்கையில் தந்திருக்கிறார்கள்.

சென்னை ஏற்றுமதித் தொழில் மண்டலம் என்பதைப் பொறுத்தவரையில் அதனுடைய பணிகள் மிக வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக முதற் கட்டமாக 228.8 ஏக்கர் நிலத்தையும் இரண்டாவது கட்டமாக 328.6 ஏக்கர் நிலத்தை யும் கையகப்படுத்தி அவற்றின் மூலம் அங்கே தொழில்கள் தொடங்குவதற்காக ஏறக்குறைய 160 பேர் மனுச் செய்திருக் கிறார்கள். அவர்களிலே 80 நபர்கள் அதற்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதிலே ஆறு பேர்கள் நான்-ரெசிடன்ட் இன்டியன் என்ற அந்த என்.ஆர்.ஐ. என்ற தலைப்பின்கீழ் அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி தமிழகத்தில் இருக்கிற பல்வேறு தொழில் நகர்புறங்களை எல்லாம் ஒன்று திரட்டி அந்த மண்டலம் அமைப்பதன் வாயிலாக தமிழகம் மேலும் பெருமையைச் சேர்த்திருக்கிறது. அவ்வாறு பெருமை சேர்த்தது தொழில் துறையினைச் சாரும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களைச் சாரும் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் முதலீட்டுக் கழகம் 1969 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. அந்தத் தொழில் முதலீட்டுக் கழகம் கடந்த பத்தாண்டுக் காலத்தில் 10 கோடி ரூபாய் இலாபத்தை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டுக்காக 170 கோடி ரூபாய்க்கான முதலீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி அளித்திருந்தபோதிலும் அதனுடைய செயல் முறைகள் 200 கோடியை மிஞ்சுகிற அளவுக்கு அதிகம் ஆகி இருக்கிறது. தமிழக அரசும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சரும் காட்டுகிற ஆர்வத்தின் காரணமாகத்தான் அது இவ்வாறு வளர்ந்து இருக் கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். அதைப்போன்று 1986 ஆம் ஆண்டுக்கும், 1987 ஆம் ஆண்டுக் கும் 225 கோடி ரூபாய்க்கான அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கான தொகை மிகவும் குறைவாக இருப்பதன் காரணத் தால் அதனை விரிவுபடுத்த வேண்டுமென்ற எனது அவாவினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1978 முதல் 1986-ம் ஆண்டு வரை தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பாக வேலை பெற்றோரின் எண்ணிக்கை 2,43,443 என்ற புள்ளி விவரம் இங்கே அளித்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு கொடுக்கிற மானியத் தொகையான 10 சதவீதம், 15 சதவீதம் என்பதை சற்று உயர்த்திக் காட்டினால் தான் இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகின்ற நிலைமையில் பொருளாதார வளர்ச்சியிலும், தொழில் வளர்ச்சியிலும் நாம் மேலும் வளர்ச்சியைப் பெற்றாக வேண்டும். அந்த வகையில் மாநில அரசு கொண்டுவரக்கூடிய பல்வேறு நல்ல திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றுகின்ற வகையில் அரசு கொடுக்கின்ற 10 சதவீதம் 15 சதவீதம் என்ற அந்த மானியத்தை நாம் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். மாநில அரசு 1-4-85 முதல் 25-3-1986 வரையில் 475.79 இலட்சத்தைச் செலவிட்டு இருக்கிறது. 1978 முதல் 1986 வரை 269.75 கோடி ரூபாய் செலவிட்டு இருக்கிறது. இங்கே தனியார்களுக்காக கொடுக்கின்ற அந்த மானியத் தொகையை, மாநில தொழில் முதலீட்டின் கழகத்தின் மூலமாக தனியார்களுக்கு கொடுக்கின்ற அந்த மானியத் தொகையை 2 இலட்சத்திலிருந்து 15 இலட்சமாக உயர்த்தியிருப்பதை, நான் மனப்பூர்வமாக இந்த மாமன்றத்தின் வாயிலாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மைய அரசு கொடுக்கின்ற பல்வேறு நிதி உதவிகள் மூலமாக, சிப்காட் போன்ற தொழில் நிறுவனங்கள் வளர்ந்திருந்தாலும்கூட, மாநிலம் வளர்ச்சியடைய, மாநிலங்கள் தாமாகவே தனி தொழிற்கூடங்களை உருவாக்கிட வேண்டும்.

மைய அரசு உருவாக்குகின்ற தொழிற்கூடங்களை எந்த அடிப்படையில் உருவாக்குகிறது என்றால், தொழிலே இல்லாத மாவட்டத்தைப் பார்த்து அங்கேதான் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கிட வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே செயல்படுகிறார்கள். அப்படி மாவட்டங்களைப் பிரித்து எடுக்கிறபோது, தமிழகத்திலே இருக்கிற அனைத்து மாவட்டங்களிலும் ஏதோ ஒரு வகையில் தொழில் இருப்பதால், மைய அரசின் மூலதனமாக மாநில அரசுகளுக்குக் கொடுக்கின்ற அந்தத் தொழில் மையங்கள் தமிழகத்திலே மிகவும் குறைவாக இருக்கின்றன. தமிழகத்தில் அப்படித் தொழில் வளர்ச்சி இருப்பதாக மாநில அரசு காட்டி, தமிழகத்தை புறக்கணிக்கிற சூழ்நிலையை உருவாக்கக் கூடாது. நம்முடைய மாநில அரசு கொண்டுவந்து கொடுக்கின்ற பல்வேறு திட்டங்களையும் மைய அரசு தன்னகத்தே கொண்டு அவைகளின் கோரிக்கையை தனிவாக ஏற்று பண்போடு நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல மாநில அரசும் தங்களுக்கெனத் தனியாக தொழில் மாவட்டங்களை ஏற்படுத்தி சுயதேவையை நிவர்த்தி செய்துக்கொள்வதோடு அதன் மூலமாக புதிய தொழிற்கூடங்களை தொழிற் வட்டாரங்களாக, தொழிற் வட்டங்களாக உருவாக்கிட வேண்டும். அதற்கான வகையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஏற்பாடு செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, என். ஆர். ஐ. என்ற தலைப்பின்கீழ் வெளிநாடுகளிலே இருக்கிற இந்தியர்கள், வெளிநாட்டிலேயிருந்து வரக்கூடிய தமிழர்கள் நம் நாட்டிலே, தமிழகத்திலே முதலீடு செய்து தொழில் துவங்குகிற அந்த திட்டத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. இராசாராம் அவர்களுடைய காலத்திலே தான் அந்த என். ஆர். ஐ. திட்டத்திற்கு ஒரு தனி மரியாதை கிடைத்திருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய தொழில் கொள்கையை மறுபரிசீலனை செய்திருக்கிறார்கள். அப்படி அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்ததன் காரணமாகப் புதிய புதிய தொழில் வட்டாரங்களாக, தொழில் வட்டங்களாக தமிழகத்தை மாற்றிக்கொண்டு வரவேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்து இந்தியாவிலே தொழில் வளர்ச்சியின் நிலை குறித்து அது எப்படி இருக்கிறது என்பது குறித்து சென்டிரலி மானிடரிங் இந்தியன் எக்கானமி என்கிற பத்திரிகை, மகாராட்டிர மாநிலத்திலேயிருந்து வரக்கூடிய, பம்பாய் நகரத்திலேயிருந்து வரக்கூடிய ஒரு பத்திரிகை 1985ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிக்கை ஒன்றைப் பிரசுரித்திருக்கிறது. அதிலே புதிய தொழிற்சாலைகளை உருவாக்கித் தங்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்கிற விதத்திலே இந்திய அரசாங்கத்திலே இருக்கிற பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகம் 3-வது இடத்தைப் பெறுகிறது. அதேபோல உற்பத்தி மதிப்பு என்ற வகையிலே உற்பத்தி செய்வதிலே தமிழகம் பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகம் 4-வது இடத்தைப் பெறுகிறது. அதேபோல 1960-61 முதல் 1980-81 முடிய 20 ஆண்டுக்காலத்தில் தமிழகத்தினுடைய ஆலைகளிலே சேர்க்கப்பட்டுள்ள பொருள்களின் மதிப்போடு, மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகம் 4-வது இடத்தைப் பெறுகிறது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போதும் தமிழகம் 4-வது இடத்தைப் பெற்றிருக்கிறது.

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் பொருள்களின் மதிப்பைப் பொறுத்தவரையில் 3-வது இடத்தைப் பெற்றிருக்கிறது. நிதி நிறுவனங்களின் உதவித்தொகையைப் பெறுவதைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு 3-வது இடத்தைப் பெற்றிருக்கிறது. இப்படிப் பல்வேறு துறைகளிலும் தமிழகத்தினுடைய தொழில் துறை முன்னணியில் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட தொழில் துறையிலே, குறிப்பாக என்னுடைய பகுதியிலே ஒரு சிப்காட் நிறுவனம் இருக்கிறது. அந்த சிப்காட் பகுதியிலே திருச்சியில் இருக்கும் பி.எச்.இ.எல். நிறுவனத்தின் துணை ஆலை ஒன்று இருக்கிறது. அதை நிரந்தரமாக பெரிய ஆலையாக மாற்றித் தரவேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல் அங்கு இருக்கிற என்ஃபீல்டு நிறுவனத்தில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு வசதிகள் அத்தனையையும் அந்தத் தொழிற்சாலை நிர்வாகம் செய்து தருவதற்கான வாய்ப்பு வசதிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்திக் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மைய அரசிற்குப் பல்வேறு கோரிக்கைகளை—பல்வேறு தொழில்கள் துவங்குவது குறித்து மனுக்களை—தமிழ்நாடு அரசு கொடுத்துக்கொண்டே இருக்கிறது. தொழிற்சாலைகளின் வளர்ச்சி குறித்து, தமிழகத்திற்கு கீழ்க்கண்ட தொழில்களுக்கு அனுமதி வேண்டும் என்று கேட்டிருப்பதாக ஒரு பட்டியலையே தமிழக அரசு குறிப்பில் கொடுத்திருக்கிறது. அப்படி அனுமதி கேட்டு அனுப்பியிருக்கிற தொழிற்சாலைகளில் குறிப்பாக ஊட்டி எக்ஸ்ரே பிலிம் தொழிற்சாலைக்கு 120 கோடி ரூபாய்க்கு கட்டாயமாக மைய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

அதேபோல 200 கோடி ரூபாய் மதிப்பிலான ஊட்டி கலர் பிலிம் தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களின் நலம் கருதி கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் வகையில் கடந்த ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 30 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தர



வேண்டுமென்று மத்திய அரசிடத்தில் கோரினார்கள். எங்களுடைய மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. வேலூர் சர்க்கரை ஆலையின் அரைவைத் திறன் நாளொன்றுக்கு 1,250 டன்கள் ஆகும். 1983–84 ஆம் ஆண்டிலே அந்த ஆலை அரைத்திருக்கிற கரும்பின் அளவு இரண்டு இலட்சத்து ஆயிரத்து அறுபத்திரெண்டு டன்கள் ஆகும். அதேபோல அது உற்பத்தி செய்திருக்கிற சர்க்கரையின் அளவு 19,802 டன்கள் ஆகும். 1984–85 ஆம் ஆண்டில் அந்த ஆலை அரைத்திருக்கிற கரும்பின் அளவு 2 இலட்சத்து 32, 880 டன்கள் ஆகும். அது உற்பத்தி செய்திருக்கிற சர்க்கரையின் அளவு 22,069 டன்கள் ஆகும். அதற்கு கிடைத்திருக்கிற சராசரி விழுக்காடு 1983–84 ஆம் ஆண்டில் 9.85 புள்ளிகள், 1984–85 ஆம் ஆண்டில் 9.48 புள்ளிகள் ஆகும்.

அதேபோல ஆம்பூர் சர்க்கரை ஆலை நாளொன்றுக்கு 2,200 டன் அரைவைத் திறன்கொண்டது. அந்த ஆலை அரைத்திருக்கிற கரும்பின் அளவு ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 34 டன்கள் ஆகும். அதைப்போல திருப்பத்தூர் சர்க்கரை ஆலை நாளொன்றுக்கு 1,250 டன் அரைவைத் திறன் கொண்டது. அந்த ஆலை அரைத்திருக்கிற கரும்பின் அளவு 59,067 டன்கள் ஆகும். தினந்தோறும் 1,250 டன் அரைக்கிற எங்களுடைய பகுதி சர்க்கரை ஆலைகளில் 50 ஆயிரம், 60 ஆயிரம் டன் வரையில் கரும்பைக் கொண்டுவந்து பிழிகிறார்கள். தங்களுடைய அரைவைத் திறனைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் கரும்பைப் பிழிகிறார்கள். கரும்பு உற்பத்தி செய்வதில் 9 ஆயிரம் ஏக்கர் தான் அங்கே அரைக்க முடியும். ஆனால் அவர்கள் பதிவு செய்திருக்கிற எண்ணிக்கை 14 ஆயிரம் ஏக்கர் ஆகும். 10 முதல் 12 மாதங்களில் அரைக்க வேண்டிய கரும்பை 14, 15 மாதங்களில் அரைக்கிற அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு 1,000 முதல் 1,500 ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு வருமானத்தை விவசாயிகள் இழக்கிறார்கள். காலத்தில் கரும்பை அரைக்காத காரணத்தால விவசாயிகளுக்கு இந்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களிடத்தில் நான் நேரில் சொல்லியிருக்கிறேன். இந்த மாமன்றத்தின் மூலமும் சொல்கிறேன். தமிழகத்தில் இருக்கிற விவசாயிகளுக்குப் பலவேறு உதவிகளைச் செய்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உடனடியாக இந்த கரும்பாலைகளுக்கு அனுமதி வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக வேலூர் சர்க்கரை ஆலைக்கு 'பி-பிளாண்ட்' ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சிகள் மூலமாகவும், விவசாயிகள் சங்கங்கள் மூலமாகவும் கோரிக்கை அரசிற்கு வந்திருக்கிறது. அங்கே 'பி-பிளாண்ட்டை' ஏற்படுத்துவதற்கு ட்ரான்ஸ்போர்ட்

டில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே அவற்றை இந்த அரசு போக்கிட வேண்டும். ஆற்காடு, செய்யாறு மற்றும் ஆரணி ஆகிய மூன்று வட்டாரங்களை உள்ளடக்கி இருக்கிற வேலூர் சர்க்கரை ஆலைக்குப் பக்கத்தில் 40 கிலோ மீட்டர் வரையில் விவசாயிகள் உற்பத்தி செய்கிற கரும்பை உபயோகப்படுத்துகிற விதத்தில் வேலூர் சர்க்கரை ஆலைக்கு 'பி-பிளாண்ட்' சர்க்கரை ஆலை உருவாக்கிடும் வாய்ப்பை மத்திய-மாநில அரசுகளின் உதவியோடு செய்திடும் ஏற்பாட்டைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

இதிலே மையப் பகுதியாக இருக்கக் கூடிய மாம்பாக்கம் என்ற பகுதியில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியோடு நாங்கள் வேண்டிய நிலத்தை கையகப்படுத்தி அரசுக்குத் தரத் தயாராக இருக்கிறோம். எனவே அங்கே அதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு விவசாயிகளுக்கு செய்து தரக் கூடிய ஒரு அடிப்படைக் கோரிக்கையாக இதை நான் முன்வைக்க விரும்புகிறேன். ஒரு டன்னுக்கு 20 ரூபாய் பிடித்தம் செய்து கொள்வதாகச் சொல்கிறார்கள். அதற்குக்கூட விவசாயிகள் சம்மதிக்கிறார்கள். எனவே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் அனுமதியோடு, இந்த அரிய வாய்ப்பை அங்கே உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் ஏறக்குறைய 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலே உற்பத்தியாகக் கூடிய அந்த சக்கையை மூலதனமாக வைத்து, ஒரு காகிதத் தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூர், ஆம்பூர், வேலூர், திருத்தணி, மற்றும் திருவண்ணாமலை போன்ற இடங்களில் 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்த சர்க்கரை ஆலைகளில் இருந்து பிழிந்து எடுக்கக் கூடிய அந்த சக்கையை வைத்து காகிதம் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எப்படி உலக வங்கி உதவித் திட்டத்திலிருந்து காகிதத் தொழிற்சாலை ஒன்றை அமைத்தார்களோ, அதைப் போன்று எங்கள் பகுதியிலேயும் ஒரு காகிதத் தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி உருவாக்கிக் கொடுப்பதின் மூலமாக, மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற திட்டப்படி தொழில் இல்லாத மாவட்டங்களில் பெரிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். அப்படிப்பட்ட மாவட்டங்களை தொழிற்சாலைகள் உள்ள மாவட்டங்



களாக மாற்ற முடியும் என்ற என்னுடைய கோரிக்கையை வைத்துப் பேசுவதற்கு இனிய சந்தர்ப்பத்தை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில பல கருத்துக்களை மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே வழங்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் முதல் பக்கத்தில் தொழில் உரிமம் பற்றிய விவரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. 1977 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு முடிய, 819 மனுக்கள் தொழில் தொடங்குவதற்காக கோரப்பட்டதாகவும், அதிலே மாநில அரசு பரிந்துரைகளோடு 468 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், 255 மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் ஒரு புள்ளி விவரக் கணக்கை இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பிலே என்னாலே பார்க்க முடிகிறது.

இந்தத் தொழில் உரிமம் பெறுகின்ற நேரத்தில், முதல் கட்டமாக லெட்டர் ஆப் இன்டென்ட் (Letter of indent) என்ற அனுமதியும், அதற்குப் பின்னாலே, இன்டஸ்ட்ரியல் லைசென்ஸ் (Industrial license) என்கிற உரிமமும், அதற்குப் பின்னாலே தொழிற்சாலைகளை நிறுவுகின்ற பணியையும், அதற்குப் பின்னாலே 'வயபில் யூனிட்' (viable unit) என லாபகரமான நிலையில் இயங்குகின்றது என்ற நிலையையும் எண்ணிப் பார்த்த பின்னாலே, 468 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்தாலும், மாநில அரசு பரிந்துரை செய்தாலும் கூட, 468 தொழிற்சாலைகளும் இப்போது நடந்து கொண்டு இருக்கின்றனவா? இவை எல்லாம் வயபிள் யூனிட்டுகளாக (viable unit) லாபகரமான தொழிற்சாலைகளாக இருக்கின்றனவா என்கிற புள்ளி விவரத்தை இத்தோடு இணைத்துத் தந்திருந்தால் 468 உரிமம் பெற்றவர்கள், தொழிற்சாலைகளை ஆரம்பித்து இருக்கிறார்களா, அல்லது அவை நடந்து கொண்டு இருக்கின்றனவா, என்ற உண்மையான புள்ளி விவரத்தை நம்மாலே உணர முடியும்.

அடுத்து இந்தக் கொள்கைக் குறிப்பினுடைய 11-வது பக்கத்தில் தொழிற்சாலைகளுடைய தொழில் வளர்ச்சி குறித்த சில புள்ளி விவரங்களை அரசு நமக்குத் தந்திருக்கிறது அதிலே பம்பாய் நகரத்திலே உள்ள Centre for monitoring Indian economy என்ற இந்திய பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் ஒரு

புள்ளி விவரத்தை 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தந்திருக்கிறது. அந்தப் புள்ளி விவரத்தைப் பார்க்கின்ற நேரத்தில், 5 அல்லது 6 நிலைகளில் தமிழகம் 3வது இடத்தையும் நான்காவது இடத்தையும் பெற்றிருக்கிறது என்று அதிலே கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இன்னொரு கருத்து திலகமிட்டதைப் போல, மத்திய அரசு நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுகின்ற மாநிலங்களில் தமிழகம் முதலிடம் பெற்று இருக்கிறது என்று இதிலே பெருமை பாராட்டிக் கொள்கிறது. எனக்கு இருக்கிற கவலை எல்லாம், மத்திய அரசின் நிதி நிறுவனங்களிடமிருந்து தமிழகம் அதிகமான நிதியைப் பெற்று முதலிடம் வகிக்கலாம். ஆனால் பெற்ற நிதியை முதலீடாகச் செய்து இத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதில் இந்தியாவிலே எந்த இடத்திலே இருக்கிறது என்கின்ற விவரத்தினையும் இந்தக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருந்தால், விவரமாக நம்மாலே தெரிந்து கொள்ள முடியும்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகின்ற நேரத்தில் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியைக் குறித்து யாரும் கவலைப்படத் தேவையில்லை என்று சொன்னார்கள். தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி என்பது இந்திய மட்டத்திலே மூன்றாவது, நான்காவது இடத்திலே இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சமீபத்திலே சென்னையிலே நடந்த தொழில் வர்த்தக 150ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய துணை அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்து 13-4-1986வது நாளிதழ், தினமணியில் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதிலே அவர் தெரிவிப்பது எல்லாம் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி என்பது நான்காவது இடத்திலேயிருந்து தமிழகம் இன்றைக்கு ஏழாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்ததோடு, இந்த நிலை நீடிக்குமேயானால் 10, 15 ஆண்டுகளுக்குப் பின்னாலே தமிழகம் ஒரு அபாயகரமான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டிய கட்டம் வரும். எனவே விரைவில் வல்லுநர்களையும், விற்பன்னர்களையும் ஒரு குழுவாக அமைத்து நீங்கள் இதற்கான வழிமுறைகளைக் காணவேண்டுமென மத்திய துணை அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் சமீபத்திலே சென்னையிலே நடந்த விழாவில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற சந்தேகமெல்லாம் பம்பாயிலே உள்ள இந்தியப் பொருளாதார வளர்ச்சி மையம் என்று சொல்கின்ற Centre for monitoring Indian Economy நிறுவனம் ஒரு அரசு நிறுவனமா அல்லது தனியார் நிறுவனமா அல்லது இது தந்திருக்கிற புள்ளி விவரங்களும், மத்திய



அமைச்சர் தருகின்ற புள்ளி விவரங்களும் வேறுபாடாக இருக்கின்றனவே, இதை எப்படி நம்புவது என்கின்ற ஐயப்பாடு இன்றைக்குத் தமிழகத்து மக்களின் மனதிலே ஆழமாக இருக்கிறதென்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். பம்பாய் நகரத்தில் உள்ள அந்த வளர்ச்சி மையம் ஒரு புள்ளி விவரத்தைத் தெரிவிக்கிறது. மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் இன்னொரு புள்ளி விவரத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே தெளிவுபடுத்துவதெல்லாம், மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும், மாநிலத்தை ஆண்டுகொண்டிருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மத்தியில் ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சிக்கும் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் புள்ளி விவரத்திலே வேறுபாடு என்பது எந்த நிலைக்குக் கொண்டுபோய் விடும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் கொள்கைக் குறிப்பிலே தந்திருக்கிற புள்ளி விவரங்களையெல்லாம் ஒரு முறை ஆழமாகப் படித்துப் பார்த்தால், இந்தப் புள்ளி விவரங்களெல்லாம், புள்ளி விவகாரங்களாகவும், புள்ளிப் புதிர்களாகவும் இன்றைக்கு இருந்துகொண்டு இருக்கின்றன. இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் யதார்த்தங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. எனவே, விளைவுகள் விபரீதங்களாகத்தான் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, தொழிற்சாலைகள் தொடங்குகின்ற நிலையில் முனைவர்கள் பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளைத் தொடங்குகிறார்கள். ப்ரமோட்டர்ஸ் (Promoters) என்கின்ற முனைவர்கள். அப்படி தொழிற்சாலைகளைப் பின்தங்கிய பகுதிகளிலே தொடங்குகின்ற நேரத்திலும் சில சலுகைகளை அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இவர்களுக்கு உதவி செய்வதற்காக சிப்காட் என்கின்ற தொழில் முன்னேற்ற நிறுவனமும், " டிக் " என்கின்ற தொழில் முதலீட்டு நிறுவனமும், அதே போன்று " டிட்கோ " என்கின்ற தொழில் வளர்ச்சி நிறுவனமும் எல்லாம் இந்தத் தொழிற்சாலைகள் துவங்குவதற்கு முதலீடுகள் செய்கின்றன. அந்த சலுகைகளில் ஒன்று மின்சார கட்டுப்பாடு நிச்சயமாகப் பின்தங்கிய இடங்களில் துவங்குகின்ற தொழில்களுக்கு இருக்காது என்று தெரிவிக்கிறார்கள். நடைமுறையிலே பார்த்தால் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் மின்வெட்டு இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் ஜெனரேட்டர்களை நாடி செல்லவேண்டி இருக்கிறது. ஜெனரேட்டர்களை வாங்குவதற்குக்கூட, அரசாங்கம் கடன் தருகிறது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்திலே, அந்தப் பின்தங்கிய பகுதிகளை மனதிலே வைத்து இந்த ஜெனரேட்டர்களை வாங்கி அதன் மூலமாக மின் சக்தியை உற்பத்தி

செய்கின்ற நேரத்தில், சாதாரணமாக அணுமின் நிலையம், அதுபோன்று புனல்மின் நிலையங்களிலும் உற்பத்தி செய்யப் படுகின்று மின்சாரத்தினுடைய யூனிட்டுக்கு எவ்வளவு செலவு ஆகிறதோ, அதற்கும் ஜெனரேட்டர் மூலமாக உற்பத்தி செய்கின்ற இந்த யூனிட்டுக்கு எவ்வளவு விலை ஆகிறதோ அதற்கும் உண்டான வித்தியாசத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஜெனரேட்டர் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின் சக்தியினுடைய விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்க பல்வேறு சங்கடங்களை அந்த (ப்ரோமோட்டர்ஸ்) முனைவர்கள் அனுபவிக்க வேண்டிய கட்டம் இருக்கின்ற காரணத்தாலே இதற்கு உண்டான வித்தியாசச் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, சிப்காட் (Sipcot) ஒரு சலுகையை அறிவித்து இருந்தது. என்ன சலுகை ? இந்த சிப்காட் மூலமாக பணத்தைப் பெற்று தொழில்கள் தொடங்குபவர்கள் எல்லாம் அதை சரியாக திரும்ப செலுத்திக் கொண்டு வருவார்களானால் 1 சதவீதம் தள்ளுபடி செய்யலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது 1—6—1985-லிருந்து அந்தச் சலுகை நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால், அபராத வட்டி மட்டும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றால் எப்படி தொழில் முனைவோர்கள் (புரமோட்டர்கள்) இந்தப் பின்தங்கிய பகுதிகளில் தொழிலைத் தொடங்குவார்கள் என்பதையும் அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு சலுகை, Interest Free Sales-Tax Loan என்று சொல்லுகின்ற வட்டி இல்லாத விற்பனை வரிக் கடன் மற்ற மாவட்டங்களில் எல்லாம் புதிதாக தொழிலைத் தொடங்குபவர்கள் அந்தத் தொழில் தொடங்கிய 5 ஆண்டுக் காலத்திற்கு விற்பனை வரி தொடங்கியவர்களே வசூலித்துக் கொள்ளலாம், அரசுக்கு செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற சலுகை இருக்கிறது. ஆனால் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் அந்தச் சலுகை ரத்து செய்யப்பட்டு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் (Interest Free Loan) என்ற . அடிப்படையில் 15 ஆண்டுக் காலத்திற்கு வட்டி இல்லாமல் இந்தப் பின் தங்கிய பகுதியில் தொழில் தொடங்குபவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்ற சலுகை இருக்கிறது. அதுபோன்று மத்திய அரசு கொடுக்கின்ற மானியத் தொகை இருக்கிறது. ஆனால் இவை எல்லாம் எழுத்து அளவில் இருக்கின்றனவே தவிர நடைமுறை அளவில் இல்லை. சிப்காட் மூலமாக இந்தத் தொழிற்சாலைகள் பெற வேண்டிய (Interest Free Sales-Tax Loan





வட்டியில்லா விற்பனை வரிக் கடன் ஆனாலும், இது போன்ற மத்திய அரசு கொடுக்கின்ற மானியம் ஆனாலும் பெறுவதற்கு எவ்வளவு கால தாமதம் ஆகிறது என்பதை நான் அமைச்சருக்குச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இன்னும் கூட பல தொழில் அதிபர்கள் அல்லது முனைவோர்கள் இந்தக் கடனை வாங்காமல், மத்திய அரசின் மானியத்தையும் வாங்காமல் இருக்கிறார்கள். நாம் சிப்காட்டிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் அவர்கள் அரசு இன்னும் பணம் ஒதுக்கீடு இல்லை என்ற காரணத்தை இன்றைக்குக் காட்டுகிறார்கள். எனவே, இந்த அடிப்படையில் மின்சார பற்றாக் குறையை நீக்கிட வேண்டும். இந்த Interest Free Sales-Tax Loanஐ முறையாக வழங்கினால்தான் பின்தங்கிய பகுதியில் தொழில் தொடங்குவதற்கான நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொதுத் துறையை எடுத்துக் கொண்டால், பொதுத் துறையில் எல்லாவற்றையும் பற்றி நான் பேசுவதைக் காட்டிலும், '' டான்சம் '' (Tancem) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த டான்சம் என்ற தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் கீழ் 4 தொழிற்சாலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. (1) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை, (2) ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை, (3) ஆலங்குளத்தில் அமைந்துள்ள ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் செய்யக்கூடிய தொழிற்சாலை, (4) அழுத்தக் குழாய்கள் செய்யக்கூடிய தொழிற்சாலை, திருச்சியில் உள்ள மாயானூரில் இருக்கிறது. இந்த 4 தொழிற்சாலைகளையும் பொது நிறுவனத்தின் கீழ் டான்சம் என்ற தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் நிர்வகித்துக் கொண்டிருக்கிறது.

அதில் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 2,678 இலட்சங்கள் செலவில் உருவாக்கப் பட்ட ஒரு ஆலை ஆகும். 1977-ல் அது உற்பத்தியைத் தொடங்கியது. ஏறத்தாழ 5 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு சிமெண்ட் ஆண்டுதோறும் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற திட்ட அடிப்படையில் அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலையினுடைய இன்றைய நிலைமை என்ன என்றால், பரிதாபகரமான நிலைமையாக இருக்கிறது. கடுமையான நட்டத்தில் அந்தத் தொழிற்சாலை இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இதனுடைய முழுமையான விவரங்கள் 15-4-1986 ஆம் தேதியிட்ட துக்ளக் பத்திரிகையில் மிகத் தெளிவாக அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளியைப் பேட்டிகண்டு சித்தரித்து இருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார் என்றால், பல கோடிக்கணக்கான ரூபாய் நட்டத்திற்குக் காரணம் அங்கே உள்ள E.S.P. என்ற ஒரு சாதனம் பல ஆண்டு கால

மாக பலகோடி ரூபாய் பெறக்கூடிய அந்த சாதனம் பழுதுபட்டு இருப்பதால் அதன் மூலமாக 10 சதவீத சிமெண்டுக்கான கச்சாப் பொருள்கள் வெளியே செல்லும் விடுகின்றன. அப்படி செல்லு கின்ற காரணத்தால், அதற்கான மூலப் பொருள்கள் எடுத்து வருகின்ற நேரத்திலும், நிலக்கரி கொண்டு வருகின்ற நேரத்திலும் 5 சதவீதம் அளவுக்கு அதிலே சேதம் ஏற்பட்டு விடுகிறது. இப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்று துக்ளக் பத்திரிகையில் மிகத் தெளிவாக அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளி பேட்டியில் சொல்லியிருக்கிறார். இது மட்டும் அல்லாமல் trucks and tipper போன்ற பல்வேறு சாதனங்கள் எல்லாம் பழுதுபட்ட நிலையில் அப்படியே இருக்கிற காரணத்தாலதான் இன்றைக்கு அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை என்பது பெருத்த நஷ்டத்தில ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் சமீபத்தில கூட ஒரு பெரிய விழா எடுத்து ஏறத்தாழ 12 இலட்சம் ரூபாய் செலவழித்தார்கள் என்ற தகவலும் அந்தப் பத்திரிகையில் வந்திருந்தாலும் கூட இவ்வளவு செலவில் எப்படி அந்த விழா கொண்டாடப்பட்டது என்ற அந்த விவரங்களை எல்லாம் சொல்லி நான் உங்கள் மனதை புண்படுத்த விரும்பவில்லை. இருந்தாலும்கூட, உங்களுடைய மனசாட்சியை நான் கேட்கிறேன். இந்த ஆலையில் 'மிஸ் மேனேஜ்மென்ட்' என்ற அடிப்படையிலே சரியான நிர்வாகம் இல்லாத காரணத்தினால், பொதுத்துறை எந்த அளவிற்கு இந்த ஆட்சியில் சீரழிந்துகொண்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு, உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, இங்கே இன்னொரு பொது நிறுவனம் அந்தப் பொது நிறுவனம் டி.என்.பி.எல். என்ற காகித செய்தித்தாள் நிறுவனமாகும். இந்த நிறுவனம் தன்னுடைய புகழுக்கு ஏற்ப புகளூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கத் தலைப் பட்டது அப்படி ரூ. 105 கோடி உலக வங்கியிடம் கடனாகப் பெற்று ஒரு பெரிய தொழிற்சாலையாக நிறுவப்பட்டது. அந்த அடிப்படையிலே 300 டன் எடையுள்ள செய்தித்தாள்களும், 200 டன் எடையுள்ள எழுதி அச்சிடுகின்ற தாள்களை உற்பத்தி செய்கின்ற ஒரு மிகப்பெரிய நிறுவனமாக அது உருவாக்கப்பட்டது. ஆனால் ஆரம்பித்த அந்த நேரத்தில், அதற்குரிய மூலப்பொருள் எப்படிப் பெறமுடியும் என்று அந்த நிறுவனம் திட்டம் தீட்டுகின்ற நேரத்தில், கரும்புச் சக்கையிலிருந்து காகிதத்தைத் தயாரிக்க வேண்டுமென்ற அதற்கான தொழில் நுட்ப அறிவைப் பெற்று, இந்த ஆலை ஆரம்பிக்கப்பட்டது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், இந்த மூலப் பொருளான கரும்புச் சக்கையை பல்வேறு ஆலைகளிடமிருந்து பெற்றாக வேண்டும் என்று கணக்கிட



பட்டது. அந்த ஆலைகளுக்கு நிலக்கரி தருவது என்று ஒப்புதல் தந்துவிட்டு, இந்தக் கரும்புச் சக்கையைப் பெறுவதாக ஏற்கனவே இந்த அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், நிலக்கரித் தட்டுப்பாடு என்பது நம்முடைய தமிழகத்தில எந்த அளவிற்குக் கடுமையாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அனல் மின் நிலையங்களில் சரியான உற்பத்தியை நாம் எட்டமுடிய வில்லை. ஃபுல் கெபாசிட்டியை ( Full Capacity ), அந்த முழுத் திறனையும் எட்டமுடியாத அளவிற்கு இருப்பதற்குக் காரணம், நிலக்கரி கிடைக்காது இருப்பது மட்டுமல்லாமல், நிலக்கரியினுடைய தரமும்தான் காரணம் என்று எண்ணுகின்ற நேரத்தில் நிலக்கரியை வழங்கிவிட்டு, கரும்புச் சக்கையை எடுத்து நாங்கள் காகிதம் செய்கிறோம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். இந்தத் தொழிற்சாலைக்குக் கச்சாப் பொருளாக அல்லது மூலப்பொருளாக கரும்புச் சக்கை ஆலைக்குத் தொடர்ந்து கிடைக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். புகளூர் காகிதத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் பல்ப் (Pulp) என்கின்ற கூழ், கரும்புச் சக்கைக் கூழ் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இன்னும் இறக்குமதி செய்யப்படுவதாகத் தான் நம்புகிறேன். இது லாபத்தில் ஓடுகிறதா, அல்லது நட்டத்தில் ஓடுகிறதா என்ற விளக்கம் இல்லை. கொள்கைக் குறிப்பில் ரூ. 21 கோடி அன்னியச் செலாவணியை ஈட்டியிருக்கிறது என்றுதான் இருக்கிறதே தவிர, அது லாபத்தில் நடக்கிறதா என்ற விளக்கங்கள் எதுவும் கொள்கைக் குறிப்பில் இல்லை. புகளூர் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், அதற்கான டெக்னாலஜி (Technology) தொழில் நுட்பத்தைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. நான் சொல்வது, 'லோக்கலைசேஷன் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ்' (Localisation of Industries) நிர்வாகம் பண்ணுகின்ற நேரத்தில், என்னென்ன காரியங்களை யெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும், என்னென்ன பொருள்கள் இருந்திட வேண்டும் என்ற நிபந்தனைகளையெல்லாம் அல்லது கருத்துக்களை எல்லாம் எண்ணிப் பார்த்து, இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டதா என்று கேட்கிறேன்.

தமிழகத்தின் தொழிற் துறையைப் பொறுத்த வரையில், பிளானிங் (Planning), திட்டமிடுவதில், கோட்டை விட்டு விட்டது என்பதை நான் மீண்டும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே புகளூர் தொழிற்சாலை என்பது இன்றைக்கு நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, மத்திய அரசினுடைய முதலீடாக 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில், மத்திய அரசு என்ன முதலீடு செய்திருக்கிறது என்பதற்கான விவரங்கள் உங்களுடைய கொள்கைக் குறிப்பில் இருக்கிறது. அதன்படி பார்த்தால், சேலம் உருட்டாலை, ராணிப்பேட்டையில் கனரக மின் உபகரணங்களைத் தயாரிக்கும் அரசு நிறுவனம் ஆகிய இரண்டைத் தவிர, வேறு எதுவும் மத்திய அரசால் தமிழகத்திற்கு வழங்கப்படவில்லை.

ஊட்டியிலே ஆரம்பிக்கப்படவிருக்கின்ற ரூ. 170 கோடி முதலீட்டில் எக்ஸ்ரே பிலிம் தொழிற்சாலை என்ன வாயிற்று? இதுபோன்று ரூ. 200 கோடி முதலீட்டில் கலர் பிலிம் தொழிற்சாலை ஊட்டியிலே நிர்மாணிக்கப்படுவதாக இருந்தது. ஆண்டுதோறும் பேசுகிறோம். ஆண்டுதோறும் அமைச்சர் பதில் சொல்கிறார். ஆண்டுதோறும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் என்று சொல்கிறார். அதுபற்றிய இன்றைய நிலைமை என்ன? என்ன முயற்சி எடுக்கப்பட்டது? உரிமையைப் பெறுவதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களைப் பொறுத்த மட்டில், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் மாநிலத்தினுடைய உரிமைகளைப் பெறுவதற்கு மாநிலம் பெற்றிட வேண்டிய தொழில் உரிமங்களை அல்லது தொழிற்சாலைகளைப் பெறுவதற்கு உங்களோடு இணைந்து போராடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இன்றைய தினம் அப்படிப்பட்ட மனப்பான்மையே இல்லாமல் முனைமுறிந்த துறையாகத்தான் தமிழகத் தொழில் துறை இருப்பதற்காக நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

நலிந்த தொழிற்சாலைகளை அரசு எடுத்துக் கொள்வதைப் பற்றி சிலவற்றை இந்த அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். நலிந்த தொழிற்சாலைகள் எப்படி உருவாகின்றன? ஒன்று மிஸ் மேனேஜ்மெண்ட் (mis-management) என்று சொல்லப்படுகின்ற நிர்வாகத்திலே கோளாறு இருந்தால் அந்தத் தொழிற்சாலை நலிந்த தொழிற்சாலையாகப் போகும். இன்னொன்று அங்கே உள்ள Obsolete Machinary என்று சொல்லக்கூடிய பாழ் அடைந்த சாதனங்கள் (பழைய இயந்திரங்கள்) ஒரு காலத்திலே Technological improvements இல்லாத நேரத்தில் செய்யப்பட்ட அப்படிப்பட்ட சாதனங்கள் இருக்குமானால் அந்தத் தொழிற்சாலை காலத்தின் சுழற்சியால், தொழில் புரட்சியால், பயன்படாத சாதனங்களைக் கொண்டுள்ள அந்தத் தொழிற்சாலை நலிந்த தொழிற்சாலையாக உருமாறிவிடும். அப்படி உருமாறிவிடுகிறபோது தொழிலாளர்கள் போராட்டம், அரசியல்வாதிகள் பரிந்துரை அதற்குப் பின்னாலே அரசே ஏற்று நடத்தவேண்டுமென்ற முடிவை எடுக்கிறது.





இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் சொல்வதெல்லாம் கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து நான் தெரிவிக்கிற யோசனை எல்லாம் நலிவுற்ற தொழிற்சாலைகளை அரசு ஏற்பதன் மூலமாக கடன் தொல்லைகளுக்கு ஆளாகாமல் நலிவுற்ற அந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் அப்படியே முறையாக விற்பனை செய்வதன் மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய்களைப் பெற்று அதன் மூலமாக 2, 3 புதிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். அப்படி 2, 3 புதிய தொழிற்சாலைகளை நிர்மாணித்து அதன் மூலமாக ஏற்கெனவே வேலைசெய்த அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் அவர்களை வேலையிலே அங்கே அமர்த்தக் கூடியது பயன் உள்ள கருத்தாகுமென எண்ணுகிறேன். பெரிய பெரிய நகரங்களின் மத்தியிலே பழையபழைய தொழிற்சாலைகள், அவைகளில் இருக்கிற மெஷினரிகள் என்றுகூட போகாமல் அந்தத் தொழிற்சாலைகள் இருக்கிற இடங்களை மட்டும் விலைக்கு விற்கிறபோது அதன் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் பணம் கிடைக்கும். அப்படிக் கிடைக்கிற கோடிக்கணக்கான ரூபாயை — பயன் இல்லாமல் நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிற நகரத்தின் நடுப் பகுதியிலே இருக்கிற தொழிற்சாலைகளை முறையாக விற்பதன் மூலமாகக் கிடைக்கிற அந்தப் பணத்தை — வைத்து நகர்ப் பகுதியிலேயோ கிராமப் பகுதிகளிலேயோ தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதன் மூலமாக பின் தங்கிய பகுதிகள் முன்னேறுவதற்கு, தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு உதவியாக இருக்கும் என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மதுரை மாவட்டத்திலே வேடசந்தூர் வட்டத்திலே பாளையம் என்ற பகுதியிலே சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. அந்தச் சுண்ணாம்புக்கல் மூலமாக சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பல ஆண்டுகாலமாகப் பேசப்படுகிறது. கொள்கைக் குறிப்பில் மொட்டையாக ஒரு கருத்து குறிப்பிடப்படுகிறது. மத்திய அரசுக்கு எழுதினோம். அனுமதி அளிக்கவில்லை என்று ஆண்டு தோறும் சொல்லிக் கொண்டே வருகிறீர்கள். மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்று நீங்கள் தொடர்ந்து ஆடிட் ரிப்போர்ட் எழுதுவது போல் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசு ஆடிட் ரிப்போர்ட்டிற்குப் பதில் சொல்வதைப் போல இப்போது இல்லை, எப்போது இல்லை என்று சொல்வது ஏதோ எங்களுடைய சந்தேகங்களை வலுப்படுத்துகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 'Zero Industry district' பற்றிச் சொன்னார்கள். 'Zero Industry district' தமிழகத்திற்கு ஒத்து வராத நிலை. எனவே அந்தக் கொள்கையிலே 'Zero Industry Union or Zero Industry Taluk' என்ற முறையிலே கொண்டுவந்தால் தமிழகம் பயன் அடையும். அந்த அடிப்படையில் நீங்கள் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

காவிரிப் படுகையிலே நரிமணம் பகுதியிலே natural gas என்று சொல்லக்கூடிய எரிவாயு கிடைக்கிறது. காலப் போக்கில் தொழிற் புரட்சியின் காரணமாக எண்ணெய் வளம் குறைந்து இருக்கிற சூழ்நிலையில் எரிவாயுவைப் பயன்படுத்துகிற கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. காவிரிப் படுகையிலே உள்ள எரிவாயுவைப் பயன்படுத்தக்கூடிய முறையிலே புரட்சிகரமான திட்டங்களை தொழில் துறை எடுத்துக் கொள்ள வேண்டும். 1730 கிலோ மீட்டர் தூரம் எரிவாயு குழாய்கள் மூலமாக எடுத்துச் செல்லப்பட்டு குஜராத் உரத் தொழிற்சாலை இயக்கப்படுகிறது. முதற் கட்டமாக ( Pioneer Attempt ) ஆக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நாமும் எரிவாயுவைப் பயன்படுத்துகிற முறையிலே புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி தொழில்களை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உரிமைகளைக் கேட்டுப் பெறுகிற நேரத்திலே ஆந்திர முதலமைச்சர் திரு. என்.டி.ஆர். அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஜோதி பாசுவுடன் கலந்து பேசி, மாநில உரிமைகளைப் பெறுவதில் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதற்காகப் போர்க் குரல் கொடுக்க வேண்டும் என்பது பற்றிக் கலந்து பேசியிருக்கிறார்கள். அதேபோன்று, தொழில் துறையைப் பொறுத்த வரையில் சொல்லுகின்ற நேரத்தில், மத்திய அரசே உரிமைகளையும் வைத்துக் கொண்டிருப்பது உகந்தது அல்ல, மாநிலங்களில் தொழில் தொடங்குவதற்கு மாநிலங்களுக்கு உரிய உரிமைகள் முழுவதும் வழங்கப்பட வேண்டும்; மத்திய அரசு இதில் தடையாக இருப்பதால் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை கடுமையாகப் பாதிக்கும் என்பதால் இந்தப் போர்க்குரலை அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதே பாணியில், உரிமைக்காகத் தமிழக அரசு தன்னுடைய குரலை உரக்கக் கொடுக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கூறிக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான்



சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒருசில கருத்துக்களை இங்கே முன் வைத்து என்னுடைய உரையை நான் துவக்குகிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம், தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம், தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ் நாடு தொழில்முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் என்ற பல தலைப்புகளின் கீழ் இங்கே கொள்கைக் குறிப்பை இந்த மாமன்றத்திலே மாண்புமிகு பெருந்தொழில்கள் துறை அமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். அவை அனைத்தையும் பற்றி இங்கே பேசுவதற்கு, மாமன்றத்திலே எங்களுக்கெல்லாம் நேரம் தரப்பட மாட்டாது என்ற வகையில் சுருக்கமாக எங்களுடைய கருத்தை எடுத்து வைப்பது என்பதன் அடிப்படையில் நான் ஒருசில கருத்துக்களை இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது, புகளூர் காகிதத் தொழிற்சாலையில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், அங்கே சரிவரக் கணக்குகள் தரப்படவில்லை என்பதையும் மட்டுமே இங்கே கோடிட்டுக் காண்பித்தார்கள். எத்தனை டன் காகித உற்பத்தி என்பதையும் சொன்னார்கள். அதைக் கொடுத்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டையும் சொன்னார்கள். ஆனால் அதற்கும் கீழே கடைசி வரையில் படித்திருப்பார்; ஆனால் அதை இங்கே அவர்களால் சொல்ல முடியாது. காரணம், எவ்வளவு காலக் கெடுவிலே, எவ்வளவு காலத்திலே இந்த தொழிற்சாலை துவங்கப்பட்டு, இத்தனை டன் உற்பத்தியைப் பெருக்கி, இவ்வளவு கால இடைவெளிக்குள் அன்னியச் செலாவணியாக இத்தனை இலட்சம் ரூபாயை இந்தத் தமிழக அரசு பெற்றிருக்கிறது என்ற விவரத்தையெல்லாம் இந்தக் கொள்கைக் குறிப்பிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைக் குறையாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் இதை சொல்லவில்லை, ஒரு பேக்டரி—ஒரு தொழிற்சாலை துவங்குவதும், அதிலே ஏற்படுகின்ற முன்னேற்றம் அல்லது ஏற்படுகின்ற சில நஷ்டங்கள் ஏற்படுவது என்பதும், எந்தவொரு மாநிலத்திலே உருவாக்குகின்ற பொழுதும் குறை கூறுவதாக இருக்கலாம். ஆனால் வெகு குறுகிய காலத்தில், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூருக்குப் பக்கத்தில் இருக்கின்ற புகளூரில் அமைக்கப்பட்டுள்ள காகிதத் தொழிற்சாலை மிகவும் குறுகிய காலத்தில், எதிர்பார்க்கப்பட்ட அளவை விட அந்தக் காகிதத் தொழிற்சாலை காகிதத்தை உற்பத்தி செய்து, அதிலே 24 கோடி ரூபாயை அன்னியச் செலாவணியாக நமக்கு

ஈட்டித் தந்திருக்கிறது என்ற கணக்கும் இங்கே தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. அதிலே எத்தனை ஆயிரம் பேர்கள் பணியாற்றுகிறார்கள், எத்தனை ஆயிரம் பேர்கள் நிரந்தரமான பணியாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விளக்கமெல்லாம் இங்கே தரப்பட்டிருக்கிறது. ஆக, 5,000 நிரந்தரமான பணியாளர்களுக்கும் 1,500 டிரெய்னி பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்து, குறுகிய காலத்திற்குள்ளாக ஒரு தொழிற்சாலை வளர்ந்திருக்கிறது என்றால் அது இன்றைய தமிழக அரசால்தான். நான் நிச்சயமாக சொல்கிறேன், இதற்கு முன்னாலே ஆண்டவர்கள் எந்த ஒரு கால கட்டத்திலாவது, இத்தகைய ஒரு வளர்ச்சியை இங்கே தந்தார்கள் என்ற பட்டியலைத் தயவு செய்து தர வேண்டுமென்று மட்டும் இங்கே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொல்லிக்கொள்கிறேன், தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு தமக்குத் தேவையான திட்டங்களை நாம் கேட்டிருக்கிற தொழில் முன்னேற்ற திட்டங்களுக்கான அனுமதியைத் தருவதற்குக் காலங்களைத் தாழ்த்திக் கொண்டிருக்கிறது என்பது ஒரு வகையிலே உண்மை என்றாலும், அப்படி நாம் கேட்கின்ற அந்தக் குரலுக்கு ஓரளவுக்கு அவர்கள் செவி சாய்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியிலே, எங்களுடைய மாண்புமிகு இன்றைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, இந்த அரசால், பரிந்துரைக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட லைசன்ஸ்கள் எத்தனை? இதற்கு முன்னாலே ஆண்டவர்கள் பெற்ற அனுமதி—லைசன்ஸ்கள்—எத்தனை என்ற புள்ளி விவரத்தை இனி மேலாவது, எதிர்க்கட்சியிலே பேசுகிற எனது மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொல்லியாக வேண்டுமென்று அடக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இன்னும், என்னுடைய தொகுதியிலே இருக்கிற பாய்லர் தொழிற்சாலை ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அதற்குப் பக்கத்திலே சீம்லெஸ் ஸ்டீல் பிளாண்ட் இருக்கிறது. அதைச் சார்ந்த ஒரு நிறுவனம் அங்கே வளர்ந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலே, துப்பாக்கித் தொழிற்சாலை என்ற ஒரு நிறுவனம் 1966-லே துவக்கப்பட்டு, சுமார் 3,000 தொழிலாளர்களுக்கு மேலே அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே, புரட்சித் தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் 4—3—1984 அன்று பலைடக் கலன் தொழிற்சாலை என்ற ஒரு நல்ல தொழிற்சாலைக்குக் கால்கோள் விழா நடத்தி, அது வேகமாகச் செயல்பாட்டுக்கு வருவதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் அந்தப் பகுதியிலே 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மத்திய அரசால், ரெயில் பெட்டிகள் செய்கின்ற கோச் பாக்டரி என்று சொல்கின்ற, பாக்டரியை நிறுவுவதற்கு அனுமதி எல்லாம் அளிக்கப்பட்டது. அதற்காகத்தான் அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்தார்கள். ஆனால், திடீரென்று அது உத்திரப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கே மாற்றப்பட்டதற்கு, நான் இந்த நேரத்தில் அவையின் மூலமாக, என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல கஷ்டங்களுக்கிடையே கையகப்படுத்திய நிலம் இப்பொழுது சும்மா இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்தில், தமிழக அரசால் நடத்தப்படுகிற ஒரு நல்ல தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும்.





தொழில் வளர்ச்சிக் கொள்கை என்ற அடிப்படையில், திருச்சி மாவட்டத்தில் உள்ளடங்கிய திருவரம்பூர் தொகுதி பற்றி என்னுடைய கருத்துக்களை உங்கள் முன் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். தொழிற்கூடங்கள், சிறு தொழில்கள், சிட்கோ என்று பலவிதமான நிறுவனங்கள் அங்கே இருக்கின்றன. அவை நல்லமுறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே, பாய்லர் தொழிற்சாலையிலே மட்டும் 16,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். 3,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பக்கத்திலே இருக்கிற பாக்டரியிலே பணியாற்றுகின்றார்கள். ரெயில்வேயிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் குறைந்தது, 7,000 பேர்களாவது இருப்பார்கள். ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ரிசிலே, இன்னும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். இப்படித் தொழிலாளர்கள் நிரம்பிய பகுதி அந்தப் பகுதி. அந்தப் பாய்லர் தொழிற்சாலை, இந்திய வரலாற்றில், உபகண்டத்தில் இருக்கிற ஏனைய தொழிற்சாலைகள் போல இல்லை.

(முற்பகல் 11-30)

தமிழ்நாட்டிலே திருவரம்பூரில் இருக்கிற திருச்சி பாய்லர் தொழிற்சாலை கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து இந்திய அரசிடமிருந்து முதல் பரிசைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை அதிகப்படியான இலாபத்தை, பல கோடி ரூபாய்கான இலாபத்தை ஈட்டுகின்றது, மத்திய அரசு அந்த இலாபத்தைப் பெறுகிறது. இப்படி அதிகப்படியான இலாபத்தைப் பெறுகின்ற மத்திய அரசு அந்த இலாபத்தைப் பெற்றுக்கொள்கிறதே தவிர, அந்தப் பகுதியிலே இந்த

இலாபத்தை ஈட்டுவதற்குக் காரணமாக இருக்கிற தொழிலாளர்களுடைய நன்மைக்கு சில சலுகைகளைச் செய்ய தயங்குகிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 20 கோடி ரூபாய்க்குமேல் வருமானம் ஈட்டுகின்ற அந்த பாய்லர் தொழிற்சாலையில் 1,5000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார் கள். அவர்கள் எல்லாம் திருச்சியில், திருவரம்பூர் பகுதியில், திருவரங்கம் பகுதியில் வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்கின்ற பகுதிகள் எல்லாம் கிராமப்புறப் பகுதிகள், பேரூராட்சிப் பகுதி கள். மூன்றில் ஒரு பகுதி தொழிலாளர்களுக்குத்தான் அந்த பாய்லர் தொழிற்சாலை நிருவாகத்தினால் குடியிருப்பு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதி இருக்கிற தொழிலாளர்கள் எல் லாம் திருச்சி, திருவரம்பூர், திருவரங்கம் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடியிருப்புக்கு எந்தவித மான வசதியும் செய்யப்படவில்லை.

தமிழக அரசு தன்னுடைய நிதிநிலைக்கு உட்பட்டு சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இருந்தாலும் அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல குடிநீர் வசதி போதுமான அளவுக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை.

அதைப்போன்று ரோடு வசதிக்குத் தமிழக அரசு போடுகின்ற திட்டங்கள் போதவில்லை. ரோடுகள் அடிக்கடி பழுதுபட்டு விடுகின்றன. காரணம் அந்தத் தொழிற்சாலைக்கு ஏராளமான வாகனங்கள்—ஹெவி வெகிக்ள்ஸ் போகின்றன. திருச்சியிலி ருந்து அந்த பாய்லர் தொழிற்சாலைக்கு எவ்வளவு கனரக வாகனங்கள் செல்கின்றன என்பது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு ரோடு போட்டால், அடுத்த ஆண்டே 'சிங்' ஆகி, பழுதடைந்துவிடுகிறது. தமிழக அரசால் இந்த நிலையில் என்ன செய்ய முடியும்? 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கலாம், 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கலாம். அதற்கான வேலைகளைச் செய்யலாம். பாய்லர் தொழிற் சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை, பெரிய பெரிய இயந்திரங்களை எடுத்துச் செல்ல ஏராளமான பெரிய வாகனங்கள் செல்லுகின்றன. அதனால்தான ரோடுகள் விரை விலே பழுதடைந்துவிடுகின்றன. அதனால் ரோடுகளை பரா மரிக்க என்ன செய்யலாம், சீர்படுத்த என்ன செய்யலாம் என பதுபற்றி முடிவு செய்ய ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழுவில் ஒருதீர்மானம் போட்டு, ஒரு ஸ்டான்டிங் ஆர்டர் போட்டு வைத்தார்கள். அந்த ஆர்டர்போட்டது 1964-ல். அந்த பாய்லர் நிறுவனம் இருக்கின்ற பகுதிகளில் செல்கின்ற



ரோடுகளுக்கு ஆகும் செலவில் பாதியை தமிழக அரசும் பாதி யை அந்தத் தொழிற்சாலையும் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று ஆர்டர் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த அள வில் தொகையை ஒதுக்கி, ரோடுகளை அகலப்படுத்தி, சீர் படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் இதை எடுத்துச் சொல்லி, இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்கித் தந்தார்கள். ஆனால இந்த தொழிற்சாலை நிர்வாகத்தினர் இது சம்பந்தமாக போட்ட ஒபபந்தம் 1964-ல். ஆனால் 1983-84 ஆம் ஆண்டில்தான் அதற்கான அனுமதியைத் தந் திருக்கிறார்கள். அந்த ஒப்பந்தம் ஏற்பட்டது 1964-ல். அப் போது போடப்பட்ட எஸ்டிமேட் 1·22 கோடி ரூபாய். அது இப்போது 3 கோடி ரூபாய்க்குமேல் போய் இருக்கிறது. ஆனால் நிர்வாகம் இப்போது என்ன சொல்கிறது என்றால் நாங்கள் அன்றைக்கு என்ன நிதியை தரு வோம் என்று சொன்னோமோ அந்த அளவுக்குத்தான் தரு வோம், இப்போது இருக்கிற மதிப்பீட்டில் தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். இப்படி இருந்தால் எப்படி ரோடுகளை அகலப்படுத்த முடியும், சீர்படுத்த முடியும், செப்பனிட முடியும்? இவ்வளவு அதிகமான இலாபத்தை ஈட்டுகின்ற அந்த நிர்வாகம் அல்லது மத்திய அரசு ரோடுகளைப் பழுதுபார்க்க, செப்பனிட உரிய பங்கைத்தர மறுக்கிறது. இந்தப் பங்குத்தொகையை பெற்று, அந்தப் பகுதியிலுள்ள ரோடுகளை சீர் செய்ய நம் முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; மத்திய அரசிட மிருந்து நிதியைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்தைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் பகுதியிலே தொழிற்சாலையை உருவாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுக்கும் மத்திய பேரரசுக்கும் நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் உடைய நிலத்தை பூராவையும் அந்தத் தொழிற்சாலைக்காக எடுத்துக் கொண்டார்கள். விவசாயிகளும் கொடுத்துவிட்டார்கள். இராணிப்பேட்டையில் இருக்கிற தொழிற்சாலைக்கு இடம் கொடுத் தவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க ஒப்பந்தம் இருக்கிறது. அதேமாதிரி 1964-ல் ஒப்பந்தம் போட்ட பாய்லர் தொழிற் சாலை இதுவரையில் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத் திருக்கிறது என்று பார்த்தால் தங்கள் நிலத்தைக் கொடுத்தவர் களுடைய குழந்தைகள் 57 பேர்களுக்குத்தான் வேலை கொடுத் திருக்கிறது. இன்னும் 200-க்கு மேற்பட்ட விவசாயப் பெருங் குடி மக்களுடைய குழந்தைகளுக்கு வேலை கொடுக்க வில்லை இடத்தையும் கொடுத்துவிட்டு வருமானம் இல்

லாத நிலையில் வேலை தருகிறோம் என்று சொல்லிவிட்டு, இன்னும் வேலையும் கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொண் ருக்கிறார்கள்.

தயவுசெய்து நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஏழை விவசாயிகளின் நிலத்தை நீங்கள் எடுத்துக்கொண்டதை நான் பாராட்டுகிறேன். அதாவது தொழிலுக்காக எடுத்துக் கொண்டதை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அந்த விவசாயிகளின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்துகின்ற தண்ணீர் திட்டத்தின் மூலம் அங்கேயுள்ள அந்த மக்களுக்கு தண்ணீர் வினியோகிக்க வேண்டும். அந்தக் கிராமப்புறங்களில் தொழிலாளர்கள் தான் வாழ்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் இருப்பவர்கள் தான் வாழ்கிறார்கள். ஆகவே அந்தத் தண்ணீர் வினியோகத்தைப் பொறுத்த வரையில் அந்தத் தொழிற்சாலையும் பங்கு கொண்டு செயலாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் ஒரு கரும்பாலை நிறுவுவதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அங்கே Under sugarcane cess Fund ஒரு சாலை கூட போடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மிகப் பொருத்தமான பகுதியாகும். எனவே நீங்கள் அறிவித்தபடி மத்திய அரசின் அனுமதிக்காக எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிற சர்க்கரை ஆலையை நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த ஒரு பகுதியாகும். ஆலை முதலாளிகள் அந்தத் தொழிலாளர்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கூட கொடுக்க முன் வராமல் இருக்கிறார்கள். எனவே அவர்களைத் தட்டிக் கேட்கவும், அரசு கொண்டு வருகிற குடிநீர்த் திட்டங்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு அதிகப் பங்கு கொடுக்கவும் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் கூடங்களில் பணிகள் செய்யப்பட முடியாமல் தேங்கிக் கிடக்கிறது என்று மத்தியப் பேரரசைச் சேர்ந்தவர்களும் இங்கே சொல்கிறார்கள். நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாய்லர் தொழிற்சாலையிலே மிக முக்கியமான வால்வ் ப்ரடக்ஷன் என்பதைக் கண்டுபிடித்து இந்தியாவில் மட்டுமல்லாது, உலக வரலாற்றிலேயே அந்தத் தொழிலாளர்கள் பெருமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் நன்கு வளர்ந்துவிட்டதற்குப் பிறகு அந்த வால்வ் ப்ரடக்ஷன் யூனிட்டை





பஞ்சாபுக்கு மாற்றிவிட்டார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாய்லர் தொழிற்சாலையின் பிரிவாக ஒன்றை இராணிப் பேட்டையிலே ஆரம்பிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிற அதே நேரத்தில் அதற்கான நிதியினைப் பொறுத்தவரையில் டெல்லியிலே இருக்கின்ற தலைமை நிறுவனத்திலே இருந்து பெற்று தனியான ஒன்றாக அந்த வேலையைத் துவக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாய்லர் தொழிற்சாலை இருக்கின்ற எங்கள் பகுதியிலே ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியிலே ஒரு பிரிவினை நீங்கள் கொண்டு வந்து விடாதீர்கள். அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கி உரிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவை துணை தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான மானியத்தைப் பற்றி நான் பேசுகிறோம். ஆனால் நேரம் மிகவும் கம்மியாக வழங்கப்படுகிற காரணத்தால் கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாமல் போகிறது. ஒரு ஜீவாதாரமான துறை இது...... (குறுக்கீடு)..... மாலைக்கு மட்டுமல்ல, இரவுக்கும் நான் தயார்—நல்ல விரிவான ஒரு குறிப்பைத் தயாரித்து என்னுடைய கட்சியின் கருத்துக்களை இங்கே முழுவதுமாகச் சொல்ல முடியாத காரணத்தால் பல்வேறு தொழில் நிலைமைகள் பற்றிய குறிப்பினை அமைச்சரிடம் நான் கொடுத்திருக்கிறேன். தமிழக அரசினுடைய சக்தியையும், கஷ்டத்தையும் புரிந்து கொண்டு தான் நான் இங்கே பேசுகிறேன்.

மத்தியிலே இருப்பவர்கள் அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு தொழில் துறையிலே எல்லா மாநிலங்களுக்கும் சமமான திட்டவட்டமான, அதாவது ஏற்றத் தாழ்வற்ற வளர்ச்சியை ஏற்படுத்துகின்ற நிலைமை இல்லாத காரணத்தால் ஒவ்வொரு மாநிலத்தினுடைய தேவையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒரு முறையான ஐந்தாண்டுத் திட்டமோ அல்லது மற்ற திட்டங்களோ இல்லாத காரணத்தால் மாநிலங்களுக்கு ஏற்படுகிற சிரமங்களைப் புரிந்துகொண்டுதான் நான் பேசுகிறேன், புள்ளி விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. இன்றைய தினம் தமிழகத்தின் தொழில்களை மொத்தமாக எடுத்துப் பார்த்தால் இந்தத் தொழில் கொள்கை பற்றி இங்கே வழங்கப்பட்டிருக்கிற குறிப்பிலே தொழிற்கொள்கையும் திட்டங்களும் என்று தலைப்பு போட்டிருக்கிறதே தவிர, தொழில் கொள்கை என்ன என்று அதைத் திருப்பித், திருப்பி நான் பார்த்தேன், என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. வி. பி. சிந்தன்] [1983 ஏப்ரல் 23

(முற்பகல் 11-40)

என்னென்ன திட்டங்கள் இதில் போடப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் எந்தத் திட்டத்தையும் காண முடியவில்லை என்பது ஒரு வருந்தத்தக்க—நான் மீண்டும் சொல்லுகிறேன் புள்ளி விவரங்களைக் கொடுக்க விரும்பவில்லை—நிலைமை இன்றைய தினம் தமிழகத்திலே உள்ளது. எத்தனைப் பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. எத்தனை தொழிலாளர்கள் வேலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். என்ஜினீயரிங் தொழிற்சாலைகள் மூடியதன் காரணமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன், எத்தனை சிறு தொழில்கள் எல்லாம், எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மாமன்றத்திலே பட்ஜெட் உரையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றுகின்ற அந்த நாளில் தான், தமிழகம் பூராவும் உள்ள சிறு தொழில் அதிபர்கள் எங்களுக்கு கோக் கிடைக்கவில்லை, கோல் கிடைக்கவில்லை, பிக் ஐயர்ன் கிடைக்கவில்லை, அத்தோடு எங்கள் மீது மத்திய அரசு போட்ட வரிகளின் சுமையை எங்களால் தாங்க முடியவில்லை என்று ஒரு நாள் கண்டன வேலை நிறுத்தம் செய்தார்கள். மார்ச் 17 ஆம் தேதி, நிதியமைச்சர் பட்ஜெட் உரையை சமர்ப்பித்த அந்த நன்னாளில் என்பதை உங்கள் நினைவிற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே நாட்டில் இப்படி மூலப் பொருள்கள், ரா மெட்டீரியல்ஸ் கிடைக்கவில்லை என்பதோடு மின்சார பற்றாக்குறை என்பதும் மிகப் பெரிய தலைவலியாக மாறியிருக்கிறது என்கின்ற சூழ்நிலையிலே தான் இந்த தொழில் கொள்கை அறிக்கையை நாம் விவாதிக்கிறோம் என்பதை புரிந்தே நான் பேசுகிறேன். ஆகவே தான் நல்ல ஒரு இன்பிராஸ்டர்க்ச்சர் உருவாக்குவது குறித்து இந்தக்கொள்கை அறிக்கையிலே ஏதாவது குறிப்பிட்டிருக்கிறார்களா என்று பார்த்தால், எதுவும் குறிப்பிடவில்லை. மத்திய அரசின் கொள்கை காரணமாக தடைப்பட்ட தொழில் வளர்ச்சியைத் தவிர்ப்பதற்கு நம்முடைய அரசு என்ன கொள்கையை கடைபிடிக்கிறது என்று நான் அறிய ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே அத்தகைய கொள்கை அறிவிப்பு உண்டா என்ற சந்தேகத்தோடு தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

தொழில்கள் அதிகரித்தால்தானே வேலை வாய்ப்பு அதிகரிக்கும். வேலை வாய்ப்பு அதிகமானால் தானே நாட்டு மக்களுடைய பர்ச்சேசிங் பவர் என்னும் வாங்கும் சக்தி அதிகமாகும். அப்போது தானே தமிழகத்தினுடைய பொருளாதாரம் முன்னேறி இந்த நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் ஓரளவுக்கு முன்னேற அந்த மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வாய்ப்பு வசதிகள் ஏற்படும். ஆனால் இந்த தமிழக அரசோ அல்லது மத்திய அரசோ அதற்குரிய கொள்கை



1986 ஏப்ரல் 23] [திரு. வி. பி. சிந்தன்]

எதையும் தீட்டவில்லை. என்னுடைய வருத்தம் எல்லாம், மத்திய அரசு எடுத்திருக்கிற தவறான தொழில் கொள்கைக்கு எதிராக இந்த கொள்கை குறிப்பிலே மாநில அரசு எதையாவது குறிப்பிட்டிருக்கிறார்களா ? சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்களா ? அல்லது வெளியிலே எங்காவது தான் அந்தப் பற்றி பேசியிருக்கிறார்களா என்றால், இல்லை என்பது தான். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களையும் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் மத்திய அரசு நெய்வேலி திட்டத்தை உதாசீனம் செய்த போது, சேலம் ஸ்டீல் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர தயக்கம் காட்டிய போது, அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரம்-அப்போது தமிழகத்தில் பூராவிலும் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும், ஒரு கட்சி நீங்கலாக, ஒரு முக்கிய கருத்தோடு அதை எதிர்த்து தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியதை நான் உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நம்முடைய திட்டங்கள் எல்லாம் அப்படி மாறிவிடும் போது, நம்முடைய தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான போதுமான ஒத்துழைப்பை மைய அரசு நல்காத போது, இத்தருணத்தில், மைய அரசினுடைய கொள்கையை எதிர்த்து ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றிட இந்த அரசு ஏன் முன் வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

சிக் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படும் நலிவுற்று நசித்துப் போன தொழிற்சாலைகளைப் பற்றி இந்த அரசின் கொள்கை என்ன? அவற்றை ஊக்குப்படுத்தி மீண்டும் முறையாக நடத்துவதற்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது. பின்னி ஆலையை மூட வேண்டும் என்று அதன் அதிபர்கள் சொன்னார்கள். அது தமிழகத்திற்கு மட்டும் அல்ல தென்னகத்திற்கே மிக தேவையான அத்தியாவசியமான தொழிற்சாலை. அதிலே இருக்கும் இயந்திரங்களைக் கொண்டு சர்க்கரை ஆலைகளை உண்டாக்க முடியும். சிமெண்ட் ஆலையை உருவாக்க முடியும். கப்பல்களை ரிப்பேர் செய்ய முடியும் அந்த அளவிற்குக் கூட நல்ல பவுண்டரிஸ்கள் உள்ளன; ஸ்டிரக்சுரல்ஸ் உண்டு. அப்படிப்பட்ட ஆலையை மூட வந்த போது கூட அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அவர்கள் லாக்-அவுட் செய்தார்கள். அப்படி சட்டத்திற்கு மாறாக அவர்கள் லாக்-அவுட்டை பிரகடனம் செய்ததற்குப் பிறகு, தொழில் அமைச்சர் அதனால் பலியானாரே தவிர, அந்த ஆலை இன்னும் திறக்கப்படவே இல்லை. அந்த ஆலை அதிபர்கள் அப்படி அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

அதே போல மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் 3 ஆண்டுகளுக்கு மூடிய நேரத்தில், பி.எச்.இ.எல். நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் அது எடுத்துச்

செயல்பட வேண்டும் என்று பலரும் எடுத்துச் சொன்னார்கள். பல தொழிற் சங்கங்கள் வலியுறுத்தின. பல தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்களும் அப்படி வலியுறுத்தியதற்குப் பிறகு தான், அந்த ஆலை பி.எச்.இ.எல். நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்படி மூட வேண்டிய நிலையில் உள்ள ஆலைகளை எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிற ஆலைகளின் நிர்வாகத்தின் பொறுப்பிலே விட்டால் தான் என்ன/ நிர்வாகக் கோளாறுதான் இப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் எழுவதற்கு காரணமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பல தொழில்கள் நம்முடைய தமிழகத்தின் கதவைத் தட்டுகின்றன. ஆனால் அது தமிழகத்திற்கு வராமல் வேறு எங்கொ போகிறது. ஒரு நீண்ட பட்டியலை நான் வைத்திருகிறேன். எச. ஓ. சி. கொண்டு வந்த 30 கோடி ரூபாய் Declan Project இங்கே அமல் நடத்தப்படவில்லை. அதனுடைய அதிபர்களை நான் பார்த்து பேசிய போது, அரசிடமிருந்து எந்த ஆக்கப்பூர்வமான ஆலோசனையும் கிடைக்கவில்லை என்று குறை சொன்னார்கள். எச். ஓ. சி. கொண்டு வந்த அந்தத் தொழில் ஆந்திராவிற்குப் போய் விட்டது.

அசோக் லேலண்ட் ஓசூரில் தொழிற்சாலை அமைத்திருக்கிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் 100 கோடி ரூபாய் அளவிலான ஒரு திட்டத்தை இராஜஸ்தான் மாநிலத்திற்குக் கொண்டு சென்றார்கள். அவர்களுடைய குறை என்ன ? இங்கே போக்குவரத்துத் துறையில் சேசிஸ் வாங்குகிறபோது நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகிற சேசிஸ்களுக்கு முதலிடம் கொடுக்கவில்லையென்று அவர்கள் சொன்னார்கள். 100 கோடி ரூபாயில் ஒரு தொழிற்சாலை அமைகிற வாய்ப்பையும் நாம் கோட்டை விட்டோம். இப்படி நீண்ட பட்டியலை நான் வைத்திருக்கிறேன். தொழிலை ஊக்குவிக்கிற முயற்சி நம்மிடத்தில் இல்லையென்பதால் தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ரொம்பவும் சுருக்கமாக நான் பேச விரும்புகிற ஒரு முக்கியமான விஷயம், புள்ளி விவரங்களைப் பற்றிய உங்களுடைய சர்க்கஸ், நம்முடைய நிதியமைசசர் அவர்கள் அதிலே திறமைசாலி. நீங்களும் அந்தப் புள்ளி விவரங்களை உபயோகப்படுத்தி நாம் தொழில் வளர்ச்சியில் நான்காவது இடத்தில் இருக்கிறோம் என்பதை நிரூபித்து இருக்கிறீர்கள். புள்ளி விவரத்தை வைத்து நிரூபித்தால் மட்டும் போதுமா ? மூடிய ஆலைகளின் நிலைமை என்ன ? தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் இத்தனை ஆண்டுகளில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நீங்கள் கணக்கிட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.



இந்த அறிக்கையின் ஒரு இடத்தில் சேலம் ஸ்டீல் பிளாண்ட் ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர், பி. எச். இ. எல்., ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் என்று வரிசையாகச் சொல்லி கொடுத்திருக்கிற அந்தத் தொகையை கணக்குப் போட்ட பொழுது 482,35 கோடி ரூபாய் வருகிறது. மத்திய அரசு அதைக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறதா ? உங்களுடைய அறிக்கையைப் படிக்கும் பொழுது படிக்க படிக்க இன்பமாக இருக்கிறது, அழகாக இருக்கிறது. ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாக அதைக் கொடுத்திருக்கிறீர்கள். 482 கோடி ரூபாயை மத்திய அரசு இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே கொடுகுமா கடந்த பத்தாண்டுகளாக, ஒரு டிகேடில் மத்திய அரசிடமிருந்து நமக்கு கிடைத்தது 1,600 கோடி ரூபாய். அப்படியானால் ஆண்டிற்கு அது சராசரியாக 160 கொடி ரூபாய். நீங்கள் இதெல்லாம் கிடைக்கப் போகிறதென்று சொல்லி தமிழக மக்களுடைய உணர்வை மழுங்கடிக்காதீர்கள். தொழில் வளர்ச்சியில் தமிழக மக்களை தட்டியெழுப்புகிற பாதையில் நீங்கள் செல்ல வேண்டுமென்பதற்காகத் தான் இதை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒரு ஆண்டு தாமதம் என்றால் விலைவாசி உயர்கிற காரணமாக எவ்வளவு அதிகப்படியான இழப்பு ஏற்படும் ? அது மின்சாரமானாலும் வேறு எந்தப் பிரிவானாலும் சரி. புள்ளி விவரங்களைப் பற்றி நானும் ஒரு தகவல் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிப் பற்றி பேசுகிறபோது நீங்கள் ஆண்ட காலத்தில் என்று ஆளும்கட்சி பக்கத்திலிருந்தும், நீங்கள் ஆளுகிற காலத்திலென்று இந்தப் பக்கத்திலிருந்தும் பேசுகிறார்கள். யார் ஆண்டார்கள் என்பதையெல்லாம் நான் பார்க்க விரும்பவில்லை. 20 ஆண்டுகளாக Average annual growth Net domestic product இந்த 20 ஆண்டுகளில் அதனுடைய கணக்கை எடுத்துப் பார்த்தால் நம்முடையது 3.6 சதவீதமாக குறைந்திருக்கிறது, அது மட்டுமல்லாமல் பெர்கேபிட்டா இன்கம் என்பதை எடுத்துப் பார்த்தால் அது தமிழ் நாட்டில் 1.3 சதவீதமாக குறைந்திருக்கிறது. இத்தகைய ஒரு வீழ்ச்சியை கணக்கிட்டுப் பார்க்கிற போது என்.டி.பி-ஐ எடுத்துப் பார்த்தாலும், பெர்கேபிட்டா ஆவரேஜை எடுத்துப் பார்த்தாலும் 15-வது இடத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். 20 ஆண்டுகளின் சராசரியை வைத்து நான் சொல்கிறேன். ஏதாவது ஒரு ஆண்டில் எனக்கு சாதகமான புள்ளி விவரத்தை எடுத்து வைத்து நான் உங்களை விமர்ச்சிக்க விரும்பவில்லை. 20 ஆண்டுகளில் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை, பெர்கேபிட்டா இன்கம்மை எடுத்துப் பார்த்தாலே நாம் 15-வது இடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம்.

1960–61-ம் ஆண்டில் பெர்கேபிட்டா இன்கம் அகில இந்திய சராசரி கணக்கில் பார்த்தால் நம்முடைய 107.8 சதவீதம். 1978–79-ல் அது 87.92 சதவீதம் ஆக குறைந்திருக்கிறது. ஆகவே 1978–79-ம் ஆண்டில் நாம் நான்காவது நிலையிலிருந்து ஏழாவது நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் தருகிற புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சர்க்கஸ் என்று குறிப்பிடுகிறார்கள். அரசு ஆதாரப்பூர்வமாக தருகிற புள்ளி விவரங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர் தருகிற புள்ளி விவரங்களை நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்வது ? அதை 3-ரிங் சர்க்கஸ் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 11–50)

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புள்ளி விவரங்களைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அது எந்த கெசட் பப்ளிகேசன் என்று தெரியவில்லை. எதிலேயிருந்து இந்த புள்ளி விவரத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை, ஒரு வேளை , வதந்தியின்..........

திரு. வி. பி. சிந்தன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்வி நியாயமான கேள்வி. அதையே நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்களும் கேட்கிறார்கள். நேரத்தை கணக்கிலே கொண்டு நான் உள்ளே போகவில்லை நான் படிப்பதெல்லாம் VI plan period குறித்த மத்திய அரசினுடைய சோர்ஸ் annual plan 1984–85 மத்திய அரசினுடைய வெளியீடு.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொள்வது எல்லாம், மத்திய அரசினுடைய வெளியீட்டிலிருந்து வருகிற புள்ளி விவரத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம். மாநில அரசு தரக்கூடிய புள்ளி விவரத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றால், அது உங்களுடைய கொள்கைக்கு சரியாக வராதே.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே புள்ளி விவரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், மத்திய அரசினுடைய எல்லா புள்ளி விவரத்தையும் அப்படியே ஒத்துக் கொள்கிறவன் நான் அல்ல என்பது மாண்புமிகு அமைசசர், அவர்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். ஆனால் ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக, தொழில் வளர்ச்சி சம்பந்தமாக, விலைவாசி சம்பந்தமாக, அக்ரிகல்சுரல் சம்பந்தமாக, இப்படி ஏராளமான புள்ளி விவரங்கள் என்னிடமிருக்கின்றன. மத்திய அரசினுடைய வெளியீடுகளிலேயிருந்து தான் இந்த புள்ளி விவரங்களை நான் சொல்கிறேன். இதை மாநிலஅரசு இது வரையி





லும் மறுக்கவில்லை என்பது என்னுடைய கருத்து. நீங்கள் கொடுக்கக்கூடிய புள்ளி விவரங்கள் என்ன என்று பம்பாயிலே் வெளியிடுகிற பத்திரிகையிலே இருக்கிற ஒரு நிபுணர் எழுதினார். யார் அந்த நிபுணர் ? அவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபுணரா ? அந்த பத்திரிகையிலே வரக்கூடிய செய்தியை நான் இங்கே படிக்கவில்லை. நான் குறிப்பிடுவதெல்லாம் மத்திய அரசினுடைய வெளியீடாக இருக்கக்கூடிய Annual Plan 1984-85, Planning Commission உடைய Regional Dimensions in India's Economic development

மத்திய அரசின் நூல்களிலிருந்து சொல்கிறேன். அது தவறு என்றால், தவறு என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தவறு என்று சொல்வதற்காக நான் வரவில்லை, புள்ளி விவரங்கள் பற்றி சொல்லும்போது, பெர் கேப்பிட்டா-வைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். தொழில் துறையிலே தமிழகம் எந்த இடத்தில் இருக்கிறது என்பதை நாங்கள் குறிப்பிட்டு இருக்கிறோமே தவிர பெர் கேப்பிட்டாவிற்கும் தொழில் துறைக்கும் சம்பந்தம் கிடையாது.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, பெர் கேப்பிட்டா புரடக்சன் என்று நான் சொல்லும்போது சிறு தொழில்கள், பெரும் தொழில்கள், விவசாயம் ஆகியவற்றின் மொத்த வருமானத்தையும் குறிப்பிடுகிறது என்ற அமைச்சருடைய கருத்து சரிதான். அதை வைத்துத் தான் நான் சொல்கிறேன். இதிலே தொழில் வளர்ச்சி போதுமான அளவில் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசு கொடுக்கக்கூடிய புள்ளி விவரங்கள் சம்பந்தமாக பல சோர்ஸ்களில் அதை செக்-அப்-பண்ணிப் பார்த்தேன். அவைகள் சரியாக இல்லை என்று நான் மீண்டும் சொல்கிறேன். அப்படியானால் உங்களுடைய புள்ளி விவரங்கள் எந்த ஆதாரத்திலே சொல்லப்படுகிறது. எந்த் ஆய்வுக் குழுவால் அந்த பரிந்துரை வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னால் உதவிகரமாக இருக்கும். ஆகவே மொத்தம் உள்ள தொழில் வளர்ச்சியினுடைய நிலைமையைப் பற்றி நான் குறிப்பிட்டேன். இந்த நிலைமை இன்னும் நீடிக்கக்கூடாது என்ற கவலையோடு தான் நான் பேசுகிறேன். தொழில் வளர்ச்சியிலே நமக்கு ஒரு முழு பார்வை வேண்டும். விவசாயிகளுடைய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை வழங்கப்படவில்லை என்று சொன்னால், தொழில் வளர்ச்சிக்குத் தடை ஏற்படும். அது

கரும்பானாலும், பருத்தியானாலும், நிலக்கடலையானாலும், அல்லது நெல்லானாலும், அவர்களுக்கு நியாயமான விலையை வழங்குவதற்கு மத்திய அரசு குறுக்கே நிற்கிறது என்று மட்டும் சொன்னால போதாது. நம்முடைய அரசு அந்த விவசாயிகளுடைய வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அவர்களுடைய கையிலே அதிகமாக பணம் வந்நால்தானே, இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகும். இப்போது எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை பற்றி குறிப்பிடுகிறீர்கள். வாட்ச் என்று சொல்கிறீர்கள். இன்னும் ஏதேதோ குறிப்பிடுகிறீர்கள். அந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி பண்ணக்கூடிய பொருட்களை நகரப் பகுதிகளில் உள்ள 20 சதவீத மக்கள் மட்டும் வாங்கினால் போதுமா? நம்முடைய நாட்டிலே 80 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கிறார்கள். அவர்களுடைய பொருளாதாரத்திலே என்ன முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. விவசாயத்திலே இன்றைய தினம் நாம் 12, 13 என்ற நிலையில் இருந்து கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய நோக்கத்தை நான் வரவேற்கிறேன். விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கு நியாயமான விலை கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்திலே மாறுபாடு இல்லை. இதைப்பற்றியபொறுப்பு முழுக்க மாநில அரசிடத்திலே இருக்கிறது. மத்திய அரசுக்குப் பொறுப்பில்லை என்பதைப் போன்ற கருத்து சொல்வது சரியில்லை. விவசாய விளைபொருள் நிர்ணயக் குழுவே மத்திய அரசினுடைய கையிலேதான் இருக்கிறது. ஆகவே நாம் அதிகமாகப் பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டால் கூட, ரிசர்வ் வங்கியிடத்திலேயிருந்துதான் வாங்கிக் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. கொடுப்பதற்குக்கூட ரிசர்வ் வங்கி நிபந்தனைகளைச் சொல்கிறது. விவசாயிகளுக்கு நெல் கொள்முதலுக்கு ஊக்கத் தொகையாக 35 ரூபாய் கொடுப்பதைக் கூட நீங்கள் பணமாகக் கொடுக்கக்கூடாது, அதை உரமாகக் கொடுங்கள் என்று கட்டளையிடுகிறது. ஆகவே இப்படி இருக்கிற பிரச்சனைகளை நீங்கள் மறந்துவிட்டு, முழுக்க முழுக்க மாநில அரசு மீது பழியைப் போடுவது சரியல்ல.

திரு. வி.பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். மாநில அரசு மீது பழியைப் போடுகிறேன். இந்த அக்கிரமங்கள் அனைத்தையும் எதிர்த்து தமிழ் மக்களை நீங்கள் தட்டி எழுப்பவில்லை என்பதுதான் அந்தப் பழி. ரிசர்வ் வங்கியினுடைய கொள்கை தெரியாமல் நான் பேசவில்லை. ரிசர்வ் வங்கி என்னென்ன நிபந்தனைகளைப் போடுகிறது என்பதையும், என்ன என்ன குறுக்கீடுகளை மத்திய





அரசு செய்து கொண்டு இருக்கிறது என்பதையும் தெரிந்த காரணத்தால்தான், நாங்கள் ஒரு 3 மாநிலத்திலே ஆட்சி நடத்தியவர்கள், இங்கே தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசு என்னென்ன முறைகேடுகள் செய்கிறார்கள். என்பதைத் தெரிந்த காரணத்தால்தான் அண்ணாவை நான் உதாரணம் காட்டிச்சொன்னேன். காரணம் நீங்கள் அந்த வழியிலே முன்னேறவேண்டும். நீங்களும் அந்த வழியிலே செயல்முறைகளை அமல் நடத்தவேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன். குறிப்பாக "Geolcgical Survey"-க்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அது போதுமான அளவுக்கு ஒரு Research and development department-க்கும் அதேமாதிரி நம்முடைய இயற்கை வளங்கள் எவ்வளவு இருக்கிறது என்பதையும் முழுமையாக ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அமெரிக்க நிபுணர்களை அழைத்து நம்முடைய Oil Resources -ஐ கண்டுபிடிக்கச் சொல்லி 10 ஆண்டுகளுக்கு முயற்சி செய்து கடைசியிலே இங்கேயும் கிடைக்காது என்று கைவிரித்துச் சென்றதும் உங்களுக்குத் தெரியும் எனறு நினைக்கிறேன். இப்போது சில முற்போக்கு நாடுகளுடன், சோஸலிச நாடுகளுடன் நாம் உறவு கொண்டதற்குப் பிறகு பல வளர்ச்சிகளை நாம் பார்த்து இருக்கிறோம். ஆகவே தமிழக அரசு ஒரு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை இந்தப் பிரச்சனையிலே எடுக்க வேண்டும். தனியார் துறைக்கு சலுகைகள் கொடுக்கவேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் தனியார் துறையில் ஈட்டப்படும் லாபத்திலே ஒரு பகுதியை மீண்டும் பின் தங்கிய பகுதியிலே, புதிய தொழிலிலே முதலீடு செய்கிறார்களா? அதுவே' கிரைடீரியன்'— ஆக இருக்கவேண்டும். அப்படி அவர்களை ஊக்குவிப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

அதேமுறையில் நமமுடைய தொழில் வளர்ச்சியினுடைய நோக்கம் அதிகப்படியான வேலை வாய்ப்புகளாக இருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமான நம் அரசினுடைய Industrial policy -ஐ நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். அதை நீங்கள் கடைபிடிப்பீர்களேயானால், 20 ஆண்டுகளுக்கு நமக்கு ஏற்பட்ட வீழ்ச்சி இன்னும் அதள பாதாளத்தை நோக்கிச் செல்கிற வீழ்ச்சியாக அமையும். காரணம் இந்தியாவினுடைய புதிய தொழிற் கொள்கை என்று இப்போது மத்திய அரசு வகுத்திருக்கக்கூடிய கொள்கையில் வேலைவாய்ப்புகள் அதிகம் இல்லை. உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன், துணைத் தலைவர் அவர்களே,

ஒரு காலத்திலே, 10 ஆண்டுகளுக்கு முன்பு 1 லட்சத்து 5 ஆயிரம் பேர் நம்முடைய மின்சார வாரியத்தில் இருந்தார்கள். இப்போது அது 82 ஆயிரமாக குறைந்து இருக்கிறது. ஐந்தாண்டு திட்டக் குழு, மின் வாரியத்தையும், தமிழக அரசையும் நிர்பந்தித்து 60 ஆயிரம் பேர்தான் தமிழகத்திலே, மின்சார வாரியத்திலே ஊழியர்களாக இருக்கவேண்டுமென்று நிர்பந்திக்கிறது. இப்படி ஹார்பாரிலே, மற்ற பல பகுதிகளிலே நிர்ப்பந்தம் வந்திருக்கிறது. கம்ப்யூட்டரை உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். கம்ப்யூட்டர் தேவைதான். இந்த ஆர் அண்ட் டிக்கும் இன்னும் பல்வேறு துறைகளில் விஞ்ஞானத்தை வளர்ப்பதற்கு கம்ப்யூட்டர் தேவை. நான் கம்ப்யூட்டருக்கு எதிரி அல்ல. மாட்டுவண்டி யுகத்திற்குப் போகவேண்டுமென்று சொல்கிறவன் நான் அல்ல. மனிதன் வேலை செய்யக்கூடிய இடத்திலே அவனுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும். பின்தங்கிய ஒரு நாடு இது. பொருளாதாரத் துறையிலே இன்னும் முன்னேற்றம் அடையவில்லை. இந்த நாட்டிலே கம்ப்யூட்டரை அதிகமாகக்கொண்டு வந்து மத்திய அரசு சொல்கிற கொள்கைக்கு சென்று விடாதீர்கள் என்று நான் எச்சரிக்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைய தினம், இந்தியா முழுவதும் சில குறிப்பிட்ட மாநிலங்கள் இந்தக் கொள்கையை எதிர்த்து தேசிய அபிவிருத்திக் குழுவில் சண்டை நடக்கிறது. Five-Year Plan Committee -களிலே சண்டை நடக்கிறது. பாராளுமன்றத்திலே 'வாக் அவுட்.' நடக்கிறது. போராட்டம் நடக்கிறது. நாடு முழுவதிலும் Conclaves கூடி எதிர்க்கட்சிகள் பல திட்டங்களையும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் உருவாக்குகிறார்கள். அந்த இயக்கங்களில் நீங்ககள் ஏன் சேர மறுக்கிறீர்கள் விலைவாசி இந்த வேகத்திலே போனால் எந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டுவரமுடியும். நீங்கள் 30 சர்க்கரை ஆலைகள் என்று சொல்லியிருக்கிறீர்கள். 30 சர்க்கரை ஆலைகளுக்கு லைசன்ஸ் கொடுத்தாலும் அது கிடைப்பது எப்போது? அது கிடைத்ததற்குப் பிறகு, சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்குள்ளே விலைவாசி எங்கே செல்லும்? அந்தக் கட்டிடத்தின் செலவு என்னவாகும்? ஆகவே விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கிடைய தொழில் வளர்ச்சிக்கு உள்ள அதிகாரத்தை கட்டுப்படுத்தாமல் இருப்பதற்கு இன்னும் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில் நடைபெறும் இந்தியா முழுவதும் நடைபெறும் ஜனநாயக இயக்கம் நடத்துகின்ற இயக்கத்தோடு இணைந்து நின்று நீங்கள் இயக்கத்தை நடத்துவீர்களா? நடத்துவதற்கு நீங்கள் முன்வராமல் இருப்பதை நான் பலமாகக் கண்டிக்கிறேன். தொழில் வளர்ச்சிக்கு, அதைத் தவிர நம் நாட்டிலேவேறு வழியில்லை என்பதை நான் மீண்டும் மீண்டும் உங்களிடம் வலியுறுத்திச் சொல்கிறேன். இல்லாவிட்டால், நம்முடைய, இப்போது உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளிலே நெருக்கடி ஏற்படும். ஏராளமான



தொழில்கள் இன்றையதினம் மூடப்பட்டுவருகின்றன. மூடிய காரணத்தினாலே, பஞ்சாலைகளைத் திறக்கவேண்டுமென்று, மூடிய ஆலைகளைத் திறக்கவேண்டுமென்று, சேலத்திலே, பெரியார் மாவட்டத்திலே, கோவை மாவட்டத்திலே 80 ஆயிரம் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் நடத்தினார்கள். 80 ஆயிரம் பேர்களுக்கு 10 நாட்களுக்கு வேலையில்லை என்று சொன்னால் கிட்டத்தட்ட 8 லட்சம் மனித நாட்களை இழந்த அந்த தொழிற்சாலையைத் திறந்து வைப்பதற்கு உங்களுடைய திட்டம் என்ன? மூடிய ஆலைகள், அதைப் போல மூடுகிற நிலையிலே உள்ள ஆலைகளை, அந்த மூடுகிற நிலைமைக்குச் செல்லாமல் தடுப்பதற்கு உங்களுடைய திட்டம் என்ன? இதற்கு மொத்தமாக ஒரு 'காம்ப்ரஹென்சிவ் பிளான்' தேவை. அத்தகைய ஒரு பிளான் உங்களுடைய குறிப்பிலே இல்லை என்பதை நான் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

(நண்பகல் 12-00)

*திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியத்தை ஆதரித்து நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் தொழில் துறை சிறப்பாக இருக்கிறது, வளமாக இருக்கிறது என்று எல்லாம் சொன்னார்கள், அதில் கருத்து மாற்றம் இல்லை. அதில் வேறுபாடு இல்லை. இன்றைக்குத் தொழில் துறையில் தனியார் துறை, கூட்டுறவுத் துறை, பொதுத் துறை என்றும், சிறுத் தொழில்கள், மத்திய தொழில்கள், பெரும் தொழில்கள் என்று 3 வகையாக பிரிக்கப்பட்டு மூலதனத்தை முதலீடு செய்து தொழில் வளர்ச்சி இன்றைக்கு சமுதாயத்தில் ஏற்படவேண்டும், வளர்ந்து வருகிற நாட்டில் தொழில் வளர்ச்சி மிகவும் அத்தியாவசியமானது என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இல்லை. அதை எல்லோரும் ஒரே மனதோடு வரவேற்கிறோம்.

தமிழகத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தொழில் துறையில் இன்றைக்கு தமிழகம் 5-வது ஸ்தானத்தில் இருக்கிறது என்று தொழில் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது அன்றைக்கு மாண்புமிகு ஆர்.வி. அவர்கள் தொழில் அமைச்சராக பொறுப்பு எற்றுக்கொண்டு நாள் ஒன்றுக்கு 100க்கு மேற்பட்ட தொழில்களை ஆரம்பித்தார்கள். அப்படி ஆரம்பிக்கப்பட்டதால் தமிழ

கத்தில் தொழில் வளர்ச்சி பற்றி அன்றைக்கு இந்தியாவில் உள்ள எல்லோரும் பாராட்டக்கூடிய அளவுக்கு வளம் கண்டு இருந்தது. அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லாமல் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அன்றைக்கு நாட்டில் இருந்த முன்னேற்றத்திற்கும் இன்றைக்கு உள்ளதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்றைக்கு எவ்வளவோ வளம் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் போட்ட திட்டங்கள் நாட்டில் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்த திட்டங்களாக வரவேற்கப்பட்டு உள்ளது என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நல்ல அம்சம் ஆகும்.

இன்றைக்குத் தமிழகத்திலே பல தொழில்கள் நன்றாக இருக்கின்றன. பெரிய தொழில்கள் இருக்கின்றன. அதேபோல் சிக் யூனிட்டாக நஷ்டத்தில் போய் கொண்டிருக்கிற தொழில்கள் ஏராளமாக இருக்கின்றன என்று அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 21க்கு மேற்பட்ட தொழில்கள் நஷ்டத்தில் போய் கொண்டு இருக்கிறது. பல தொழில்கள் சிக் யூனிட்டாக இருந்து கொண்டு இருக்கின்றன.

குறிப்பாக எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரூர் தாலுக்காவில் 'lasco steel' என்ற ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த 'lasco steel' தொழிற்சாலை பொதுத்துறையாக நடக்கக்கூடிய அந்த தொழிற்சாலை 180 லட்சம் ரூபாய் மூலதனத்தில் நடக்கக்கூடிய அந்த தொழிற்சாலை 3 ஆண்டுகளாக மூடியிருக்கிறது. அதை அரசு எடுத்து நடத்தவேண்டும் என்று அமைச்சருக்கு நாங்கள் எழுத்து மூலமாக கோரிக்கை கொடுத்து வலியுறுத்தியிருக்கிறோம். அரசு அதை கலைத்துவிட வேண்டும் என்று ஆலோசனை செய்த நேரத்தில் பங்குதாரர்கள் முன்வந்ததன் காரணமாக சிலர் இடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக 2 ஆண்டு காலமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் அந்தத் தொழிற்சாலை மூடியிருக்கிறது. 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலையை புதுப்பிக்கவில்லை. அதை அரசு மேற்கொண்டு நடத்த வேண்டும் அல்லது அதை கலைத்து விட வேண்டும். இன்றைக்கு தனியார்கள் யாரும் எடுத்து நடத்த முன்வரவில்லை, பங்குதாரர்கள் ஏற்றும் 2 ஆண்டு காலம் கடந்ததே தவிர, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் காலம் வீணானதே தவிர வேறு எந்த பயனும் இல்லை பங்கு தாரர்கள் மூலதனம் போட்டு இருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள் எல்லோரும் பங்கு செலுத்தியிருக்கிறோம். ஆனால் எங்களுக்கு எல்லாம் எதுவும் திருப்பித் கொடுக்கவேண்டாம் என்று அரசு உத்திரவு பிறப்பித்து இருக்கிறது. பங்குதாரர்களுக்கு பணம் கிடைப்பது ஒரு பக்கம் இருந்தாலும் அங்கு சிறப்பாக தொழில் நடக்க வேண்டும், தொழிலாளர்கள் வேலை





செய்ய வேண்டும், அதுதான் முக்கியம். இன்றைக்கு மூடியிருப்பதால் அதை அரசு எடுத்து நடத்த வேண்டும் அல்லது அதை கலைத்து ஏலம் விட்டால் தனியார் முதலாளிகள் அதை எடுத்து நடத்துவார்கள் என்று கருதுகிறேன். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் எங்கள் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை இருக்கிறது. அரூர், தர்மபுரி, மொரப்பூர், கடத்தூர் ஆகிய இடங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இயங்காமல் மூடியிருக்கிறது. இன்னும் பல தொழில்கள் ஆரம்பித்து இயங்காமல் இருக்கின்றன. தர்மபுரி மாவட்டம் இன்றைக்கு தொழிலில் பின்தங்கிய நிலையில் இருக்கிறது.

ஓசூர் உங்களுக்கு எல்லாம் தெரியும், அங்கே சிப்காட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்களும் காரணமாக இருந்தார்கள். அந்த சிப்காட்டிற்கு வந்த தொழில்கள் எல்லாம் பஞ்சாப் மாநிலத்திற்கு மாற்றப்பட்டதாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு ஏன் இப்படி மாற்றப்பட்டது., இன்றைக்கு கோவையில் இருக்கக்கூடிய லட்சுமி மில்லை விஸ்தரிப்பதற்காக ஓசூர் சிப்காட்டில் விஸ்தரிப்பதற்காக மத்திய அரசு அனுமதி தந்தும் ஓசூரில் விஸ்தரிக்காமல் கோவைக்கு மாற்றிப் போனார்கள். காரணம் அங்கே தொழிலாளர் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக இன்றைக்கு நடைபெறக்கூடிய தொழில்களில் பாதிக்கு மேலான தொழில்களில் தொழிலாளர் பிரச்சினை ஏற்பட்டு தொழில் நடத்துவதற்கு ஏராளமான முட்டுக்கட்டை இருந்து உற்பத்தி பாதிக்கப்படுகிறது. பல தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அசோக் லேலண்டு மட்டுமல்ல. லட்சுமி மில்ஸ்ஸும் மூடப்பட்டிருக்கிறது. இன்னும் எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் மூடப்பட்டிருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம், தனியார் பிரச்சினை, தனியாருடைய சில தலைவர்கள் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு, அவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்தி, தொழிற்தகராறை ஏற்படுத்தி, முட்டுக்கட்டைகளை உருவாக்கியிருக்கிறார்கள். இதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தில் இன்னொரு முக்கியமான பிரச்சினையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தீர்த்தமலைப் பகுதியில் இரும்புக் கனி இருக்கிறது. அந்த இரும்புக் கனியை எடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். இன்றைக்குத் தொழில் ஆரம்பிக்கக் கூடிய தீர்த்தமலைப் பகுதியிலே இரும்புக் கனிகளை எடுத்து, தொழிற்சாலை அமையக் கூடிய வாய்ப்பிருக்கிறது. அமைச்சரவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்திலே கரும்பு சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளின் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. அதற்கு நானும், என்னுடைய கட்சி நண்பரும், ஆளுங்கட்சியைச் சார்ந்த வேலூர் மாவட்ட அங்கத்தினர் கரும்பு விவசாயிகளின் கஷ்டங்களை எடுத்துச்சொன்னர்கள். கரும்புவிவசாயிகளுக்கு இன்றைக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. விலையைக்கூட்டிக்கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, மாண்புமிகு தொழிலமைச்சர், மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர், ஏன் முதலமைச்சர், அவர்களைக் கூட சந்தித்து, எங்களுடைய கோரிக்கையை கொடுத்திருக்கிறோம். கூட்டிக் கொடுப்பதற்கு ஏனோ மனம் வரவில்லை. தாராளமான மனம் வரவேண்டும். ஏனென்றால் விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்று இருக்கிறவர்கள், அந்த விவசாயிகள் இன்றையதினம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆண்டுக்காண்டு விவசாய உற்பத்திச் செலவு, முட்டு வழிச் செலவு, மூலச் செலவு, சாகுபடிச் செலவு கூடிக்கொண்டே போகிற காரணத்தால், விலைவாசியைக் கூட்டித்தர வேண்டும். கரும்புக்கு சென்ற ஆண்டு நிர்ணயித்ததைத்தான் இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் குறைந்தபட்சம் ஒரு டன்னிற்கு ரூ. 30 கூட்டிக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம். அதை அரசு பரிசீலனை செய்து, கூட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி கூட்டிக் கொடுப்பதால் லாபம் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. நட்டமும் வராது, சர்க்கரை ஆலைகள் பெரும் லாபத்தில் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன, மத்திய சர்க்கார் கூட்டிக்கொடுத்திருக்கிறார்கள், பகிரங்க மார்க்கெட்டில் சர்க்கரை விலையை கூட்டிக்கொடுத்து இருக்கிறார்கள். ஆக அந்த விகிதாச்சாரத்தைப் பார்த்தால் கூட சாகுபடியாளர்களுக்கு விலையை கூட்டிக் கொடுப்பதில், தாராள மனம் அமைச்சருக்கு வரவேண்டும். சென்ற 18—ஆம் தேதி ஒவ்வொரு மாவட்டந்தோறும் கலெக்டர் அலுவலகம் முன்பு கரும்பு விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்து, தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். நாளைக்குக் கூட 24-ஆம் தேதி கோட்டை முன்பு உண்ணாவிரதம் இருப்பதாக மாநில அளவில் 10 மாவட்டங்களைச் சார்ந்த கரும்பு விவசாயிகள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். எனவே விவசாயிகளுடைய நன்மையைக் கருதி, விவசாயிகளுடைய கசப்பு உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல், கொஞ்சம் விலையைக் கூட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாளைக்குக் கூட அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதை தடுக்கும் முறையில், அமைச்சரவர்கள் ஏதாவது வாக்குறுதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்



தலையை மட்டும் ஆட்டினால் போதாது. அவர் ஒரு சம்மதம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் எல்லாம் விவசாயிகளின் சார்பாக பெரிதும் பாராட்டு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அதைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு தொழில் உதவி, நிதியுதவி ஏதும் செய்து தரவில்லை என்று ஆளுங் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சொல்கிறார்கள். எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் சொல்கிறார்கள். ஒன்றை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். திட்டக் குழுவிலே ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலே ரூ. 4,500 கோடி ஒதுக்க வேண்டுமென்று திட்டத்தில் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்ற போது மாண்புமிகு பிரதமர் அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது ரூ. 5,750கோடி ஒதுக்கிக் கொடுத்தார்கள். கூடுதலாக. இது எதைக் காட்டுகிறது ? மத்திய-மாநில உறவு நன்றாக இருக்க வேண்டு மென்றும், அந்தத் தொகை நியாயம் என்பதற்காக பிரதம அமைச்சரவர்கள் கூட்டிக் கொடுத்தார்கள்.

(பிற்பகல் 12.10)

அதே போன்று நம்முடைய மாநிலத்திற்கென்று நிதி வசதி வழங்குவதில், எந்தவிதமான தடங்கலும் இல்லாமல், அது ஐ.ஆர்.டி.பி. ஆக இருந்தாலும், என்.ஆர்.ஈ.பி. ஆக இருந்தாலும், ஆர்.எல்.ஈ.ஜி.பி. ஆக இருந்தாலும், டிரைசம் திட்டமாக இருந்தாலும், நிறைய நிதி கொடுக்கிறார்கள். வெள்ள நிவாரண நிதிகள், வறட்சி நிவாரண நிதிகள் போன்றவை தமிழ்நாடு அரசாங்கம் கேட்கக் கூடிய அளவுக்கு மத்திய அரசு வழங்கியிருக்கிறது. அதே போல் தொழில் துறைக்கும் மத்திய மாநில அரசு உறவு நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக நிறைய நிதியை ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். மத்திய அரசு இன்றைக்குத் தமிழகத்திலே மிகப் பெரிய கேந்திரமாக நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம், குந்தா நீர் மின்சாரத் திட்டம், கல்பாக்கம் அணு மின்சாரத் திட்டம், தூத்துக்குடி திட்டம் போன்ற மிகப் பெரிய தொழிற் திட்டங்களைத் தொடங்குவதற்கு, மாநிலத்திலே எங்கெங்கே அதற்கான வாய்ப்புகள் வசதிகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்குச் செய்கிறார்கள். ஊட்டியிலே பிலிம் தொழிற்சாலை ஆரம்பிப்பது கேந்திரமான தொழிலாக இருக்கும் என்ற முறையிலே தொழில் உற்பத்தி பெருக வேண்டுமென்ற அடிப்படையிலே பொருளாதாரம் வளர வேண்டுமென்ற காரணத்தினலோ

தமிழகத்திலே தொழில்களைத் தொடங்குவதிலே எந்த விதமான தடங்கலும் கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எம். அண்ணாதாசன் : துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு பெரியவர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் மத்திய மாநில அரசு உறவு நன்றாக இருப்பதற்காக நிதியாதாரங் களை பாரதப் பிரதமர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற் காக நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். வரவேற் கிறேன். ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிற்கு மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட ஹெவி இண்டஸ்ட்ரீஸ் கடந்த 15, 20 ஆண்டுக் காலமாகக் கஷ்டப்பட்டு உழைத்து உற்பத்தித் திறனை அதிக மாக்கி உலக நாடுகளாலே எல்லாம் பாராட்டப்பட்டு அதற்குப் பிறகு இங்கே இருக்கிற ஒரு யூனிட்டை அந்தத் தொழிலாளர்கள் கடுமையாக உழைத்து உருவாக்கிய ஒரு யூனிட்டை வட மாநில மான பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் ஒருவர் அதிலே சேர் மனாக இருக்கிறார் என்ற காரணத்திற்காக வட நாட்டுக்குக் கொடுக்கப்பட்டது தான் எங்களுக்கு எல்லாம் வருத்தமாக இருக் கிறது. அதைத் தடுப்பதற்கு நீங்கள் துணையாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர் களே, எதை மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் என்று தெரிய வில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சர் தான் அது எது என்று சொல்ல வேண்டும். இங்கே ஸ்தாபிக்கப்பட இருந்த அது ஏன் பஞ்சாபிற்கு மாற்றப்பட்டது என்று தெரியவில்லை. மத்திய அரசு தடையாக, குறுக்கீடாக இருந்தால் ஆளுங்கட்சியாகிய உங்களோடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்களும் ஒத்துழைத்து தமிழ் நாட்டிற்கு வரக்கூடிய அந்த யூனிட் ஏன் பஞ் சாபிற்கு சென்றது என்று வாதாடுவதற்குத் தயாராக இருக்கி றோம்.

திரு. எம். அண்ணாதாசன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி. அந்தத் தொழிற் சாலையிலே உருவாக்கப்படுவதற்கு ஆய்ந்து வந்த வால்வு புர டக்ஷன் யூனிட் தான் பஞ்சாப் மாநிலத்திற்கு மாற்றப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்க களே, பாயிலர் தொழிற்சாலையில் அது எக்ஸ்பேன்ஷனாக வந் ததா / அல்லது புதிதாக வந்ததா என்று தெரியவில்லை. விவரம் தெரிவித்தால் ........





திரு. எம். அண்ணாதாசன் : துணைத் தலைவர் அவர்களே. பாய்லர் தொழிற்சாலை என்பது வால்வு புரடக்ஷன் போன்ற அத்தனை யூனிட்களுக்கும் ஒருங்கே இருக்கக் கூடிய இடம்தான். அங்கே டியூப் புரடக்ஷன், சுமால் வால்வு புரடக்ஷன் போன்ற உப தொழில்கள் எல்லாம் இருக்கின்றன. இது எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட்டால் தான் அந்த பாய்லர் தொழிற்சாலையை இயக்க முடியும் என்றுதான் அந்த பாய்லர் சொழிற்சாலையை அங்கே ஆரம்பித்தார்கள்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர் களே, அங்கே பல உப தொழில்களைச் சேர்த்து பாய்லர் தொழிற் சாலை வந்ததாகச் சொன்னார்கள். எத்தனை உப தொழில் களாக இருந்தாலும் அந்தப் பெருந் தொழிலுக்கு உதவி செய்யும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஏன் திருச்சியிலே நிர்மாணிக்கக்கூடிய தொழில் மாற்றப்பட்டது ? லெட்டர் ஆப் இன்டன்ட் என்று டெம்பரரியாகக் கொடுப்பார்கள், அது மாதிரி செய்தார்களா ? காலம் கடந்ததால் மாற்றினார்களா என்று தெரியவில்லை. நிர்வாகக் கோளாறு ஏற்பட்டதா நடைமுறையில் கோளாறா என்ற விவரம் எனக்குத் தெரிய வில்லை. விவரம் தெரிந்தால் மத்திய அரசு வேண்டுமென்றே செய்ததாக இருக்குமானால் எங்களுடைய ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும். ஆக, எங்களுக்கு அதில் எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இறுதியாக நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கையாகும். அது கூட்டுறவுத் துறையில் வந்தாலும் சரி, தனியார் துறையில் வந்தாலும் சரி, பொதுத் துறையில் வந்தாலும் சரி, எங்களுக்கு ஆலை வர வேண்டும் என்பதுதான் முக்கியம். கூட்டுறவுத் துறையிலே வர வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை. ஏனென்றால் தர்மபுரி மாவட்டத்தில் கரும்பு சாகுபடி செய்கின்றவர்களின் நிலைமை மிகவும் அவல நிலையில் இருக்கிறது. என்னுடைய கரும்பையே மூன்று நாட்களாக வெட்ட முடியாமல் இருந்தது. அமைச்சரிடத்தில் சொன்னதற்குப் பிறகு மாற்று ஏற்பாடுகள் செய்தார்கள். பாலக்கோட்டில் அரவை செய்ய முடிய வில்லை. தண்ணீர் இல்லை, ஆகவே, இதற்கு ஏதாவது வழி வகுத்துக் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மாற்று வழியாக தென்பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தால்தான் முடியும். அதற்கு எதிர்காலத்தில் திட்டமிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரூருக்கு ஒரு ஆலை வர வேண்டும். கரும்பிலிருந்து வருகின்ற வருவாய்தான் அந்தக் கரும்பு விவசாயிகளுக்குப் பிரதானமாக இருக்கிறது. ஹரூர் தாலுக்காவில் உள்ள கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளின் கரும்பு அளவைக்காக ஆம்பூர், திருப்பத்தூர், மேகனூர், பள்ளிப்பாளையம், ஆப்பக் கூடல் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பிக் கொண்டு காத்துக் கொண் டிருக்கிறார்கள். இந்தக் கஷ்டங்கள் எல்லாம் தீர்வதற்கு இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற பாலக்கோட்டு மில்லில் இருந்து 'பி' என்ற ஒரு அமைப்பை, தனி இணைப்பாக ஏற் படுத்த வேண்டும் அல்லது தனியாகவாவது ஒரு ஆலையை ஏற் படுத்த வேண்டும். எப்படியோ அங்கே ஆலை வர வேண்டும். வடார்க்காடு மாவட்டத்தில் மூன்று ஆலைகள் இருக்கின்றன. திருப்பத்தூர், ஆம்பூர், வேலூர் ஆகிய இடங்களில் இருக்கின்றன. எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரை, கிருஷ்ண கிரி ஆகிய பகுதிகள் கூட வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆலையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது அப்படியிருந்தும்கூட விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்பு உபரியாக இருக்கிறது. கிட்டத்தட்ட பத்தாயிரம் ஏக்கர் கரும்பு உபரியாக இருக் கிறது. இந்தக் கரும்புக்காக வெளியிலே தேட வேண்டிய நிலை இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்குவதற்காக தக்க பரிகாரம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக தர்மபுரி மாவட்டத்தில் ஒரு ஆலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர் களைக் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, ஒரு மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றம் வேலை வாய்ப்பு ஆகியவை அந்த மாநிலத்தின் தொழில் வளத்தைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கின்றது என்பதை நான் வலி யுறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் மிக வேகமாக வளர் வதற்குப் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்கள் மூலமாக மக்க ளுக்கு நன்மை பயக்கிற, பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்கிற திட்டங்களைத் தமிழக அரசு நிறைவேற்றி வருவதை நான் பாராட்டுகிறேன். அந்த வகையில் மைய அரசுகூட தமிழகத்தில் தொழில் துறைக்கு ஓரளவுக்கு உதவியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நன்றியோடு சொல்லிக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலே சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்காக மைய அரசு கீழ்க்கண்ட சில பெருந்தொழில்களுக்கு தமிழகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதிலே, முக்கியமாக கல்பாக்கம் அணுமின்





நிலையம், எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீ ஃபார் பட்டன் டைப் இன்டஸ்ட்ரீ, தொலைபேசி பட்டன் டைப் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீ, நெய்வேலி இரண்டாம் சுரங்கம் வெட்டும் விரி வாக்கத் திட்டம் அனுமதி, நெய்வேலி இரண்டாவது அனல் மின்நிலையம் விரிவாக்கத் திட்டம், நீலகிரியில் 170 கோடி ரூபாய் செலவில் எக்ஸ்ரே கதிர் பாலியஸ்டர் பிலிம் தயாரிக்கும் திட்டம் என்று தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்கு 468 தொழில் களைத் தொடங்குவதற்கான லைசென்ஸ்—அனுமதி இவைகளெல் லாம் மைய அரசிடமிருந்து மாநிலத்திற்குத் தொழில் தொடங்கு வதற்குக் கிடைத்திருக்கின்ற சாத்தியக் கூறுகள்.

மாநிலங்களில் தொழில் தொடங்குவதற்காகக் கொடுக்கப் படும் உரிமையை மைய அரசிடத்திலே இருக்கிறது. அந்த உரிமையைப் பயன் படுத்தி பல்வேறு மாநிலங்களுக்கு மைய அரசு தொழில்களைத் தொடங்குவதற்கு அனுமதியைத் தந்து வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 468 தொழில்களைத் தொடங்கு வதற்கு அனுமதி கொடுத்தபோதிலும், 255 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

எனக்கு முன்னால் பேசிய, மாண்புமிகு இடது கம்யூனிஸ்ட் —மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும் பேசியநேரத்தில், திரு. சிந்தன் அவர்கள் தமிழகம் 15—வது இடத்தில் இருக்கிறது என்றும், 4ஆவது இடத்தில் இருக்கிறது என்று தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும் இங்கே விளக்கமாகப் பேசினார்கள். ஆனால், அரசுத் துறையிலே அளிக்கப்பட்டிருக்கின்ற கொள்கைவிளக்கக் குறிப்பேட்டிலே உள்ள புள்ளி விவரக் கணக்கின்படி, தமிழகம் மூன்றாவது இடத்திலே தொழிற்சாலை எண்ணிக்கையிலேயும் சரி, தொழில் வளத்திலேயும் சரி, இருப்பதைக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். அது தவறு என்று திரு. சிந்தன் அவர்கள் இங்கே பேசினார்கள். எந்த ஆதாரத்தை வைத்து அவர்கள் தவறு என்று சொல்லுகிறார் என்று நான் பார்த்தேன். அதற்காக ஆதாரங்களை அவர் காட்டவில்லை. மாறாக, பெர் காப்பிட்டா இன்கம் என்ற நிலையை வைத்துக் கொண்டு, 17, 18-ஆவது இடத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாநிலத்தின் தொழில் வளத்தைக் கணிப்பதற்கு பல்வேறுவிதமான ப்ரொசீஜர்கள், பார்மலீட்டீஸ், மொடாலிட்டீஸ் இவையெல்லாம்,

மாநில மைய அரசுகளால் பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படைகளை வைத்துத்தான் இந்தப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மைய அரசாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, மைய அரசாலும், ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற அந்தப் புள்ளி விவரங்களை, ஏன் இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் பெரியவர்களிலே ஒருவரான திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் மறுத்து, 5-ஆவது இடத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள் என்று தெரியல்லை. அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? தமிழகம் 5-ஆவது இடத்திலே இருக்கிறது, 17-ஆவது இடத்திலே இருக்கிறது என்பதற்கான புள்ளி விவரங்களை அவர்கள் கொடுக்காதது உண்மையிலே வருந்தத்தக்கது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் தமிழகம் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிவிட்டது. இங்கேயிருக்கிற ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் மைய அரசைக் குறை சொல்லுகிறார்கள். இப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்தின் துணைக் குடியரசுத் தலைவராக இருக்கிற மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் இங்கே தொழில் அமைச்சராக இருந்த சமயத்தில் ஒரு நாளைக்கு 3 தொழிற்சாலைகள் ஆரம்பித்ததாக அவருக்கே உரித்தான சில புள்ளி விவரங்களை இங்கே கொடுத்தார்கள். திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் இங்கே தொழில் அமைச்சராக இருந்த காலத்தில் தொழில் பெருகின என்பதை நாங்கள் யாரும் இதுவரை மறுக்கவில்லை. அதற்காக அவரை நாங்கள் எப்பொழுதும் பாராட்டுகிறோம். ஆனால், அதற்குப் பின்னாலே, தமிழகத்திலே தொழில்கள் பெருகவில்லை என்று சொல்வது அரசியல் காழ்ப்புணர்ச்சியின காரணமாகக் கூறப்படுகிற குற்றச்சாட்டே தவிர, அதிலே கிஞ்சிற்றும் உண்மை இல்லையென்பதைத்தான் அவருடைய கவனத்திற்கு தான் கொண்டு வர விரும்புகிறேன். காரணம், தொழில் கொள்கைக் குறிப்பேட்டிலேகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. 1977-லே இருந்து, 1986 வரை மைய அரசு நிறுவனங்கள் மூலமாக, ரூபாய் 1,600 கோடியை மைய அரசு இங்கே முதலீடு செய்திருக்கிறது என்று. ஆகவே, 1977 முதல் 1986 வரை ரூபாய் 1,600 கோடியை இங்கே முதலீடு செய்து, தொழில் வளம் பெருக மைய அரசு உதவி இருக்கிறது. ஆகவே, ரூபாய் 1,600 கோடிக்கான தொழில் வளமும் இங்கே பெருகியிருக்கிற நிலையில் ஏன், திரு, தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது எனக்குப் புரியவில்லை.



600 008.
135477

அவர்கள் கூட ஒன்றைச் சொன்னார்கள். [மை]ய அரசு ஏதா[வ]து பாகுபாடு காட்டுமானால், உங்களோடு சேர்ந்து [போராடு]வதற்கு, வாதாடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன், அவர்கள் போராடுவதற்கும், வாதாடுவதற்கும் வாய்ப்பு சில இடங்களிலே இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி, அவர்கள் அந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே, நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பெரும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, 1977-லே இருந்து இன்று வரை, தமிழகத்திலே இருப்பதைவிட, வட மாநிலங்களிலே அதிகமான தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதே போன்று, தமிழகத்தினுடைய தொழில் வளங்களைப் பெருக்குவதற்கு இங்கேயிருந்து ஏராளமான திட்டங்களை நாம் அனுப்பியிருக்கிறோம். அதற்கான அனுமதிகள் இன்னும் வந்து சேரவில்லை. பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பல முறைகள் இந்தக் கோரிக்கைகள் பேசப்பட்டு அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கிறதே தவிர, அதிலே பலன் ஏதும் விளைந்ததாகத் தெரியவில்லை. நம்முடைய திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கவனத்திற்கு நான் சிலவற்றைக் கொண்டு வர விரும்புகிறேன். கரூர்-தூத்துக்குடி அகல ரெயில் பாதை போடப்பட வேண்டுமென்ற கோரிக்கை கிட்டத்தட்ட 25, 30 ஆண்டுக் காலமாக இருக்கிறது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவும் மைய அரசு தயங்குகிறது. ஏற்றுக்கொள்ள மறுக்கவும் மைய அரசு தயங்குகிறது. அதற்கான காரணம் தெரியவில்லை. யானைப் பசிக்கு சோளப் பொறி என்று சொல்வதுபோல, அந்தத் திட்டத்திற்கு ரூபாய் 1 கோடி என்றும், ரூபாய் 3 கோடி என்றும் ஒதுக்குகிறார்கள்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்களே, கரூர்—திண்டுக்கல் ரெயில் பாதை மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டு, இன்வெஸ்டிகேஷனுக்குப் பணம் ஒதுக்கப்பட்டு, இன்று வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கியிருக்கிற பணத்தை வைத்துப் பார்த்தால் இன்னும் 20, 25 ஆண்டுக் காலமானாலும் அந்தத் திட்டம் முடிவடைவதாக இல்லை.

[1986 ஏப்ரல் 23

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதவில்லை என்றால் மேற்கொண்டு பணம் கொடுக்க மத்திய அரசு தயாராக இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கின்ற பணத்தை முறையாகச் செலவழித்துவிட்டு மேலும் கேட்கலாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டத்திற்கு உரிய தேவையான பணத்தை ஒதுக்கீடு செய்யாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, " யானைப் பசிக்கு சோளப்பொரி " போல ஒதுக்கீடு செய்தால் திட்டம் நிறைவேறாது. திட்டம் வரவேண்டுமென்ற ஆர்வத்தை அது காட்டாது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்களே, திட்டத்திற்கு நிதியை ஒதுக்கும்போது 'ஃபர்ஸ்ட் ஸ்டேஜ்' 'செகண்ட் ஸ்டேஜ்' என்றுதான் ஒதுக்கீடு செய்வார்கள். ஒதுக்கிய பணத்தை முறையாக உபயோகப்படுத்திவிட்டு, மீண்டும் கேட்க வேண்டும், கொடுப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் பேசும்போது ஏதாவது தேவை என்றால் நாங்களும் சேர்ந்து வாதாடுவோம் என்று சொல்லிவிட்டு, இப்போது காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்றத்தில் போராடுகின்றபோது, வாதாடுகின்றபோது அவர்கள் காலை வாரிவிடுவது சரியல்ல. அவர்களோடு நீங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. குப்புசாமி அவர்கள் பேசியதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களுக்கும் நினைவுபடுத்தி, மத்திய அரசுக்கு எப்படி எல்லாம் கருத்துக்களை எடுத்து வைத்து, திட்டங்களைச் சொல்லி வருகிறோம், திடமாகச் சொல்லி வருகிறோம் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி இடையிடையே மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது. ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் பின்னால் பேசுகின்ற உறுப்பினர்கள் சொல்லலாம்.

திரு. கே. குப்புசாமி: திரு. துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்துக்களைக் கூறிய பிறகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்போது அவர்கள் பதில் சொல்லாம். தயவுசெய்து இப்போது என்னுடைய காலத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 23] [திரு. கே. குப்புசாமி]

கரூர்—திண்டுக்கல், கரூர்—தூத்துக்குடி அகல இரயில் பாதை வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல காங்கிரஸ் கட்சி நண்பர்களும் இப்போது அதற்காக போராடி வருகிறார்கள். 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினால் என்ன செய்வது ? இதற்காக நீங்கள் வாதாடப் போகிறீர்களா ? அல்லது ஒரு கோடியே அதிகம் என்று சொல்லப் போகிறீர்களா ? ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் என்று ஒதுக்கினால் 100 கோடி ரூபாய்க்கான திட்டத்தை நிறைவேற்ற 100 ஆண்டுகள் ஆகும்; திட்டம் உருப்படாது.

திரு. ஈ வே. கி. ச. இளங்கோவன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதாகச் சொன்னார்கள். தமிழக அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களுக்கெல்லாம் ஆரம்பத்திலேயே அத்தனை நிதியையும் ஒதுக்கிவிடுகிறார்களா என்பதைச் சொன்னால் நல்லது.

திரு. கே. குப்புசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு கணிசமான நிதியை ஒதுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. தமிழக அரசு எந்தத்திட்டத்தைத் தொடங்கினாலும் கணிசமான தொகையை ஒதுக்கி, விரைவிலே திட்டத்தை முடிக்க ஏற்பாடு செய்கிறது. அதைப்போன்று கணிசமான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்றுதான் சேதுசமுத்திரத் திட்டமும் இருக்கிறது. இது எவ்வளவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இராணுவ ரீதியாகப் பார்த்தாலும் சரி, அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் சரி, பொருளாதார ரீதியாகப் பார்த்தாலும் சரி, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சேதுசமுத்திரத் திட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். டெல்லியிலே காங்கிரஸ் நண்பர்கள் இரண்டு அவைகளிலும் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே வருகின்ற கப்பல்கள், போர் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி வருகிறபோது எவ்வளவு அதிகமாக செலவு ஏற்படுகிறது என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியாவின் பாதுகாப்புக்கும் இன்றைக்கு சேதுசமுத்திரத் திட்டம் முக்கியமானது ; குறிப்பாக தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு மிக மிக முக்கியமானது. இன்றைக்கு பக்கத்திலே இருக்கிற இலங்கையானாலும் சரி, பாகிஸ்தானாக இருந்தாலும் சரி, பங்களா தேசமாக இருந்தாலும் சரி, இந்த மூன்று நாடுகளுமே சிறு சிறு பிரச்சனைகளுக்கெல்லாம் எல்லையிலே இராணுவத்தை ஏராளமாக குவிக்கின்றன. இப்படிப்பட்ட நேரங்களில் ஒரு பதட்ட நிலை

ஏற்பட்டால் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டை தாக்குவது மிகச் சுலபம். மிகச் சுலபமாக தமிழ்நாட்டை தாக்குவதற்கு வழிவகை ஏற்படும். ஆகவே, இராணுவ நடவடிக்கைக்கும் இந்த சேது சமுத்திரத் திட்டம் மிக முக்கியமானது. இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது? காங்கிரஸ் நண்பர்கள் பேசும்போது இதற்கு பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது தூத்துக்குடி துறைமுகத் திட்டம். இதற்கு கணிசமான தொகை ஒதுக்கப்படவில்லை. அதைப் போன்று சேலம் இரும்பாலைத் திட்டம். இரும்பாலை, இரும்பாலை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குரல் எழுப்பி, பேரணி எல்லாம் நடத்தினார்கள். இறுதியில் உருக்காலை உருட்டாலையாக வந்தது. அந்த உருட்டாலையிலும் இரண்டாவது உருட்டாலை ஒன்று அங்கே வேண்டுமென்று தமிழக அரசின் சார்பிலே கேட்டோம். இரண்டாவது உருட்டாலைத் தொடங்க மத்திய அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை. அதைப்போன்று பக்கிங்காம் கால்வாய்த் திட்டம் இருக்கிறது. இதுவும் ஒரு பெரிய திட்டம்.

(பிற்பகல் 12-30)

சென்னை சென்ட்ரலிலே இருந்து எண்ணூர் வரையில் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்காக பக்கிங்காம் கால்வாயைச் சீரமைப்பதற்காக 7 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தைத் தீட்டி மத்திய அரசுக்கு நாம் அனுப்பினோம். அது மத்திய அரசின் கிடப்பிலே போடப்பட்டுக் கிடக்கிறது. அதனுடைய தலைவிதி என்ன என்பதைப் பற்றி காங்கிரஸ் நண்பர்கள் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு அவரவர்கள் பேசும்போது தங்கள், தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். எனவே இப்போது குறுக்கிட வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரம், சேலம் உருக்காலை ஆகியவை எல்லாம் என்னுடைய துறையிலே வரவில்லை. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் இதிலே ஒன்றும் கேட்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கேட்பதால் எந்தப் பலனும் விளையப் போவதில்லை. எனவே பேச வேண்டிய மற்றவற்றைப் பற்றி மட்டும் பேசினால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 கோடி ரூபாயைப் பொறுத்த வரையில்..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோடி ரூபாயினை 5 கோடியாக அதிகமாக்கினார்கள் என்று திருத்திக்கொண்டு தொடர்ந்து பேசலாம். மற்ற உறுப்பினர்கள் இப்போது குறுக்கிட வேண்டியதில்லை. அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கே. குப்புசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழ்நாட்டுக்குச் செய்திருக்கக்கூடிய நன்மைகளை எல்லாம் நான் பாராட்டினேன். அதற்கு நன்றி தெரிவித்தேன். 16 கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டினேன். தொழில் துறையில் மத்திய அரசு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பாகுபாடு காட்டுமேயானால் அதனை விமர்சிக்கிற உரிமை எனக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசின் கொள்கை மற்றவற்றைப் பற்றி விமர்சிக்கின்ற உரிமை காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு இருப்பதுபோல் மத்திய அரசைப் பற்றி விமர்சிக்கின்ற உரிமையை நான் பெற்றிருக்கிறேன் என்பதையும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். நான் காழ்ப்புணர்ச்சியோடு பேசவில்லை.

ஊட்டியிலே உள்ள பிலிம் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் நாம் கேட்பது 200 கோடி ரூபாயிலே கலர் பிலிம் தொழிற்சாலை. ஆனால் அவர்கள் அதை உத்தரப்பிரதேசத்திற்கு மாற்றிவிட்டு எக்ஸ்ரே பிலிம் தொழிற்சாலையை 160 கோடி ரூபாயிலே அனுமதித்து இருக்கிறார்கள். அந்த கலர் பிலிம் தொழிற்சாலை என்ன ஆயிற்று என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதே போன்றுதான் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், உர நிறுவனம் ஆகியவற்றின் அபிவிருத்தி, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் கேட்டோம். அதனுடைய நிலைமை என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது நடைபெறுவது போக்குவரத்து மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் அல்ல. எனவே தொழில் துறையிலே பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிமாண்டிலே தான் பேச வேண்டும் என்றாலும் நமக்கு இருக்கிற டிமாண்டுகளையும் சொல்லித்தான் தீரவேண்டும்.

திரு. கே. குப்புசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்று கூட நான் சொல்வேன். அகில இந்திய அளவில் தொழில்களே இல்லாத மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அதாவது சீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட் என்ற வகையிலே தேர்ந்தெடுத்து அவற்றில் எல்லாம் தொழில்கள் பெருகுவதற்கு 25 சதவீதம் மூலதன உதவியுடன் மத்திய அரசு மானியங்களை அறிவித்திருக்கிறது. இந்த வகையில் கடந்த ஆண்டு 87 மாவட்டங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் சீரோ இண்டஸ்ட்ரீஸ் மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. இந்த ஆண்டு 94 மாவட்டங்கள் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி போன ஆண்டிலே அறிவிக்கப்பட்ட 87 மாவட்டங்களில் தமிழகத்தின் ஒரு மாவட்டம் கூட இடம் பெறவில்லை. இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 94 மாவட்டங்களில் தமிழகத்தின் ஒரு மாவட்டம் கூட இடம் பெறவில்லை. எனவே, சீரோ இண்டஸ்ட்ரீஸ் என்பதைக் கணக்கெடுக்கும்போது பிளாக் அளவில் எடுக்க வேண்டும் என்று தமிழக அரசு கோரிக்கை வைத்திருக்கிறது. இது நியாயமான கோரிக்கை என்பதால் காங்கிரஸ் நண்பர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாததற்கான காரணம் என்ன ? எங்களுடைய அண்ணா மாவட்டம் பற்றி இங்கே பேசிய நம்முடைய அருமைச் சகோதரர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்சள் கூட விளக்கமாகக் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதி வேடசந்தூருக்குப் பக்கத்தில் இருக்கிற தொகுதியாகும். அது ரெவின்யூ டிவிஷன். 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்க ஒரு திட்டம் மத்திய அரசுக் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு அனுப்பப்பட்டது. வேடசந்தூரிலிருந்து பாளையம் பகுதி வரையில் சுண்ணாம்புப் படிவம் ஏராளமாக இருக்கிறது. இதனை மத்திய அரசு முதலில் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தகவல் வந்தது. பின்னாலே என்ன சொன்னார்கள். அதிலே ஈரப்பதம் அதிகமாக இருக்கிறது என்றும், சிமெண்ட் தொழிற்சாலைகளில் நட்டம் வருவதற்குக் காரணமே சுண்ணாம்புக்கல்லிலே ஈரப்பதம் அதிகமாக இருப்பதுதான் ஆகையினால் இதிலே நட்டம்தான் அதிகமாக வரும், அனுமதி கிடையாது என்று சொன்னார்கள். ஆனால் வேடசந்தூர் பகுதியிலே இருக்கிற சுண்ணாம்புக்கல்லை ஆராய்ச்சி செய்துவிட்டு, அதிலே ஈரப்பசையே இல்லை நல்ல கல்லாகத்தான் இருக்கிறது; இதிலே சிமெண்ட் உற்பத்தி செய்தால் லாபகரமாக இருக்கும் என்று ஆய்வு அறிக்கை வந்தது. அதற்குப் பின்னாலும் என்ன சொன்





னார்கள். அங்கே ரயில் பாதை இல்லை, எனவே நிலக்கரி போன்றவற்றை அங்கே கொண்டு வர முடியாது என்று சொன்னார்கள். இப்போது ரயில் பாதை போட்டாகிவிட்டது. ஆகவே அந்த முறையிலும் வசதி வந்துவிட்டது, அனுமதி கொடுங்கள் என்று கேட்டபோது, நிலக்கரி இல்லை, நிலக்கரி போதாது, அதிகமாக கொடுப்பதற்கும் இயலாது, எனவே அனுமதி இல்லை என்று சொன்னார்கள்.

தமிழக அரசு, இருக்கின்ற நிலக்கரியை வைத்து அந்த தொழிலை செய்வதற்கு எங்களால் முடியும். போதுமான நிலக்கரி இருக்கிறது. நீங்கள் அனுமதியைக் கொடுங்கள் என்று கேட்டதற்குப் பிறகும் என்ன சொன்னார்கள் என்றால், அங்கே கிடைக்கின்ற தாது, மூலப் பொருள் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலும் அகில இந்திய அளவிலே....

**மாண்புமிகு** திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் ஆலையைப்பற்றி ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். நானும் இறுதியில் சொல்ல இருக்கிறேன். இதற்கு விளக்கம் கொடுத்து பேசுகின்ற நேரத்திலே ஒரு ஆலையையே கட்டி விடலாம் போல் இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னையை விட்டு விட்டு, வேறு சப்ஜெக்ட்டில் பேசுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, இதை பேசுவதற்குக் காரணம், இது நீண்ட நாள் விவகாரம். தொடர்ந்து இது முடிவுறாத பிரச்னையாக வந்துக் கொண்டிருப்பதால் விளக்கமாகச் சொல்லவேண்டி இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை....

டாக்டர் கே. சௌரிராஜன் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் ஆலை ஒன்று வேடசந்தூரில் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏற்கனவே அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்பட்டு வருகிற சிமெண்ட் ஆலைகள் எல்லாமே நட்டத்திலேயேதான் போய்க் கொண்டிருக்கின்றன. அத்தோடு, எங்காவது ஒரு ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்றால், அதற்கு தேவையான பல்வேறு உபகரணங்கள், ரா-மெட்டீரியல்ஸ், இன்னும் பல வசதிகள் எல்லாம் சரியாக இருந்தாக வேண்டும். டெக்னிஷியன்களே பார்த்து ஏதோ சரியில்லை என்று சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். சிமெண்ட் ஆலையை மாநில அரசு மட்டும் உருவாக்கிட முடியாது. மைய அரசினுடைய உறவு வேண்டும். 40 கோடி, 50 கோடி மூலதனம் போட்டால் லாபகர

மாக நடக்க வேண்டும். மைய அரசினுடைய நிதி உதவியோடு உறவு முறையோடுதான் அந்த ஆலையை உருவாக்கிட முடியும். அதிலே எந்தவிதமான தடங்கலும் இல்லை. தொழில் நுட்பக் கோளாறு ஏதோ இருப்பதாகத்தான் தெரிகிறது. ஆகவே, அதையெல்லாம் எடுத்து பேசுவது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ? அவர் அவருடைய கருத்தை சொல்லுகிறார். நீங்கள் பேசும்போது இதை எடுத்துச் சொல்லியிருக்கலாமே. இதனால்தான் வேண்டாத விவகாரங்கள் வருகிறது. பப்ளிக் செக்டார் பூராவும் இந்தியா முழுவதிலும் தான் நட்டத்திலே இயங்குகிறது. அதற்காக தொழிற்சாலையே கூடாதா என்ன ? குப்புசாமி தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கே. குப்புசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போதே சொன்னேன், பொதுவாக சிமெண்ட் ஆலைகள் நட்டத்திலே இயங்குகின்றன என்று. ஆனால் அந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப் போகிற தொழிற்சாலை நட்டத்திலே இயங்குவதற்கான காரண சாத்தியம் எதுவும் இல்லை. எல்லாவிதமான வசதிகளும், அனுகூல சாத்தியக் கூறுகளும், இருக்கின்றன. இன் பிராஸ்டிரக்ச்சர், ரா மெட்டீரியல்ஸ், லொகேஷன், போக்குவரத்து, வாட்டர் பெசிலிட்டி என்று எல்லா வசதிகளும் இருக்கின்றன. இருந்தும் ஆண்டாண்டு காலமாக ஏன் அது தூங்கிக் கிடக்கிறது என்றுதான் கேட்கிறேன். தமிழக அரசின் சார்பாக பலமுறை கேட்டாகிவிட்டது.

மைய அரசு, மாநில அரசு உறவு பற்றி சொன்னார்கள், நாங்கள் உறவு கூடாது என்று சொல்லக்கூடியவர்கள் அல்ல. உறவுக்குக் கை கொடுப்பதுதான் எங்களுடைய வேலை. அதற்காக, உரிமைக்கு போராடக் கூடாது என்று யாரும் எங்களை தடுத்து நிறுத்தி விட முடியாது, என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே சிமெண்டு ஆலைக்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் அனைத்தும் இருக்கின்றன. ஆகவே அது ஆரம்பிக்கப்பட்ட வேண்டும். அதற்கு அனுமதி அளித்தாக வேண்டும் என்றுதான் நிர்ப்பந்தம் செய்கிறேனே தவிர, ஏதோ இதை மறைபொருளாகப் பேசுவதினால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்பதற்காகத்தான் அழுத்தம் திருத்தமாக இதைக் குறிப்பிடுகிறேன். எனவே மாநில அரசு தொடர்ந்து முயற்சி செய்து, வறட்சியால் அடிக்கடி பெரிதும் பாதிக்கப்படுகிற அந்தப் பகுதி மக்களுக்கு



வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அந்த ஆலையை விரைவில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கடைசியாக ஒன்று. கிரீன் கார்டு சிஸ்டம் என்றும் அல்லது சிங்கிள் விண்டோ சிஸ்டம் என்றும் ஒரு சிஸ்டத்தை இங்கே புதியதாக ஏற்படுத்தி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி ஒரு தொழில் துவங்க வேண்டுமானால் அதற்கு வேண்டிய எல்லா அனுமதிகளையும் ஒரே இடத்தில், பெறும் வகையில், பவர் பிரச்னையாக இருந்தாலும் சரி, லைசன்ஸ் பெறுவதாக இருந்தாலும் சரி, ரா மெட்டீரியல்ஸ் ஸ்டாக்கு அனுமதியானாலும் சரி, ஒரே இடத்தில் பெறும் வகையில் இருப்பதுதான் சிங்கிள் விண்டோ சிஸ்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே அப்படி ஒரு சிஸ்டத்தை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, அது நடைமுறையில். அமலாக்கப்பட்டு வருகிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, அந்த சிங்கிள் விண்டோ சிஸ்டத்தை பரவலாக நாடு முழுவதும் அமலாக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(பிற்பகல் 12-40)

அத்தோடு கடன் தருவதற்கான புரொசீஜர்களை இன்னும் எளிதாக ஆக்கி, சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் கூட அதன் மூலம் கடன் பெற்று சிறிய சிறிய தொழிற்சாலைகளை தொடங்கும் வகையில் அதனை ஏற்படுத்த வேண்டும். எங்களுடைய அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல தாலுக்காக்கள் இண்டஸ்ட்ரியலி பேக்வார்டு ஏரியாவாக மாநில அரசு அறிவித்து இருக்கிறது. அவைகளை மைய அரசும் இண்டஸ்ட்ரியலி பேக்வார்டு ஏரியாவாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக பழனி பகுதியை ஏற்கனவே இண்டஸ்ட்ரியலி பேக்வார்டு ஏரியா என்று மைய அரசு அறிவித்து இருக்கிறது. என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான அரசுத் தொழிற்சாலையும் துவங்கப்படவில்லை. அங்கே பருத்தி, கரும்பு போன்றவை அதிகமாக விளைகிறது. எனவே அங்கே ஒரு ஸ்பின்னிங் மில் துவங்குவதற்காகவாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல தேனியில் ஒரு சர்க்கரை ஆலை துவங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தொழில் துறை

[திரு. மா. கதிர்வேலு] [1986 ஏப்ரல் 23

மானியத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை வைக்கலாமென்று நான் கருது கிறேன்.

இன்றைய தினம் பாரதத்தை ஆண்டு கொண்டிருக்கிற எழுச்சிமிக்கத் தலைவர் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தொழில் துறைக்கு நல்லவிதத்தில் ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாக இருந்தாலும், உள் நாட்டுப் பொருட்களை ஊக்குவிப்பதாக இருந்தாலும், இன்றைய தினம் தொழில் துறை மேலோங்கி நிற்க வேண்டுமென்ற எண்ணத்தோடு மத்திய அரசு செயல்பட்டு வருவதை நாம் மட்டும் பாராட்டவில்லை, தொழில் துறை வல்லுநர்கள், பத்திரிகை உலகைச் சேர்ந்தவர்கள், பொருளாதார நிபுணர்கள், இன்னும் இதுபோன்ற அனைவரும் பாராட்டுகிறார்கள். இந்த நேரத்தில் எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. இன்றைய தினம் துணை ஜனாதிபதியாக இருக்கிற மதிப்பிற்குரிய வெங்கட்ராமன் அவர்கள் தமிழகத்தில் காங்கிரஸ் பேரியக்கம் ஆண்ட காலத்தில் தினம் ஒரு தொழிற்சாலை என்ற அளவிற்கு திட்டங்களைத் தீட்டி வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்து, தொழிற்சாலை இல்லாத மாவட்டமே இல்லையென்ற அளவிற்கு ஒரு நிலையை உருவாக்கித் தந்ததை யாரும் மறந்து விட முடியாது. அந்த வகையில் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். காவிரி படுகையில் எண்ணெய் வளம் பற்றிய ஆய்வு நடைபெறவில்லை. அதற்கும் எந்தவிதமான முயற்சியும் இல்லையென்று சொன்னார்கள். இன்றைய தினம் ஆய்வுகள் நடத்தப்பட்டு எண்ணெய் ஊற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயிருந்து எண்ணெய் மணலி சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் காவிரி படுகையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை நிறுவுவதற்கு மாநில அரசு மத்திய அரசிடம் கேட்குமானால், உண்மையில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நாங்கள் உங்களுக்கு துணையாக நிற்க தயாராக இருக்கிறோம்.

அடுத்து இன்னொன்றையும் சொன்னார்கள். கரூர்—திண்டுக்கல் அகல ரெயில் பாதைக்கு ஒதுக்கியுள்ள பணம் போதாது என்று சொன்னார்கள். 25 ஆண்டுகளாகிறது என்றும் அதுபற்றி குறிப்பிட்டார்கள். நமக்கு தன்னம்பிக்கை என்பதுதான் முக்கியம். விரைவில் அந்தத் திட்டத்தை நடத்திட வேண்டுமென்ற நிலையில் இருக்க வேண்டுமே தவிர...

. . . . . .



1986 ஏப்ரல் 23]

**மாண்புமிகு** டாக்டர் கா. காளிமுத்து : தன்னம்பிக்கை தேவை தான். ஆனால் பணம் இல்லாமல் திட்டத்தை செயல்படுத்த முடியாது. தன்னம்பிக்கையை வைத்து நாம் தண்டவாளத்தை போட முடியாது.

திரு. மா. கதிர்வேலு : துணைத் தலைவர் அவர்களே, விரைவில் செய்ய வேண்டுமென்று எண்ணத்தோடுதான் சொன்னேன். நான் இன்னும் சொல்வது இன்றையதினம் மின்சார ரெயில் ஜோலார்பேட்டை வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு** திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, நாம் இன்றைக்கு எடுத்துக் கொண்டிருப்பது தொழில் மானியம். ரெயிலுக்கும், கப்பலுக்கும் துறைமுகத்திற்கும் உறுப்பினர்கள் போக வேண்டியதில்லை. தொழில் மானியத்தில் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. கதிர்வேலு : துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஜோலார்பேட்டை வரைக்கும் மின்சார ரெயில் விட்டிருக்கிறோம். இது மத்திய அரசு மாநில அரசின் மீது வைத்துள்ள அக்கறையைத்தான் காட்டுகிறது. அது விரைவில் ஈரோடு வரையில் நீட்டிக்கப்படலாம் என்று சொல்லக்கூடிய நிலையும் இருக்கிறது. இன்றையதினம் தொழில்களைப் பார்க்கிற போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய இராணிப்பேட்டை பகுதிக்கு நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டிலே வந்திருந்தார்கள். சிப்காட் தொழில் முகவர்கள் நடத்திய கருத்தரங்கிலே 4–1–1985 ஆம் தேதியன்று கலந்துக் கொண்டார்கள். ஒசூரிலும் இராணிப்பேட்டையிலும், 15 மெகாவாட் பவர் ஜெனரேட்டர் வைக்க நான் அனுமதிக்கிறேன் என்று அப்போது சொன்னார்கள். சொன்னதோடு நிற்காமல், அதற்கான ஆய்வுகளை நடத்துவதற்கு நீங்கள் வாருங்கள் என்று சொன்னார்கள். அந்த சிப்காட் பகுதியைச் சேர்ந்த அந்த தொழில் உரிமையாளர்கள் எல்லாம் இராணிப்பேட்டையைச் சேர்ந்தவர்கள். எல்லாம் ஒன்று சேர்ந்து அரசோடு கலந்து ஆலோசித்தபோது 10.5 கோடி ரூபாய் செலவாகும் என்று அரசுத்தரப்பிலே சொல்லப்பட்டு, அதில் மூன்றில் ஒரு பங்கை நீங்கள் கட்டவேண்டும் என்று சொன்ன நேரத்திலே அவர்கள் ஒரு கோடி கட்டுகிறோம் நீங்கள் அனுமதி தாருங்கள் என்றும் உடனே நிறைவேற்றித் தாருங்கள் என்றும் கேட்டார்கள். ஆனால் அரசு ஏன் அதை நடைமுறைப்படுத்தவில்லை என்பது எனக்குப் புரியவில்லை.

அடுத்து இன்றையதினம் 40 சதவீதம் மின் தடை சிப்காட் தொழில் பேட்டைகளில் இருந்து கொண்டு இருக்கிறது. 1–1–85 முதல் இன்று வரை பார்க்கிறபோது, இன்னும் 3 அல்லது 4

மாதங்களுக்கு இந்த மின் தடை செல்லும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி இருந்தால் எப்படி தொழிற்சாலைகள் இயங்கும். இப்படி மின் கட்டுப்பாட்டிலேயே நாம் சென்று கொண்டிருந்தால், அதற்கு எப்போது நாம் நிரந்தரமான ஒரு முடிவைக் காணப்போகிறோம் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து பேக்வார்ட் ஏரியாக்களில் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகளுக்கு, குறிப்பாக சிப்காட் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு ஐ. எப். சி. லோன் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிறபோது, 3—10—1981-க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு அந்த லோன் வழங்கப்படுகிறது. அதற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு மறுக்கப்படுகிறது. எனவே இந்த தொழிற் பேட்டைகளில் தொழில் தொடங்க முன் வருபவர்களுக்கு நீங்கள் இந்த ஐ. எப். சி. லோன் கொடுப்பதிலே நிர்ணயத்திருக்கின்ற அந்த தேதி என்ற வரம்பை விலக்கி, 3—10—1981-க்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் அந்த லோன் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும், என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து தொழில் தொடங்குவதைப் பற்றிச் சொல்கிறபோது, இன்றையதினம் எல்லா தொழில் தொடங்குபவர்களும் குஜராத்திற்கும், ஆந்திராவிற்கும், பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரிக்கும்தான் செல்லுகின்ற நிலைமைதான் இருந்துக் கொண்டு இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக நம்முடைய பெரியவர், உறுப்பினர் சிந்தன் அவர்கள் சொல்லியதை இங்கே நினைவூட்டுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் பிற மாநிலங்களுக்குச் செல்லாத வகையில், அவர்கள் எல்லாம் இங்கே தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு நீங்கள் ஊக்குவிப்புகளைச் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லவேண்டும் என்றால், சிப்காட் நிறுவனத்தின் மூலமாக குஜராத்திற்கு ஒரு குழு சென்று அங்கே Single window concept என்ற ஒரு திட்டத்தைப் பற்றி பத்திரிகையிலே அறிவித்தார்கள். அது எந்த வகையில் சிப்காட் தொழிற்பேட்டைக்கு பயன் தருகிறது என்று பார்த்தால், விநோதமாக இருக்கிறது. அதை சிப்காட் அதிகாரிகள் நடைமுறைப்படுத்துகிறார்களா, அல்லது செயல்படுத்துகிறார்களா என்று பார்க்கிறபோது, செயல்படுத்த முடியாத ஒரு நிலைமைதான் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. எனவே இந்த நிலைமையை மாற்றி அமைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்





அவர்களை நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். நான் இந்தத் தொழிற்பேட்டைக்குச் செல்லும்போது, அவர்கள் சொல்வது என்னவென்றால், நாங்கள் கட்டிடம் கட்டிடமாக ஏறி இறங்கினாலும், 3 ஆண்டுக் காலமாக, 4 ஆண்டுக் காலமாக லைசென்ஸ் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கும் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு லைசென்ஸ் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. சிப்காட்டிலே பீரியாடிக்கல் மீட்டிங் என்பது 1980 ஆம் ஆண்டு வரை நடத்தினார்கள். அதற்குப் பிறகு சிப்காட்டைச் சேர்ந்த அந்தக் கார்ப்பரேஷனில் உள்ளவர்கள், ஏன் அந்த தொழில் முதலாளிகளையும், தொழில் வல்லுநர்களையும் அல்லது அதைச் சேர்ந்தவர்களையும் வைத்து இந்த பீரியாட்டிக்கல் மீட்டிங் நடத்தவில்லை. அப்படி நடத்தினால் தானே, அங்கே சாலை வசதி இருக்கிறதா, விளக்கு வசதி இருக்கிறதா, தண்ணீர் கிடைக்கிறதா? என்ற இப்படிப்பட்ட நிலைமைகளைப்பற்றி எல்லாம் கருத்துக்கள் பரிமாற்றம் செய்ய முடியும். இப்படி செய்யாததினால் அந்த வாய்ப்புகளை அறவே இழந்துவிட்ட நிலைமை அங்கே இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்தி அளவளாவுவதற்கு ஒரு உத்தரவை வழங்கி, ஆண்டுக்காண்டு இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்தியே தீரவேண்டும் என்ற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ராணிப்பேட்டையில் தற்போது பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் அப்பர் இந்தியா பேரிங்க்ஸ் லிமிடெட், சாஸ் கெமிக்கல்ஸ், கஃப்பாமா ஆட்டோமொபைல்ஸ் போன்ற தொழிற்சாலைகளும், மற்றும் ஈரோட்டிலே ஒரு நூல் தொழிற்சாலையும் மூடப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் நான்காண்டுக்காலமாக மூடப்பட்டு இருக்கின்றன. இப்படி ஆண்டுக் கணக்கில் மூடப்பட்டு இருந்தால், அங்கே இருக்கின்ற அந்த உபகரணங்கள் எந்த நிலைக்குச்சென்று இருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்து அதை விற்பதா, அல்லது அதைத் தொடர்வதற்கான வாய்ப்பு இருக்கிறதா, என்பதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசுத் தரப்பிலே இயங்குகின்ற தொழிற்சாலைகளைப் பார்க்கிறபோது ஈரோட்டிலே, காட்பாடியிலே அம்பத்தூரிலே உள்ள மொபட் நிறுவனம் என்று பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. இன்றும் சொல்லப்போனால் ராணிப்பேட்டையில் உள்ள டான்சி நிறுவனத்தை மூடப்போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. (குறுக்கீடு) ஆகவே, இதைப் பற்றி ஊரகத் தொழில் மான்யம் வருகிறபோது நான் எனது கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 12-50)

இன்னும் டி.சி.சி. என்ற தொழிற்சாலை ராணிப்பேட்டையில் இருக்கிறது. அதிலே Liquid Pollution, Solid Pollution, Air Pollution இந்த மூன்றிலும், அந்த தொழிற்சாலை நடப்பதே நஷ்டத்தில், லாபத்தில் நடப்பதில்லை. இந்த மூன்று பொலூஷன்ஸ் ஏறத்தாழ 15 கிராமங்களின் அடி ஊற்றிலே மஞ்சள் தண்ணீரைக் கொடுக்கின்ற அளவிற்கு அபாயகரமான, கொடுமையான நிலை அந்தப் பகுதியிலே இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை மூடினால் தான் உண்மையிலேயே அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு நிரந்தர நிம்மதி கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையாக இருக்கும். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகவே தெரியும். மாற்று தொழிற்சாலையை அமைத்தால்தான் லாபகரமாக இருக்கும். அப்படிப்பட்ட கொடிய கெமிக்கல் ஃபெர்டிலைசர்ஸை வைத்து தயாரிக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனித உயிர்களை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு மூடி மாற்றுத் தொழிற்சாலையை அங்கே உருவாக்குவதற்கு நீங்கள் உடன் உத்திரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே, வாணியம்பாடி, ஆம்பூர், திருப்பத்தூர் வேலூர் ஆகிய இடங்களிலே மூன்று சர்க்கரை ஆலைகள் அடுத்தடுத்து இருக்கின்றன. அதிகப்படியான கரும்புகளை எடுத்து வருகின்ற ஆலைகளாக அவை இருக்கின்றன. அந்தச் சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுக்கப்படுகின்ற கரும்புச் சக்கையை வைத்து காகித தயாரிப்பு ஆலையை ராணிப்பேட்டைப் பகுதியிலே வைப்பீர்கள் என்று சொன்னால் உண்மையிலேயே சாலச் சிறந்ததாக இருக்கும். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதி, தண்ணீருக்கும் மற்ற எல்லா வசதிகளுக்கும் உட்பட்ட பகுதியாக இருப்பதாலே ராணிப்பேட்டைப் பகுதியில் காகித ஆலையை நீங்கள் நிறுவ வேண்டுமென்றும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்றும் கேட்டு முடிக்கிறேன்.





டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானிய கோரிக்கைகள் மீது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒருசிலக் கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க முன் வருகிறேன்.

பல்வேறு பிரச்சனைகளைப் பற்றிப் பேசலாம். நேரம் இல்லாததால் ஓரிரண்டை மட்டும் தொட்டுக்காட்ட விரும்புகிறேன். முதலாவதாக சர்க்கரை ஆலை — சர்க்கரை ஆலை தமிழகத்திலே தலை சிறந்த முறையிலே உற்பத்தி செய்கிறது என்பதும், இதுவரையிலும், இந்த அரசாங்கம் வருவதற்கு முன்பாக, இந்த அமைச்சரே வருவதற்கு முன்பாக தமிழகத்திலே உற்பத்தியான சர்க்கரையின் அளவு 6 லட்சம் டன் என்று சொன்னால் அது 85—86லே 7 லட்சம் டன்னுக்கு மேலாக உற்பத்தியாகிறது என்ற பெருமித வகையிலே அதனுடைய நடைமுறை இருப்பதைக்கண்டு நான் பெருமைப் படுகிறேன். உண்மையிலேயே ஒரு லட்சம் டன் இந்த இடத்திலே நாம் கூடுதலாக உற்பத்தி செய்த காரணத்தினால் மத்திய அரசு வெளிநாட்டிலிருந்து வரவழைக்கக்கூடிய சர்க்கரையை, 1 லட்சம் டன் குறைத்து இருக்கிறார்கள். இறக்குமதி குறைந்து இருக்கிறது. அதனால் 30 கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணி மத்திய அரசுக்கு லாபம். தமிழ்நாடு அரசால் இங்கே உற்பத்தி செய்த சர்க்கரையின் காரணமாக மத்திய அரசு வரவழைக்கவேண்டிய 1 லட்சம் டன் சர்க்கரை வருவதைத் தடுத்தும், குறைத்தும் அதே நேரத்திலே 30 கோடி ரூபாய் அந்நிய செலாவணியைப் பெருக்கக்கூடிய வகையிலேயும் உதவி புரியக் கூடிய மிகப் பெரிய கைங்கர்யத்தை தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு செய்திருக்கிறது என்பதையும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் எந்த அளவிற்கு உறுதுணையாக மாநில அரசு இருக்கிறது என்பதையும் இங்கே இருக்கின்ற நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல இந்த தொழில், இந்த மாநிலத்தில் மிகச் சிறப்பாக விளங்கும் என்ற காரணத்தால் மேலும் 30 சர்க்கரை ஆலைகளை உருவாக்கவேண்டுமென்று இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. அதிலே தனியார் துறை 7 சர்க்கரை ஆலைகளைக் கேட்டிருக்கக்கூடிய நிலையில், பல்வேறு விண்ணப்பங்களில் ஏழினை இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். மீதம் இருக்கின்ற விண்ணப்பங்களைப் பெற்று முழுமையாக மத்திய அரசினுடைய அனுமதியோடு அவைகளை

நிறை வேற்ற வேண்டும். அதை நிறைவேற்றக்கூடிய அளவிற்கு மத்திய அரசு இப்போது உடனடியாக பாலிசி நிர்ணயம் செய்யவில்லை. தமிழகத்திலே மேலும் 30 ஆலைகள் வேண்டுமென்று சொல்லியிருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு இன்னும் பாலிசியை நிர்ணயம் செய்யவில்லை. பாலிசி நிர்ணயம் செய்யாத காரணத்தினால் இன்னும் அந்நிய செலாவணியை தமிழகம் குறிப்பாக மத்திய அரசு இன்னும் அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. உடனடியாக மத்திய அரசு அப்படிப்பட்ட வேலையிலே ஈடுபடுவதற்கு இங்கே இருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள் பல கருத்துக்களிலே புகுந்து தங்களது கருத்தை எடுத்துச் சொன்னவர்கள், இதற்கு விளக்கம் கொடுத்து அவைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இங்கே பல்வேறு பிரச்னைகள். இன்னொரு பிரச்சனை. கனிம நிறுவனம். கனிம நிறுவனம் என்று பார்த்தால் இந்தியாவிலேயே அந்நிய செலாவணியை கொடுக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய சாதனமாக கனிம நிறுவனம் இருக்கிறது.

இன்றைய தினம் மாநிலத்திலே கருங்கல்லை அறுத்து பதப்படுத்தும் தொழிற்சாலை 25—3—1986ல் தொடங்கப்பட்டு இருக்கிறது. இதனால் இந்திய அரசுக்கு அன்னிய செலாவணியால் எவ்வளவு லாபம். கருங்கல்லால் இந்திய துணைக் கண்டத்திலே தென் நாட்டில் தான் வருமானம். குறிப்பாக தமிழ்நாட்டில் தான் வருமானம். மாநில அரசு கல்லை எடுத்து அறுத்து அதை பதப்படுத்தி மிக நல்ல முறையில் மற்றவர்கள் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு உலக அளவில் ஒரு வியாபாரத்தைச் செய்கிறது என்று சொன்னால், இந்திய துணைக் கண்டத்திலே தமிழ் நாட்டில் தான். வேறு எந்த அரசிலும் இல்லை. தமிழ் நாட்டில் தான் அந்த கல்லே கூட அதிகமான அளவுக்கு கிடைக்கிறது. வட நாட்டில் அது இல்லை. அது தான் கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் என்று சொன்னார்கள். அப்போதே உற்பத்தி ஆகி அது தலை சிறந்து விளங்கி பக்குவப்பட்ட நிலையில் இருக்கிறது. அது வட புலத்தில் இல்லை. அந்த வருமானத்தைக் கொடுக்கக்கூடிய இந்த அரசு மேலும் அந்த வருமானத்தைப் பெறுகிற அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் மத்திய அரசு. அன்னிய செலாவணியை குறைக்க வேண்டும் என்ற எண்ணத்திற்காகவாவது செய்ய வேண்டும்.





அது மட்டும் அல்ல, இதே கனிம நிறுவனத்தில் ஏற்கனவே பல அரசாங்கத்தில் பல தில்லு முல்லுகள் இருந்தன. இந்த அரசு வந்த பிறகு தான் தனியார் அப்படி செய்யக்கூடிய தில்லு முல்லுகள் அறவே ஒழிந்தது. அது மட்டும் அல்ல, நிலத்தை 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று ஒரு பக்கத்தில் வாங்கிவிடுவார்கள். மலையில் இருக்கிற கல்லை வெட்டி இங்கே கொண்டு வந்து விற்று வந்தார்கள். அதையும் இந்த அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்து இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆகவே சுமார் $12\frac{1}{3}$ லட்சம் ரூபாய்க்கு மேல் ஃபைன் போட்டிருக்கிறார்கள். தனி நபர்கள் ஒரு தேசீய நஷ்டத்தை ஏற்படுத்தி வருவதை இந்த அரசு விரும்பவில்லை. அது மாநிலமோ, மையமோ என்பது பிரச்சினை இல்லை. அது நாட்டுடைமையாக்கப்பட்ட பொருள். அது இந்த நாட்டுச் சொத்து, மக்கள் சொத்து, தனி நபர்கள் கொள்ளை லாபம் அடிப்பதை குறைக்க வேண்டும் என்ற காரணத்தால்தான், அரசு ஒரு புதிய யுக்தியை கையாண்டு இருக்கிறதே தவிர, இவ்வாறு கண்டு பிடித்து அதனால் வருவாயை பெற்று இனிமேல் இந்த தவறு நிகழாமல் அத்தனையும் மக்கள் தொகையாக இருக்க வேண்டும் என்ற புரட்சியை செய்தது இந்த புரட்சித் தலைவர் அரசு என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, தஞ்சை திருச்சியைச் சேர்ந்த புகளூர் பேப்பர் ஆலை. 1,500 பேருக்கு மேலாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. கரும்புச் சக்கையிலிருந்து பேப்பர் தயாரிப்பு செய்யக் கூடிய காரணத்தால் bagasse என்ற பொருள் இறக்குமதி செய்வது குறைந்து இருக்கிறது. அந்தப் பொருள் இப்போது தேவையில்லை, இங்கே இருக்கிறதை வைத்தே செய்கிற காரணத்தால் News Print Paper அல்லது பேப்பர் நம் நாடு முழுவதற்கும் தேவையை பூர்த்தி செய்வதற்கு அல்லது வெளிநாட்டிலிருந்து இந்திய அரசு தருவித்துக்கொண்டு இருந்ததை குறைப்பதற்கு, அதிலே அன்னிய செலாவணியை மத்திய அரசு பெறுவதற்கு, அடைவதற்கு அன்னிய செலாவணி என்ற பெயரால் பல்வேறு வகையில் இந்த நாட்டு மக்களின் வரிப்பணம் பாழ் ஆவதை தடுப்பதற்கு, இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டும் அல்ல, இன்னும் பலப்பல. வெடி மருந்து தொழிற்சாலை. அதை பல தனியார்கள் பிட் பிட் ஆக ஆங்காங்கே செய்து கொண்டு வந்தார்கள். அதை இப்போது பொது நிறுவனத்தின்கீழ் கொண்டு வந்து இந்த அரசு ஒரு இடத்தில்

பெரிய அளவில் செய்த காரணத்தால் இன்றையதினம் அதுவும் நம் நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தலை சிறந்த ஒரு அமைப்பாக இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிப்காட் பற்றிச் சொன்னார்கள். மத்திய ரக தொழில்கள், பெரும் தொழில்கள் இவைகள் எல்லாம் நலிந்த பிரிவுகள் என்று வருகின்ற போது அந்த நலிந்த பிரிவு எப்படி வருகிறது. அதை எடுத்து நடத்துவது எப்படி என்பதற்கு, வேண்டிய ஒரு உயர்மட்ட கமிட்டியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு நிறுவனம் அது எதனால் நலிந்த ஒரு நிலையில் வருகிறது என்று சொன்னால், அதனுடைய காரண காரியங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அது நிறுவனத்தால் வருவது வேறு; நடைமுறையால் இங்கே இருக்கின்ற மூலப் பொருள்கள் கிடைக்காமல் வருவது வேறு; அதை விற்பதற்கு உரிய வழி இல்லாமல் இருப்பது வேறு; இப்படி நலிந்த பிரிவு என்று எடுக்கின்ற போது, அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்த்து அதற்குரிய கமிட்டியை அமைத்து, அதை அரசு நிவர்த்திச் செய்ய வேண்டும். அப்படி செய்தால் அது நல்ல முறையில் இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, கடன் கொடுப்பதிலே கூட புதிய அணுகு முறை தேவை. தொழில் உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லுகிற போது மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் மொட்டை அடித்து ஆகவேண்டும் என்று சட்டம் போட்டு விட்டு நீ ஏன் பூ வைத்துக் கொள்ளவில்லை என்று கேட்டால் அது பழைய பஞ்சாங்கம் நிலையில் இருக்குமே தவிர, நல்ல முறையில் அபிவிருத்திக்கு இடம் தரக் கூடிய முறையில் இருக்காது. ஆகவே, தொழில் வளம் பெருக வேண்டும் அதற்கு ஏற்ற நடைமுறையில் பணம் கொடுக்கல் வாங்கல், இருக்கின்ற சிரமங்களை தீர்க்க கூடிய வகையில் அமைப்பை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை வருகிற போது தொழில் வளம் பெருகும். ஆகவே, கடன் கொடுப்பதில் இருக்கின்ற அணுகு முறையை மாற்றி அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு புதிய மாதிரியான கடன் முறையை கொண்டு வருவதற்கு ஒரு பாலிசியை கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(பிற்பகல் 1-00)

பாலக்கோடு சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொன்னார்கள். தர்மபுரி மாவட்டம் தமிழ்நாட்டில் ஒரு தலைசிறந்த அமைப்பு. அதிக அளவில் பர்சன்டேஜ் கொடுக்கக் கூடிய அவைவற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. தண்ணீர் இல்லாமல் அது நலிந்து போய்விட்டது. இப்போது அங்கே நிலைமை என்ன? விவசாயிகளுடைய கதி என்ன? நிரந்தர நிவாரணம் என்ன? தென் பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு போவதற்கு என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? அந்த முடிவை பரிசீலனை செய்வதில் காலம் நேரம் என்று பார்க்காமல், துரிதப்படுத்த தவறினால், நாம் பல்வேறு இன்னல்களை சமாளிக்க வேண்டியிருக்கும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களை கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதைப் போல், பல்வேறு வகையிலே சென்றுகொண்டிருக்கிற உபரி கரும்பை எல்லாம் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித்தர வேண்டும். அது பெரும்பாலும் கூட்டுறவுத் துறையிலே இருப்பது நல்லது என்று நம்புகிறேன். முன் மாதிரியாக இருக்கிற 7 அப்ளிகேஷன்களில் இது ஒன்றாக இருக்க வேண்டும். இல்லையென்றால், 30-சர்க்கரை ஆலைகளிலே ஒன்றாக இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தினுடைய வரப்பிரசாதம், பெட்ரோல். காவிரி படுகையிலே, தஞ்சையிலே, திருச்சிப் பகுதிகளிலே இது மிகப் பெரிய அளவிலே அந்நியச் செலவாணியை இந்திய அரசிற்கு, அதுவும் இந்த மாநிலத்திலிருந்து, தென் மாநிலத்திலிருந்து, ஈட்டித் தருகிறது. தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்றும், என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் என்ற சில பாடல்களின் வரிகளை கிண்டலாகச் சொன்னவர்கள். இப்போது இந்தத் திட்டம், வெட்ட வெட்ட, தட்ட, தட்ட வளர்கின்ற திட்டமாக இருப்பதை நண்பர்கள் உணர்கின்றார்கள். அந்த அடிப்படையில் மிக நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், அதற்கு மத்திய அரசு உதவி செய்து தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். நான் கூட ஒரு தனிநபர் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன். உற்பத்தியாகின்ற பெட்ரோலை சுத்திகரிக்கும் வகையில், சுத்திகரிப்புத் தொழிற்சாலையை தஞ்சை மாவட்டத்தில் அமைக்க வேண்டும். தமிழகத்தை எடுத்துப்பார்த்தால், தஞ்சை மாவட்டத்திலுள்ள மக்கள் அதிகமான அளவில் வெளியேறி, பல்வேறு வேலைகளுக்கு வெளியே சென்று தங்கக் கூடிய நிலையிருக்கிறது. அதை எண்ணிப் பார்த்து இந்தத் தொழிற்சாலையை நல்ல முறையில்

கொண்டுவருவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்கு
மத்திய அரசு உதவிபுரியக் கூடிய அளவில் மாநில அரசின்
கோரிக்கை இருக்க வேண்டும்.

தற்போது தோல் ஏற்றுமதி குறைந்து வருகிறது. அதைச்
சரிப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் எடுத்துள்ள வழிமுறைகள்
என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே விளக்கு
வார்கள் என்று கருதுகிறேன். இங்கே பேசுகின்றபோது நண்பர்
சிந்தன் அவர்கள் சில விவரங்களைச் சொன்னார்கள். நான்
புள்ளி விவரங்களை நம்பவில்லை. மத்திய அரசின் புள்ளி
விவரங்கலள நம்பவில்லை என்று சொல்லிவிட்டு, நம்பாத விவரங்
கள் மீது அதையே ஆதாரமாக வைத்து; விவாதம் செய்தார்,
விமர்சனம் செய்தார். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பெரிய
வர் பேசியபோது, இடையிலே குறுக்கிட்டு சில பதிலைச்
சொல்லிவந்தார். பாவம் அவர்கள். மத்தியிலே அமைச்சர்
பொறுப்பிலே இருந்து பதில் சொல்வதைப் போல் பேசினார்
கள். ஆனால் அவர்கள் மாநிலத்திலே எதிர்க்கட்சி சட்ட
மன்ற உறுப்பினராக சொல்வதைப்போல் சிலவற்றை எண்ணிப்
பார்க்க வேண்டும். ஒரு முகமாக இருந்து நாம் கோரிக்கை
வைக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும். இங்கே
கோரிக்கை வைக்கும்போதே பதிலடி கொடுக்கிறோம் என்
பதைப்போல் பேசியிருக்கிறார்கள். எந்தக் கட்சியிலே இருக்கி
றோம் என்பது பிரச்சினை அல்ல. கோரிக்கை என்ன? கோரிக்
கைக்கு உறுதுணையாக இருப்பதற்கு ஏதாவது வரவேண்டு
மென்ற வகையில் கோரிக்கையை வைக்க வேண்டும்.

பாலக்கோடு சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொல்கிறேன்.
இது நியாயமான கோரிக்கை. இதைப்போலவே தஞ்சையாக
இருந்தாலும், வேறு பிரச்சினையாக இருந்தாலும், தேவை என்று
வாதாடுகின்றபோது, டெக்னிஷியனாக, அல்லது டில்லியில் உள்ள
அமைச்சராகக் கருதி பதில் சொல்லி வந்திருக்கிறார்.
(குறுக்கீடு).......

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பாய்ண்ட் ஆப் ஆர்டர்,
சார். டாக்டர் சமரசம் அவர்கள பேசும்போது பரிதாபமான
நிலையில் பேசினார். மத்திய அமைச்சரிடம் இவ்வளவு
பரிதாபப்பட வேண்டாம். எங்களுக்குத் திராணி இருக்கிறது.
கொள்கை எப்படி இருக்க வேண்டுமென்ற திராணி இருக்கிறது.
பாவம் என்று சொல்லி எங்கள் மீது பச்சாதாபம் காட்ட
வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, மத்திய அரசுமீது பழிபோடவில்லை, நம்முடைய
நிலையை நினைத்துப் பரிதாபப்பட்டார்.





டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே,
பெரியவர் எப்போதும் பெரியவர், ஆகவே, அவர் சொல்வதை
ாம் கேட்டுக்கொண்டு இருப்போம். அதிலே உண்மை இருக்
றதா இல்லையா என்பது வேறு பிரச்சினை. மத்திய அரசுக்கு
ம்முடைய கோரிக்கை இப்படி இருக்க வேண்டும், அதில் நீங்
ள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர
ாவம் என்று நான் சொன்னது இங்கே இருக்கக்கூடிய நண்பர்
ளை அவர்களுடைய நிலையைப் பார்த்துத்தானே தவிர மத்
திய அரசைச் சொல்லவில்லை. மாநில அரசும் மத்திய அரசும்
இணைந்தால் நன்றாக இருக்கும். தமிழகத்தின் தனித்தன்மை
கெடாமல் திராவிடத்தின் கலாச்சாரம் பாழ்படாமல் இந்திய
தேசிய ஒருமைப்பாட்டிற்கு இலக்கணமாக இருப்பதுதான் எங்
களுடைய இயக்கம், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித்
தலைவர் அவர்கள் வழியிலே எங்களுடைய பணி தொடர்கிறது
என்று சொல்லி நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று
கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. கு. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, பல்
வேறு விவரங்களை விரிவான முறையில் எடுத்துச்சொல்வதற்
குரிய அவசியம் இருந்தாலும்கூட காலத்தின் தேவையைக்
கருதி சுருக்கமாக சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.
மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிற புதிய தொழில் கொள்கை
யைப்பற்றிப் பேசினால் அநேகமாக காங்கிரஸ் நண்பர்கள் ஆத்
திரப்படுவார்கள் என்று கருதுகிறேன். இந்தியாவினுடைய ஒட்டு
மொத்தமான முன்னேற்றத்தைக் கடுமையாகப் பாதிக்கிற புதிய
தொழில் கொள்கை அறிவிப்பு என்பது எதிர்க்கட்சிகளைப்
பாதிக்கிற விஷயம் அல்ல, ஜ்வஹர்லால் நேரு அவர்களால் தொ
டங்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு அடிப்படை
விஷயங்கள், பின்னுக்குத் தள்ளப்பட்ட விவரங்களுக்குள்ளே
நான் போக விரும்பவில்லை. அத்தகைய நிலையில் மிக முக்கிய
மான விஷயம், மத்திய அரசாங்கத்தினுடைய முதலீடுகள்
இந்த மாநிலத்திற்குத் தேவையான அளவுக்கு அளிக்கப்பட
வில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தின்
பல்வேறு விண்ணப்பங்கள் பரிந்துரைகள் தகுந்தபடி காலத்திலே
டிஸ்போஸ் பண்ணப்படவில்லை என்பதும் இந்த கொள்கை
விளக்கக்குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தேசிய
ஒற்றுமை என்பது தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில் அமைத்து
விடுவதால் மட்டும் வராது. தேசிய ஒற்றுமை என்பது மேடை
போட்டு செமினார் நடத்துவதால் வராது. தேசிய ஒற்றுமை
என்பது அனைத்து மாநிலங்களிலும் சமத்துவமான வளர்ச்சியை
உறுதிப்படுத்துவதில்தான் இருக்கிறது. ஆகவே காங்கிரஸ் நண்
பர்களைக் திட்டவேண்டும் என்பதல்ல. இந்த மாநிலத்தின்

நலனை பாதுகாக்க அவர்களும் கடமைப்பட்டவர்கள் என்பதால் இந்த மாநிலத்தின் கண்களைக் குத்துகிற மாதிரியான நிலையை மத்திய அரசு மேற்கொள்கிறபோது இந்த மாநிலத்தின் தேவையைப் பாதுகாக்க மட்டுமல்ல, தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காகவாவது காங்கிரஸ் நண்பர்கள் இந்த விஷயத்தை வலியுறுத்த வேண்டுமென்று சுருக்கமாகக் குறிப்பிட்டுவிட்டு விடுகிறேன். அதற்கான விவரங்களுக்குள்ளே நான் போகவில்லை, இன்றைக்கும் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன.

நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, 819 விண்ணப்பங்கள் புதிய தொழில்கள் தொடங்கப் போடப்பட்டதாகவும் அதிலே 428 மட்டும்தான் அனுமதியளிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் நண்பர்கள் தெளிவாகப் புரிந்துகொள்கிற முறையில் அந்த விண்ணப்பங்கள் எப்போது போடப்பட்டன, எத்தனைக் காலம் பரிசீலனையில் இருந்தன, டிஸ்போஸ் செய்யப்படாத விண்ணப்பங்கள் எத்தனை, எவ்வளவு காலமாக டிஸ்போஸ் செய்யப்படாமல் இருக்கின்றன என்பதை வருட வாரியாக இறுதியிலே விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் நம்முடைய புகளூர் பேப்பர் மில்லுக்கு டிட்கோ நிதி முதலீடாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிறுவனத்தின் சேர்மனாக சேஷசாயி பேப்பர் கம்பெனியின் விஸ்வநாதன் போடப்பட்டு இருக்கிறார். மாநில அரசால் சேர்மனாக நியமிக்கப்பட்டிருக்கிற சேஷசாயி விஸ்வநாதன் மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள டிட்கோவினுடைய சேர்மனை டைரக்டராக அனுமதிக்க வேண்டுமென்று அரசு உத்திரவை இன்றைக்கு வரையிலும் அமல் நடத்தவில்லை என்பது அரசுக்கும் தெரியும். அரசினுடைய உத்திரவையே அமல்படுத்த மறுத்திருக்கிறார் என்றால் அந்த தொழிற்சாலை என்ன ஜாயின்ட் செக்டாரா, பப்ளிக் செக்டாரா, பிரைவேட் செக்டாரா, என்ன காரணத்தினால் அவர் மறுத்திருக்கிறார் என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

பொதுத் துறையில் உள்ள காரைக்குடி தமிழ்நாடு கெமிக்கல்ஸ் விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இடையிலே ஓரலாக சில பல விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் இல்லை என்று சொல்லப்பட்டது. இலாபகரமாக நடந்து கொண்டிருக்கிற பொதுத் துறை நிறுவனத்தை தனியாருக்கு விற்பது என்பது எவ்வளவு சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





பிராட்கேஜ் பற்றிப் பேசுவது வெறுமனே பேசுவது அல்ல, தொழில் முன்னேற்றத்திற்கு பிரதானமான விஷயம் அது. நாட்டினுடைய அனைத்து முக்கியமான நகரங்களும் பிராட்கேஜால் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மதுரை இன்றைக்கு வரையிலும் இணைக்கப்படவில்லை. தென் மாவட்டங்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்கும் தொழில் துறையில் முன்னேற்றத்திற்கும் உறு துணையாக இருக்கக் கூடிய பிராட் கேஜ் பாதையை இன்றைக்கு வரை அமைக்காமல் காலந் தாழ்த்துவது என்பது மாற்றாந்தாய் மனப்பான்மை போல் இருக்கிறது. ஏனென்றால் மத்திய மாநில உறவு என்பது நம்முடைய நலன்களைப் பலியிட்டு உறவு கொள்வது என்பதல்ல, நம்முடைய தேவைகளைப் புறக்கணித்துவிட்டு அவர்கள் கொடுத்ததை மட்டும் பெற்றுக் கொள்வது என்ற அடிப்படையில் அது உருவாகவில்லை. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் பேசுகின்றபோது மெய்சிலிர்க்கச் சொன்னார்கள். உரிமைக்காகப் போராடுவோம் என்று சொல்கிறீர்கள். ஆமாம், போராடுவீர்கள் வாயாலே. ஆனால், நடைமுறையிலே என்ன போராடி இருக்கிறீர்கள்? பிரிவினைக் கருத்துக்களுக்கு வித்தூட்டும் விஷயத்தை ......

(பிற்பகல் 1-10.)

திரு. ஆர். தியாகராசன் : துணைத் தலைவரவர்களே, போராட்டம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்தப் போராட்டம் எந்த முறையில் இருக்க வேண்டுமென்று இவர்கள் நினைக்கிறார்கள்? குண்டு வீசிப் போராடினால் தான் போராட்டம் என்று நினைக்கிறார்களா?

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரங்களின் அடிப்படையில் புரிந்து கொண்டு பேசுவது தான் * * * * *
ஆனால் நான் சொல்ல விரும்புவது இந்த மாநில அரசு போராடாமலேயே போராடிக் கொண்டு இருக்கிறது என்று சொல்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால் : * *
என்று சொல்வது சரியா?

திரு. எஸ். சிவராமன் : துணைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் இவரை * * * என்று சொல்கிறாரா? வார்த்தைகளை அளந்து பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கு. சுப்பராயன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார்கள், குண்டு வீசித்தான் போராட வேண்டுமா என்று. குண்டு வீசித்தான் போராட வேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை. பொறுப்பு வாய்ந்த ஒரு அவையில், பொறுப்புள்ள மாதிரி பதில்கள் வந்தால் பொறுப்புள்ள முறையில் நாம் பதில் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற முறையில் சொன்னேனே தவிர, அதற்காக நீங்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள் ? ஆத்திரப்படுவதற்கான அவசியம் என்ன ?

இங்கே பேசும்பொழுது திரு. குப்புசாமி அவர்கள், மாநில நலன்களின் உரிமைகளுக்காகப் போராடுவோம் என்று சொன்னதைக் குறிப்பிட்டேன். உரிமைக்காகப் போராடுகின்ற விஷயத்தில் தவறு இழைத்திருக்கிறார்கள். போராடுவதாக வாயினால் சொல்கிறார்களே . தவிர, நடைமுறையில் என்ன நிலைமை ? நடைமுறையில், இந்த மாநிலத்தில் மைய அரசு பரவலான விஷயங்களைப் புறக்கணித்துக் கொண்டே இருக்கிறது; காலத்தில் டிஸ்போஸ் செய்யப்படாததன் காரணத்தினால் பிராட்கேஜ் இரயில் பாதை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இதற்காகத் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் அழைத்து மிகப் பெரிய போராட்டத்தை—பந்த் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். இல்லை என்றால், பிரிவினைக் கருத்துகள் வளர்கின்றன என்று சொல்லி வருத்தப்பட்டுப் பயன் இல்லை. பிரிவினைக் கருத்துக்கு உரம் போடுவதே மைய அரசின் கொள்கைகள்தான். மைய அரசின் கொள்கைகளின் காரணமாகத்தான் பல்வேறு மாநிலங்களில் பிரிவினைக் கருத்துக்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரிவினைக் கருத்துக்கள் வளர்க்கப்படாமல் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நல்ல ஆலோசனையைத்தான் அவர்களுக்குத் துவக்கத்திலேயே நான் குறிப்பிட்டேன். தேசீய ஒருமைப்பாட்டை உண்டாக்குவதே சமத்துவ வளர்ச்சிதான். சமத்துவம் இல்லை என்றால், உயர்ந்த வளர்ச்சி அடையாத மக்கள் காலப் போக்கில் சில சுயநலமிகளால் மாற்றப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் சொன்னேன். ஆனால் அவர்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி அவர்கள் ஒப்புக்கொள்ளாததற்காக நான் கவலைப்படவில்லை. அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது நம்முடைய எண்ணமும் இல்லை.

நமது மாநிலத்தின் நலப் பிரச்னை என்பது, இந்த மாநில அரசை ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மாநிலம் எந்தெந்த விஷயங்களில் மைய அரசால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியல் ஒன்றைப் போட்டு, அகல இரயில் பாதை உட்பட, சேது சமுத்திரம் திட்டம் உட்பட, இந்த மாநிலத்தின் நலன்கக்ளுகான திட்டங்கள். நீண்ட காலமாகத் தேக்கி வைக்கப்பட்டிருப்பதால், அவற்றை நிறைவேற்ற



வேண்டுமென்பதற்காக பந்த் போராட்டத்தை நடத்த வேண்டுமென்றும் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை அதற்காகக் கூட்ட வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் அரியலூர் சிமெண்ட் பேக்டரி பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன. இது குறித்தும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நந்தம்பாக்கத்திலே இருக்கும் அறுவை சிகிச்சைக் 'கருவிகள் தொழிற்சாலை பற்றி. இரஷிய உதவியோடு அமைக்கப்பட்ட அந்த அறுவை சிகிச்சைக் கருவிகளின் தொழிற்சாலையை மூடுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் தவறான கருத்துக்கள் இந்தக் கொள்கைக் குறிப்பில் வந்திருக்கின்றன. இந்தத் தொழிற்சாலையானது, இந்திய நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைப்பை ஏற்படுத்திகொள்ள வேண்டுமென்று சோவியத் நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு சோவியத் யூனியன் பாணியிலே தயாரிக்கப்படும் கருவிகளை சோவியத் யூனியனே வாங்கிக் கொள்வது என்று சொல்லி கால அவகாசம் கொடுத்து ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு அவற்றை —மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாக இந்தியாவின் தேவைக்கேற்ப கருவிகளின் வடிவமைப்பை ஏற்படுத்தவில்லை என்பது மட்டுமல்லாமல், மறுபடியும் மூன்றாண்டுக் காலம் தாமதப்படுத்தி மேலும் அதே கருவிகளை உற்பத்தி செய்து, அப்படி மூன்றாண்டுக் காலமாகத் தயாரிக்கப்பட்ட அந்தக் கருவிகளை சோவியத் யூனியனே மறுபடியும் பெற்றுக் கொண்டது ஒப்பந்தம் இல்லாமலேயே. இப்படி ஆறு ஆண்டுக் காலம் வாய்ப்பு கொடுத்தும் கூட இந்திய வடிவமைப்பை ஏற்படுத்திக் கொள்ளாத தன்மை மத்திய அரசின் தவறாகும். அதுவும் சென்னையிலிருந்து பிற பகுதிக்குக் கொண்டு செல்லுகின்ற முயற்சி நடக்கிறது. அது பற்றித் தவறான கருத்தோட்டம் உருவாக்கப்படுகிறது. ஆகவே, இப்படி பொதுத் துறையில் இருப்பதை மீண்டும் தனியாருக்கு ஒப்படைக்கும் அந்தக் கொள்கை நிலையிலிருந்துதான் இந்தப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இதில் மாநில அரசு உஷார் தன்மையோடு இருந்து போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட வேண்டுமென்று கருதினாலும் நேரம் இல்லாமையினால் அவற்றைக் குறிப்பிட முடியவில்லை என்பதால் இந்த அளவோடு என்னுடைய உரையை நிறுத்திக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியங்களின் மீது பேசு

வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு ஜனதா கட்சியின் சார்பாக, நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையைத் துவக்குகிறேன். தொழில்கள் துவங்குவதற்கு இந்த அரசு வெகு சீக்கிரமாக சிபாரிசு செய்வதில்லை. அதே போல, மத்திய அரசிடமிருந்தும் சீக்கிரமாக அனுமதி கிடைப்பதில்லை. இந்தக் காரணங்களாலே, தொழில் செய்கின்றவர்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்ற சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால், இராஜபாளையத்திலே திரு. பி. ஆர். ராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் ஆந்திர மாநிலத்திற்குத் தொழிற்சாலையைக் கொண்டு செல்கின்றார்கள். அதே போல, சிவகாசி சுவாமிஜி மில்ஸ்—இப்படிப் பல்வேறு தொழிற்சாலைகள் வெளி மாநிலத்திற்கு செல்வதற்குக் காரணம், ஒன்று மின்சார வெட்டு, இன்னொன்று அனுமதி கிடைப்பதில் தாமதம். இப்படிப் பல தொழிற்சாலை அதிபர்கள் வேறு மாநிலங்களில் தொழில் தொடங்குவற்கு இந்த அரசு நடைமுறைச் சிக்கல்களை அளவுக்கு மீறிச் செய்வதுதான் காரணம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அதே போல, மின்சார வெட்டு இருப்பது இந்த நிலையிலே மிக முக்கியமாக இருக்கிறது. சுவாமிஜி மில்ஸ் அதிபரை பார்த்துக் கேட்கும்போது, நாங்கள் ஜெனரேட்டரை வைத்து உற்பத்தி செய்தோமானால், எங்களுக்குக் கிடைக்கக்கூடிய இலாபமெல்லாம் அதிலேயே சென்று விடுகிறது, நாங்கள் எப்படித் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அமைச்சர். மின்சாரப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு உடனடியாக முயற்சி செய்ய வேண்டும். மின்சாரம், தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது. அனல் மின் நிலையமோ, அல்லது புனல் மின் நிலையமோ ஏற்படுத்தி, தமிழ் நாட்டிலே மின் வெட்டு இல்லாமல் இருப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

அதைப் போல, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள், பார்த்தீர்களா, எங்கள் உறுப்பினர்கள் மத்திய அரசைக் குறை சொல்லிப் பேசுகிறார்கள் என்று சொன்னார். நான் கேட்பது அது வல்ல. அரசு சார்பிலே குறை சொல்கிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேயே எல்லாம் இருக்கிறது. திரு. ஆறுமுகம் அவர்கள் அதைப் படித்திருந்தாலே தெரியும்.





திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணை தலைவர் அவர்களே உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே நினைக்கிறோம் கருதுகிறோம் என்றுதான் இருக்கிறதே தவிர, சரியான தன்மை இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எப்படி வார்த்தைகளை போட்டால் பொருத்தமாக இருக்கும் என்று உறுப்பினர் சொன்னால், அதையே கூட நாங்கள் போடத் தயாராக இருக்கிறோம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, போராட்டம் நடத்தப்படும் என்பதை ஏன் தெரிவிக்க மறுக்கிறீர்கள்? சட்டமன்றத்திலே தீர்மானம் போட ஏன் மறுக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக்காகப் போராடு என்று சொன்னால் பரவாயில்லை, எங்களுக்குள்ளே மோதல் ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் ஏற்படுத்தப் பார்த்தால் அது சரியல்ல.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது தமிழ்நாட்டு நலனுக்காகத்தான் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 1977-லேயிருந்து 1986 வரை இந்த அரசு 819 மனுக்களை அனுப்பியதாகவும், 468 மனுக்கள்மீது அனுமதி அளிக்கப்பட்டது என்றும் 255 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். ஏறத்தாழ 100 மனுக்கள் நிலுவையில் உள்ளன என்றும் சொல்லியிருக்கிறார்கள். மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு என்ன காரணம், தமிழக அரசு பரிந்துரை செய்ததை ஏன் தள்ளுபடி செய்கிறார்கள் என்பதை எல்லாம் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

உரிமங்கள் வழங்குவதற்கு மாநில அரசினுடைய பரிந்துரைகளைச் சரியான முறையில் அணுகுவதில்லையென்ற ஒரு குறை மத்திய அரசிடம் இருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், உங்களுக்குத் தெரியாமலேயே, தொழில்களைத் துவங்குவதற்கு மத்திய அரசு உரிமங்கள் வழங்குகிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே பல பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. 5, 6 பஞ்சாலைகளை அரசு ஏற்று நடத்தப் போவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். புதுக்கோட்டையிலே உள்ள மில்லில், முறையாக வேலை கிடைக்காமல், 1 மணி நேரம், 2 மணி நேரம் வேலை கொடுத்து, அங்கே உள்ள தொழிலாளர்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாத சூழ்நிலையிலே திண்டாடுகின்றார்கள்.

நான் ஏற்கெனவே சொல்லியது போல, சத்துணவுத் திட்டத்திலே, ஆண்டுதோறும் ரூ. 100 கோடியை மிச்சப்படுத்தி. தொழில்களைத் தொடங்குவதற்கு, மாவட்டத்திற்கு ஒரு தொழில் என்று தொடங்குவதற்கு முன் வர வேண்டும். இப்படி ஐந்து ஆண்டுகள் ஒதுக்கினால், ரூ. 500 கோடி அளவுக்குத் தொழிற்சாலைகள் வரும். வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, தொழில் தொடங்குவதற்கு நிதி இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று சொன்னால் பரவாயில்லை. அதற்காக, பிள்ளைகள் சாப்பாட்டிலேதான் கை வைக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நிதி ஆதாரம் இல்லை என்று சொல்கின்ற காரணத்தாலே தான் நான் இதைச் சொல்கிறேன். ஏழைகளுக்குச் சாப்பாடு கொடுங்கள்; எல்லோருக்கும் சாப்பாடு என்பது சரியல்ல என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் இந்த நேரத்திலும் சொல்லுகிறேன்.

(பிற்பகல் 1—20)

பெருந் தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே இந்தத் தமிழ்நாடு தொழில் துறையிலே சிறப்பாக இருந்தது. அப்பொழுது தொழில் அமைச்சராக இருந்த, இப்பொழுது இந்திய துணைத் தலைவராக இருக்கிற திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் நல்ல பல சீரிய முயற்சிகளை எடுத்தார்கள். அப்படி நீங்களும் எடுக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன். கரூர்—திண்டுக்கல் அகல ரெயில் பாதைத் திட்டம், சேது சமுத்திரம் திட்டம் பற்றியெல்லாம் பேசினார்கள். அவையெல்லாம் எனக்குச் சம்பந்தம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்வது, தொழில் அபிவிருத்திக்கு அவை எல்லாம் தேவை. கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதை மிக அத்தியாவசியமானது என்று கூறி மதுரையில் வணிகர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தத் தொகையை அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று ஏன் ஒரு தீர்மானம் இந்த அவையிலே கொண்டுவந்து நிறைவேற்றக்கூடாது ? இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதிக தொகை ஒதுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை கொண்டுவந்து, நிறைவேற்ற முன்வர வேண்டும். மகாராஷ்டிரத்தில் சென்ற ஆண்டு போராடி இப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்கு 200 கோடி ரூபாய் பெற்றார்கள். முதலில் 4 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள்.





அது போதாது, அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று போராடி, தீர்மானம் போட்டு 20 கோடி ரூபாய் பெற்றிருக்கிறார்கள். அதைப் போன்று நீங்களும் ஒரு தீர்மானத்தைப் போட்டு, வற்புறுத்த வேண்டும். அதைப்போன்று சேதுசமுத்திரத் திட்டத்தையும் வற்புறுத்தி, அந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டி. ஐ. சி. (டிஸ்டிரிக்ட் இன்டஸ்டிரியல் சென்டர்) இருக்கிறது. தொழில் செய்ய என்னென்ன உதவி தேவையோ அதை எல்லாம் செய்து கொடுக்க இந்த தொழில் மையம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது சரியாக செயல்படவில்லை. இந்த தொழில் மையத்தை சரியாகச் செயல்படச் செய்ய வேண்டும்.

அடுத்து, குடிசைத் தொழில், நடுத்தரத் தொழில், பெரிய தொழில் என்று பிரித்து, பெரிய தொழில் செய்பவர்கள் சின்ன தொழில்களைச் செய்யக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்ததாக நான் அறிகிறேன். அந்தச் சட்டம் இப்போது தளர்த்தப்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மனிதர்கள் செய்யும் தீப்பெட்டித் தொழிலை 'விம்கோ' நிறுவனத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் ஏராளமான மக்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஜனதா ஆட்சியில் குடிசைத் தொழில்களுக்கு பல சலுகைகளை அளித்து, கிராமங்கள் தோறும் ஒவ்வொரு வீட்டிலும் தீப்பெட்டித் தொழில் சிறப்பாக நடந்து வந்தது. அப்படிப்பட்ட ஒரு நிலையை ஜனதா ஆட்சி ஏற்படுத்தியது. ஆனால் இன்றைக்கு அந்தத் தொழில்கள் எல்லாம் அழிந்து, செயல்படவில்லை ; பல இடங்களில் இந்தத் தொழில் சுத்தமாக மூடப்பட்டுவிட்டது. இந்தத் தொழில் மூடப்பட்டதற்கு மற்றொரு காரணம் தீப்பெட்டிக்கு வரி விதித்திருக்கிறார்கள். ஏற்கெனவே இதற்கு எக்சைஸ் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் ஏன் வரி போட வேண்டும் ? தீப்பெட்டிக்குப் போட்டிருக்கிற இந்த வரியை நீக்கி, குடிசைத் தொழிலை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிமின்ட் ஆலை, சர்க்கரை ஆலை இப்படி பல ஆலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுப் பொருள்கள் எல்லாம் மக்களுடைய நலத்தைப் பாதிக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொது மக்கள் வேலை பார்க்கும் தொழிலாளர்களும் நலமாக இருந்தால்தான் தொழில்கள் வளரும். அதனால் அந்தக் கழிவுப் பொருள்களை பூமிக்கு அடியில் புதைத்தோ அல்லது வேறு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்தோ எப்படிச் செய்வீர்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 23

களோ அதைச் செய்து தொழிலாளர்களும் மக்களும் நலமாக வாழ வழிவகைச் செய்ய வேண்டும். அப்போதுதான் தொழில் வளர வழிவகைப் பிறக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, நம்முடைய தமிழ் நாடு தொழில் துறையில் முதலாவது இடத்திற்கு வருவதற்கான முயற்சிகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப் பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியங்கள் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்டுள்ள வெட்டுத்தீர்மானங்களை ஆதரித்து எனது கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் தமிழ்நாட்டிலே ஏற்பட்டுள்ள தொழில் தேக்கத்தை சீர்படுத்தி, செம்மைப்படுத்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் தொழில் துறை அதிகாரிகளும் எடுத்துள்ள ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை நான் வர வேற்கிறேன். அயல் நாட்டில் வாழும் 10 இந்தியர் தமிழ் நாட்டில் தொழில்கள் தொடங்கவும், 30 சர்க்கரை ஆலைகள் தொடங்கவும் தமிழக அரசு கொள்கையளவில் எடுத்துள்ள முடிவினையும், எலக்ட்ரானிக் தொழில்களில் போடப்படும் முதலீடுகளை அதிகப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதையும், கச்சா மாக்னசைட்டைப் பயன்படுத்த 80 கோடி ரூபாய் செலவில் தொழிற்சாலை உருவாகி இருப்பதை யும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில், தொழில் துறை மானியங்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை மிகக் குறைவானது; அரசுக்கு இதிலே வேகமான ஆர்வம் இல்லை என்பதை இது காட்டுகிறது. 1966–67 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது பட்ஜெட் தொகை 195 கோடி ரூபாய்தான். அன்றைய தினம தொழில் மானியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது 10,70,00,000 ரூபாய். ஆனால் இன்றையதினம், 1986–87 ஆம் ஆண்டு 3,275 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டு விட்டு தொழில்துறை மானியங்களுக்கு 17,08,93,000 ரூபாய் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த பட்ஜெட் தொகையின் தற்போதைய மடங்கு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் இருந்ததை விட, 16 மடங்கு உயர்ந்து இருந்தும் 17 கோடி ரூபாய்தான் தொழில்



1986 ஏப்ரல் 23] [திரு. கே. அன்பழகன்]

மானியத்திற்காக ஒதுக்குவது என்பது அவ்வளவு சரியல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த பட்சம் 170 கோடி ரூபாயாவது நீங்கள் ஒதுக்கி தொழில் வளர்ச்சியை முன்னுக்குக் கொண்டுவர முயன்று இருக்கவேண்டும்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி வேகமாக ஏற்பட மின் சாரம், போக்குவரத்து சாதனங்கள் போன்ற இன்ப்ராஸ்ட் ரக்சர்களை எல்லாம் உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தென் மாநிலங்களில் முதல் இடம் வகித்த தமிழ்நாடு இன்று அந்த இடத்தை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற் பட்டு இருக்கிறது. கச்சாப் பொருட்களின் குறைவு, மற்ற வசதிகள் குறைவின் காரணமாக தொழில் வளர்ச்சி பெரிதும் குறைந்துள்ளது. அதிலும் குறிப்பாக மின்சாரம் பற்றாக் குறை ஒரு பெரிய தடையாக இருக்கிறது. தேவையான மின் சார அளவிலே பாதிகூட இன்றைய தினம் கிடைக்காத சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். 1982 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட மின் வெட்டு 1983 ஆம் ஆண்டு முழுவதும் நீடித்தது இந்தத் தொழில் துறையில் ஒரு பெரிய பாதிப்பை உருவாக்கி இருக்கிறது.

சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் 7-வது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் புதிதாக 30 சர்க்கரை ஆலை களை அமைக்க அரசு கொள்கை அளவில் முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. சர்க்கரைத் தொழிலிலே மட்டும் அதிகக் கவனம் செலுத்தாமல் பல் வேறு விதமான தொழில்களை உருவாக்கக்கூடிய வகையில் தொழில் முனைவோர்களுக்கு ஊக்கம் அளித்து பலவேறு தொழில்களைத் தமிழகத்திற்கு கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய கொள்கை விளக் கக் குறிப்பில் 30 சர்க்கரை ஆலைகளை நிறுவுவது பற்றிச் சொல்லியிருக்கிற அதேநேரத்தில் பொட்டன்ஷியாலிட்டி பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில் நிதி வழங்குவதிலாகட்டும். உரி மங்களை வழங்குவதிலாகட்டும் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித் துக் கொள்கிறேன். மத்திய அரசின் நிதி நிறுவனங்களான ஐ.டி.பி.ஐ., ஐ.சி. ஐ.சி.ஐ., ஐ.எஃப்.சி.ஐ., ஆகியவை தமிழகத் தின் தொழில் வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கி இருக்கிறது

[திரு. கே. அன்பழகன்] [1986 ஏப்ரல் 23

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அகில இந்திய அளவிலே நிதியுதவி பெறுவதில் மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய இரண்டு மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது. அந்த அளவுக்குத் தமிழகம் அதிக நிதியுதவி பெற்றிருக்கிறது. அகில இந்திய அளவில் உள்ள மொத்த ஒதுக்கீடான 12,195.63 கோடியில் 1,161.80 கோடி தமிழ்நாடு மட்டும் பெற்றிருக்கிறது. இது 11 சதவீதம். மகாராஷ்டிரா 16 சதவீதம், குஜராத் 15 சதவீதம். எனவே தமிழகத்திற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பெர் கப்பிட்டா ப்ளோ ஆப் அசிஸ்டன்ஸ்டு தமிழ்நாடு 343 ரூபாயாகும். ஆல் இந்தியா அளவில் எடுத்துக்கொண்டால் 243 ரூபாய்தான். எனவே தமிழகத்திற்கு அதிக நிதியினை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பேங்க் க்ரெடிட் டு இண்டஸ்ட்ரீஸ் என்பதை எடுத்துக் கொண்டாலும் மத்திய அரசினுடைய வங்கிகள் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அதிக அளவில் நிதியினை ஒதுக்கி இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 1980 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் பேங்க் க்ரெடிட் டு இன்டஸ்ட்ரிஸ் 11,555 கோடி. தமிழ்நாட்டிற்கு மட்டும் 1136 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டினை எடுத்துக் கொண்டால் அகில இந்திய அளவில் இது 14,204 கோடியாகும். தமிழ்நாடடிற்கு மட்டும் 14,447 கோடியாகும். இப்படி மத்திய அரசினுடைய வங்கிகள் தமிழகத்திற்கு ஒதுக்கி இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இன்டியன் ஓவர்சீஸ் பேங்க் அண்மையில் வெளியிட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 184.89 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. இன்டியன் ஓவர்சீஸ் பேங்க்.

அகில இந்தியா முழுமைக்கும் 624.1 கோடி ரூபாய்தான் தொழிலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஸ்மாஸ் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்பதைப் பொறுத்தவரையில் 77.25 கோடி ரூபாயும், மீடியம் அன்ட் லார்ஜ் ஸ்கேல் இன்டஸ்ட்ரீ என்பதைப் பொறுத்தவரையில் 107.64 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்டியன் ஓவர்சீஸ் பேங்க் தருகிற அறிக்கையின்படி ஒரு வங்கியே எந்த அளவிற்கு அதிகமாகத் தமிழகத்திற்குத் தந்திருக்கிறது என்பதை இதன்மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

தொழில்களைப் பரவலாக்க வேண்டும். பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை டிசென்ட்ரலைஸ் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அகில இந்திய அளவில்



1986 ஏப்ரல் 23] [திரு. கே. அன்பழகன்]

வட இந்தியாவில் சில மாநிலங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்ற ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். தமிழகத்தை எடுத்துக்கொண்டால் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் உள்ள அளவுக்குத் தொழில் வளம் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் வளர்ந்திருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். புள்ளிவிவரங்களை எடுத்துக் கொண்டால் சென்னை, கோயம்புத்தூர் அளவுக்கு தொழிலில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை தென்னாற்காடு, தர்மபுரி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்கள் வளர்ந்திருக்கிறதா என்றால் கிடையாது. 1980—81-ஐ எடுத்துக்கொண்டால் சென்னையில் இருந்த ரிஜிஸ்டர் நம்பர் ஆப் பேக்டரிஸ் 1163.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. கே. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சென்னையில் நெம்பர் ஆப் யூனிட்ஸ் 6493, கோவையை எடுத்துக் கொண்டால் நெம்பர் ஆப் இன்டஸ்ட்ரிஸ் 2145, நெம்பர் ஆப் ஸ்மால் ஸ்கேல் யூனிட்ஸ் 4168. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், நெம்பர் ஆப் பேக்டரிஸ் 258, நெம்பர் ஆப் ஸ்மால் ஸ்கேல் யூனிட்ஸ் 699. (மணியடிக்கப் பெற்றது).

இப்படி. இதுபோன்ற மாவட்டங்களை, புதுக்கோட்டை, தென்னாற்காடு, தர்மபுரி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களைப் பார்க்கும்போது அவை எல்லாம் நம்முடைய தமிழகத்திலே பின் தங்கிய நிலைமையிலேயே இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான ஓமலூர் தொகுதியில் இருக்கும் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள், அவர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட்டில் வேலை செய்த காலத்திற்கு கிராச்சுவிட்டி வழங்கப்படவில்லை என்று இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட ஒரு முயற்சியின் காரணமாகத்தான் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி திரு. மேத்தா அவர்கள் 6 மாத காலத்திற்குள் 54 லட்சம் ரூபாயை தொழிலாளர்களின் கிராச்சுவிட்டிக்காக கொடுத்து விட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஒப்பந்தம் ஏற்பட்டு 1 வருஷம் ஆகியும் இன்னும்

அந்த தொகை அனுப்பப்படவில்லை, தொழிலாளர்களுக்கு கிராச்சுவிட்டியும் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். அதே போல தற்போது தமிழ்நாடு மாக்னசைடு நிறுவனத்தில் பணி யாற்றும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் சேலம் மாக்ன சைட் பிரைவேட் லிமிடெட்டில் வேலை செய்த காலத்திற்கு கிராச்சுவிட்டி தொகையை இனியும் காலதாமதம் இல்லாமல் பெறுவதற்கான வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற் கான வழி வகைகளுக்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல ஒதுக்கியிருக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளில் ஏதேனும் ஒன்றை நிச்சயமாக ஓமலூர் தொகுதிக்கு உருவாக்கித் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசு லெட்டர் ஆப் இன்டெண்ட்டும் லைசன்ஸும் கொடுப்பதைப் பொறுத்த மட்டில், 1984ஆம் வருஷத்தில் தமிழ் நாடு ஒன்றும் குறைவான இடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகாராஷ்டிராவில் 192 லெட்டர் ஆப் இன்டென்டும், 142 லைசன்சுகளும் வழங்கப்பட் டிருக்கின்றன. உத்தர பிரதேசத்தில் 137 லெட்டர் ஆப் இன் டென்டும், 81 லைசன்சுகளும் வழங்கியிருக்கின்றனர். குஜராத் தில் 106 லெட்டர் ஆப் இன்டென்டும், 86 லைசன்ஸுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆந்திரப பிரதேசத்தில் லெட்டர் ஆப் இன்டென்ட் 90, லைசன்சுகள் 46; தமிழ் நாட்டில் லெட்டர் ஆப் இன்டென்ட் 90; லைசன்ஸ்சுகள் 85; ஆனால் கேரளாவினை எடுத்துக் கொண்டால் லெட்டர் ஆப் இன்டென்ட் 20, லைசன்சுகள் 6ம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே மைய அரசு நிச்சயமாக தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு உரிய அளவிலே திட்டங்களை அனுமதித்து உரிய பங்கு கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னது போல மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை யோடு நடப்பது இல்லை. காய்ச்சல் கண்டவருக்கு கற்கண்டும் சுசக்கும் என்று சொல்லுவார்களே அது போல, போகிற போக்கில் பொத்தாம் பொதுவில் புழுதி வாரி தூற்றுவது போல் பேசுவது சரியல்ல என்று என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு,





பொதுவாக தமிழ் நாட்டில் முதலீடு செய்யும் தொகைக்கு ஏற்ப உற்பத்தித் திறன் கிடையாது என்று சொல்லப்படுகிறது. அந்த உற்பத்தித் திறனை உயர்த்தக் கூடிய அளவிற்கு மாநில அரசு தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகமான அளவில் லாபம் அரசு நிறுவனங்கள் மூலமாக வராவிட்டாலும் கூட நட்டத்திலே இயங்கச் செய்யாத அளவிற்கு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டும். அத்தோடு பொதுவாக வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்காவது ஈடு செய்யக் கூடிய அளவிற்கு புதிய கொள்கைகளை உருவாக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எலக்ட்ரானிக் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்ய வேண் டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மகாராஷ்டிராவிலே குஜராத்திலே, கர்நாடகத்திலே எல்லாம் சேல்ஸ் டாக்ஸ் குறை வாக இருக்கிறது. ஆனால் இங்கே சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக இருக்கிறது. அதுவும் உள்ளூரில் விற்பதற்கு ஒரு மாதிரி, வெளி மாநிலங்களில் விற்பனைக்கு வேறு ஒரு மாதிரி என்று இரண்டு வித மான சேல்ஸ் டாக்ஸ் வீதங்கள் இருக்கின்றன. ஆகவே இப்படிப் பட்ட வேறுபாடுகளையெல்லாம் எதிர்காலத்தில் நீக்கி எலக்ட் ரானிக் துறையிலே முன்னேறுவதற்கு வேண்டிய நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தில் இன்றைக்கு மாண்பு மிகு உறுப்பினர்கள், திரு. செங்கோட்டையன், திரு. பழனி, திரு. பொன் முத்துராமலிங்கம், திரு. அண்ணாதாசன், திரு. வி. பி. சிந்தன், திரு. தீர்த்தகிரி கவுண்டர், திரு. குப்புசாமி, திரு. கதிர்வேலு, டாக்டர் சமரசம், திரு. சுப்பராயன், திரு. ஆறுமுகம், திரு. அன்பழகன் ஆகியோர் இன்றைக்கு இந்த மானியத்திலே கலந்துக் கொண்டு நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியதற்காக நான் முதலிலே அவர்களுக்கு நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியத்திலே தொழிலைப் பற்றி மட்டும் அல்லாமல் நாட்டிலே இருக்கிற பல்வேறு பிரச்னைகளைப் பற்றியும் மாண்பு மிகு உறுப்பினர் பெருமக்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை, சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு எனக்கு ஒரு மகிழ்ச்சி. என்னுடைய நண்பர் இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்தின் துணை ஜனாதிபதியாக இருக்கிற மாண்புமிகு

[திரு. க. இராசாராம்] [1986 ஏப்ரல் 23

ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழகத்திலே இருந்த காலத்தில் எவ்வளவு தொழில்களை உருவாக்கினார்கள் என்று பல உறுப்பினர்கள் ஞாபகப்படுத்தி பேசியதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். காரணம் அவர்கள் பதவியில் இல்லாமல் கொஞ்ச நாட்களுக்கு நாடாளுமன்றத்தில் இருந்தார்கள். அப்போது அவர்களை யாரும் நினைத்தது கிடையாது. இன்றையதினம் துணை ஜனாதிபதியாக இருப்பதால் எல்லோருக்கும் ஞாபகத்திற்கு வருகிறது. ஆகவே அவருக்கு இன்னும் பல பதவிகள் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஏனென்றால் பதவியில் இல்லையென்றால் எல்லோரும் மறந்து விடுகிறார்கள். கோபம் வருகிற போது ஆர். வி. அவர்கள் ஞாபகம் வருகிறதே அதிலே உள்ள படியே எனக்கு மகிழ்ச்சிதான்.

இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ச்சியாக 20 ஆண்டுகளாக தமிழகத்தில் எந்தத் தொழிலும் தொடங்கப்படவில்லையென்று ஒரு கீதம் பாடப்படுவதை நான் பார்க்கிறேன். அது தவறாகும். ஏனென்றால் உங்களுக்கு, காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்வதற்கு ஒரு பழைய கட்டுரை திடீரென்று ஞாபகத்திற்கு வந்தது. நம்முடைய பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஒரு நாள் மோட்டார் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். பக்கத்திலே அவருடைய வரலாற்றை எழுதிய திரு. மு. நமச்சிவாயம் அவர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். மோட்டார் காரில் போய்க் கொண்டிருந்த போது காமராசர் அவர்கள் எதிரில் வந்த கார் நம்பரைப் பார்த்து விட்டு, அடடா, டி.எம்.இசட். வந்து விட்டதா என்று சொல்லி நாட்டிலே பணம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்று காமராசர் அவர்கள் நமச்சிவாயம் அவர்களிடம் சொன்னார்களாம். அதை அந்தக் காலத்தில் ஒரு கட்டுரையாக ஆனந்தவிகடனில் மு. நமச்சிவாயம் அவர்கள் எழுதினார்கள். இது எனக்கு ஞாபகத்திற்கு இப்போது வந்தது. இதில் காமராசர் அவர்கள் சொன்னதை உதாரணமாகச் சொன்னால் ஒருவேளை எல்லோருக்கும் புரியும் என்பதற்காக அந்தப் புள்ளிவிவாத்தையே எடுத்தேன். 1977 ஆம் ஆண்டில் தமிழக ஆட்சிப் பொறுப்பு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கைகளுக்கு வந்தது. அப்போது எவ்வளவு கார்கள் தமிழகத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன என்ற விவரத்தைச் சொல்கிறேன்:—

| ஆண்டு. | கார்கள். |
|---|---|
| 1977-78 .. .. .. .. | 4,055 |
| 1978-79 .. .. .. .. | 4,469 |
| 1979-80 .. .. .. .. | 4,265 |
| 1980-81 .. .. .. .. | 4,491 |
| 1981-82 .. .. .. .. | 5,502 |
| 1982-83 .. .. .. .. | 6,364 |
| 1983-84 .. .. .. .. | 6,829 |
| 1984-85 .. .. .. .. | 7,734 |



1986 ஏப்ரல் 23] [திரு. க. இராசாராம்]

இப்போது சொல்லுங்கள் தமிழகம் வளர்ந்திருக்கிறதா? இல்லையா ? அருமை நண்பர் ஆர்.வி. காலத்திற்கு, அப்புறம் கூட தமிழகம் வளர்ந்திருக்கிறது. இதுவும் கூட வளர்ச்சி தான் பணம் இல்லாமல் கார் வாங்க முடியாது. மினிமம் ஒரு கார் லட்ச ரூபாய் ஆகிறது. ஆகவே வளர்ச்சியில் தான் தமிழகம் இருக்கிறதே தவிர தேய்ந்து கொண்டிருக்கவில்லை.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் வளர்ச்சியில் தமிழகம் எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக் குறித்து மத்திய அமைச்சரிலிருந்து அனைவருக்கும் சந்தேகம் வருகிறது. பம்பாயில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் என்று வைத்திருக்கிறார்கள். அதிலே எல்லா புள்ளி விவரங்களையும் தருகிறார்கள். புள்ளி விவரத்தை நம்புவதா, இல்லையா என்பது வேறு பிரச்னை. இன்றைக்கு பூராவும் புள்ளி விரவத்தையே பேசியதால் நானும் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் நான் புள்ளிவிவரத்தையே பேசுவதாக இல்லை. பம்பாயில் உள்ள இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் 1985-ம் வருடம் செப்டம்பர் மாதம் ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் ஐந்து அம்சங்களைச் சொல்கிறது. என்னென்ன இருந்தால் ஒரு மாநிலம் தொழில் துறையில் முன்னேறியிருக்கிறது என்று. அதனை ஒவ்வொன்றாகச் சொல்கிறது.

புதிய தொழில்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்குவது. அப்படி பார்க்கிறபோது அந்த விவரங்களைப் பார்த்தால் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருப்பதாகச் சொல்கிறது.

இரண்டாவது, தொழிற்சாலைகளின் உற்பத்தி மதிப்பு. அதைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது.

மூன்றாவது, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பொறுத்த வரையிலும் தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது. தொழிலாளர்கள் மொத்தம் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள் என்று பார்க்கிற போது தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

நான்காவது, தொழிற்சாலைகள் மதிப்புப் பெருக்கம். தேசிய வருமான உற்பத்தி அடிப்படையில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

ஐந்தாவது, அகில இந்திய நிதி நிறுவனங்களிலிருந்து உதவித் தொகைப் பெறுவதில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

[திரு. க. இராசாராம்] [1986 ஏப்ரல் 23

தமிழகத்தில் தொழில் துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அனைத்து உதவிகளும் உடனுக்குடன் வழங்கப்படுவதாலும், தொழிலாளர் நல வாழ்விலே பிரச்னைகள் குறைந்து காணப்படுவதாலும் பல வெளிநாட்டு இந்தியர்கள் தமிழகத்தில் தொழில் துவங்க முன் வந்திருக்கிறார்கள். இப்படி வெளிநாட்டு இந்தியர்கள் தமிழகத்தில் மூலதனம் போடுவதை ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட் மூலமாக ஏற்படுத்தப்படவிருக்கிறது.

(பிற்பகல் 1–40)

இதுவரை தமிழ்நாட்டிலே அயல்நாட்டில் வசிக்கும் 10 இந்தியர்கள் 666.10 இலட்சம் ருபாய் மதிப்புள்ள தொழிலைத் துவங்கி உள்ளனர். இது தவிர 9 தொழில் பிரிவுகளை வெளிநாட்டிலே வசிக்கும் இந்தியர்கள் 1,269 இலட்சம் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்து கொண்டு வருகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஆதாரங்களைப் பார்க்கிறபோது தமிழகம் தொழில் வளர்ச்சியில் ஏழாவது இடத்திலே உள்ளது என்று சொன்ன மத்திய அமைச்சருடைய கூற்றை எதிர்க்க வேண்டியதாக இருக்கிறது. அது ஆதாரமற்றதாக உள்ளது என்பதைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. வேறு வழி கிடையாது. ஏன் என்றால் பொத்தாம் போக்கில் சொல்வதைவிட, ஆதாரங்களை வைத்துச் சொல்வது நல்லது என்பதை நான் மத்தியிலே புதிதாக பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கிற என்னுடைய இளைய நண்பர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து தமிழக முதல்வர் முயற்சியால் ஒரு பெரிய திட்டம் இன்றைக்கு நிறைவேறி இருக்கிறது. உதகமண்டலத்தில் உள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையைச் சேர்ந்த தலைவர் அவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். உடனடியாக முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்து, 'எக்ஸ்ரே பிலிம்' மற்றும் 'கிராபிக் சார்ட்' தயாரிக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதற்கு, பொல்லுசனிலிருந்து, அதாவது சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டு சட்ட விதிகளைத் தளர்த்தி, விதிகளை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டார்கள். ஒரே நாளில் விதிகளை மாற்றித் தந்ததுடன், மத்தியப் பேரரசு 168.12 கோடி ரூபாய் அளவிற்கு அந்தத் தொழிற்சாலையை விரிவாக்க, அந்த புதிய எக்ஸ்ரே பிலிம் தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

அது மட்டுமல்ல, மத்திய அரசு இன்னொன்றையும் நமக்கு உதவி இருக்கிறது. தமிழகத்தின் முதல்வர் அவர்களுடைய பெரு முயற்சியால் 'பாரத் எலக்ட்ரானிக்ஸ்' நிறுவனம், பெங்களூரிலே இருக்கிற மிகப் பெரிய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், சென்னையில் உள்ள ஆவடியில் டாங்குகளைச் செய்கிறார்கள், அந்த டாங்குகள் நம்முடைய நாட்டினுடைய பாதுகாப்புக்குப் பயன்படுத்துவது எல்லாம் உங்களுக்குத் தெரியும்-- இந்த டாங்குகளை கன்ட்ரோல் செய்கிற அந்த எலக்ட்ரானிக்ஸ் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நந்தம்பாக்கத்திலே நிறுவ இருக்கிறது. ஆகவே இரண்டு புதிய தொழிற்சாலைகள் நல்ல முறையிலே வந்து இருக்கின்றன.



1986 ஏப்ரல் 23] [திரு. க. இராசாராம்]

தமிழ்நாட்டு தொழில் முதலீட்டுக் கழகம் என்ன காரியம் செய்திருக்கிறது என்று கேட்டு இருக்கிறார்கள். இது இந்த ஆண்டு வரையிலும், அதாவது 1978 முதல் 1986 வரை புரட்சித் தலைவர் ஆட்சி தொடங்கியதிலேயிருந்து இன்று வரையிலும் 269.75 கோடி ரூபாயை கடன் தொகையாக வழங்கியிருக்கிறது. அடுத்து கடந்த 10 ஆண்டுக் காலத்தில் அது ரூ. 908.47 இலட்சத்தை லாபமாக பெற்று இருக்கிறது. கடன் உதவி பெற்ற நிறுவனங்கள் மூலமாக கடந்த 8 ஆண்டுகளில் வேலை பெற்றவர்கள் மட்டும் 2,43,443 பேர்கள். கிராமப்புற—நகர்ப்பகுதியில் மருத்துவமனை கட்ட முன்வருபவர்களுக்கு வழங்குகிற கடன் தொகை ரூ. 2 இலட்சத்திலிருந்து இன்றைக்கு ரூ. 15 லட்சம் வரையிலும் தரப்படுகிறது. மானியத் தொகையாக 1985–86-ல் வழங்கப்பட்ட தொகை மட்டும் ரூ. 465.79 இலட்சம். இந்த ஆண்டு பெற்ற கடன் விண்ணப்பங்கள் 4,160. கடன் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுடைய எண்ணிக்கை 4,100. மேற்கூறிய விண்ணப்பங்களுக்கு வழங்கப்பட்ட தொகை மட்டும் ரூ. 93 கோடி.

சிப்காட் அதிகாரிகள் சரிவர வேலை செய்வதில்லை என்ற குறைபாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிப்காட்டைப் பொறுத்தவரையில் நல்ல அளவிற்கு இன்றைக்கு வேலைகள் நடந்து வருகின்றன என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஹோசூர் தொழில் பேட்டையானாலும் சரி, ராணிப்பேட்டை தொழிற்பேட்டை ஆனாலும் சரி, புதுக்கோட்டை தொழிற்பேட்டையானாலும் சரி, இப்படிச் சொல்லப்படுகிற தொழிற்சாலைகள் எல்லாம் 20 ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலே வந்த தொழிற்சாலைகள், தொழிற்பேட்டைகள்.

அதுமட்டுமல்லாமல், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை ஆகிய இவை எல்லாம் புதிதாக வளர்ந்து வருகிற மையங்கள். துவக்கப்பட்டு இருக்கிற மையம் தூத்துக்குடி. இவை எல்லாம் இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகின்றன.

1978-லேயிருந்து 1986 வரையில் வழங்கிய நீண்ட கால கடன் தொகை ரூ. 11.91 கோடி. 1978–86 வரையில் சீட்கேப்பிட்டல மூலதனக் கடன் தொகை ரூ. 398.61 இலட்சம். 8 வருடங்களில் Interest free sales tax loan வட்டியில்லாத விற்பனை வரிக் கடன் ரூ. 2,235.93 இலட்சம் மத்திய அரசு மாநிலத் திட்டம் மூலம் வழங்கிய தொகை ரூ .2,513.46 இலட்சம். மாநிலத் திட்டம் மூலம் வழங்குகின்ற தொகை 359.70 இலட்சம். முன் மூலதனக் கணக்கு, சேல்ஸ் கேப்பிடல் இந்தியாவிலே சிப்காட் மூன்றாவது இடத்திலே இருக்கிறது.

நடந்துவரும் நிறுவனங்கள் மேலும் தனக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு ஐ.டி.பி.ஐ-ஆல் துவக்கப்பட்டத் திட்டத்தின் மூலமாக கடந்த 6 மாதத்தில் சிப்காட் ரூ.176 இலட்சம் கடன் வழங்க இந்தியாவிலேயே முதலாவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கதிர்வேலு பேசும்போதும் சிப்காட்டினுடைய நிர்வாகத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஆகவே சிப்காட் நிறுவனம் இன்றைக்கு அவ்வளவு வேலை செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிறுவனங்களைப் புதுமைப்படுத்த (மாடர்னைஷேஸன்) வழங்கும் கடன் திட்டத்தில் 758 இலட்சம் ரூபாய் வாங்கி சிப்காட் இந்தியாவிலேயே முதல் இடத்தை வகிக்கிறது. சிப்காட் இந்த ஆண்டு முதல் புதிதாக குத்தகை முறையில் (லீஸ்) ஜெனரேட்டர் மற்றும் முக்கியமான இடைக்காலத்தில் தேவைப்படும் இயந்திரங்களை வாங்க (Leasing Company) ஒன்று சிப்காட்டுக்குள்ளேயே உருவாக்கப்படுகிறது. அதிலே ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இதை 3 கோடி அளவிற்கு விஸ்தரிக்க முன் வந்துள்ளது. இதன்மூலமாக நடுத்தரத் தொழில் நடத்துபவர்கள் தங்களுக்குத் தேவையான பல்வேறு இயந்திரங்களை வாங்கிக்கொள்ள வசதி ஏற்படும். அதனாலே அவர்கள் நல்ல பலனைப் பெறுவார்கள் வெளிநாட்டு இந்தியர்கள் முதலீடு செய்து தொழிலை நடத்துவதற்கு தேவைப்படும் தொழில் உரிமங்களை பெற்றுத்தர முன்வந்திருக்கிறது சிப்காட் நிறுவனம். 'Sigle window policy,' 'ஒரு ஜன்னல் கொள்கை' என்று சொல்கிறார்கள், அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்திலே நாங்கள் முடிந்த அளவிற்கு எந்த வேலைகளையும் புதிதாக உரிமங்கள் வழங்குவதற்கு செய்துகொண்டு வருகிறோம் என்பதையும், புதிதாக தொழில் முனைய வருபவர்களுக்கு உதவிகளைச் செய்ய இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் தற்போதுள்ள சர்க்கரை ஆலைகள் 11. பொதுத் துறையிலே இருப்பது 3. தனியார் துறையிலே இருப்பது 10. ஆக மொத்தம் 24. மத்திய அரசிடம் அனுமதி கோரியுள்ள சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 30. கூட்டுறவு பொது மற்றும் தனியார் துறையினரிடமிருந்து வந்துள்ள விண்ணப்பங்கள் 29. மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள விண்ணப்பங்கள் 7. கூட்டுறவுத் துறையிலே மாநில அரசு ஆய்விலே இருக்கும் விண்ணப்பங்கள் 6. அரூர், செய்யாறு, சேத்தியாத்தோப்பு, ஸ்ரீவில்லிப்புத்தூர், தென்காசி, பெரியகுளம், சேரன்மகாதேவி இவைகளிலெல்லாம் இடங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் மாநில அரசு ஆய்வில் உள்ள விண்ணப்பங்கள் 8. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை சர்க்கரைஆலை உற்பத்தி இந்த ஆண்டு இறுதியிலே துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செங்கல்வராயன், தஞ்சை, சேலம், திருச்சி சர்க்கரை ஆலைகளும், கிளை சர்க்கரை ஆலைகளும், "பி" யூனிட் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் ஆய்விலே இருக்கிறது. ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் பழனி அவர்கள் அண்ணா சர்க்கரை ஆலையின் விரிவாக்கம் வேண்டுமென்று கேட்டார்கள். அதனையும் அரசு ஆயும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காகித தொழிற்சாலை மூலம், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன், அவர்கள் பேசும்போது கொடுமுடியிலே தரவேண்டுமென்று சொன்னார்கள். தமிழ்நாடு காகித தொழிற்சாலை முசிரியிலே ஒரு சர்க்கரை ஆலையை துவங்க திட்டமிட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. சர்க்கரைத் தொழிலின் வருங்காலத்தின் தொடர்பாக கொள்கை முடிவை இன்னும் மத்திய சர்க்கார் எடுக்கவில்லை. சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் நான் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, பல சர்க்கரை ஆலைகளுக்கு நான் நேரடியாகப் போனேன். சர்க்கரை ஆலைகளுடைய அதிகாரிகளையெல்லாம் கூட்டி அவர்களிடத்திலே பேசினேன். பேசிய பிறகு, சென்ற ஆண்டு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். நஷ்டத்திலே ஓடுகின்ற ஆலைகள் நஷ்டத்திலே ஒடினால் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்திகளை சொன்னேன். அவர்கள் வெகுவேகமாக இந்த ஆண்டு முயற்சி எடுத்தார்கள். ஆகவே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சர்க்கரை உற்பத்தி நல்ல அளவுக்கு பெருகி இருக்கிறது. கடந்த ஆண்டு 6 இலட்சம் டன் உற்பத்தி ஆயிற்று. இந்த ஆண்டு 7 இலட்சத்து 1,000 டன் உற்பத்தி ஆகியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, நம்முடைய பொதுத் துறை ஆலைகள் ஈட்டிய லாபம் 923.73 இலட்சம். இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள வேண்டும். மத்திய பேரரசு சர்க்கரையை ஆண்டுதோறும் இறக்குமதி செய்கிறது.

சென்ற ஆண்டு இறக்குமதி செய்ததன் காரணமாக அந்த இறக்குமதியை குறைக்க வேண்டும்; அந்நிய செலாவணியை நிறுத்த வேண்டுமென்று இந்த மாநிலத்திலே நாங்கள் முடிவு எடுத்தோம். அதற்கு எல்லா ஒத்துழைப்பும் கிடைத்தது. அதன் விளைவாக இந்த ஆண்டு உற்பத்தி பெருக்கத்தின் மூலமாக 30.30 கோடி ரூபாய் அளவுக்கு வெளி நாட்டு செலாவணி மிச்சப்படுத்தி மத்திய அரசுக்கு நாம் தந்து இருக்கிறோம் என்பதால் தான் 30 சர்க்கரை ஆலை வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். 30 சர்க்கரை ஆலை என்பது 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வருவது. ஒரே ஆண்டில் வருவது இல்லை. அவ்வளவு கரும்பை உற்பத்தி செய்வதற்கான விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாய கூலிகளுக்கு நல்ல கூலி கிடைக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கிற கரும்பில் இருந்து கிடைக்கிற சாறு நல்ல அளவுக்கு இருக்கிறது. இந்த காரணத்தால் தான் சர்க்கரை ஆலையை அதிகப்படுத்த வேண்டும் என்று கருதுகிறோமே தவிர வேறு அல்ல. அதில் தனியார் துறையா ? கூட்டுறவுத் துறையா? என்பது முக்கியம் அல்ல.

(பிற்பகல் 1.50)

இன்னும் ஒன்று. நம்முடைய கரும்பிற்கு கிடைக்கிற விலை சரியாக இல்லை என்று சொன்னார்கள். அது விவசாயத் துறையில் விவாதிக்க வேண்டிய ஒன்று. இருந்தாலும் நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்திலே என்ன செய்கிறோம் என்பது இந்த மாநிலத்தில் இருக்கிற கரும்பு விவசாயிகளுக்குத் தெரிய வேண்டும். எனக்கு இருக்கிற கவலை எல்லாம் தர்மபுரி மாவட்டத்தில இருக்கிற பாலக்கோடு சர்க்கரை ஆலை 7 ஆண்டு காலமாக தர்மபுரியில் மழை இல்லாத காரணத்தால் அந்த ஆலை மூட வேண்டியதாயிற்று. அங்கே இருக்கிற கரும்பு விவசாயிகள் பாதித்து விடக் கூடாது என்பதற்காக அந்தக் கரும்பை எடுத்து மற்ற எல்லா ஆலைகளுக்கும் அனுப்பி எப்படி. யாவது அவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற கவலை தான் எனக்கு இப்போது இருக்கிறது. ஏன் என்றால் அவர்களுக்கு அங்கே சாதாரண பணம் கூட கிடைக்காமல் போய் விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஆனால் நம்முடைய மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு சரக்கு நிறைய இருக்கிறது. நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆசை இருப்பதில் தவறு இல்லை. வளர்ச்சிக்கு அறிகுறிதான் அது. அதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.





ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், கர்நாடக மாநிலத்தில் 27 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. சென்ற ஆண்டு அது உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு 5 இலட்சம் டன் தான். சென்ற ஆண்டு நன்றாக இருந்தது. இந்த ஆண்டு கொஞ்சம் வறட்சி. அதனால் உற்பத்தி 4 இலட்சத்து 40 ஆயிரம் டன் தான் ஆகியிருக்கிறது. ஆந்திராவில் 31 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. சென்ற ஆண்டு அதில் உற்பத்தி 4 இலட்சத்து 50 ஆயிரம் டன். இந்த ஆண்டு அங்கே குறைந்து 3 இலட்சத்து 55 ஆயிரம் தான் உற்பத்தி ஆகியிருக்கிறது. தமிழ்நாட்டில் 24 ஆலைகள் இருக்கின்றன. இதை மனதில் கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு 6 இலட்சம் டன் உற்பத்தி ஆகியது. இந்த ஆண்டு மற்ற மாநிலங்களில் எல்லாம் குறைந்து இருக்கிறது, தமிழகத்தில் அதிகரித்து 7 இலட்சத்து ஆயிரம் டன் உற்பத்தி ஆகியிருக்கிறது. ஆகவே இவ்வளவு தூரம் தமிழகத்திலே தொழில் துறையில், ஒன்றையாவது ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன், வளர்ந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் ஏற்கனவே சொன்னது போல் 30 கோடி ரூபாய் அன்னிய செலாவணியை நாம் மிச்சம் செய்து தந்து இருக்கிறோம். ஆகவே இந்தத் துறை மிகவும் வேகமாக உழைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உப்பு உற்பத்தியைப் பொறுத்த வரையில் அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் கேட்டார்கள். இன்றைக்கு அவர்கள் பேசவில்லை என்று நினைக்கிறேன், அவர்கள் சொல்லும்போது அந்த உப்புத் தொழிற்சாலைக்கு அந்த காலத்தில் காங்கிரசில் போராடிய சர்தார் வேதரத்தினம் பெயரை வைத்து இருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அன்று எனக்கு நினைவு இல்லை. பிறகு அதை நான் தேடிப் பிடித்தேன். தஞ்சையில் இருக்கிற தம்பிக்கோட்டையில் இருக்கிற உப்பளத்திற்கு சர்தார் வேதரத்தினம் பெயர் தான் சூட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடுதெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ராமநாதபுரத்தில் உள்ள வாலிநோக்கத்திற்கு நான் 3 தினங்களுக்கு முன்பு போயிருந்தேன். அங்கே உப்பளத்தில் பெரிய அளவில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே சில குறைபாடுகளை நான் நேரில் போனதால் பார்க்க முடிந்தது. அங்கே தூத்துக்குடியில் 3 மடங்கு உப்பு விளைகிறது. ஆனால் வாலி நோக்கத்தில் ஒரு மடங்கு உப்பு தான் விளைகிறது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், அங்கே தூத்துக்குடியில் கிணறு வெட்டி அங்கே இருந்து அந்தத் தண்ணீரை எடுத்து வெயிலில் காய வைப்பதால் அதிகமான உப்பு உற்பத்தி ஆகிறது. ஆனால் வாலிநோக்கத்தில் கடல் நீரை அப்படியே காய்ச்சுவதால்

குறைந்த உப்பு கிடைக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு பிறகு அதை ஆராய்வதற்காக பவ நகர் என்ற இடத்திலிருந்து ஒருவர் வந்து இருந்தார். பக்கத்தில் இருக்கிற தூத்துக்குடியில் இருக்கிற உப்புத் தொழிலை செய்பவர்களை அழைத்து வந்து வாலிநோக்கத்தில் உள்ள உப்பளத்தைக் காட்டி அதிலே இருக்கக் கூடிய குறைபாடுகளை நீக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் ஆணை பிறப்பித்து இருக்கிறேன். அந்த அளவுக்கு தற்போது அங்கே வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே (Magnisim Metal Pla it) என்ற ஒரு பெரிய உலோக தொழிற்சாலை இந்த உப்பினுடைய கழிவுப் பொருளை அடிப்படையாக வைத்துக் கொண்டு அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதற்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கட்டிட வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. நான் அங்கே போனபோது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் அங்கே காரைக்குடியில் இருக்கிற விஞ்ஞான கழகத்தைச் சார்ந்தவர்களும் அவர் அழைத்து வரப்பட்டார்கள். அங்கே ஒரு கருத்தரங்கை நடத்தினோம். கருத்தரங்கை நடத்தி, 9 தொழில்கள், உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள், 9 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அங்கே போடலாம் என்று தீர்மானித்து, உடனடியாக அரசாங்கத்தினுடைய பங்குத் தொகையை தருவதற்கு ஆணை பிறப்பித்து, அந்த வேலைகளையும் வாலிநோக்கத்தில் தொடங்கியிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிக்கிறேன்.

தமிழக கனிம நிறுவனம் பற்றி டாக்டர் சமரசம் போன்றவர்கள் பேசினார்கள். இந்த ஆண்டு 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 587 இலட்சம் வருமானம் பெற்றிருக்கிறது. இதிலே இயக்க ஆதாயம் ரூ. 161 இலட்சம், நிகர ஆதாயம் ரூ. 5 இலட்சம். கரும்பாலை, மற்றும் சாம்பல் நிறப் பாறை ஆரம்பத்தில் ரூ. 1 இலட்சம் இருந்தது. 1985–86-ல் ரூ. 587 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. இதுவரை கற்களை வெட்டி அப்படியே ஏற்றுமதி செய்து வந்தது நிறுத்தப்பட்டு, அன்னியச் செலாவணியைப் பெறும் நோக்கோடு 100 விழுக்காடு ஏற்றுமதித் திட்டத்தின் கீழ் பாறை எடுத்து, மெருகிடும் தொழிற்சாலை ஒன்று ரூ. 640 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 25–3–1986 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்டிருப்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன். இந்தத் தொழிற்சாலை 50,000 ச.மீ. மெருகீட்டுக் கற் பலகைகளும், 10,000 ச.மீ. நினைவுக் கற்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





அதோடு டாமின் மற்றொரு காரியத்திலேயும் ஈடுபட்டிருக்கிறது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், சிவகங்கை அருகிலே கிராபைட் தயாரிக்கும் தொழிற்சாலை மூன்று கட்டங்களாக ரூ. 340 இலட்சம் மூலதனத்தில் செயல் படுத்த அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. 1985–86-ல் இந்தத் தொழிற்சாலை செயல் படத் தொடங்கும். இதன் மூலம் 600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அதோடு மைனிங் பற்றியும், சுரங்கத் தொழில்கள் பற்றியும், இங்கே பல உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்த சுரங்கத் தொழில் பொறுத்த வரையில், புரட்சித் தலைவர் அரசு மறைந்த பாரதப் பிரதமர், இந்திரா காந்தி அவர்கள் கொள்கையைப் பின் பற்றுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அம்மையாரே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்சள். கூடிய வரையில், கனிமத்தில் நாம் தன்னிறைவு எட்டுதல் வேண்டும். கனிமச் செல்வங்களை ஒரு முறை வெட்டி எடுத்தால், மீண்டும் ஈடு செய்ய இயலாது. ஆகவே பிற்கால சந்ததியினருக்குப் பயன் படும் வகையில் அவற்றைப் பேணிக் காக்க வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருச்கிறார்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் இன்றைக்கு சுரங்கத் தொழிலில் கனிமச் செல்வங்களை வெட்டி எடுப்பதற்காக 'உரிமங்கள் தருவதில் இந்த அரசு கடைபிடித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் கனிமச் செல்வங்களை ஆய்ந்து கண்டு பிடிப்பதிலேயும், மறு மதிப்பீடு செய்வதிலேயும், புவியியல் சுரங்கத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கீழ்க்கண்ட ஆய்வுகளை செய்து வருகிறது: சிமென்ட் தொழிற்சாலைக்கு சுண்ணாம்புக் கல் ஆய்வு, செராமிக் பீங்கான் நிறுவனத்தில், களிமண் ஆய்வு, நெய்வேலி லிக்னைட் நீங்கலாக மற்ற இடங்களில் பழுப்பு நிலக்கரி ஆய்வு, நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு பற்றி ஆய்வு, இவைகளை எல்லாம் இந்தச் சுரங்கத் தொழில் இயக்குநரகம் செய்து கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தற்போது மாவட்டத்திலே பணியாற்றி வருகிற அசிஸ்டண்ட் டைரக்டர்ஸ், உதவி இயக்குநர்களுக்குப் போதிய அதிகாரம் இல்லாத காரணத்தால் திருட்டுத்தனமாக, 'இல்லிசிட் மைனிங்' கனிமங்கள் வெட்டி எடுப்பதில் நேரடி நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகவே அவர்களுக்குப் போதிய அதிகாரம் அளிக்கும் வகையில் சம்பந்தப் பட்ட சட்டத்தை திருத்த அரசு தற்போது பரிசீலித்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1986 ஏப்ரல் 23

புகளூர் காகித ஆலையைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பத்திரிகை நிறுவனம், 1–10–1985 அன்று வியாபார ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியது. 1986 மார்ச் வரையில் 52,747 டன் செய்தித் தாள்களையும், 11,000 அச்சு மற்றும் எழுது காகிதமும் தயாரித்துள்ளது. இது மொத்த உற்பத்தித் திறனில் 70 சதவீதம். மேற்படி தயாரிப்பில் இந்த ஆலையின் மூலம், நமக்கு மொத்தம் அன்னியச் செலவாணி மட்டும் ரூ. 32 கோடி மிச்சமாகிறது. இந்தத் தொழிற்சாலையின் மூலம் 1200 பேருக்கு நேர்முகமாக வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் கரும்புச் சக்கை உபயோகிப்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கரும்புச் சக்கையைப் பொறுத்த வரையில், இந்தியாவில், இந்தத் தொழிற்சாலை தான் முதன் முதலாக உபயோகப்படுத்தியது.

5, 6 நாட்களுக்கு முன்பு, சென்னையிலே வெளிநாட்டுக்காரர்களை வைத்து, சேஷசாயி காகித ஆலை கரும்புச் சக்கையைப் பற்றி ஒரு கருத்தரங்கை நடத்தினார்கள். வெளி நாட்டினர் வந்திருந்தார்கள். அவர்கள் அந்த காகிதத் தொழிற்சாலையைப் பார்த்துவிட்டு வெற்றிகரமாக நடப்பதைப் பாராட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 2-00)

டான்செம் நிறுவனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே நம்முடைய உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் விழா பற்றி குறிப்பிட்டு நிறைய செலவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். $3\frac{1}{2}$ இலட்ச ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு ஆளுக்கு 10-ஆவது ஆண்டுக்காலம் என்பதைக் கொண்டாடுவதற்காக 150 ரூபாய் தந்தது ஒரு $4\frac{1}{2}$ லட்ச ரூபாய், ஆக 8 லட்சம் ரூபாய் செலவிட்டு இருக்கிறார்கள். அவசியமற்ற, அனாவசியமான செலவுகள் நிகழ்ந்து விடவில்லை.

கடந்த 9 ஆண்டுகளிலே இந்த நிறுவனம் பணலாபம் சுமார் 1,634.58 இலட்சம் ஈட்டியிருந்தாலும் தேய்மானத்திற்காக 1,854.20 இலட்சம் ஒதுக்கப்பட்டதால் 219.62 இலட்சம் நட்டமடைய நேரிட்டது. 1986-87-இல் பண இலாபம் 300 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87-இல் தமிழ்நாடு சிமின்ட் நிறுவனம் ஒதுக்கீடு போக $3\frac{3}{4}$ கோடி இலாபத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது Holder bank Management Consultants என்பவர்களை ஜெர்மன் நாட்டிலிருந்து அழைத்து அவர்கள் பார்த்து இருக்கிறார்கள். அவர்கள் அறிக்கை இன்னும் தர



1986 ஏப்ரல் 23] [திரு. க. இராசாராம்]

வில்லை. அறிக்கை தந்தால் நாம் எதிர்பார்க்கின்ற மூன்றே முக்கால் கோடி இலாபம் வரும். ஆகவே நட்டத்தில் தொடர்ந்து நடக்கும் என்று நம்ப வேண்டியதில்லை. ஒரு முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நிர்வாகத்திலே சிக்கல்கள் இருக்கின்றன. அங்கே எடுக்கிற சுண்ணாம்புக் கல்லில நிறைய தூசி இருப்பதால் தொல்லைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு அந்த நிறுவனம் முயற்சி எடுத்து வருகிறது.

எல்காட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், தற்போது 4 பொதுத் துறை தொழிற்சாலைகளும், 6 கூட்டுறவுத் துறை தொழிற்சாலைகளும் உற்பத்தி தொடங்கியுள்ளன. மற்றும் தொழிற்சாலைகள் திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றன. பொது மற்றும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள 545 இலட்சம் ரூபாய் ஆகும். விற்பனை 8 கோடி ரூபாய்க்கு மேல் 1985-86-இல் உயர்ந்து இருக்கிறது. கூட்டுறவு நிறுவனமான 'Messrs. 'Happy House' இல் தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. கருப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள் 25 ஆயிரமும், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள் 20 ஆயிரமும் தயாரிக்கப் படுகின்றன.

நீலகிரி மாவட்டத்திலே கோத்தகிரியில் எலக்ட்ரானிக் தொழிற்சாலை தனியார் துறையிலே உருவாக்குவதற்கு அமெரிக்காவிலே இருக்கிற ராஜகோபால் என்பவர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். அநேகமாக ஜூன் 11-ஆம் தேதி துவக்க விழா எடுக்க இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'Export processing zone ஏற்றுமதிக்காக விமான நிலையம் பக்கத்திலே ஒரு பெரிய தொழிற் பேட்டை ஆரம்பித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். இதுவரை அதற்காக 100 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது கட்டமாக 300 ஏக்கர் எடுப்பதற்கு வேலை நடந்துகொண்டு இருக்கிறது.

180 விண்ணப்பங்கள் வந்தன. 80 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றன. 80 விண்ணப்பங்களுடைய மொத்த முதலீடு 62 கோடி ரூபாய். அப்படி மூலதனம் போடுவதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு இங்கேயிருந்து ஏற்றுமதியாகக் கூடிய பொருள்கள் 264 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. 80 விண்ணப்பங்களிலே 26 விண்ணப்பங்கள் வெளி நாட்டு தொழில் நுட்ப உதவி பெற்றவை.

'Foreign Technical know how மார்ச் 1986இல் முதலாவதாக 55 இலட்ச ரூபாய் மதிப்புள்ள தையல் இயந்திர மோட்டார்கள் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. 31.3 கோடி மதிப்புள்ள வேலைகளை 3 கட்டமாக மத்திய அரசு

[திரு. க. இராசாராம்] [1986 ஏப்ரல் 23

செய்து கொண்டிருக்கிறது. 13.37 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை தமிழக அரசும் அதைச் சேர்ந்த நிறுவனங்களும் செய்துகொண்டிருக்கின்றன. இந்தத் திட்டம் முழுமையாக முடிவு அடையும் காலத்திலே சுமார் 70 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிற 80 விண்ணப்பங்கள் மூலமாக 16 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். இந்தத் திட்டத்தின் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படுகிறது. கச்சாப் பொருட்கள் உள்ளூரிலே இருக்கின்ற பொருள்கள் பயன் படுகின்றன. வளாகத்தைச் சுற்றியிருக்கிற பகுதியில் சார்புத் தொழில்கள் பெருகிவர வாய்ப்பிருக்கிறது. உள்ளூரில் வாழ் பவர்களின் தொழில் திறமை மேலும் பெருக வழிவகை செய் கிறது. வளாகத்திலே தொழில் செய்யவரும் வெளிநாட்டு நிறு வனங்கள் மூலம் புதிய தொழில் நுட்பம், தொழில் நுட்பப் பயிற்சி, சாதனங்கள் கிடைக்கின்றன.

" டான்மேக் " நிறுவனம்— சேலத்திலே இருக்கின்ற மாக்ன சைட் நிறுவனம் 1985-86-இல் 1,33,415 டன் உற்பத்தி செய் திருக்கிறது. 1,10,658 டன் விற்பனை செய்திருக்கிறது. இந்த நிறுவனம் 2,500 பேருக்கு வேலை வாய்ப்பு தந்திருக்கிறது.

" சுழலும் சூளைத் திட்டம்" ஒன்று உருவாக்கப்பட்டு, முழு எரியூட்டப் பெற்ற மேக்னசைட் தயாரிக்கப்பட்டு, கடந்த மாதம் முதல் வியாபாரம் தொடங்கப்பட்டிருக்கின்றது. 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'Chemical Benefciation plant' வேதியல் தரம் பிரிக்கும் திட்டம் என்ற அந்தத் திட்டம் தொடங் கப்பட்டு 1988-இலே உற்பத்தியைத் தொடங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

சூளைக் கற்கள் தயாரிக்கும் திட்டம்— பிரிக் பிளான்ட்— இதன் மூலம் உயர்தர வெப்பந்தாங்கிக் கற்கள் ஆஸ்திரியா தொழில் நுட்ப உதவியுடன் 52 கோடி ரூபாய் செலவில் உரு வாக்கப்படுகிறது. 1989-இல் இது உற்பத்தியைத் தொடங்கும்.

" டாசல் "—தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் — இது விருத் தாசலத்திற்கு அருகிலே உள்ள கற்குழாய் தொழிற்சாலை உற் பத்தியில் நிலக்கரிக்கான செலவைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, தொடர் சுடு சூளைமுறை ஒன்று 24.6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இப்பொழுது பீங்கான் தொழிற்சாலையில் 250 இலட்சம் முதலீட்டின் மூலமாகத் திட் டங்களைக் கொண்டு வர டாசல் ஒத்துழைத்திருக்கிறது, திரு மழிசை மற்றும் ஓமலூரில் அமைக்க இருக்கும் புதிய தொழிற் பேட்டைகளும் அடங்கும். தற்பொழுது 1,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 1,500 பேர்களுக்கு மறைமுக வேலை



1986 ஏப்ரல் 23] [திரு. க.இராசாராம்]

வாய்ப்பும் அளிக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தில் மேலும் 2,000 பேர்கள் நேரடி வேலைவாய்ப்பும், 1,000 பேர்கள் மறைமுக வேலைவாய்ப்பும் பெறுவார்கள்.

தமிழ்நாடு வெடி மருந்து தொழிற்சாலை—நைட்ரோ கிளி சரைனை அடிப்படையாகக் கொண்டு வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை இது. இது சுவீடன் நாட்டின் தொழில்நுட்பத் தோடு ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை. இது தென்னகத்தி லேயே முதலாவதானதாகும். இதற்கு மதிப்பீடு 23.50 கோடி ரூபாய் ஆகும், 450 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு, 100 பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு. இது தனது உற்பத்தியை 9—2—1986 முதல் புரட்சித் தலைவரின் பொற்கரங்களாலே தொடங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிறுவனம் மேலும் Detonators and Detonating Fuses தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 20.55 கோடி ரூபாய் மதிப் பீட்டில் நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டத் தின் மூலம் 630 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இது தனது பரிசோதனை உற்பத்தியை 1987 மார்ச் மாதம் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (குறுக்கீடு).

கரும்பு விலையைப் பற்றியெல்லாம் சொல்லி விட்டேன். (குறுக்கீடு) கரும்பு விலையை இதற்கு மேல் யாரும் கொடுக்க முடியாது. கொடுத்தால், சர்க்கரை மில்லை மூடிவிட்டுத்தான் கரும்பைப் போட வேண்டும். (குறுக்கீடு) பிறகு அதைப்பற்றிக் கேட்கலாம்.

அடுத்து, உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் குறிப் பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குஜராத் மாநிலத்தில் வட்டியில்லாத வருமான வரிக் கடன், தொழில் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாகப் பெறப்படாமல், கட னாகப் பாவிக்கப்பட்டு, பல ஆண்டுகள் கழித்து பெறப் படுகிறது. தமிழகத்திலே நேரடியாகப் பெறப்பட்டு மாதந் தோறும் மூன்று மாத காலங்களில் கடனாகப் பெறப்படுகிறது. அவர்கள் ஒரு பர்கேபிட்டா வேல்யூவைச் சொன்னார்கள். Per capital value added In the factory sector Tamil Nadu position is: 1960-61-இல் ஐந்தாவது இடத்திலே இருந்தது : 1970-71-இல் நான்காவது இடம் ; 1980-81-இல் நான்காவது இடத்தில் இருக் கிறது. இதற்கெல்லாம் நான் ஆதார புத்தகங்களை வைத்திருக் கிறேன். அதோடு, இந்தக் கடன் பெறப்பட்டதைப்பற்றியும் கேட்டார்கள் சிந்தன் அவர்கள். அது இதுவரையிலே கடன் தரப் பட்டிருப்பது, தமிழகத்தில் நேரடியாகப் பெறப்பட்டு மாதந் தோறும் மூன்று மாத காலங்களில் கடனாகத் தரப்படுகிறது. இரண்டுக்கும் பெரிய வித்தியாசமோ அதிகப்படியான நன்மை

[திரு. க.இராசாராம்] [1986 ஏப்ரல் 23

களோ இல்லை. குஜராத்தில் வளர்ந்திருக்கிறது என்று சொல்வதற்குச் சொல்கிறேன். 1982-83-இல் 263.30 இலட்சம்; 1983-84-இல் 426.99 இலட்சம்; 1984-85-இல் 494.74 இலட்சம்; 1985-86-இல் 401.26 இலட்சம். திரு. வி. பி. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல இந்தக் கடன் இங்கே யாருக்கும் மறுக்கப்படவில்லை; பாதியில் நிறுத்தப்படவும் இல்லை. அதற்குப் பதில் ஒருவருக்கு 45 இலட்சம் ரூபாய் வரைக்கும்தான் கொடுத்துக் கொண்டிருந்தோம்; இப்பொழுது 100 இலட்சமாக அதை உயர்த்தியிருக்கிறோம்.

(பிற்பகல் 2-10)

சென்ட்ரல் செக்டார்— மத்திய சர்க்கார் தமிழ்நாட்டிலே அதிக மூலதனத்தைப் போடுவதில்லை என்கிற ஒரு குறைபாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் குறிப்பிட்டார்கள். அது ஓரளவுக்கு உண்மை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1970-ல் ரூ. 312 கோடி, இங்கே, தமிழகத்திலே மூலதனம் இடப்பட்டது. அது 8 சதவீதம். இப்பொழுது, 1984-ல் ரூ. 2,167 கோடி மூலதனம் இட்டிருக்கிறது. ஆனால், 5.5 சதவீதம்தான். சதவீதத்திலே நமக்குக் குறைவாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு மேலும் பல தொழிற்சாலைகளைப் போட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் தாராளமாக மத்திய அரசை வலியுறுத்தலாம். அவர் முன்னாலே நாடாளுமன்றததிலே உறுப்பினராக இருந்தவர். ஆகவே, அவருக்குத் தெரியும். மத்திய அரசிலே பல பேர்கள் அவருக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

Total Central Sector investment 3885 in 1970. Now it is 38,848. As per per capital the Central investment percentage has come down.

விழுக்காடு பிரகாரம் குறைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிப்காட்டிலே பின்தங்கிய பகுதிக்கு வட்டி விகிதம் 14 சதவிகிதம், முன்னேறிய பகுதிக்கு 16 சதவிகிதம் ஆக அளிக்கப்படுகிறது. உரிய நாளிலே கடன் செலுத்தினால், மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். 1 சதவீதம் தள்ளுபடி என்று இருந்தது, அதை எடுத்துவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், இப்பொழுது 2 சதவீதமாக நாங்கள் தருகிறோம். அதிகப்படுத்தி இருக்கிறோமே தவிர, குறைக்கவில்லை. 12-லிருந்து 14 சதவீதம் வரை வரி வசூலிக்கப்படுகிறது.



1986 ஏப்ரல் 23] [திரு. க. இராசாராம்]

வட்டியில்லா விற்பனை வரிக் கடனைப் பொறுத்தவரையில் ரூ. 401.26 இலட்சம் 1985-86 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. செங்கோட்டையன் அவர்களும், திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும் கரும்பு விலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டு சர்க்கரை ஆலைக்குக் கொடுத்த சர்க்கரைக் கட்டுமான அடிப்படையில், சராசரி கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 207.40 ஆகும். ஆனால், இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட சராசரி கரும்பு விலை ரூ. 232.50 ஆகும். ஆகவே, இந்த ஆண்டு ஒரு டன்னுக்குக் கொடுக்கப்படும் சராசரி கரும்பு விலை ரூ. 25.10 கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.

உறுப்பினர் கேட்ட ஒரு டன்னுக்குண்டான விலை ரூ. 225-ஐக் கொடுத்தால்— சர்க்கரை கட்டுமான அடிப்படையில் பார்க்கும்போது, டன்னுக்கு ரூ. 260 வரை கொடுக்க வேண்டியிருக்கும்; அந்த அளவுக்கு விலை கொடுக்க— ஆலைகளின் நிதி நிலைமை இடம் கொடுக்காது. அதுதான் இருக்கிற நிலைமை.

பேரவைக்கு அறிவிக்கவேண்டிய சில அறிவிப்புகள்.

சிப்காட் நிறுவனத்தில் 'லீசிங்' (Leasing) முறையின் மூலம் ஜெனரேட்டர், மற்றும் தொழிற்சாலை இயங்க அத்தியாவசியமான பொருள் வாங்க உதவி செய்யும் புதிய திட்டம் சுமார் ரூ. 1 கோடி முதலீட்டில் துவங்க உள்ளது.

சுமார் ரூ. 6 இலட்சம் செலவில் கம்ப்யூட்டர் முறை சிப்காட் நிறுவனத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. அது தொழில் உரிமங்களை ஒழுங்குபடுத்தவும், மாநில தொழில் வளர்ச்சி குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், சிப்காட் நிதியுதவியுடன் இயங்கி வரும் நிறுவனங்களின் நிலைமையைக் கண்காணிக்கவும் உபயோகப்படுத்தப்படும். திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பேசும்பொழுது, கம்ப்யூட்டர்களைப் போட்டு, வேலைகளை எல்லாம் குறைப்பதாகச் சொன்னார்கள். கம்ப்யூட்டர்களைப் போட்டால், வேலைகளை அதிகமாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் சில இடங்களிலே போய் பார்த்தால் தெரியும். ஆகவே, வேலை வாய்ப்பை யாருக்கும் குறைப்பதாக உத்தேசம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் கிடைக்கும் இயந்திரங்களையும் தொழில் நுட்பத்தையும் கொண்டு நான்கு கோடி ரூபாய் மூலதனத்தில் 60 முதல் 70 விழுக்காடு கரிச் சத்துள்ள ''கிராபைட்'' உற்பத்தி செய்யும் சுத்திகரிப்பாலை அமைப்பதைவிட, அயல்நாட்டுத் தொழில்

[திரு. க. இராசாராம்] [1986 ஏப்ரல் 23

நுட்பத்தையும் நவீன இயந்திரங்களையும் கொண்டு சுமார் ரூ. 30 கோடி முதல் ரூ. 40 கோடி மூலதனத்தில் ''கிராபைட்'' சுத்தி கரிப்பாலை அமைப்பதே சாலச் சிறந்தது என்று கருதப்படுகிறது. இதனால் 96 முதல் 98 விழுக்காடு கரிச்சத்துள்ள நாளொன்றுக்கு 200 டன் மூலக் கனிமத்திலிருந்து 28 டன் சுத்திகரிக்கப்பட்ட ''கிராபைட்'' தயாரிக்கலாம். 98 விழுக்காடு கரிச்சத்துள்ள கிராபைட்டிற்கு உலகச் சந்தையில் நல்ல கிராக்கி இருக்கிறது. பல்வேறு பொருள்கள் தயாரிக்க 98 விழுக்காடு கரிச்சத்துள்ள கிராபைட்தான் பயன்படுகிறது. போர் விமானங்கள் மற்றும் ஆகாய விமானங்கள் தயாரிக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த இராட்சத நிறுவனங்களான 'மெக்டொனால்டு டக்லஸ்' மற்றும் எம்.பி.பி. நிறுவனங்கள் இந்த உயர்வகை கரிச் சத்துள்ள கிராபைட்டையே வாங்க விருப்பம் தெரிவித்துள்ளன. எனவே, இம்மாற்றுத் திட்டத்தை உரிய நடைமுறையில் கையாண்டு செயல்படுத்த உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பரவலாக நல்ல தரமுள்ள குவார்ட்ஸ் கனிமம் கிடைக்கிறது. அந்த குவார்ட்ஸ் கனிமத்தை அடிப்படையாகக் கொண்டு, ஜப்பான் நாட்டின் பீங்கான் தொழிலில் உலகப் புகழ் பெற்ற ''நிப்பான் செராமிக்ஸ்'' நிறுவனத்து தொழில் நுட்பத்துடன் 'பியூஸ்டு குவார்ட்ஸ்' தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான முயற்சிகளை தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதற்கு முதற்கட்டமாக குவார்ட்ஸ் கனிமம், தமிழ்நாட்டில் மிகுதியாகக் கிடைக்கும் 22 தாலுக்காக்கள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பகுதிகளில் உள்ள குவார்ட்ஸ் கனிமத்தை அரசு நிறுவனத்தின் சார்பில் வெட்டியெடுக்க, ஒதுக்கீடு செய்ய அரசை 'டாமின்' வேண்டியுள்ளது.

திருச்சி, முதுவத்தூரிலுள்ள தமிழ்நாடு சிமின்ட் நிறுவனத்தின் பொறுப்பிலுள்ள ''மாதிரி சிமிண்ட் ஆலையை'' (பைலட் சிமின்ட் பிராஜக்ட்) எடுத்து நடத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்து அறிவித்துள்ளார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் உள்ள உப்பு தொழிற்சாலையின் உப்பு உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் இந்தியாவிலேயே முதன் முதலாக மெக்னீஷியம் மெட்டல் ப்ராஜெக்ட் நிறுவ அரசு முடிவு எடுத்து வேலைகள் நடைபெற்றுள்ளன. வாலிநோக்கம் உப்பு தொழிற்சாலை வளர்ச்சிக்காக, சாலை அமைத்தல், குடியிருப்புகள் கட்டுதல், குடி தண்ணீர் வழங்கல் ஆகிய வேலைகளை அரசு உடனடியாகத் துவங்கவிருக்கிறது.



1986 ஏப்ரல் 23] [திரு. க. இராசாராம்]

உப்பு சார்பான உப தொழில்கள் வாலிநோக்கத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் தொடங்க 7 கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களில் அமைக்கப்பட்டு அவர்களுக்கு அரசும் தனது மானியத் தொகையை வழங்க எண்ணியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராசர் மாவட்டம் ஆகிய இடங்களில் புதிதாக மாவட்ட தொழில் மைய அலுவலகங்களை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

வேதியியல் தரம் பிரிக்கும் திட்டம் (Chemical Benefication Plant) 58 கோடி ரூபாய் செலவில் டான்மாக் நிறுவனம் மூலம் செயல்படுத்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

கூளை கற்கள் தயாரிக்கும் திட்டம் 52 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் டான்மாக் நிறுவனம் ஆஸ்திரேலியா நிறுவனம் ஒன்றின் தொழில் நுட்ப உதவியுடன் துவங்க அரசு அனுமதி அளித்திருக்கிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு ஜப்பான் நாட்டின் (Mitshu Bishi Electtic Corporation ) என்கிற நிறுவனத்தின் கூட்டு முயற்சியின் மூலம் ''எலக்ட்ரானிக்'' தொழில் தொடங்க பேச்சு வார்த்தை தற்போது நடைபெற்று வருகிறது.

கடைசியாக , இரண்டு இடங்களை பின்தங்கிய இடங்களாக இந்த அரசு தற்போது அறிவிக்கிறது. கும்மிடிப்பூண்டி, திருப்பூர் ஆகிய இரண்டு இடங்களிலும் மத்திய சர்க்காருடைய சலுகையையும் மாநில சர்க்காருடைய சலுகையையும் சேர்த்துப் பெறக்கூடிய வகையில் அறிவிக்கப்படுகின்றன. மாநில சலுகை 15 சதவீதம் ; வட்டியில்லா விற்பனை வரிக் கடன் ; பார்ட் 50 இலட்சம், இரண்டாவது முதலீடு 100 இலட்சம், மின்சார வெட்டு முதல் 5 ஆண்டுகளுக்கு இல்லை. இதைப்போன்ற சலுகை இந்த இரண்டு இடங்களிலும் அறிவிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அரசிலிருந்து தற்போது தொழில் உரிமங்கள் வேண்டுமென்று 23 உரிமங்களை வேண்டி, மத்திய அரசுக்கு நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம். அதோடு The Madras Fertilizers Limited Proposes duble its production. உர உற்பத்தியை இரட்டிப்பாகப் பெருக்க வேண்டுமென்று சென்னை உரத் தொழிற்சாலை திட்டமிட்டிருக்கிறது.

சேலம் இரும்புத் தொழிற்சாலை தற்போது இலாபகரமாக நடந்து வருகிறது. அங்கே அவர்கள் இரண்டாவது திட்ட அளவுக்கு ஒரு திட்டத்தைத் தீட்டி, அதன் விரிவாக்கத்திலே அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு நப்தா கிராக்கர்ஸ் பிளான்ட் சென்னையிலே இருக்கிற எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அது மைய அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.வி.சி., அக்தோ லைன் நைட்ரேட், போலி மொட்டா ஜீ ரப்பர் - வாயில் நுழையாத பெயர்களாக இருக்கின்றன— இவை எல்லாம் செய்வதற்கும், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து உருக்காலை வரையிலும் சேர்த்து நாம் விண்ணப்பித்திருக்கிறோம். அவை எல்லாம் மத்திய அரசின் ஆய்வில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

'Blow Glass Project' என்பதைப் பொறுத்த வரையில் உரிமங்களுக்காக நாம் விண்ணப்பித்திருக்கிறோம். ப்ளோ கிளாஸ் ப்ராஜக்ட் என்று சொன்னால் 54,750 டன்கள் உற்பத்தி செய்யவேண்டியதாக இருக்கும். 107 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஒரு தொழிற்சாலையை அது இருக்கும் நாப்தா கிராக்கர்ஸ் ப்ளான்டை ஆரம்பித்தால் அதில் ஆயிரம் கோடி ரூபாய் வரையில் அந்தத் தொழிலிலே போடுவதற்கு ஏதுவானதாக இருக்கும். அவையெல்லாம் வந்தால் தமிழ்நாடு மேலும் வளம் அடையும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து தாங்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கோரி அமர்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவருடைய பதிலில் சில விளக்கங்களை அளிப்பார்கள் என்று எதிர்பார்த்து நான் சில கேள்விகள் கேட்டிருந்தேன். இப்போது சில சந்தேக விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன். நாளைக்கு தமிழகத்தில் கரும்பு சாகுபடி செய்யக்கூடிய உற்பத்தியாளர்கள் கட்சிப் பாகுபாடு இல்லாமல் அதாவது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆகிய அனைவரும் கோட்டை முன்பு உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேட்கின்ற கேள்வி வேளாண்மைத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்டது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** இரண்டு பேருக்கும் சேர்த்தது தான் நான் கேட்பது.





**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். எங்கள் ஊரில் இருக்கிற பாலக்கோடு சர்க்கரை ஆலை தண்ணீர் இல்லாமல் மூடிக் கிடக்கிறது. அங்கே விவசாயிகளுக்கு இருக்கிற கரும்பை எடுத்து வந்து நாம் விற்றாலே போதும். அதைக் காப்பாற்றினாலே போதும். ஆகவே, தவறாகச் சொல்வதாக் கருதக்கூடாது. நியாயமான விலை நாம் கொடுத்து இருக்கிறோம். மற்ற மாநிலங்களை விட அதிகமாகக் கொடுத்து இருக்கிறோம். கரும்பு விளைச்சல் என்பதைப் பொறுத்தவரையில் உத்தரப்பிரதேசத்திலே 15-லிருந்து 20 டன் வரையில் உற்பத்தி செய்யப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் 40 டன் வரையில் விளைகிறது. எனவே அந்த அளவுக்கு எல்லா வசதிகளையும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம். என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை மனம் கோணாமல் அந்த விவசாயிகளுக்கு நாம் செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே ஒன்றும் தவறான விலை நிர்ணயிக்கப்படவில்லை. நீங்களே இந்த இடத்தில் இருந்தால் இதற்கு மேல் செய்ய முடியாது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டு களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆந்திரா மாநிலத்திலும் கர்நாடக மாநிலத்திலும் உள்ள உற்பத்தியினைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தோடு ஒப்பிட்டுச் சொன்னார்கள். என்ன வித்தியாசம் என்பதைக் குறிப்பிட் டார்கள். ஆந்திரா மாநிலத்தில் 275 ரூபாய் கொடுக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலே 235 ரூபாய்தான் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, நான் கொடுத்த விவரம் சர்க்கரை உற்பத்தியைப் பற்றியது, கரும்பு உற்பத்தியைப் பற்றி அல்ல.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு டன்னுக்கு ஆந்திரா மாநிலத்தில் 275 ரூபாயும் கர்நாடக மாநிலத்தில் 230 ரூபாயும் கொடுக்கிறார்கள். இங்கே 232 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். 8.5 சதவிகித சர்க்கரைச் சத்து உள்ள கரும்புக்கு அந்த விலை கொடுக்கிறீர்களா என்றால் கிடையாது. நீங்கள் கொடுப்பது 10.5 சதவீதம் சர்க்கரைச் சத்து இருந்தால்தான் அந்த விலை கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் ஃப்ளேட் ரேட்டாகத்தான் தருகிறார்கள். நாம்தான் 8.5 என்றெல்லாம் கணக்கிட்டுத்

தருகிறோம். அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் தெரியும். எனவே ஓய்வாக அமர்ந்து கரும்பு விவசாயி என்பதை மட்டும் கருத்தில் கொள்ளாமல் ஆலையும் வளரவேண்டும், விவசாயமும் வளரவேண்டும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் தெரியும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** தலைவர் அவர்களே, 10.5 சதவீதம் சர்க்கரைச் சத்து இருந்தால் அவ்வாறு கொடுப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறோம். அதை நாங்கள் வரவேற்கிறோம். அடிஷனல் ஃபேர் ப்ரைஸ் கொடுக்கிறீர்கள். சப்சிடி கொடுக்கிறீர்கள். நாங்கள் அதையெல்லாம் வரவேற்கிறோம. எனவே விலையைக்கூட்டிக் கொடுக்கவேண்டும். விவசாயிகளுக்கு முட்டுப்படி செலவுகள் எல்லாம் அதிகமாக ஆகி இருக்கிறது. உரவிலை கூடுதலாக ஆகி இருக்கிறது. மற்ற விலைகள் எல்லாம் கூட அதிகரித்து இருக்கிறது. அரசாங்கத்திற்கு இலாபம் வருகிறது என்று புள்ளிவிவரம் கொடுக்கிறார்கள். ஒரு டன்னிலே இருந்து 500 ரூபாய் வரையில் இலாபம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே விவசாயிகளுக்கு விலையைக் கூட்டிக் கொடுத்தால் தப்பில்லை. அவ்வாறு கொடுத்தால் தமிழ் நாட்டில் இருக்கின்ற விவசாயிகளின் ஆதரவு அரசாங்கத்திற்குக் கிடைக்கும். சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் முதலமைச்சரிடம் இதுபற்றிப் பேசி விவசாயிகளுக்கு நன்மைகள் செய்ய வேண்டும்.

இன்னொன்றும் நான் சொல்ல விரும்புகிறேன். அரூர் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் அடிஷனல் ஆலை வேண்டுமென்று கேட்டோம். அமைச்சர் அவர்கள் வாசிக்கும் போது சேரன்மாதேவி போன்ற மற்ற ஆலைகளுக்கெல்லாம்....

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் ஆலை உண்டு. அது எப்பகி என்பது பின்னாலே சொல்லப்படும். ஒரு அறிவிப்பு. கும்மிடிப்பூண்டி, திருப்போரூர் ஆகிய இரண்டு பகுதிகளைப் பொறுத்தவரையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க ஏற்பாடாகி இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. டி. என். முருகானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே......

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பின்னால் இருக்கின்ற ஒரு உறுப்பினர் எழுந்து நின்றுகொண்டிருக்கிறார். அவையின் மரபுப்படி ஒருவர் பேசும்போது மற்றவர்கள் அமர்ந்து பின்னால் பேசுவதுதான் வழக்கம்....



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் விளக்கம் கேட்டதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு தரப்படும. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது அமரவேண்டும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய உரையிலே சில ஆலைகளுக்கு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன; சிலவற்றிற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன, சிலவற்றிற்கு உப ஆலைகளாக அமைக்கலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது என்று 3 பிரிவுகளாக இங்கே சொன்னார்கள். அப்படி அறிவிக்கப்பட்டவைகளில், சேரன் மாதேவி உள்ளிட்ட நான் முன்பு சொன்ன 7 ஆலைகளுக்கு அனுமதி அளிக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா அல்லது அனுமதிக்காக பரிந்துரை செய்திருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த மட்டில் நாம் இங்கிருந்து சிபாரிசுதான் செய்கிறோம். அனுமதி பூராவும் மைய அரசிடத்திலேயிருந்து தான் பெறவேண்டும் மத்திய அரசு இன்னும் சர்க்கரைக்கான கொள்கையை வகுக்கவில்லை. வகுத்த பிறகுதான் வரும். அதுவரையில் நாம் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும். அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்குள் 3 அமைச்சர்கள் மாறிவிட்டார்கள். இப்போது புதுமுகமாக ஒரு அமைச்சர் வந்திருக்கிறார். அவர் நமக்கு நல்லதுதான் செய்வார் என்ற நம்பிக்கையோடு நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருடம் அமைச்சர் அவர்கள் தொழில் துறை மானியத்திலே பதில் சொல்லும்போது தொழில் துறையில் தமிழகம் அகில இந்திய ரீதியிலே 4-வது இடத்திலே இருப்பதாக கூறினார்கள். இன்று அவர்கள் தமிழகம் அகில இந்திய ரீதியிலே 7-வது இடத்திலே இருப்பதாக பதில் சொல்லியிருக்கிறார்கள்........

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மத்திய சர்க்கார் சொல்லியதாக சொல்லுகிறீர்களா ? நான் சொல்லியதாக சொல்லுகிறீர்களா ? ஏனென்றால் உறுப்பினர் தயவுசெய்து தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நான் அதற்கெல்லாம் பதில் சொல்லி முடித்துவிட்டேன். நான் சொன்னது 4-வது இடம் என்றுதான். வேண்டுமானால் குறிப்பை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

[1986 ஏப்ரல் 23

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 1980 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின் தலைவராக இருக்கும்போது, நம்முடைய அமைச்சரவையின் சார்பாக மதுரை மாவட்டத்திலே ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ் ஏற்படுத்தப் போவதாக சொல்லப்பட்டது. குறிப்பிலேயும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதை இப்போது எங்கோ கொண்டு போய் விட்டதாக தெரிகிறதே. அந்த இண்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ்ஸை அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டிலேயே கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புவதோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் சொன்னது போல பழனி, ஒட்டன்சத்திரம் போன்ற பகுதிகளில் தொழில் கூடம் ஆரம்பிப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொழில்முனைவர்களையும் அழைத்து வைத்து ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டு அதன் விளைவாக கிட்டத்தட்ட 200, 300 பேர்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்களை செய்ய லைசன்சுகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அங்கே தொழில் செய்வதற்கு இடம் இல்லை, எங்களுக்கு ஒரு தொழில் பேட்டை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்ருக்கிறார்கள். அவர்களுக்கு பயன்படும் வகையில் ஒரு தொழில் பேட்டையை அங்கேயும் ஆரம்பித்துத்தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே நான் பொறுப்பு ஏற்ற உடனேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் மற்றும் சம்பந்தப்பட்டவர் எல்லோரையும் கூட்டி ஒரு கருத்தரங்கு நடத்தினேன். அதிலே சிறு தொழில் முன்னவர்கள்தான் வந்திருந்தார்கள். நடுத்தர தொழில்துவங்க கேட்டு யாரும் வரவில்லை. சிறு தொழில்களைப்பற்றி, ஊரக தொழில் அமைச்சர் மானியம் கொண்டு வரும்போது அதற்கு பதில் சொல்லுவார்கள்.

**திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் கரும்பினுடைய விலை சம்பந்தமாக கேட்க விரும்புகிறேன். நாளைக்கு 2 ஆயிரம் பேர்களுக்கு மேல் கரும்பு விவசாயிகள் தமிழகத்திலே கூடி உண்ணாவிரதம் இருப்பதாக முடிவு செய்திருக்கிறோம். நமது தொழில் அமைச்சர் அவர்களையும், நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், சந்தித்து நாங்கள் கரும்பு விலை சம்பந்தமாக கேட்டோம். அப்போது சென்ற ஆண்டில் விதிக்கப்பட்ட அதே விலையைக் கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் சொன்னார்கள். இப்போது மத்திய அரசிடமிருந்து



1986 ஏப்ரல் 23] [திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர்]

ஒரு டன் ஒன்றுக்கு 25 ரூபாய் அதிகமாக லெவி சர்க்கரைக்கும் 10 சதவிகிதம் அதிகமாக பெற்றுக் கொள்ளும்படி ஆலைகளுக்கும் உத்தரவிட்டிருப்பதனால் ஒரு கிலோ சர்க்கரையில் 40 பைசா அதிகமாக வைத்திருக்கிறார்கள். இவ்வளவு அதிகமான அளவில் ஆலை முதலாளிகளுக்கு அனுகூலமாக அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் விவசாயிகளுக்கு போன வருஷம் நிர்ணயித்த விலையையே கொடுப்பது நியாயம் இல்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியத்திலே விளக்கமாக பேசுவது போல் மறுபடியும் பேசக்கூடாது. கடைசியில் கேட்கும் போது ஏதாவது விளக்கம் பெற விரும்பினால்தான் கேட்கலாம்....

**திரு. பெ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் துறை அமைச்சருடைய பதில் ஆனது திருப்தி தரவில்லை. சென்ற 18 ஆம் தேதி விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நாளைக்கும் உண்ணாவிரதம் இருக்கப்போவதையும் தமிழக அரசு பரிசீலித்து முடிவு செய்து கரும்பு விவசாயிகளுக்கு......

(பிற்பகல் 2—30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே,** நாளைக்கு நடத்துகிற கரும்பு விவசாயிகள் போராட்டம் காங்கிரஸ் கட்சியின் போராட்டமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) ஏனென்றால் காங்கிரஸ்காரர்கள் மட்டும் அதைக் கேட்கிறார்கள். அது எந்தக் கட்சிப் போராட்டம் என்பதைச் சொல்லிவிட்டால் பரவாயில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்திருந்தபோது அங்கே பொதுமக்களிடமும் பத்திரிகை நிருபர்களிடமும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்படி பேசுகிறபோது ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு சர்க்கரை ஆலை உண்டு, உண்டு, உண்டு என்று மூன்று முறை சொன்னார்கள். இப்போது 30 சர்க்கரை ஆலைகளுக்கு சிபார்சு செய்து அனுப்பியிருக்கிற காரணத்தால் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அதில் உண்டா என்று அன்போடு அறிய விரும்புகிறேன்.

**திரு. சே. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாக்னசைட் தொழிலாளர்களுடைய கிராச்சுட்டி பிரச்னை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முயற்சியெடுத்து ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. 54 லட்சம் ரூபாய் ஆறு மாதகாலத்தில் திரு. மேத்தா

அவர்கள் செலுத்த வேண்டுமென்று சொல்லப் பட்டது. ஆறு மாதகாலம் ஒப்பந்தம் முடிந்து மேலும் ஆறுமாத காலம் ஆகி விட்டது. இப்போது தமிழ்நாடு ....

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே; தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் மேத்தா என்ற தனி நபரிடத்திலிருந்து பெற்று தேசியமயமாக்கப்பட்ட நிறுவனம். அவர்களிடத்திலிருந்து 24 லட்சமோ, 27 லட்சமோ வாங்கியிருக்கிறோம். மீதியை அங்கேயிருக்கிற கற்களை எடுத்து விற்று பணத்தைக் கட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான முயற்சியை அந்த நிறுவனத்தின் நிர்வாகத் தலைவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : தலைவர் அவர்களே, கனிமச் செல்வத்தை வெட்டியெடுக்கிற முயற்சியை துரிதப் படுத்தி மேலும் அரசின் விமானத்தை அதிகரிக்க அரசு எண்ணியிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பற்றி ஒரு தனி வாரியம், ஜெம் கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதற்கு எண்ணம் அரசிடம் இக்கிறதா? இப்படி வெட்டியெடுக்கிற செமி பிரிஷஸ் ஸ்டோன்ஸ்ஸிற்கு நம்முடைய மாநிலத்திலே 8 சதவீதம் விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. குஜராத்திலே அதற்கு வரி அறவே கிடையாது. மகாராஷ்டிரா மாநிலத்தில் 3 சதவீதம் வரி விதிக்கிறார்கள். ஆகவே அந்த வரியை நமது மாநிலத்தில் குறைத்து அந்தத் துறையில் ஆதரவுத் தரக்கூடிய எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புவதோடு, தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி செய்கிற நிறுவனங்களில் அரசு சார்பாக நியமிக்கக் கூடிய உறுப்பினர்களுடைய காலம் முடிந்து பல பதவிகள் காலியாக பல மாதங்களாக இருக்கிற நிலையை மாற்றி, துரிதமாக அந்த இடங்களையெல்லாம் நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஜெம் கட்டிங் தொழிற்சாலை பொறுத்தவரையில் குஜராத்தில் அது நல்லபடியாக இயங்கி வகிறது. அங்கேயிருக்கிற திட்டத்தை நாம் கேட்டிக்கிறோம். அதோடு தற்போது நான்-ரெசிடெண்ட் இந்தியன்ஸ் என்று சொல்லப்படுகிற வெளி நாடுகளில் வசிக்கிற இந்தியர்களில் சிலர் அப்படிப்பட்ட தொழிற்சாலைக்கான நுட்ப அறிவை இங்கே கொண்டு வர முயற்சி எடுத்துக் கொண்டிக் கிறார்கள். அதிலே இந்த அரசு கவனத்தை செலுத்திக் கொண்டிருகிறது. விற்பனை வரியைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பலவற்றிற்கு வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதலை



மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். ஆகவே இந்தத் தொழில் இங்கே வந்த பிறகு அதுபற்றி கவனத்தைச் செலுத் தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 24—தொழில்கள்.

திரு. பொ. உத்திராபதி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்று கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றது.

திருவாளர்கள் எஸ். ரெத்தினராஜ், பி.கே. எம். முத்துராமலிங்கம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 3,43,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற் றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 51— தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,65,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் சோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24—4—1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

122. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொழில்கள்) 1986-87 (தமிழ்).

123. 1986-87 ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

124. 1986-87-ஆம் ஆண்டில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்),



## இணைப்பு.

(47ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

### தொழில் கொள்கையும் திட்டங்களும்.

1. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் வளர்ச்சிக்கு பெரும் பங்குண்டு என்பதை நன்குணர்ந்த தமிழக அரசு இம்மாநிலத்தில் தொழில் வளம் பெருக அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து புதிய தொழில்கள் மேலும்அமைந்து செழித்தோங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

2. கிராமப்புறப் பொருளாதாரம் வளர சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமும் உயர்வும் அளிக்கப்படவேண்டும் என்பதில் அக்கரை கொண்டுள்ள இவ்வரசு பெரிய தொழில்கள் மேலும் உருவாக்கப்படவும் அதன் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெருக்கி வறுமையை வென்றிடவும் பல்வேறு திட்டங்களை வகுத்து திறம்பட செயல்படுத்தி வருகின்றது.

3. தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்தும் சீரிய நோக்குடன் கீழ்க்கண்ட அரசு சார்பு நிறுவனங்களை இவ்வரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு அரசு தொழில் துறையின் நேரடிப் பார்வையில் இந்நிறுவனங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனைத்து வகைத் தொழிற்சாலைகளும் பெருகி வளமுற பாராட்டத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன.

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO)
(2) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM)
(3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)
(4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)
(5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம் (TNPL)
(6) தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN)
(7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (TANMAG)
(8) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (TASCO)

4. இம்மாநிலத்தில் புதிய தொழில்களை அமைக்க முன்வருவோர்க்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தங்கு தடையின்றி இவ்வரசு செய்து வருகிறது. புதிய விண்ணப்பங்களை பரிந்துரை செய்து, இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்துபெறப்பட்டபின் அதைதொழில் உரிமங்களாக மாற்ற உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1977முதல் 1986 மார்ச் மாதம் வரை 819 விண்ணப்பங்களை புதிய தொழில்கள் துவங்குவதற்காக பரிந்துரை செய்து இவ்வரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்

றுள் 468 தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசால் அனுமதியளிக்கப்பட்டும் 255 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன. 1985-ம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோருக்கு 97 இசைவுக் கடிதங்களும், 155 தொழில் உரிம மாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1985-ம் ஆண்டில் 35 எஸ்.ஐ.ஏ. பதிவுகளும் 163 டி.ஜி.டி.டி. ( D.G.T.D. ) பதிவுகளும் செய்யப்பட்டுள்ள. புதிய தொழில்களுக்கு அனுமதியளிக்கும் அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடம் உள்ளது. உரிமங்கள் வழங்குவதற்கு முன் மாநில அரசின் பரிந்துரையைப் பெறுவதில் ஒரு நிலையான நடைமுறையை மத்திய அரசு பின்பற்றுவதில்லை என்ற சங்கடமான சூழ்நிலையை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

5. ''தொழிற்சாலை இல்லாத மாவட்டம்'' என்ற திட்டத்தின் கீழ் 25 சதவித மூலதன உதவித் தொகையை பெற உத்திர பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் முதலிய வட மாநிலங்களிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதியான புதுச்சேரியிலும் அண்டை மாநிலமான கர்நாடகத்திலும் தகுதிவாய்ந்த குறிப்பிட்ட சில பகுதிகள் உள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் தொழிற்சாலை இல்லாத மாவட்டம் ஏதும் இல்லாததால் அந்தஅடிப்படையில் மத்திய அரசு வழங்கி வரும் சிறப்புச் சலுகைகளுக்குச் சமமான நன்மைகளை தமிழகம் பெற முடியாத நிலை உள்ளது. ''தொழிற்சாலை இல்லாத மாவட்டத்தில்'' தொழில் முற்றாதிக்கம் வரையறுத்த தொழில் நடைமுறைகள் சட்ட(M.R.T.P. Act) வரம்பிற்குள் வருகின்ற தற்போதைய தொழில் நிறுவனங்களையும் விரிவுபடுத்தும்கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வருவதால் பெருந் தொழில்கள் வளர்ச்சியில் தமிழ்நாடு எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் அடைய முடியவில்லை. இதில் மாற்றம் வேண்டுமென கூறி வருகிறோம். மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

6. பெரிய நடுத்தரத் தொழில்களை ஏற்படுத்த ஒரே மைய அமைப்புக் கோட்பாடு : முதுநிலை அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட ''உயரதிகாரக் குழு'' தமிழ்நாட்டிலுள்ள பெரிய, நடுத்தர தொழில்களுக்கான ஒரே மைய அமைப்பாகச் (Single window Agency) செயல்படுகிறது. தொழில் முனைவோருக்கு இசைவு வழங்குவதையும். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதையும் விரைவுபடுத்துவதற்காக இக்குழு மாதமொரு முறை கூடுவது மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

7. மூலதன உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ஈடுசெய்து தொகை பெறுவதில் முன்னணியில் உள்ள சில மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.



8. இவ்வரசு எடுத்த தீவிர நடவடிக்கை மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாக 1977 முதல் 1986 வரை தமிழ்நாட்டில் ரூ. 1,600 கோடிக்கு மேலாக முதலீடு செய்து புதிய தொழிற்சாலைகள்/விரிவாக்கப் பணிகள் மைய அரசைச் சார்ந்த நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளியில் கனரக உலோக துளையிடும் திட்டம் ஆவடியில் கனரக வண்டிகள் தொழிற்சாலை விரிவுப் பிரிவு போன்ற இம்மாநிலத்தில் உருவாகி வருகிற மத்திய அரசுத் திட்டங்களுக்கு நிலம், நீர் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தையும் அரசு வழங்கியுள்ளது. மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தையும், சென்னை உர நிறுவனத்தையும் விரிவுபடுத்த இயன்ற விரைவில் அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது. மாநிலத்தில் தொடங்கப்படும் மத்திய அரசின் ஏனைய திட்டங்கள் வருமாறு :— சேலம் உருக்காலை 55.78 கோடி ரூபாய் செலவில் சென்ஸிமெர் ஆலை (Sensimer Mill) ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் 12.62 கோடி ரூபாய் செலவில் மின் தட்டச்சுப் பொறிகளையும், மின் அணுவியல் தட்டச்சுப் பொறிகளையும் தயாரிக்க முயற்சித்து வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் விரிவுத் திட்டங்களைப் பொறுத்த வரையில் இரண்டாம் சுரங்கம் வெட்டியெடுக்கும் நிலக்கரி 4.7 மில்லியன் டன்னிலிருந்து 10.5 மில்லியன் டன்னாகவும் இரண்டாம் அனல் மின்நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம் 630 மெகவாட்டிலிருந்து 1,470 மெகவாட்டாகவும் அதிகரிக்கும். திட்டங்கள் 1983 ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்படுகின்றன. பாரத மின்னணுவியல் நிறுவனம், 30 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு நந்தம்பாக்கத்தில் மின்னணுவியல் திட்டமொன்றை அமைக்க உத்தேசித்துள்ளது. இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனம் 2 கோடி ரூபாய் செலவில் ''காஸ்டிங்'' தொழிற்சாலையையும், 1.97 கோடி ரூபாய் செலவில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்தையும் 10 கோடி ரூபாய் செலவில் காந்த நாடா தயாரிக்கும் தொழிற்சாலையையும் நிறுவி வருகிறது. மேலும் 170 கோடி ரூபாய் செலவில் எக்ஸ்ரே கதிர் பாலியஸ்ட்டர் பிலிம் தயாரிக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது இத்திட்டத்திற்காக அமெரிக்காவிலுள்ள டியுபான்ட் (Du Pont) என்ற நிறுவனத்துடன் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் 27–3–1986 அன்று ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. 200 கோடி ரூபாய் செலவில் கலர் சினிமா பிலிம் தயாரிக்கும் திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

9. சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டலம்:

மாநில அரசு சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டலத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதில் இயன்ற உதவிகள் அனைத்தையும் மாநில அரசு செய்து வருகிறது. இதற்காக தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகம் மாதிரி முகவரமைப்பாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட உயர் அதிகாரக் குழு பல்வேறு பணி முன்னேற்றங்களின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. முதற்கட்டமாக 228.80 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக மேலும் 328.60 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டலம் செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும் மேலும் தொழிலதிபர்கள் இத்திட்டத்தில் பங்கு பெற விரும்புகின்றனர். இதுவரை 160 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. இவற்றில் 80 விண்ணப்பங்களுக்கு சென்னை ஏற்றுமதி பரிசீலனை மண்டல வாரியம் இசைவளித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட 80 விண்ணப்பதாரர்களில் 6 பேர் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களாவர்.

10. தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்ற அரசு நிறுவனங்களின் செயல் திட்டங்கள் கீழே விவரிக்கப்படுகின்றன.

10(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ):

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொதுத்துறையில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் பலவற்றைத் தொடங்கி உள்ளது. மேலும் இக்கழகம் , தனியார் தொழில் முனைவோரின் ஒத்துழைப்போடு கூட்டுத் துறையில் பல்வேறு தொழிற்பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. இம்மாநிலத்தில் இதுவரை 45 தொழிற்சாலைகள் ''டிட்கோ'' ஈடுபாட்டுடன் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 10 தொழிற்சாலைகள் பொதுத்துறையிலும், 35 தொழிற்சாலைகள் கூட்டுத் துறையிலும் இயங்குகின்றன. பொதுத்துறையில் இயங்கும் 10 தொழிற்சாலைகளில் ரூ. 93.55 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. 5,250 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். கூட்டுத் துறையில் இயங்கும் 35 தொழிற்சாலைகளில் ரூ. 515.35 கோடி முதலீடு செய்யப்பட்டு 14,600 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளில் விரைவான முன்னேற்றம் ஏற்பட டிட்கோ நிறுவனம் தொழிற்சாலைகளை அப்பகுதிகளில் நிறுவ அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.



'டிட்கோ' பணியின் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ள ரூ. 20.55 கோடி முதலீட்டிலான டிடோனேடர்ஸ் மற்றும் டிடோனேடிங் ப்யூசஸ் திட்டம் (Detonators and Detonating Fuses Project) நடப்பு நிதியாண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் துவங்க உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 500 நபர்களுக்கு மேல் வேலைவாய்ப்பு பெறுவர். இதே போல் ரூ. 5.85 கோடி முதலீட்டில் 110 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 'மக்னீசியம் மெட்டல்' திட்டமும் (Magnesium Metal Project) இவ்வாண்டு உற்பத்தியைத் துவங்கும்.

தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து 'டிட்கோ' அமைத்துள்ள பென்டாசா கெமிக்கல்ஸ் லிமிடெட் (Pentasa Chemical Limited), வட ஆற்காடு லெதர்ஸ் லிமிடெட் (North Arcot Leathers Limited) யுனி ஆர்கானிக் இண்டஸ்டரிஸ் லிமிடெட் (Uni Organic Industries Limited) மற்றும் டைட்டான் வாட்சஸ் லிமிடெட் (Tuton Watches Limited) முதலிய நிறுவனங்கள் நடப்பு நிதியாண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் துவங்க உள்ளது. மொத்தம் 1,720 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் மேற்கண்ட தொழிற்சாலைகள் ரூ. 61.61 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் ஆண்டுக்கு 12,000 டன்கள் பிரோபைலின் ஆக்ஸைடு (Propylene Oxide) தயாரிக்க வசதி படைத்த புதிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க மத்திய அரசு டிட்கோவிற்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தை சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் கூட்டுத் துறையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

மேலும் கீழ்க்கண்ட இரு தொழில் திட்டங்கள் டிட்கோவின் கூட்டுத் துறையின் கீழ் நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) அமோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் ஆசிட் தயாரிப்புத் திட்டம்.

(2) ஜெல்லி பீல்டு டெலிபோன் கேபிள்ஸ் தயாரிப்பு திட்டம். முதல் திட்டம் ரூ. 2,257 இலட்சம் முதலீட்டிலும், இரண்டாவது திட்டம் ரூ. 1,735 இலட்சம் முதலீட்டிலும் தீட்டப்பட்டுள்ளது. இந்த இரு புதிய திட்டங்களின் மூலம் முறையே 350 மற்றும் 270 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

இவையல்லாமல் ரூ. 790 கோடி திட்ட மதிப்பீட்டில் 5,150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய 16 புதிய தொழிற் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்கள் குறிக்கோள்களை வகுத்தல், சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்தல், தொழில் உரிமங்கள் பெறுதல், டி.ஜி.டி.டி. (D.G.T.D.) யுடன் பதிவு செய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

10. (2) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் :

இது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்தின் துணை நிறுவனமாகச் செயல்படுகிறது. இந்நிறுவனம் சிமெண்ட் தயாரிப்பதுடன், ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமிட்டிக் குழாய்களைத் தயாரிப்பதற்கான தொழில் பிரிவுகளையும் அமைத்துள்ளது. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை 4 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்துவதற்கு இசைவுக் கடிதம் பெறப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் பாளையம் என்னுமிடத்தில் புதிதாகச் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு அனுப்பப்பட்ட இசைவுக் கடிதத்திற்கு மத்திய அரசு இன்றும் இசைவளிக்கவில்லை.

10. (3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் :

தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி, தொழில் நுட்ப உதவி, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளை தொழிற்சாலைகளுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்று செயலாற்றி வருகிறது. சிப்காட் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பொதுவாக நல்ல வளர்ச்சியினையும் குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் பாராட்டத் தகுந்த முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் புதிதாக தொழில் துவங்க உரிமம் பெறுவதில் ஆரம்ப காலத்தில் ஏற்படும் வீணான காலதாமதத்தைத் தவிர்த்து குறுகிய காலத்தில் அனைத்து நடைமுறைகளையும் முடித்து தொழிற்சாலைகளை இயங்கச் செய்யும் வகையில் சிப்காட் நிறுவனமே வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்வதற்கான தொழில் அனுமதி (Industrial licence) யைப் பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படும். அதே சமயத்தில், அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் முதலீடு செய்வதற்கான ஒரு திட்டத்தினை தயாரித்து, அதன்படி அவர்கள் சிப்காட்டில் முதலீடு செய்யலாம். சிப்காட்டில் முதலீடு செய்யப்பட்ட இந்த மூலதனம், சிப்காட் உதவி பெற்று செயல்படும் கம்பெனியில் சம பங்குகளாக மாற்றப்படும். இதனால் வெளிநாடுகளில் தங்கி இருக்கும்போதே, அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வாய்ப்பு கிடைப்பதுடன், பின்னர் தாயகம் திரும்பியவுடன் மேலும் அபிவிருத்தி செய்திடவும் இயலும்.



மேலும் அயல்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 10 அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ரூ. 666.10 இலட்சம் மதிப்புள்ள தொழில்களை துவங்கியுள்ளனர். இது தவிர, 9 தொழில் பிரிவுகளை அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ரூ. 1,169 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

சிப்காட், மத்திய முதலீட்டு மானியம், மாநில மானியம் மற்றும் மாநில சிறப்பு மானியம் ஆகியவற்றை வினியோகம் செய்வதில் மாநில அரசின் பிரதிநிதியாக பணியாற்றி வருகிறது. 1982—83-ல் வழங்கப்பட்ட தவணைக் கடன் ரூ. 1,567.58 லட்சம். இது 1985—86-ல் ரூ. 3,184.50 லட்சமாக உயர்ந்துள்ளது. இதுபோலவே வழங்கப்பட்ட ஆதார மூலதன மானியம் ரூ. 29.70 லட்சமாக இருந்தது. 1985—86-ல் ரூ. 113.30 லட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் 1982—83-ல் ரூ. 263.30 வழங்கப்பட்டது. 1985—86-ல் ரூ. 401.26 வரை வழங்கப்பட்டுள்ளது. 1982—83-ல் ரூ. 317.25 லட்சமாக இருந்த மைய அரசு மானியம் 1985—86-ல் ரூ. 398.38 லட்சமாக உயர்ந்துள்ளது. 1982—83-ல் ரூ. 15.16 லட்சமாக இருந்த மாநில மானியம், 1985—86-ல் ரூ. 173.54 லட்சமாக கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

புதிய தொழில்களுக்கு தற்போது துண்டு துண்டாக பல பகுதிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு ஊக்க சலுகைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் நிறுவப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்கு மட்டும் ஒட்டு மொத்தமான சலுகைகளை ஒருங்கிணைந்து வழங்கப்படலாம் என்ற புதிய கொள்கை இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது.

10. (4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இக் கழகம் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியவைகளுக்காக அதிக பட்சம் ரூ. 60 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இக் கழகத்திற்கு கிடைத்த நிகர இலாபம் (வரி ஒதுக்கீட்டிற்குப் பின்) ரூபாய் 908.47 இலட்சமாகும். 1985—86 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட குறியீடு ரூ. 170 கோடியாகும். ஆனால், சாதனை ரூ. 198,50 கோடியாகும். 1986—87 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள குறியீடு ரூ. 225 கோடியாகும்.

இந்நிறுவனத்தால் 1978 முதல் 1986 மார்ச் வரை வேலை வாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை 2,43,443 ஆகும். இக் கழகம் சுலபக் கடன் திட்டம், போக்குவரத்து வாகனங்கள், ஜெனரேட்டர் வாங்குவதற்கு நிதியுதவி போன்ற சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துகிறது. மத்திய மற்றும் மாநில அரசு மாநிலத்தில் உள்ள சில வட்டங்களை 15 சதவீதம் / 10 சதவீதம் முதலீட்டு மானியத்திற்கு தகுதியுள்ளதாக அறிவித்துள்ள இத் திட்டத்தின் கீழ் இக் கழகம் 1–4–85 முதல் 25–3–86 வரையில் ரூ. 475.79 இலட்சத்தை மானியமாக தொழிற் பிரிவுகளுக்கு வழங்கியுள்ளது. 1949 முதல் 1978 வரை வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 74.51 கோடி மட்டுமே. ஆனால் 1978 முதல் 1986 (மார்ச் மாதம்) வரை வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 269.75 கோடியாகும். பதிவு பெற்ற மருத்துவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்ட அதிகபட்ச கடன் தொகையான ரூ. 2 இலட்சம், ரூ. 15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

10. (5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம் :

இந்நிறுவனம் கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித் தாள், அச்சுத் தாள், எழுதும் தாள் ஆகியவற்றை தயாரிக்கும். இது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40 கோடி அந்நிய செலவாணியை மிச்சப்படுத்தும். இந்நிறுவனம் 1–10–1985-லிருந்து வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

10. (6) தமிழ்நாடு கனிம நிறுவனம் :—

கிராபைட்டைப் பயன்படுத்தி சிவகங்கையில் அமைக்கவிருக்கும் தொழிற்சாலையின் செலவு ரூ. 340 இலட்சமாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. பங்கு மூலதனத்தில் அரசின் பங்கு ரூ. 55 இலட்சமாகும். ரூ. 3.85 கோடி செலவிலான கருங்கற்களை வெட்டி மெருகிடும் தொழிற்சாலை, வணிக உற்பத்தியைத் தொடங்க தயாராக உள்ளது.

10. (7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் :

மாக்னசைட்டைப் பயன்படுத்தி ரூ. 80 கோடி மொத்தச் செலவில் தொழிற்சாலை ஒன்றை இந்நிறுவனம் அமைக்கும். முதற் கட்டமாக மாக்னசைட் தாதுப் பொருளைக் கரிந்த மாக்னசைட்டாக மாற்றுவதற்கு ரூ. 4.95 கோடி செலவில் சுழல் சூளை திட்டம் நிறைவேற்றப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்றுள்ளது. விரைவில் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டாம் கட்டமாக வெட்டி எடுக்கப்பட்ட மாக்னசைட் தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு இரசாயன முறையில் சுத்திகரிக்கும்



தொழிற்சாலை ரூ. 58 கோடி செலவில் அமைக்கப்படும். இத் திட்டத்தின் மூன்றாம் கட்ட பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்காக உயர்ந்த ரக வெப்பத் தாங்கிக் கற்களைத் தயாரிக்க ரூ. 52 கோடி மதிப்பீட்டு செலவில் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் கருதப்பட்டுள்ளது. வெப்பந் தாங்கி கற்கள் தயாரிப்புத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரெப்ராக்டரிஸ் கன்சல்டிங் அண்டு இன்ஜினியரிங் நிறுவனத்தின் தொழில் நுட்ப திறனை பெற தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

11. சர்க்கரைத் தொழில் :

சர்க்கரை உற்பத்தித் தொழில் கிராமப்புற மக்களுக்குப் பெருமளவில் நேரடியாகவும் பிற வகையிலும் வேலை வாய்ப்பு அளிக்கிறது. இது, விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் வேளாண்மை சார்ந்த தொழிலாகும். சர்க்கரை ஓர் இன்றியமையாதப் பொருளாகும். சர்க்கரை ஆலைகள், சர்க்கரையை உற்பத்தி செய்து வழங்குவதோடு ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மிக முக்கிய மூலப் பொருளான கருப்பஞ்சாறுக் கசண்டையும் வழங்குகின்றன. இது சர்க்கரையின் மற்றொரு முக்கிய துணைப் பொருளாகப் பயன்படுகிறது. பொதுத் துறையில் புதிய சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காகத் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 11 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 10 தனியார் துறை சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் உள்ளன. மயிலாடுதுறை கூட்டுறவு சர்க்கரை ஆலை இவ்வாண்டு இறுதியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 30 சர்க்கரை ஆலைகளை தனியார், பொது, கூட்டுறவு ஆகிய துறைகளில் ஆரம்பிப்பதற்கு வாய்ப்புள்ளதாக தமிழ்நாடு அரசு, மத்திய அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. மாநில அரசு, விண்ணப்பங்களை பரிசீலித்து வகைப்படுத்தி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. சர்க்கரைத் தொழிலின் வருங்கால நிலை தொடர்பாக கொள்கை முடிவை எடுத்த பின்னர் மாநில அரசுக்கு ஆதரவு அளிப்பதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது. சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களைப் பயன்படுத்தி கரும்புச் சக்கையை எரிபொருளாகக் கொண்டு அதிக அளவில் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் செயல்படுத்தப்படும்.

12. (1) தமிழ்நாடு மின்னணுக் கழகம் (எல்காட்) :

(1) மின்னணு மற்றும் மின்னியல் தொழிற்சாலைகள் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனித ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட இத் தொழிலுக்கு, மின்சாரம், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் மிகவும் குறைந்த அளவிலேயே தேவைப்படுவதால், தமிழகத்திற்கு இத் தொழில் மிகவும் உகந்தது. தமிழகத்தில் பெருந் தொழில்கள் பிரிவுகளும் இத் தொழிலை மேம்படுத்த தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

12. (2) மாநில அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணு கழகம், இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தினை தனது தலையாய நோக்கமாகக் கொண்டு உள்ளது. இக் குறிக்கோளினை அடைவதற்காக, அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுடன், உள்நாட்டில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் வசதி செய்து தருகிறது. தற்போது இந்நிறுவனத்தின் நான்கு பொதுத் துறைத் திட்டங்களும், ஆறு கூட்டுறவுத் துறை திட்டங்களும் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இது தவிர வேறு பல திட்டங்களும் துவங்குவதற்குரிய பல்வேறு நிலைகளில் உள்ளன. எல்காட் அவற்றை நடத்தும் நிறுவனம் என்ற நிலையில் அவற்றின் இயக்கத்தை முறைப்படுத்துகிறது.

12. (3) எல்காட் வருகிற ஐந்தாண்டுகளில் இத்தொழிலை இம்மாநிலத்தில் மேம்படுத்துவதற்கு ரூ. 200 கோடி செலவில் திட்டத்தைத் தயாரித்துள்ளது. 1990ம் ஆண்டில் மின்னணுத் தொழில்களின் உற்பத்தி இம்மாநிலத்தில் சுமார் ரூ. 1,000 கோடி அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுள் முதன்மையான வளர்ச்சியைப் பெறும் பிரிவுகள் கீழ் வருவன :—

தகவல் தொடர்ப்புத் திட்டங்கள்;
தொழில் முறை மின்னணுக் கணிப் பொறிகள்.;
நுகர்வோர் மின்னணுக் கருவிகள்;
மின்னணு உதிரிப் பாகங்கள் உற்பத்தி.

இத்திட்டங்கள் கூட்டுத் துறையில் பெரும்பாலும் தனிப்பட்ட தொழிலதிபர்கள், அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள். மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் வாயிலாகவே ஏற்படுத்தப் படுகின்றன. எல்காட் தனிப்பட்ட தொழிலதிபர்களை, குறிப்பாக தொழில் வல்லுனர்களை அழைத்தது, தன்னுடைய கூட்டு முயற்சித் திட்டங்களின் மூலம் தொழில் துவங்குவதற்கு ஊக்குவிக்கிறது. இத்தகைய கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு



எல்காட்டின் மூலதனம் 26 சதவிகிதம், கூட்டு முயற்சியாளரின் முதலீடு 25 சதவிகிதம், மீதமுள்ள 49 சதவிகிதம் பங்குத் தொகை பொதுமக்களிடமிருந்து பெறப்படுகிறது. இந்த ஏற்பாடு மாநிலத்தின் நிர்வாக தொழில் நுட்பத் திறன், நிதிவசதி போன்ற வளங்களை இத்தொழிலின் மேம்பாட்டிற்கு எல்காட் முழு அளவில் பயன்படுத்த உதவுகிறது. எல்காட்டின் கூட்டு முயற்சித் திட்டத்தின் தலையான நோக்கம், தொழில்நுட்ப வல்லுநர்களை முறைப்படி கண்டறிந்து, அவர்களின் தொழில் துவக்கம் முயற்சிகளை ஊக்குவித்து, அவற்றிற்கு வடிவம் கொடுத்து எல்காட்டின் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமையைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் திட்டங்களை ஏற்படுத்த வழி நடத்திச் செல்வதேயாகும்.

12.(4) சிறு தொழில் பிரிவில் இத்துறையை மேம்படுத்த தொழிற்பேட்டைகளில் சோதனை மற்றும் வளர்ச்சி மையங்கள், தகவல் வங்கி மற்றும் தகவல் மையம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மின்னணுத் தொழிலில் 163 புதிய திட்டங்களுக்கு 1985–86-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திருவான்மியூரில் உள்ள மின்னணுத் தொழிற்பேட்டை இத்தொழிலில் வளர்ச்சியின் கருமை மையமாக உருவெடுத்து வருகிறது. மின்னணுத் தொழிலுக்குத் தேவையான சோதனை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. காக்களூரில் உள்ள மின்னணு சோதனை மையம் சிறு தொழிலுக்குத் தேவையான அனைத்து சோதனை வசதிகளையும் செய்து தரும் வண்ணம் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

12. (5) மின்னணுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் முனைவர்களுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களை அளிக்கும் பொருட்டு சென்னையில் ஒரு மூலப் பொருள் கிடங்கு ஒன்றை நிறுவுவதற்கும் சோதனை வசதிகளை செய்து தரும் பொருட்டு, கோயம்புத்தூரில் பொது சோதனை மையத்தை நிறுவுவதற்கும், திருச்சியில் தொழில் மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தை நிறுவுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலத்திலும், சென்னையை அடுத்த நந்தம்பாக்கத்திலும், மின்னணுத் தொழிலுக்கென்றே தனியாக ஒரு தொழிற்பேட்டையை நிறுவுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் இடம் :—

13. தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது என்பதையும் முன்னணியில் உள்ள முதல் நான்கு மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது என்பதையும் பெருமையுடன் இங்கே குறிப்பிடலாம்.

[1986 ஏப்ரல் 23

பம்பாயிலுள்ள இந்திய பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் (Centre for Monitoring Indian Economy) என்ற நிறுவனம் 1985 செப்டம்பர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி பொதுவாக தொழில் வளர்ச்சியை நிர்ணயிக்கும் கீழ்க் கண்ட ஐந்து அம்சங்களில் தமிழகம் முதல் நான்கு இடங்களில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்:—

1. புதிய தொழில்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கும் குறிப்பு: (Index Development of Infrastructure) இதில் தமிழகம் மூன்றாவது இடத்திலுள்ளது.

2. தொழிற்சாலைகளில் உற்பத்தி மதிப்பு (Per Capita Value added by Manufacture) இதில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.

3. 1960–61 முதல் 1980–81 வரையிலான காலத்தில் ஆலைகளில் சேர்க்கப்பட்ட மதிப்பீட்டை ஒப்பிடுதல்: (Comparision of value added in the factory sector during 1960–61 to 1980–81) இதில் தமிழகம் நான்காவது இடத்திலுள்ளது.

4. தொழில்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி பற்றிய ஒப்பீடு.
(No. of factories, employment and value of output in the factory sector.)

தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை தமிழ்நாடு நான்காவது இடத்திலும், தொழிலாளர்களின் எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

5. தொழிற்சாலைத் துறையில் மதிப்பு பெருக்கம் (தேசிய வருமான உற்பத்தி அடிப்படையில் ):—

இவ்வினத்தில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

அகில இந்திய நிதி நிறுவனங்களிலிருந்து உதவித் தொகை பெறும் இனத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது என்பதையும் பெருமையுடன் குறிப்பிடலாம்.

மேற்கண்ட விவரங்களிலிருந்து தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னிலையிலுள்ளது என்பது தெளிவாகும்.

க. இராசாராம்,
தொழிலமைச்சர்.



1986 ஏப்ரல் 23]

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ).

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பெருமை வாய்ந்த நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 60 கோடியாகும். இதில் ரூ. 59.72 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

2. நான்கு கிளை நிறுவனங்களைக் கொண்ட டிட்கோ இம்மாநிலத்தில் கூட்டுத் துறையில் தொழிற்சாலைகள் நிறுவுவதிலும், முக்கியமாக தனியார் தொழில் முனைவர்கள் தொழிற்சாலைகள் நிறுவ முன்வராத பின் தங்கிய பகுதிகளிலும் தொழிற் சாலைகள் நிறுவுவதிலும் தன் முழு கவனத்தையும் செலுத்துகிறது. கூட்டுத் துறை நிறுவனங்களில், டிட்கோ 26 சதவீத பங்கு மூலதனம், கூட்டுத் தொழில் முனைவர் 25 சதவீத பங்கு மூலதனம், எஞ்சிய 49 சதவீதத்தினை பொது மக்களிடம் இருந்து பெறுதல் என்ற முதலீட்டு முறை பின்பற்றப்படுகின்றது. சாதாரணமாக திட்டச் செலவில் 1/3 பங்கு மூலதனமாகவும் 2/3 பங்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகவும் பெறப்படுகிறது.

3. தனது 20 ஆண்டுகால பணியில் டிட்கோ பல வேறுபட்ட துறைகளில் முயற்சிகளை மேற் கொண்டதன் பயனாக பொதுத் துறையில் புதிய தொழிற் சாலைகளையும், தனியார் தொழில் முனைவர்களுடன் பல கூட்டுத் தொழில் நிறுவனங்களையும் நிறுவியுள்ளது. மேலும் சில நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கும் உதவி செய்துள்ளது.

4. டிட்கோ இது வரையில் பொதுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் 45 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. அதன் விவரம் பின் வருமாறு:—

| விவரம். | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பொதுத் துறை— | | | |
| (அ) உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். | 8 | 67.00 | 4,550 |
| (இ) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற் சாலைகள். | 2 | 26.55 | 750 |

| | | | |
|---|---|---|---|
| 2. கூட்டுத்துறை— | | | |
| (அ) உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். | 25 | 256.00 | 10,200 |
| (இ) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 10 | 349.35 | 4,400 |
| | 45 | 605.90 | 19,900 |

5. கூட்டுத் துறையில் நிறுவப்பட்டு வரும் 10 தொழிற்சாலைகளில் ரூ. 1.30 கோடி திட்டச் செலவினைக் கொண்ட திருவாளர்கள் பேப்லைன் லிமிடெட் (M/s. Fabline Ltd.) விரைவில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. 1986–87 ஆம் ஆண்டில் பின் வரும் தொழில் நிறுவனங்கள் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| விவரம். | மூலதனச் செலவு. (ரூபாய் கோடியில்.) | வேலை வாய்ப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பொதுத்துறை— | | |
| (i) மக்னீஷியம் மெட்டல் திட்டம் (Magnesium Metal Project) | 5.85 | 210 |
| (ii) டிடோனேடர்ஸ் மற்றும் டிடோனேடிங் ப்யூசஸ் திட்டம். (Detonators and Detonoting Fuses Project) | 20.55 | 900 |
| 2. கூட்டுத்துறை— | | |
| (i) பென்டேசியா கெமிகல்ஸ் லிமிடெட் (Pentasia Chemicals Limited) | 19.00 | 200 |
| (ii) நார்த் ஆற்காட் லெதர்ஸ் லிமிடெட் (North Arcot Leathers Limited) | 1.46 | 150 |
| (iii) யுனி ஆர்கானிக் இண்டஸ்டிரிஸ் லிமிடெட். (Uni-Organic Industries Limited) | 1.95 | 100 |
| (iv) டைடான் வாட்சஸ் லிமிடெட் (Titan Watches Limtited) | 39.20 | 1,270 |
| | 88.01 | 2,830 |



7. டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம்மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளிலே விரைவான முன்னேற்றம் ஏற்பட டிட்கோ நிறுவனம் தொழிற்சாலைகளை அப்பகுதிகளில் நிறுவ அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

8. ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகளின் மூலமாக ஏறத்தாழ 14,750 நபர்களுக்கு டிட்கோ இதுவரை வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது.

9. பிப்ரவரி 1986ல் மத்திய அரசு டிட்கோவிற்கு ஆண்டுக்கு 12,000 டன்கள் ப்ரோபிலின் ஆக்ஸைடு ( Propylene Oxide ) தயாரிப்பதற்காக இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத் திட்டத்தை சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் கூட்டுத் துறையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

10. இவையல்லாமல் ரூ. 775 கோடி திட்ட மதிப்பீடும் 5,150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய 15 புதிய தொழிற் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இத் திட்டங்கள் குறிக்கோள்களை வகுத்தல், சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்தல், தொழில் உரிமங்கள் பெறுதல், டி.ஜி.டி.டி. (D.G.T.D.)-யுடன் பதிவு செய்தல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

11. 1985 ஆம் ஆண்டில் டிட்கோ கூட்டுத் தொழில் முனைவர்களுடன் 8 கூட்டுத் துறை ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளது.

12. மேலும், கீழ்க்கண்ட இரு தொழில் திட்டங்கள் டிட்கோவின் கூட்டுத் துறையின் கீழ் நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) அமோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் ஆசிட் தயாரிப்புத் திட்டம்.

(2) ஜெல்லி நிரப்பு டெலிபோன் கேபிள் தயாரிப்பு திட்டம்: முதல் திட்டம் ரூ. 2,257 இலட்சம் முதலீட்டிலும், இரண்டாவது திட்டம் ரூ. 1,785 இலட்சம் முதலீட்டிலும் திட்டப்பட்டுள்ளது. இந்த இரு புதிய திட்டங்களின் மூலம் முறையே 850 மற்றும் 270 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

[1986 ஏப்ரல் 23

13. வரி செலுத்துவதற்கு முன் டிட்கோ ஈட்டிய லாபங்களின் விபரம் பின்வருமாறு :

| ஆண்டு. | இலாபம். (இலட்சத்தில்) |
|---|---|
| 1980—81 .. .. .. .. | 29.60 |
| 1981—82 .. .. .. .. | 159.80 |
| 1982—83 .. .. .. .. | 192.75 |
| 1983—84 .. .. .. .. | 163.03 |
| 1984—85 .. .. .. .. | 207.80 |

இதனால் 1979—80 வரையில் ஏற்பட்ட திரண்ட நட்டமான ரூ. 631.93 இலட்சம், 1984—85-ல் ரூ. 86.78 இலட்சங்களாக குறைந்துள்ளது. 31—3—1984 வரையில் ஏற்பட்ட திரண்ட நட்டமான ரூ. 86.78 இலட்சத்தை சரிக்கட்டிய பின்னர், 31—3—1985 வரை ரூ. 121.02 இலட்சம் திரண்ட இலாபத்தை டிட்கோ முதன் முறையாக ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளிலும், இந்த வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் டிட்கோ மேற்கொள்ளும்.

தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம் :

தொடக்கத்தில் டிட்கோவின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம் 3—4—1984 முதல் டிட்கோவின் ஒரு கிளை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூ. 798.91 இலட்சங்களாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 50,000 டன் பில்லட்ஸ் ( Billets ) மற்றும் மோல்டன் மெடல் ( Molten Metal ) தயாரித்தல் ஆகும். இது ஏறக்குறைய 635 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கியுள்ளது. 30—6—1985 நிலவரப்படி ரூ. 36.21 இலட்சம் இலாபத்தை ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் ரூ. 92 இலட்சம் செலவில் நவீனமாக்கல் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு ஸ்டீல்ஸ் லிமிடெட்—மீள் உருளை ஆலை (Rerolling Mill.)

3—4—1984 முதல் மீள் உருளை ஆலையும் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூ. 782.10 இலட்சமாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 25,000 டன்கள் ஆகும். இவ்வாலை 30—6—1985 வரையிலான காலத்திற்கு ரூ. 49.11 இலட்சம் நட்டம் அடைந்தது. இந்த ஆண்டில் இவ்வாலை இலாபம் ஈட்டும் என் எதிர்பார்க்கப்படுகிறது. இது 109 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கியுள்ளது.



1986 ஏப்ரல் 23]

தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட் லிமிடெட்.

இது டிட்கோவினுடைய ஒரு கிளை நிறுவனமாகும். ஆண்டொன்றுக்கு 3,300 மெ. டன்கள் சோடியம் ஹைட்ரோ சல்பைட் (Sodium Hydro Sulphite) மற்றும் 4,950 மெ. டன்கள் திரவ சல்பர் டை-ஆக்ஸைட் (Liquid Sulphur Dioxide) தயாரிப்பதற்கென நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலை காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 756 இலட்சமாகும். இது சுமார் 271 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது. இலாபத்தில் இயங்கிவரும் இந்நிறுவனம் 30—9—1985 வரை ரூ. 83.10 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

மக்னீஷியம் மெட்டல் திட்டம். (Magnesium Metal Project)

தமிழ்நாடு கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் மக்னீஷியம் மெட்டல் தயாரிக்கும் திட்டத்தை ரூ. 585 இலட்சம் திட்டச் செலவில் நிறுவி வருகிறது. காரைக்குடியிலுள்ள மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தினரின் (Central electro Chemical Resarch Institute) கண்டுபிடிப்பான தொழில் நுட்பத்துடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் என்னும் இடத்தில் நிறுவப்படுகிறது. இது சுமார் 110 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும்.

தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம்.

இது பொதுத் துறையில் நிறுவப்பட்ட டிட்கோவினுடைய மற்றுமொரு கிளை நிறுவனமாகும். இது ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் நைட்ரோ கிளிசரினை (Nitro Glycerin) அடிப்படையாகக் கொண்ட தொழிலியல் வெடி மருந்துகளை தயாரிக்க நிறுவப்பட்டது. இவ்வெடி மருந்துகள் சுரங்கப் பணிகள் மற்றும் இதர கட்டுமான தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இது தென் பிராந்தியங்களில் இத்துறையில் நிறுவப்பட்ட முதல் தொழிற்சாலையாகும். இத்திட்டம் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் போஃபோர்ஸ் நோபெல் செம்மதூர் (Messrs. Boferes Nobel Chematur) நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 2,350 இலட்சமாகும். இத்திட்டத்தினால் சுமார் 450 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், ஏறக்குறைய 100 பேருக்கு நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் கிடைக்கும். இத்திட்டம் தன் வணிக அளவிலான உற்பத்தியை 9—2—1986 முதல் தொடங்கியுள்ளது.

டிடோனேடர்ஸ் மற்றும் டிடேரனேடிவ் ப்யூசஸ் திட்டம்.

தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம், 40 மிலியன் டிடோனேடர்கள் மற்றும் 10 மிலியன் மீட்டர் டிடோனேடிவ் ப்யூஸ்கள் தயாரிக்கும் திட்டம் ஒன்றையும் நிறைவேற்றி வருகிறது. இவை சுரங்கம் மற்றும் பிற தொழிற்சாலை பணிகளில் பயன்படுத்தப்படும் தொழிலியல் வெடி மருந்துடன் துணைப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கு ஜெர்மனியின் தொழில்நுட்ப உதவியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றது. இதன் திட்டச் செலவு ரூ. 2,055 இலட்சமாகும். இது 630 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும். இதன் சோதனை உற்பத்தி 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்சம்)

1, பொது :

1.1. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு அரசு பொதுத் துறை நிறுவனங்களை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்சம்) நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) முழுவதும் உடமை ஆக்கப்பட்ட ஒரு நிறுவனமாக 1976 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபாய் பன்னிரண்டரை கோடியில் ரூபாய் 12.36 கோடி இது வரையில் செலுத்தப்பட்டு உள்ளது. இந்நிறுவனம் 1—4—1976 முதல் செயல்படத் தொடங்கியது.

1.2. சிமெண்ட்டை உற்பத்தி செய்து விற்பனை செய்தல், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சுட்ட சுண்ணாம்பு, சிமெண்ட் கல்நார் தகடுகள் முதலியனவும், சிமெண்ட் தயாரிப்புக்குத் தேவையான ஏனைய தொடர்புடைய பொருட்களையும் உற்பத்தி செய்து, விற்பனை செய்தல் இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்நோக்கங்களுக்கு ஏற்ப இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளையும், ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் அதன் துணைப் பொருட்கள், மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் தயாரிக்கும் இரு ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலைகளையும் டான்செம் நிறுவனம் இயக்கி வருகிறது.



இத் தொழிற்சாலைகளைப் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு :

2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை :

2.1. இந்த ஆலையின் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 666 இலட்சமாகும். இந்த ஆலை 1970 ஆம் ஆண்டு முதல் வணிக உற்பத்தியை தொடங்கியது. பல்வேறு காரணங்களால் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தன் உற்பத்தி இலக்கினை எய்த இயலவில்லை. தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக்குறை உயர்ந்தபட்ச மின்சாரத் தேவையின் மீதான தடை, உயர் அழுத்த மின்சக்தி பயனீட்டாளர்களுக்கு விதிக்கப்பட்ட மின்வெட்டு, ரெயில்வே ஊர்திகளின் பற்றாக்குறை முதலிய புற இடர்பாடுகள் காரணமாக இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தது.

2.2. சுமார் ரூ. 4.90 இலட்சம் செலவில் இந்த ஆலையில் நவீனமாக்கல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தல் ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1984 ஜனவரி முதல் 1985 ஜனவரி வரையிலான கால அளவில் ஆறு மாதங்களில் இந்த ஆலையின் நிறுவுத் திறனில் 100 சதவீதத்திற்கு மேல் உற்பத்தி இருந்தபோதிலும், சராசரி உற்பத்தித் திறனானது நிறுவுத் திறனில் 92.47 சதவீதமாகும். எனினும் பிப்ரவரி 1985-லிருந்து டிசம்பர் 1985 வரையிலான கால அளவில் தமிழ்நாடு மின் வாரியத்தின் 30 சதவீத மின் வெட்டு விதிப்பின் காரணமாக ஆலை 75 சதவீதத் திறனையே எய்தியது. மின் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கவும் முழு உற்பத்தித்திறனை அடையவும் ரூ. 250 இலட்சம் செலவில் ஜப்பான் நாட்டிலிருந்து இரண்டு 2,500 கே.வி.ஏ. டீசல் ஜெனரேட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு இவ்வாலையில் நிறுவப்பட்டு வருகின்றன. ஜெனரேட்டர்களை நிறுவும் பணி விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் 1-4-1976 முதல் ஆண்டு வரிசையில் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி. (மெட்ரிக் டன்களில்.) | ஆண்டின்போது விற்பனை. (மெட்ரிக் டன்களில்.) |
|---|---|---|
| 1976–77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977–78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978–79 .. .. .. | 3,19,277 | 3,20,379 |
| 1979–80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980–81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981–82 | 2,93,515 | 2,93,399 |

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி. | ஆண்டின்போது விற்பனை. |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்) | |
| 1982—83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |
| 1983—84 .. .. .. | 2,43,435 | 2,38,158 |
| 1984—85 .. .. .. | 3,40,031 | 3,44,096 |
| 1985—86 .. .. .. | 2,33,682 | 2,30,089 |

[31—12—1985 வரை]

2.4. முன்பு இந்த ஆலையானது அடுத்தடுத்து இழப்புக்களை அடைந்திருப்பினும், திருப்புமுனையாக இப்போது இலாபத்தில் இயங்க தொடங்கியுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | லாப/நட்டம். | திரண்ட நட்டம், |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1983—84 .. .. .. | (—)96.55 | 284.05 |
| 1984—85 .. .. .. | (+)83.94 | 200.01 |
| 1985—86 .. .. .. | (+)100.00 | 100.00 |
| | (தோராயமாக) | (தோராயமாக) |

2.5. இவ்வாலை, இப் பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், மற்றும் மூலப்பொருட்கள், உற்பத்தி பொருட்களின் போக்குவரவு வகையினில் கணிசமான அளவில் நேரடி இல்லாத வேலைவாய்ப்பினையும் அளிக்கிறது.

3. அரியலூர் சிமெண்ட் ஆலை :

3.1. அரியலூர் சிமெண்ட் ஆலை ஓர் உலர்செய்முறை ஆலை (Dry Process Plant) ஆகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 2,876 இலட்சங்கள், வணிக அளவிலான உற்பத்தி 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கியது.



3.2. இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்கிய ஆரம்ப காலங்களில் பல இடர்பாடுகளுக்கு உட்பட்டது. இந்த இடர்பாடுகள் பின் களையப்பட்ட போதிலும், சுண்ணாம்புக்கல்லின் அதிக அளவு ஈரத் தன்மையின் காரணமாக ஆலையின் உற்பத்தித் திறன் குறைவாகவே உள்ளது. இந்த ஆலையில் நவீனமாக்கல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துதல் திட்டம் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சுவிட்சர்லாந்தின் மெஸர்ஸ் ஹோல்டர் பேங்க் மானேஜ்மெண்ட் கன்சல்டென்ட்ஸ் நிறுவனத்தை இந்த சிமெண்ட் ஆலையில் உற்பத்தியை பாதிக்கும் கச்சாப் பொருள் சிக்கலைக் கண்டறிந்து அதைப் போக்குவதற்கான வழிவகைகளை எடுத்துரைப்பதற்கென நியமித்துள்ளது. ஆலையின் செயல் திறனை ஊக்குவிப்பதோடு மட்டுமன்றி அதன் உற்பத்தித் திறனையும் கூடுதலாக்கும் தொழில் நுட்பத்தினை வகுத்தளிக்கவும் இது வழி வகுக்கும். ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இவ்வாலையின் செயல் திறனை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

3.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | ஆண்டில் உற்பத்தி. | ஆண்டில் விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்களில்.) | |
| 1979—80 (8 மாதங்களுக்கு) | 1,15,919 | 1,15,525 |
| 1980—81 .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1981—82 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| 1982—83 .. .. .. | 2,47,300 | 2,47,836 |
| 1983—84 .. .. .. | 3,01,366 | 2,99,377 |
| 1984—85 .. .. .. | 2,84,366 | 2,80,569 |
| 1985--86 (31—12—1985 வரையில்). | 2,02,364 | 2,05,963 |

3.4. மின் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கும் பொருட்டு இவ்வாலையில் சுமார் ரூ. 350 இலட்சம் செலவில் மூன்று 2500 KVA. டீசல் ஜெனரேட்டர்கள் ஜப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு நிறுவப்படுகிறது. இவற்றை நிறுவும் பணி விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.5. குறைந்த அளவு உற்பத்தியின் காரணமாக இந்த ஆலை ஆரம்ப முதல் நட்டத்தை அடைந்து வருகிறது.

3.6. இவ்வாலை சுமார் 900 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் மூலப் பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரவு வகையில் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

4. அரியலூர் சிமெண்ட் ஆலையின் விரிவாக்கம் :

அரியலூர் சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெ. டன்னிலிருந்து 10 இலட்சம் மெ. டன்னாக அதிகரிக்க டான்செம் மத்திய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் பெற்றுள்ளது. இவ்விரிவாக்கத்தின் திட்ட மதிப்பீடு ரூபாய் 60 கோடியாகும். இவ்விரிவாக்கத் திட்டம் ஏறக்குறைய 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் பெருமளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தரும். இவ்விரிவாக்கத் திட்டத்தில் பின்பற்றப்படவுள்ள தொழில் நுட்பம் பரிசீலனையில் உள்ளது.

5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடுகள் ஆலை) :

ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் தயாரிக்கும் திறனுள்ள தொழிற்சாலை ஆலங்குளத்தில் ரூபாய் 250 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. இந்த ஆலை தன் வணிக அளவிலான உற்பத்தியை 1-10-1981-ல் தொடங்கியது.

5.2. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | ஆண்டில் உற்பத்தி. | ஆண்டில் விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்களில்.) | |
| 1981–82 (ஆறு மாதங்கள்) | 8,251 | 5,067 |
| 1982–83 .. .. .. | 19,091 | 19,867 |
| 1983–84 .. .. .. | 17,839 | 16,886 |
| 1984–85 .. .. .. | 25,606 | 26,612 |
| 1985–86 (டிசம்பர் 1985 வரையில்). | 20,931 | 17,937 |



5.3. மின்வெட்டின் காரணமாக இந்த ஆலையின் உற்பத்தித் திறன் 1984–85-ல் 85 சதவீதமாகவே இருந்தது. ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை உள்ள காலத்தில் இதன் சராசரி உற்பத்தி 93 சதவீதமாகும்.

5.4. இந்த ஆலை இரண்டாவது ஆண்டு முதல் இலாபம் ஈட்டத் தொடங்கியது. 31–3–1985 காலவரையிலான காலத்தில் இதன் திரண்ட இலாபம் ரூபாய் 49.39 இலட்சங்கள். 31–3–1986 வரையிலான காலத்தில் இதன் இலாபம் ஏறக்குறைய ரூபாய் 35 இலட்சங்களாக இருக்கும்.

5.5. இந்த ஆலை சுமார் 250 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மேலும் கச்சாப் பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரவு வகையினில் கணிசமான அளவில் நேரடியில்லாத வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

6. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (அழுத்தக் குழாய்த் திட்டம்) மாயனூர், திருச்சி மாவட்டம் :

6.1. ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன்கள் அளவில் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் இத் தொழிற்சாலை திருச்சி மாவட்டம், மாயனூரில் அமைக்கப்பட்டது. இதன் திட்ட செலவு ரூபாய் 945 இலட்சங்களாகும். வணிக அளவிலான உற்பத்தி 1-10-1984 இல் திட்ட அட்டவணைப்படி துவங்கியது.

6.2. 1984–85-ம் ஆண்டில் இதன் ஆறுமாத கால உற்பத்தியில் 8,427 மெ. டன் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களை உற்பத்தி செய்தது. நடப்பு ஆண்டில் 10,886 மெ. டன் குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6.3. சுமார் 300 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மேலும் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் இத்திட்டம் வழங்கியுள்ளது.

7. பாளையம் சிமெண்ட் ஆலைத் திட்டம், மதுரை மாவட்டம்:

மதுரை மாவட்டம் பாளையம் எனும் பகுதியில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் கோரி டான்செம் நிறுவனம் மைய அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

இதன் திட்டச் செலவு ரூபாய் 48 கோடி அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், கணிசமான அளவில் நேரடியில்லாத வேலை வாய்ப்பும் அளிக்கும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகளான திட்ட அறிக்கை, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளை தொழில்களுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்று செயல்பட்டு வருகின்றது. சிப்காட் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை குறிப்பாகக் கடந்த சில ஆண்டுகளில் அடைந்துள்ளது.

2. தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால், தொழில் தேவைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு தற்போது தொழில் வளர்ச்சியில் புதிய நவீன கட்டத்தில் உள்ளது. அதற்கேற்ப தற்போது உள்ள தொழிற்சாலைகளில் உயர்ந்த தொழில் நுட்பத்தினை கொணரவும் எலக்ட்ரானிக்ஸ் கெமிக்கல் தொழிற்சாலை மற்றும் புதிய தொழிற்சாலைகளை அமைக்கவும், சிப்காட் முக்கியத்துவம் அளிக்கின்றது. மேலும் ஜெனரேட்டர்கள் மற்றும் பிற கருவிகளை குத்தகைக்கு விடுவது பற்றியும் (Leasing activity) வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் முதலீடு போன்ற பிற பணிகளிலும் 'சிப்காட்' ஈடுபடவிருக்கின்றது.

(அ) சமீபத்தில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி அளிப்பதில் செய்துள்ள மாற்றத்தின் காரணமாக, தொழில் முனைவோர்களுக்கு ஏற்பட்டுள்ள நிதிச் சுமையினை குறைக்கும் பொருட்டு, சிப்காட் ஜெனரேட்டர் போன்ற சில கருவிகளை வாங்கி, குத்தகை அடிப்படையில் தொழில் முனைவோர்களுக்கு வழங்கும். இதன் பலனாக, தொழில் முனைவோர்கள் தங்களின் தொழிலில் கவனம் செலுத்த முடியும்.

(ஆ) அயல் நாட்டில் வாழும் தமிழர்கள் அதிக அளவில் தமிழ்நாட்டில் தொழில்களில் முதலீடு செய்ய சிப்காட்டை அணுகுகின்றனர். அதில் பெரும் பகுதியினருக்கு இங்கு முதலீடு செய்யும் வாய்ப்பினைப் பற்றி தெரியவில்லை. மேலும் சிப்காட் அனுமதி வழங்கும் முறையிலும் கால தாமதம் அதிகமாவதால் அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்வதற்காக, தொழில் அனுமதி (Industrial Licence)



பெறுவதற்கு முடிவு செய்துள்ளது. இதனால், தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படும். அதே சமயத்தில், அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் முதலீடு செய்வதற்கான ஒரு திட்டத்தினை தயாரித்து, அதன்படி அவர்கள் 'சிப்காட்டில்' முதலீடு செய்யலாம். 'சிப்காட்டில்' முதலீடு செய்யப்பட்ட இந்த மூலதனம், சிப்காட் உதவி பெற்று செயல்படும் கம்பெனிகளில் சம பங்குகளாக மாற்றப்படும். இதனால் வெளி நாடுகளில் தங்கி இருக்கும் போதே, அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வாய்ப்பு கிடைப்பதுடன், பின்னர் தாயகம் திரும்பியவுடன் மேலும் அபிவிருத்தி செய்திடவும் இயலும். அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழக தொழில்களில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

3. மேலும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான புள்ளி விவரங்களை வழங்குவதற்கு ஏதுவாக, ஒரு கம்பியூட்டரை வாங்க 'சிப்காட்' உத்தேசித்துள்ளது.

I. பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் :

4. (அ) ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.—இத்திட்டம் 1981 முதல் புதிய முறையில் அமலாக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் லாபகரமான தொழில்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை சிப்காட் செயல்படுத்துகின்றது. மேலும் இந்த ஆய்வுகள் சலுகை விலையில் தொழில் முனைவோர்களுக்கு அளிக்கின்றது. இந்த ஆய்வுகள் மொத்த விலையில் 10 விழுக்காடுகளை செலுத்தினால் அளிக்கப்படுகின்றது. மிஞ்சிய 40 விழுக்காட்டுத் தொகை தொழில் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகு திரும்பச் செலுத்த வேண்டிய கடனாக மாற்றப்படும். எஞ்சிய 50 விழுக்காடு சிப்காட்டிலிருந்து தரப்படும் மானியமாக அளிக்கப்படும் புதிய திட்டத்தின் கீழ் 31 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 14 ஆய்வுகள் மேற் கொள்ளப்படுவதற்காக பரிசீலனையில் உள்ளது. மொத்தம் 20 தொழில் முனைவோர் இந்த ஆய்வுகளை பயன்படுத்தியுள்ளனர்.

(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.— ஊக்கச்சலுகை தீவிரத் திட்டத்தின் மிக முக்கிய அங்கங்களில் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ஒன்றாகும். இக் கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம் மாநிலத்தின் பின்தங்கிய 11 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி நகர்ப்பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு

அக்டோபர் திங்கள் 3ஆம் தேதியில் இருந்து சுலபமாக்கப்பட்ட இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியின் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும் போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும் போதோ இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப் படும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ, நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும் போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப் படுகிறது. கடன் தொகை வழங்கப் பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சமத் தொகைகளாக வட்டி இன்றி இக் கடன் தொகைகளைத் திருப்பியடைக்க வேண்டும்.

புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின் தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலை நகர் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும் இத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை, வரித் தொகைக்கு சமமானதாகவும், நிலையான இருப்புகளில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்திற்கோ எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்தக் கடன் காலாண்டுக்கு ஒரு முறை, தொகை 100 இலட்சத்திற்குள் 24 காலாண்டுகளுக்கு என்ற அடிப்படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 8 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி ஏதுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 250 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 29,15.49 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்து, அதில் ரூபாய் 25,07.46 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



(இ) மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை:

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் இம் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 30 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும், அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத் தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

1–4–1983 முதல் மேலும் இலகுவான நிதியுதவி பெற அனுமதிக்கப்பட்டுள்ள 9 பின்தங்கிய மாவட்டங்கள் 10 சதவீதம் மத்திய நேரடி மானியம் (உயர்ந்த பட்ச நிதி உதவி ரூ. 10 இலட்சம்) பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டம் ஏற்கனவே 15 சதவீதம் மானியம் அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களுக்கோ 31–3–1983 ஆம் நாள் ரூ. 30 கோடி தொழில் மூலதனம் உள்ள பகுதிகளுக்கோ அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஈ) மாநில அரசின் மானியம் (உதவித் தொகை) :

இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 15 சதவீத மானியத் திட்டத்தின் கீழ் வராத 35 பின்தங்கிய வட்டங்களிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரிலும் அமைக்கப்படவிருக்கும் இணையங்களிலும் எந்தத் தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதை பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள்

பயன்பெறும். இது 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் அமுலுக்கு வந்தது. 1985–86 ஆம் ஆண்டுக்கு ரூ. 200 இலட்சம் ஒப்புதல் அளிக்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் 1985 டிசம்பர் வரை ரூ. 174.42 இலட்சத்திற்கு அமுலுக்கு வந்துள்ளது. அதே போல் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ. 100 இலட்சத்தில் 1985 டிசம்பர்வரை ரூ. 89.52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) குறிப்பிட்ட தொழிலுக்கு மானியத் திட்டம்:

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் மேலும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கருவிகளை தயாரிக்கும் பிரிவுகளுக்கும், சூரிய சக்தி கருவிகளையும் குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பிக்கும் சக்தியைக் கொண்டு இயங்கும் கருவிகளையும் பயன்படுத்தும் பிரிவுகளுக்கும் இந்த மானியம் அளிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதை பெறலாம். இத் திட்டம் பாரதத்தின் எந்த பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

II. (i) நேரடி நிதி உதவி.—கடந்த பதினான்கு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணை கடன் உதவி முறையே 1985 மார்ச் 31 முடிய ரூ. 18,469.03 இலட்சம் மற்றும் ரூ. 11,674:31 இலட்சமாகும். 1980–81 இல் இருந்தே மொத்தம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டு நிலையை நோக்குங்கால் வெகுவாக உயர்வடைந்துள்ளது.





(ii) உத்தரவாதம் அளித்தல்/நேரடி சந்தா :

பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்தின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த பதினான்கு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 | .. | 23.20 | .. | .. |
| 1973–74 | .. | 24.30 | .. | .. |
| 1974–75 | .. | 5.00 | .. | 0.55 |
| 1975–76 | .. | 16,500 | .. | 1.29 |
| 1976–77 | .. | 11.00 | 18.50 | 2.00 |
| 1977–78 | .. | 16.00 | 13.30 | 1.13 |
| 1978–79 | .. | 5.00 | 3.50 | 0.37 |
| 1979–80 | .. | 6.20 | 2.50 | 1.53 |
| 1980–81 | .. | 24.40 | .. | 12.29 |
| 1981–82 | .. | 13.75 | .. | 8.03 |
| 1982–83 | .. | 18.25 | .. | 1.52 |
| 1983–84 | .. | 26.50 | 8.00 | 15.67 |
| 1984–85 | .. | 56.70 | .. | .. |
| 1985–86 (டிசம்பர் 1985 வரை). | .. | 17.80 | .. | 10.15 |
| | | 264.60 | 45.80 | 39.90 |

### (iii) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்த மற்றும் வழங்கியது 31–3–1985 முடிய முறையே ரூ. 519.24 இலட்சம் மற்றும் ரூ. 382.61 இலட்சம் ஆகும். தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.).

(ஆ) உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

### III வளர்ச்சி மையங்கள்.

| இணையத்தின் பெயர். | மேம்படுத்தப் பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ஏக்கர்) | (ரூபாய் இலட்சத்தில்.) |
| இராணிப்பேட்டை–1 .. .. | 570.63 | 159.00 (இராணிப்பேட்டை–1, 2) |
| இராணிப்பேட்டை–2 .. .. | 141.03 | |
| ஓசூர் .. .. .. .. | 938.26 | 363.00 |
| மானாமதுரை .. .. .. | 382.20 | 109.00 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 650.00 | 86.00 |
| புதுக்கோட்டை .. .. | 330.50 | 97.00 |
| கடலூர் .. .. .. | 371.00 | 140.00 |
| தூத்துக்குடி .. .. .. | 595.40 | 12.59 |

(விரிவு படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டது.)



**1. இராணிப்பேட்டை :**

சிப்காட் நிறுவனம் முதன் முதலாக இந்த இராணிப்பேட்டை தொழில் இணையத்தினை 1973-ல் அமைத்தது. முதல் கட்ட திட்டத்தில் ஏறக்குறைய எல்லா நிலமும் ஒதுக்கப்பட்டு விட்டது. இரண்டாவது கட்ட திட்டத்தில் என்பீல்டு இந்தியா நிறுவனத்தின் மனைகள் வழங்கப்பட்டுவிட்டது. தொழில் துவங்கி உள்ள, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் இந்த தொழில் இணையத்தில் உள்ளது. இரண்டாவது கட்டத் திட்டத்தில் எஞ்சியுள்ள மனைகள் விரைவில் வழங்கப்படும்.

**2. ஓசூர் :**

ஓசூர் தொழில் இணையம் 1976-ல் இருந்து செயல்பட்டு வருகின்றது. பெங்களூருக்கு அருகாமையில் உள்ளதால், தமிழ் நாடு மற்றும் கர்நாடக மாநில தொழில் முனைவோர்கள் இந்த இணையத்தில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த இணையத்தில் எல்லா அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

ஓசூர் இரண்டாவது கட்டத்தில் சமுதாய அடிப்படை வசதியைக் கருத்தில் கொண்டு, குடியிருப்பு இணையமாக அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. மானாமதுரை :**

இந்த மானாமதுரை வளர்ச்சி மையம் மதுரையிலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ளது. எல்லா கட்டுமான வேலைகளும் ஏறக்குறைய முடிவடைந்து விட்டன. தண்ணீர் விநியோகம் மற்றும் குழாய்ப் பணிகள் இனி எடுத்துக் கொள்ளப்பட்டு, விரைவில் முடிக்கப்படும். எல்லா அடிப்படை வசதிகள் இருந்தும், தொழில் முனைவோர்களின் ஆர்வம் போதிய அளவு இல்லை. ஒரு ஏக்கர் மனை விலை ரூ. 15,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் மற்றும் மத்திய மானியம் போன்ற உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இனிமேல் போதிய முன்னேற்றம் ஏற்பட்டு, மனைகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**4. கும்மிடிப்பூண்டி :**

சென்னையிலிருந்து 45. கி.மீ. தொலைவில் சென்னை நெல்லூர் தேசிய நெடுஞ்சாலையில், கும்மிடிப்பூண்டி தொழில் இணையம் உள்ளது. இந்தத் தொழில் இணையத்தில் தொழில்

முனைவோர்களின் ஆர்வம் நன்றாக உள்ளது. இதுவரை 100 தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது. மேலும் 109 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. நிர்வாக கட்டிடம், சாலை வசதி, தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கழிவு நீர் குழாய்கள் விரைவில் அமைக்கப் படும். ஏற்கனவே நில எடுப்பு செய்த நிலங்களுக்கு, அதிக நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. எனவே ஏற்கனவே மனைகளுக்கு நிர்ணயித்த விலையினை உயர்த்துவதுப் பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

5. புதுக்கோட்டை :

புதுக்கோட்டை தொழில் இணையம், புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிடத்தில் அமைந்துள்ளது. தொழில் முனைவோர்களிடமிருந்து தொழில் துவங்க தற்போது ஆர்வம் அதிகமாகத் தெரிகின்றது. இதுவரை 18 தொழில் முனைவோர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது. மேலும் 11 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. அடிப்படை வசதிகளைப் பொறுத்த வரை 95 சதவீத சாலை வேலைகள், 50 சதவீத தண்ணீர் வழங்குதல் வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. கழிவு நீர் அகற்றுதல் சம்பந்தமான பணி நடந்து கொண்டு உள்ளது. மற்றும் அலுவலர்களுக்கு குடியிருக்க குடியிருப்பு கட்டப்படும்.

6. கடலூர் :

கடலூர் தொழில் இணையம், பழைய கடலூர் நகரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது. இதுவரை 18 தொழில் முனைவோர்களுக்கு நிலம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரை, 75 சதவீத தண்ணீர் வழங்குதல் வேலைகள், 90 சதவீத அளவிற்கு நிர்வாக அலுவலகக் கட்டிட வேலைகள், பணியாளர்களுக்கான குடியிருப்பு 50 சதவீத அளவிற்கு முடிக்கப்பட்டு விட்டது. மேலும் சாலை வசதிகள், கழிவுநீர் அகற்றுதல் போன்ற பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் பட்டு முடிக்கப்படும்.

7. தூத்துக்குடி :

தூத்துக்குடி தொழில் இணையத்திற்கு கையகப்படுத்த வேண்டிய 1256.90 ஏக்கர் நிலப்பரப்பளவில் இதுவரை 595.40 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. தூத்துக்குடியில் ஒரு திட்ட அலுவலகம், 1985 அக்டோபரில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. காடுகளை அழித்து, நிலங்களைச் சமப்படுத்தும் பணிகள் துவக்கப்பட்டு உள்ளது.



சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் :

சென்னைக்கு அருகே ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக ஒப்படை செய்யப்பட்ட 228 ஏக்கர் நிலத்தில், 98 ஏக்கர் நிலம் ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைக்க ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைப்பதற்கான முழு செலவையும், மத்திய அரசு ஏற்றுக் கொள்கின்றது.

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தும் முகமைப் பொறுப்பை சிப்காட்டிடம் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. மேற்கண்ட பணிகளை 5 விழுக்காடு சேவை கட்டணத்தில் சிப்காட் நிறைவேற்றி தருகின்றது. சென்னையில், சென்னை ஏற்றுமதி தொழில் மண்டல, வளர்ச்சி ஆணையர் அலுவலகமும், நிர்வாக, நிதி போன்ற இனங்களில் அனுமதி வழங்க ஒரு அதிகாரக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தேவையான செலவினை 'சிப்காட்' முதலில் செய்துவிட்டு, பின்னர் மத்திய அரசிடமிருந்து காலாண்டு முறையில் பணத்தைத் திரும்ப பெற்றுக் கொள்கின்றது.

பல்வேறு வகையான பணிகளுக்காக ரூ. 679.57 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய கட்டுமானப் பணிகளான எல்லைச் சுவர், கண்காணிப்பு அறை ( Watching Cabins ) சாலைகள் அமைத்தல், ஸ்டாண்டர்டு டிசைன் பாக்டரி போன்ற பணிகள் ஏற்கனவே துவங்கப்பட்டுவிட்டன. சமீபத்தில் பெய்த அடை மழையின் காரணமாக ஏற்பட்ட சில மராமத்து வேலைகள் மற்றும் சுவர்களுக்கு வெள்ளை அடித்தல் நீங்கலாக, காம்பவுண்டு சுவர் வேலை ஏறக்குறைய முடிவு பெற்று விட்டது. 75 சதவீத சாலை அமைத்தல் பணி முடிந்து விட்டது. எஞ்சிய பணியும் துரிதமாக நடந்து வருகின்றது. ஸ்டாண்டர்டு டிசைன் பாக்டரியில் பிளாக் நெ. 1 மற்றும் 2-ல், 40 சதவீத வேலைகள் பூர்த்தியாகி விட்டது. பிளாக் நெ. 3 முதல் 8 வரை, தரை வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றது. மேலும், நிலத்தினை சீர்படுத்துதல், தண்ணீர் விநியோகம், மின்சாரம், தெரு விளக்குகள் போன்ற பிற பணிகள் விரைவில் துவக்கப்பட்டு செயல் படுத்தப்படும். எஞ்சிய பிற பணிகள் அடுத்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

பணியின் முடிவுகள்.

1984—85-ம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 116.56 இலட்சம் 1983—84-ம் ஆண்டு இலாபம் ரூ. 124.42 இலட்சமாகும்.

இணைப்பு இரண்டில் திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விவரங்கள்:

1. 1985–86-ம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1986–87-ம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்டக் குறியீடுகள்.

வேலை வாய்ப்பு :

1985-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் தேதி முடிய சுமார் 88,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்று நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக :





| ஆண்டு. (1) | வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1981–82 | 5,700 |
| 1982–83 | 9,000 |
| 1983–84 | 9,000 |
| 1984–85 | 10,000 |
| 1985–86 (டிசம்பர் 1985 வரை) | 5,000 |

இணைப்பு

**மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம் 1971.**

அ. ஒப்புதல் (மொத்தம்).

| ஆண்டு. | எண். | **பெரிய மற்றும்** நடுத்தரத் தொழில் **தொகை.** |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| **1978** மார்ச் 31 வரையில் .. .. .. .. .. | 154 | 975.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. .. .. | 46 | 284.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. .. .. | 52 | 333.72 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. .. .. | 69 | 528.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. .. .. | 46 | 289.98 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை .. .. .. | 103 | 740.69 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை .. .. .. | 47 | 358.49 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை .. .. .. | 40 | 322.45 |
| ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை .. .. .. | 18 | 169.56 |
| மொத்தம் .. .. | 575 | 4,003.24 |



| ஆண்டு. | சிறு தொழில்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978 மார்ச் 31 வரையில் .. .. .. .. .. | 749 | 179.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. .. .. | 181 | 62.85 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. .. .. | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. .. .. | 637 | 218.26 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. .. .. | 544 | 213.38 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை .. .. .. | 2,369 | 895.76 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை .. .. .. | 560 | 228.46 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை .. .. .. | 781 | 245.54 |
| ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை .. .. .. | 1,132 | 359.79 |
| 31—12—1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | 7,359 | 2,482.37 |

| ஆண்டு. | மொத்தம். எண். | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978 மார்ச் 31 வரையில் .. .. .. .. .. | 903 | 1,155.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. .. .. | 227 | 346.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. .. .. | 458 | 412.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. .. .. | 706 | 746.68 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. .. .. | 590 | 503.36 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை .. .. .. | 2,472 | 1,636.45 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை .. .. .. | 607 | 586.95 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை .. .. .. | 821 | 567.99 |
| ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை .. .. .. | 1,150 | 529.35 |
| 31—12—1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | 7,934 | 6,485.61 |



ஆ. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1978 மார்ச் 31 வரை .. .. .. .. | 618.43 | 151.62 | 770.05 |
| 1978 ஏப்ரல் முதல் மார்ச் 1979 வரை .. .. | 176.03<br>2.24 | 30.09 | 206.12<br>2.24 |
| 1979 ஏப்ரல் முதல் மார்ச் 1980 வரை .. .. | 232.26 | 41.78 | 274.04 |
| 1980 ஏப்ரல் முதல் மார்ச் 1981 வரை .. .. | 319.09 | 109.33 | 428.42 |
| 1981 ஏப்ரல் முதல் மார்ச் 1982 வரை .. .. | 307.50 | 155.64 | 463.14 |
| 1982 ஏப்ரல் முதல் மார்ச் 1983 வரை .. .. | 360.77 | 108.13 | 468.90 |
| 1983 ஏப்ரல் முதல் மார்ச் 1984 வரை .. .. | 426.40 | 361.96 | 788.36 |
| 1984 ஏப்ரல் முதல் மார்ச் 1985 வரை .. .. | 438.62 | 361.71 | 800.33 |
| 1985 ஏப்ரல் முதல் டிசம்பர் 1985 வரை .. .. | *276.77 | **335.55 | 612.32 |
| டிசம்பர் 1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை | 3,158.11 | 1,655.81 | 4,813.92 |

* தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மட்டும்.

** தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978 மார்ச் 31 வரை | 448.30 | 613.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 161.51 | 229.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 125.54 | 165.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 301.91 | 425.35 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 215.52 | 376.94 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 192.23 | 289.99 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை | 501.97 | 816.42 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை | 384.90 | 926.21 |
| ஏப்ரல் 1985 முதல் டிசம்பர் 1985 வரை | 321.50 | 668.98 |
| டிசம்பர் 1985 வரையான மொத்தத் தொகை | 2,653.38 | 4,512.68 |



## இணைப்பு 2.

**1984-85 மற்றும் 1985-86-ஆம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்.**

1985-86 மற்றும் 1986-87 ஆண்டுகளுக்கான திட்டங்களின் குறியீடுகள் :—

| விவரம். | 1984-85 முன்னேற்ற விவரம். | 1984-85 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1985-86 செயலாக்கப் பட்டது. (டிசம்பர் 1985 வரை). 1985-86. | 1985-86 1986-87-க் கான செயல் இலக்கு 1986-87. | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **தவணைக் கடன்** | | | | | |
| ஒப்புதல் .. | 4,638.45 | 3,500.00 | 3,250.32 | 4,500.00 | 5,000.00 |
| வழங்குதல் .. | 2,969.91 | 2,800.00 | 2,026.01 | 3,200.00 | 3,500.00 |
| **ஆதார மூலதனத் திட்டம்—** | | | | | |
| ஒப்புதல் .. | 184.40 | 120.00 | 72.00 | 150.00 | 150.00 |
| வழங்குதல் .. | 131.23 | 150.00 | 86.60 | 150.00 | 150.00 |
| **வட்டியில்லாக் விற்பனை வரிக்கடன் —** | | | | | |
| ஒப்புதல் .. | 494.92 | 300.00 | 337.61 | 550.00 | 400.00 |
| வழங்குதல் .. | 494.74 | 375.00 | 190.91 | 550.00 | 400.00 |

| விவரம் | 1984-85 முன்னேற்ற விவரம் | 1984-85 வரவு-செலவு திட்ட மதிப்பீடு | 1985-86 செயலாக்கப் பட்டது. (டிசம்பர் 1985 வரை). 1985-86. | 1985-86 1986-87-க் கான செயல் இலக்கு. 1986-87. | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மத்திய உதவி மானியம் (சிப்காட்) மட்டும்— | | | | | |
| ஒப்புதல் .. | 322.45 | 250.00 | 154.56 | 350.00 | 400.00 |
| வழங்குதல் .. | 387.22 | 350.00 | 276.13 | 350.00 | 400.00 |
| திரும்பப்பெறுவது | 384.90 | 350.00 | 319.69 | 350.00 | 400.00 |
| உத்திரவாதமளித்தல் / நேரடிச் சந்தா— | | | | | |
| ஒப்புதல் .. | 56.70 | 25.00 | 17.80 | 50.00 | 50.00 |
| வழங்குதல் .. | 10.15 | 25.00 | 12.50 | 25.00 | 50.00 |
| மாநில மூலதன உதவி மானியம் — | | | | | |
| ஒப்புதல் .. | 365.03 | 100.06 | 174.50 | 200.00 | 200.00 |
| வழங்குதல் ... | 180.41 | 100.00 | 89.72 | 160.00 | 100.00 |





### தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் :

உலக வங்கியிடமிருந்து ரூ. 105 கோடி உதவியுடன், கரும்பு சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் ஒரு பெருமை வாய்ந்த காகித ஆலை திட்டத்தை நிறுவும் நோக்கத்துடன் (தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை) தமிழக அரசு உருவாக்கியது. இந்த ஆலை நாளொன்றுக்கு 300 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 240 டன்கள் அச்சிடும் / எழுதும் காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடையதாகும்.

2. 1984 செப்டம்பர் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழைக் கொண்டு மாதிரி உற்பத்தியை துவக்கியது. படிப் படியாக, காகிதக் கூழ் குழாய்கள் நிறுவப்பட்டன. கடினமரம் மற்றும் இரசாயன கரும்புச் சக்கைக் கூழ் குழாய்கள் ஆகியவை 1985 ஆம் ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில் தயாராகியது. 1985 அக்டோபர் மாதத்தில் இயந்திர கரும்புச் சக்கை கூழ் தயாரிக் கும் குழாய் தயாராகியது. 75 சதவிகிதம் கரும்புச் சக்கைக் கூழ் மூலப் பொருளாகக் கொண்டு, அச்சிடும் மற்றும் எழுது தாள் காகித உற்பத்தி 1985 ஆகஸ்ட் மாதத்தில் துவங்கியது. முதன் முறையாக 100 சதவீதம் உள்நாட்டு கரும்புச் சக்கை கூழைக் கொண்டு செய்தித்தாள் காகித உற்பத்தி 1985 அக் டோபர் 18-ம் தேதியன்று துவங்கியது.

3. முக்கியமாக, கிரிம்வோவ் (ream wove) மற்றும் நகல் எடுக்கும் காகிதங்கள் ஆகிய இரண்டு விதமான காகிதங்கள் இந்த ஆலையில் தயாரிக்கப்பட்டு, சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற் றுள்ளன. இந்த ஆலையில் தயாரிக்கப்படும் காகிதம், நாட்டி லுள்ள முதன்மையான பல பத்திரிக்கைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

4. 1— 4— 1985-லிருந்து 31— 12— 1985 முடிய உள்ள கால கட்டத்தில் டி.என்.பி.எல். நிறுவனம் 39,535 டன்கள் செய்தித் தாள் காகிதமும், 6,797 டன்கள் எழுதுதாள்/அச்சிடும்தாள் காகிதம் உற்பத்தி செய்து, தனது உற்பத்தித் திறனில் 70 சத விகிதத்தை எட்டியுள்ளது. ரூ. 24 கோடி மதிப்புள்ள அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவியுள்ளது.

5. இந்த ஆலை 1,500 பேருக்கு நேர்முக வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளித்துள்ளது.

6. நாட்டில் முதன்முறையாக, கரும்புச் சக்கையிலிருந்து வெற்றிகரமாகவும், வியாபார ரீதியாகவும், செய்தித்தாள் காகி தம் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

டி.என்.பி.எல். நிறுவனம் 1—10—1985-லிருந்து வியாபார ரீதியான உற்பத்தியைத் துவங்கியுள்ளது. எதிர் காலத்தில் உருவாகும் இதுபோன்ற பல காகித ஆலைகளுக்கு டி. என். பி. எல். ஒரு முன்னோடியாக இருக்கும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் செயல் முறை குறித்த விவரக் குறிப்பு :

மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனத்தைச் சார்ந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC), தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் அதன் விரைவான முன்னேற்றத்திற்கும் நிதி உதவி அளிக்கும் தனது பணிகளுடன் இருபது அம்சத் திட்டம் உள்ளிட்ட அரசின் சமூக பொருளாதார கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

நிலம், கட்டிடம், தளவாடம், எந்திரச் சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு இந்த நிறுவனம் குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்குவதுடன் காலவரம்பைக் கடந்து தொகை செலுத்துவதற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. நிதியுதவி பெறும் தொழில் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. புதிய தொழிற்களைத் தொடங்குவதற்கு நிதியுதவி அளிப்பதோடு தற்போதுள்ள தொழில் பிரிவுகளை விரிவாக்கவும், பல்திறப்படுத்தவும், நவீனப்படுத்தவும் இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் அண்மைக் காலத்தில் மாநில நிதியுதவியிலும் நிறுவனங்கள் நன்முறையில் செயல்படும் பொருட்டு மாநில நிதியுதவி நிறுவனங்கள் சட்டத்தில் பல பிரிவுகளைத் திருத்தியமைத்ததோடு, புதிய சில பிரிவுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்கீழ், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் உட்பட, மாநில நிதியுதவி பெறும் நிறுவனங்கள் கூட்டமைப்புகளுக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடனுதவியை ரூ. 30.00 இலட்சத்திலிருந்து ரூ. 60.00 இலட்சம் வரையிலும், சிறிய நடுத்தரத் தொழில்களின் உரிமையாளர்களுக்கு அல்லது பங்குதாரர்களுக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடனுதவியை ரூ. 15.00 இலட்சத்திலிருந்து ரூ. 30.00 இலட்சம் வரையிலும் உயர்த்தியுள்ளது.

தொழில் விரிவுகளில் செயல்களை ஆய்வு செய்தல் :

கடன் தொகைக்கு அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், இந்நிறுவனத்தின் பணி கணிச



மான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறாகும் :—

| ஆண்டு. | | | அனுமதித்த தொகை. | வழங்கிய தொகை. | வசூலித்த தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1980–81 | .. | .. | 36.90 | 22.59 | 11.47 |
| 1981–82 | .. | .. | 52.13 | 35.07 | 13.76 |
| 1982–83 | .. | .. | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 | .. | .. | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 | .. | .. | 68.11 | 48.70 | 32.38 |
| 1985–86 | .. | .. | 66.19 | 43.07 | 24.27 |

(1–4–1985 முதல் 31–12–1985 வரையில் 9 மாதங்களுக்கு).

IV. சிறிய அளவிலான மிகச் சிறிய அளவிலான தொழில்களுக்கு நிதியுதவி :—

குறைவாக முதலீடு செய்து சிறிய மிகச் சிறிய அளவிலான தொழில்களின் மூலம் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, எளிமையான நடை முறைகளுடன் சலுகைகளுடன் கூடிய நிபந்தனைகளின் பேரில் நிதியுதவி அளித்து சிறு தொழில்களில் அதிவேகமாக வளர்ச்சி பெறச் செய்வதே இக்கழகத்தின் முக்கியப் பணியாகும். பின் வரும் அட்டவணையில் அதன் ஒப்பீட்டுப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சத்தில்).

| ஆண்டு. | | எண்ணிக்கை. | தொகை. | அனுமதிக்கப்பட்ட மொத்த தொகையின் சதவீதம். | |
|---|---|---|---|---|---|
| | | | | எண்ணிக்கை. | தொகை. |
| 1980–81 | .. | 5,083 | 2,268 | 98 | 61 |
| 1981–82 | .. | 5,646 | 4,444 | 99 | 85 |
| 1982–83 | .. | 4,161 | 4,859 | 99 | 87 |
| 1983–84 | .. | 3,800 | 5,353 | 99 | 90 |
| 1984–85 | .. | 4,008 | 6,269 | 99 | 92 |
| 1985–86 | .. | 3,282 | 6,263 | .. | ... |

(1–4–1985 முதல் 31–12–1985 வரையில் 9 மாதங்களுக்கு).

V. சுய வேலை வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல் :

பின்வரும் விவர அறிக்கைகளின்படி, பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் தொழில் முனைவோர்களுக்குத் தாராளமாக நிதியுதவியை இக்கழகம் அளிக்கிறது :—

| திட்டங்கள். | 1980-81 | | 1981-82 | | 1982-83 | | 1983-84 | | 1984-85 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | |
| போக்குவரத்து ஊர்திகளை இயக்குவோர். | 649 | 226 | 956 | 791 | 1,073 | 1,042 | 1,386 | 1,390 | 1,119 | 1,318 |
| பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள். | 13 | 21 | 14 | 21 | 21 | 27 | 34 | 26 | 27 | 41 |
| மின் உற்பத்தி எந்திரம் | 94 | 229 | 19 | 26 | 699 | 504 | 168 | 143 | 54 | 53 |
| ஓட்டல் தொழில் | 10 | 57 | 2 | 9 | 1 | 2 | 15 | 161 | 34 | 297 |
| தொழில் நுட்ப திறன் பெற்றவர்கள். | 40 | 52 | 91 | 103 | 64 | 105 | 88 | 161 | 15 | 26 |
| மீன்பிடி படகுகள் .. | 17 | 29 | 3 | 3 | .. | .. | 2 | 3 | 1 | 7 |





கடந்த 5 ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நிதியுதவியால் சுமார் 1,87,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது.

1985–86 ஆம் ஆண்டிற்கான திட்டம் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஏற்பளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான செயல் முறை வருமாறு :—

அனுமதிக்கப்பட்டவை ரூ. 71.00 கோடி.
வழங்கப்பட்டவை ரூ. 61.00 கோடி.
வசூலிக்கப்பட்டவை ரூ. 38.00 கோடி.

எனினும் அதிகரித்துவரும் தொழில் நடவடிக்கைகளின் போக்கைப் பார்க்கையில் அனுமதிக்கப்படும் தொகை ரூ. 85.00 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொகை வசூலிப்பதும், வழங்குவதும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

VI. பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டும் எளிமையாக்குதல்.

இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் அதிக அளவு கடனானது ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 15.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. அதாவது, முதல் நிலை நகராட்சிகளின் கிராம, ஓரளவு நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள மருத்துவர்களின் தனியார் மருத்துவமனைகளை சிறு மருத்துவமனைகளை ஏற்படுத்துவதற்கு ரூ. 5.00 இலட்சம் வரையிலும் தமிழ்நாட்டில் எவ்விடத்திலேனும் மருத்துவத் தொழிலுக்காகப் பயன்படுத்தும் வகையில் மின்னியல் மருத்துவ நவீனச் சாதனங்களை வாங்குவதற்கு ரூ. 15.00 இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது.

20 அம்சத்திட்டம் உட்பட அரசின் சமூகப் பொருளாதார கொள்கைகளைச் செயற்படுத்துவதிலும், பெருமளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை ஆதரிப்பதிலும், சமுதாயத்தினரிடையே நலிந்த, பொருளாதார வகையில் ஏழ்மைப் பிரிவைச்சேர்ந்த மக்களை உயர்த்துவதிலும் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பற்றிய பொதுவான நோக்கத்தின்படி வட்டார சமன்பாட்டின்மையை நீக்கும் வகையில் மாநிலத்திலுள்ள வட்டாரங்கள் பின்தங்கிய பகுதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தன்னுடைய முக்கியப் பங்கைப் பெருமளவில் ஆற்றிவருகிறது.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ரூபாய் 200 இலட்சங்கள் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம், ரூ. 145 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருட்களைத் தயாரிப்பது ஆகும்.

*மாரியூர் வாலிநோக்கம் உப்புத் திட்டம் :*

மிகவும் பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ள இத் திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது. வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க இயலாத மிகவும் பின் தங்கிய இடத்தில் அமைந்துள்ள இத்திட்டம் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 1985 ஆம் ஆண்டு இரசாயன தொழிற்சாலைக்குகந்த தரமான 33,600 டன் உப்பு உற்பத்தி செய்தது. 1985 ஆம் ஆண்டில் இடைவிடாது பெய்த மழை மற்றும் மின்சார தடை முதலியவைகளால் இத்தொழிற்சாலையின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் தூத்துக்குடி அல்காலி கெமிக்கல்ஸ் லிமிடெட், திருவாங்கூர் கொச்சின் கெமிகல்ஸ் லிமிடெட் மற்றும் கோத்தாரி இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் போன்ற தொழிற்சாலைகளுக்குத் தொடர்ச்சியாக உப்பு விற்பனை செய்கிறது. 31–12–1985 முடிய 27,202 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு ரூ. 75 இலட்சம் செலவில் வாலிநோக்கத்தில் சிறு துறைமுகம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு துறைமுகத் துறை இதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இத்துறைமுகம் நிறுவப்பட்ட பின் உப்பு அதிகம் தேவைப்படும் மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உப்பு விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1986 ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழில்சாலைக்குத் தகுந்த சுமார் 60,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். தவிர, குறிப்பிட்டளவான உற்பத்தி அடைய மற்ற மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதன் முதற் கட்டமாக உப்பளத்தின் தெற்குக்கரை



மேம்படுத்தப்பட உள்ளது. இப்பணிக்கு ஆலோசகரின் பரிந்துரையின்படி சுமார் ரூ. 30 இலட்சங்கள் மதிப்பில் ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மத்திய உப்பு அறிவுரைக்குழு சென்னையில் நடந்த கூட்டத்தில் 50 சதவிகித உப்பு வரி மானியத்துடன் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 1986 மற்றும் 1987 உப்பு உற்பத்தி காலத்திற்குள் நிறைவேற்றப்படும். 1986 ஆம் ஆண்டில் குறைந்த அழுத்த மின்சக்தி இடைநிலை நீரேற்றுப் பகுதிக்குப் பெறப்படும்.

இத்திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டதும் 200 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். மேலும் உப்பு உற்பத்தி காலத்தில் 70 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 150 பேர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிப்பதுடன் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக சுமார் 200 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தற்பொழுது 32 நபர்கள் அலுவலக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

*சர்தார் வேதரத்னம் உப்புத் திட்டம் :*

1979 ஆம் ஆண்டில் இத்திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது 1985 ஆம் ஆண்டு ஜூலை முதல் ஆகஸ்டு வரை பெய்த பெருமழையினாலும் மற்றும் நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் மற்றும் வருட ஆரம்பம் முதல் பெய்த அடை மழை காரணமாகவும் இத்தொழிற்சாலையில் 6,403 மெட்ரிக் டன் உப்பு மட்டும் உற்பத்தி செய்ய முடிந்தது. முக்கிய கால்வாய் வெட்டவும் உப்பளப் பாத்திகள் அமைக்கவும் இன்ஜின் மற்றும் பம்புகள் போன்றவைகள் வாங்கவும் 1986 ஆம் வருடத்தில் ரூ. 10.96 இலட்சம் செலவிடப்படும். உயர் மின் அழுத்த வசதி பெறத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இவ்வாண்டு 10,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரயில் போக்குவரத்து வசதி இருப்பதால் உப்பு விற்பனை அதிகரிக்கும் இத் திட்டம் முழுமையாகச் செயல்படும்பொழுது 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 400, முதல் 500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். தற்பொழுது உப்பு பணிகளுக்காக சுமார் 200 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பும் 20 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

உப்பு கழிவு நீரை தயார் செய்யும் பதப்படுத்தப் படாத மற்றும் கலவு உப்புகளைத் தயார் செய்வதற்கான பணிகளில் சுமார் 75 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. பவ நகரில் உள்ள

மத்திய உப்பு மற்றும் கடல் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜீ. டி. பட் 36° உப்பு கழிவு நீர் உற்பத்திப் பணிகளை பார்வையிட ஜூலை 1985 ஆம் ஆண்டில் வாலிநோக்கம் உப்புத் திட்டத்திற்கு விஜயம் செய்தார். அவர் இது குறித்து வழி முறைகளையும் மற்றும் தொடர் நடவடிக்கை எடுக்க குறிப்பு ஒன்றையும் கொடுத்து உள்ளார். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. இதற்கு உப்பு வரிப் பணத்திலிருந்து உதவியும் பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மத்திய மற்றும் மாநில அரசு உதவியுடன் இரும்பு ஊட்டச் சத்துள்ள உப்பைத் தயாரிக்க இந்நிறுவனம் இசைந்துள்ளது. தேவையான கடன் உதவியுடன் இதற்கான ஆணை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநில அரசு மற்றும் உப்புத் துறையின் கூட்டுடன் வாலி நோக்கத்தில் மாதிரி உப்புப் பண்ணை ஒன்றை நிறுவ பவநகரி லுள்ள மத்திய உப்பு மற்றும் கடல் சார்ந்த இரசாயன பொருட் கள் ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனப் பணியாளர்கள் பயிற்சி பெறுவதுடன் உப்பு உற்பத்தியும் மேம்பட வாய்ப்பிருக்கிறது.

திட்ட உதவிகள் :

1986–87 ஆம் ஆண்டு திட்டத்தில் உப்புத் திட்டங்களுக்காக ரூ. 30 இலட்சம் பங்கு மூலதனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு 1987 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இழப்பைத் தவிர்க்கும்.

### தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை.

தொழில்களுக்குப் பயன்படும் சில முக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுப்பதற்கும் கரும்பாறை மற்றும் இதர நிறப் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் பணி களை மேற்கொள்ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் தற்போது ரூ. 300 லட்சம் ஆகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 197.50 லட்சம் ஆகும்.



1985–86 ஆம் ஆண்டில் (1985 டிசம்பர் முடிய) உற்பத்தி மற்றும் விற்பனை, 1984–85 ஆம் ஆண்டு உற்பத்தி மற்றும் விற் பனையுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. கனிமங்களின் உற்பத்தி :

| விபரம். | 1984–85 | | 1985–86 (1985 டிசம்பர் முடிய). | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்) | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்) |
| கரும்பாறை | 3,587 க.மீ. | 117.70 | 3,207 க.மீ. | 112.73 |
| சாம்பல் நிறப்பாறை | 3,432 க.மீ. | 42.80 | 2,662 க.மீ. | 35.41 |
| உயர்வகை கனிமங்கள் | 87,674 டன் | 49.80 | 1,15,709 டன். | 56.09 |
| | | 210.30 | | 204.23 |

கனிமங்களின் விற்பனை :

| விபரம். | 1984–85 | | 1985–86 (1985 டிசம்பர் முடிய). | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்) | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்) |
| கரும்பாறை | 3,165 க.மீ. | 221.82 | 2,755 க.மீ. | 207.80 |
| சாம்பல் நிறப்பாறை | 3,402 க.மீ. | 105.95 | 2,942 க.மீ. | 102.93 |
| உயர் கனிமங்கள் | 92,200 டன் | 80.43 | 1,04,978 டன். | 96.18 |
| | | 408.20 | | 406.91 |

1985–86 ஆம் ஆண்டின் வருவாய் ரூ. 600 லட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**டாமின் கிரெனைட் தொழிற்சாலை, மணலி.**

உலகச் சந்தையில் மெருகிடப்பட்ட பாறைகளுக்கு உள்ள கிராக்கியைப் பயன்படுத்திக்கொள்ள நவீனமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை ஒன்றை டாமின் சென்னைக்குப் பக்கத்தில் மணலியில் ரூ. 640 இலட்ச மூலதனத்தில் நிறுவியுள்ளது. இந்த தொழிற்சாலை 50,000 ச.மீ. மெருகிட்ட கற்பலகைகளும், மற்றும் 10,000 ச.மீ. மெருகிட்ட நினைவுக் கற்களும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு உற்பத்தி 25-3-1986-ல் தொடங்கப்பட்டது.

சிவகங்கை கிராபைட் திட்டம்.

கிராபைட்டைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு மற்றும் மூசைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ டாமின் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தை ரூ. 340.00 இலட்சம் மூலதனத்தில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு ரூ. 100 டன் கிராபைட்டைக் கொண்டு 14 டன் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட் தயாரிக்கும் திறன் வாய்ந்ததாக இருக்கும். இத்தொழிற்சாலை 1986-87 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

இந்நிறுவனம் சுமார் 3,200 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இது 1986-87 ஆம் ஆண்டில் 3,400 ஆக உயரும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் 1985-86 ஆம் ஆண்டில் செயல் ஆதாயமாக ரூ. 157.00 இலட்சம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இந்த செயல் ஆதாயம் ரூ. 112.00 இலட்சமாகும்.

அயல்நாட்டுக் கூட்டுறவில் கிராபைட் பொருட்கள் மற்றும் உருக்கிய குவார்ட்ஸ் தயாரிக்கும் தொழில்களை நிறுவ தமிழ்நாடு கனிம நிறுவனம் வழி வகைகளை ஆராய்ந்து வருகிறது.

தமிழ் நாடு மேக்னசைட் லிமிடெட், சேலம்.

17-1-1979 அன்று தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், மேக்னசைட்டை வெட்டியெடுத்து விற்கும் நோக்குடன் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. அரசு இந்நிறுவனத்திற்கு பங்கு முதலீடாக ரூ. 550 லட்சம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு மேக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் துணை நிறுவனமாகும்.



2. தொடக்கத்திலிருந்து மேற்கூறிய இரு நிறுவனங்களும் லாபத்தில் இயங்கி வருகின்றன. ஈட்டிய லாப விவரங்கள் வருட வாரியாக கீழே தரப்பட்டுள்ளன :

| வருடம். | தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட். | | தமிழ்நாடு மேக்னசைட் புராடெக்ட்ஸ் லிமிடெட். | |
|---|---|---|---|---|
| | வரி செலுத்து முன் லாபம். | வரி செலுத்திய பின் லாபம். | வரி செலுத்து முன் லாபம். | வரி செலுத்திய பின் லாபம். |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| 1979-80 .. | 35.35 | 28.52 | 4.34 | 1.74 |
| 1980-81 .. | 12.13 | 7.33 | 25.72 | 7.58 |
| 1981-82 .. | 32.34 | 24.14 | 5.48 | 2.86 |
| 1982-83 .. | 18.58 | 12.48 | 3.64 | 1.64 |
| 1983-84 .. | 32.32 | 24.82 | 3.45 | 2.82 |
| 1984-85 .. | 41.92 | 34.57 | 1.68 | 1.26 |

3. உற்பத்தி விற்பனை விவரங்கள் குறியீடுகளுடன் கீழே தரப்பட்டுள்ளன :

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.

| வருடம். | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | குறியீடு. | அடைந்தது. | குறியீடு. | அடைந்தது. |
| | (மெட்ரிக் டன்னில்.) | | | |
| 1979-80 .. | .. | 1,14,587 | .. | 1,05,079 |
| 1980-81 .. | 1,15,000 | 1,13,454 | 1,15,000 | 1,20,398 |
| 1981-82 .. | 1,27,000 | 1,32,993 | 1,26,000 | 1,27,846 |
| 1982-83 .. | 1,13,000 | 1,18,626 | 1,07,500 | 1,10,147 |
| 1983-84 .. | 1,20,000 | 1,17,856 | 1,07,000 | 1,07,818 |
| 1984-85 .. | 1,10,000 | 1,09,845 | 1,03,000 | 1,02,474 |

தமிழ்நாடு மேக்னைசட் புராடக்ட்ஸ் லிமிடெட்.

(மெட்ரிக் டன்னில்.)

| வருடம். | மிக குடேற்றப்பட்ட மாக்னைசட். | | | | முழு எரியூட்டப் பெற்ற மேக்னைசட். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி. | | விற்பனை. | | உற்பத்தி. | | விற்பனை. | |
| | குறியீடு. | அடைந்தது. | குறியீடு. | அடைந்தது. | குறியீடு. | அடைந்தது. | குறியீடு. | அடைந்தது. |
| 1979-80 .. | 10,000 | 8,622 | 10,000 | 8,228 | 7,200 | 1,717 | 7.200 | 1,717 |
| 1980-81 .. | 6,000 | 5,837 | 6,000 | 6,021 | 6,000 | 4,987 | 6,000 | 4,676 |
| 1981-82 .. | 6,000 | 3,549 | 6,000 | 3,235 | 8,000 | 2,172 | 8,000 | 922 |
| 1982-83 .. | 4,000 | 3,756 | 4,000 | 3,857 | 2,600 | 1,497 | 2,600 | 2,091 |
| 1983-84 .. | 4,800 | 4,631 | 4,800 | 4,605 | 3,200 | 3,000 | 3,200 | 3,852 |
| 1984-85 .. | 5,207 | 3,166 | 5,207 | 6,654 | 3,918 | 6,332 | 3,918 | 3,194 |



1986 ஏப்ரல் 23]

1. சுழலும் சூளைத் தொழிற்சாலை :

கச்சா மேக்னசைட்டைக் கொண்டு முழு எரியூட்டப்பெற்ற மேக்னசைட் தயாரிக்கும் சுழலும் சூளை திட்டம் ஒன்றை தமிழ் நாடு மேக்னசைட் லிமிடெட் ரூ. 765 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வெள்ளோட்டத்தில் உள்ளது. உற்பத்தி விரைவில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. இரசாயன முறை தரம் உயர்த்தும் திட்டம் :

ரூ. 58 கோடி மதிப்பீட்டில் இரசாயன முறை தரம் உயர்த்தும் திட்டத்தை நிறுவுவதற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் நிதி உதவிக்கு அணுகியுள்ளது. 1988 ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தி தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3. சூளைக் கற்கள் தயாரிக்கும் திட்டம் :

முழு எரியூட்டப்பெற்ற மேக்னசைட் மற்றும் உயர்தர ஸிண்டர்டு மேக்னீசியாவை கச்சாப் பொருள்களாகக் கொண்டு, தமிழ் நாடு மேக்னசைட் லிமிடெட் உயர்தர வெப்பந்தாங்கி கற்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கு தொழில்நுட்ப பதவி வழங்க ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரீப்ராக்டரீஸ் கன்சல்டிங் மற்றும் என்ஜினியரிங் ஜி.எம்.பி.எச். உடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தில் செலவு சுமார் 52 கோடியாகும்.

மைய அரசின் முதலீடுகள்.

மைய அரசு 1977-க்கும் பின்னர் தமிழ்நாட்டில் இரு புதிய தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது—ஒன்று சேலம் உருட்டாலை மற்றொன்று இராணிப்பேட்டையில் உள்ள பாரத கனரக மின் உபபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. தமிழ் நாடு அரசின் விடா முயற்சியால் திருச்சியில் ரூ. 70 கோடி முதலீட்டில் மிகு உலோக கலவை ஊடுருவல் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 12 இலட்சம் செலவில் 170 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்தி மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் ஒப்படைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூ. 376 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்படுத்தி வருகிறது. மணலியிலுள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ரூ. 170 கோடி செலவில் விரிவாக்கத் திட்டப் நிறைவேற்றப்

படுகிறது. மேலும் சென்னை உரத் தொழிற்சாலை ரூ. 550 கோடி செலவில் விரிவாக்கத் திட்டம் செய்யவிருக்கிறது. சேலம் உருக்காலை ரூ. 55.78 கோடி செலவில் சென்ஸிமிர் மில் ஏற்படுத்த இருக்கிறது. இந்துஸ்தான் டெலிபிரிண்ட்டர்ஸ் நிறுவனம் ரூ. 12.62 கோடி செலவில் மின்சார தட்டச்சு இயந்திரங்களையும் மின்னணுவியல் தட்டச்சு இயந்திரங்களையும் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இரண்டாவது சுரங்கத்தை 4.7 மில்லியன் டன்னிலிருந்து 10.5 மில்லியன் டன் வரைக்கும் மற்றும் இரண்டாவது அனல் மின் நிலையத்தை 630 மெகாவாட்டிலிருந்து 1,470 மெகாவாட்டாக 1983-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ரூ. 30 கோடி செலவில் மின்னணுவியல். தொழிற்சாலை ஒன்றை நந்தம் பாக்கததில் நிறுவ இருக்கிறது. மற்றும் இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனம் ரூ. 2 கோடி செலவில் பூச்சு தொழிற்சாலையும் ரூ. 1.97 கோடி செலவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையமும், ரூ. 10 கோடி செலவல் காந்த நாடா தயாரிக்கும் தொழிற்சாலையும் நிறுவியுள்ளது. மேலும் ரூ. 170 கோடி செலவில் எக்ஸ்ரே பிலிம் தயாரிக்கும் திட்டம் மைய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 200 கோடி செலவில் கலர் பாசிடிவ் பிலிம் தயாரிக்கும் திட்டத்தையும் உதகமண்டலத்திலேயே நிறுவுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

## இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை.

சுவிட்ஜர்லாந்து, ஜூரிச், சிலிரியன் திருவாளர்கள் சுவிஸ்கார் மற்றும் எலிகேப்டர் தயாரிப்பு நிறுவனத்தின் உடனுழைப்புடன் உருக்கி பற்றவைக்கப்பட்ட இலேசான எடையுள்ள ஆண்டி டெலஸ்கோப்பிக் கட்டுமான அமைப்புடன் கூடிய இணைப்பு பெட்டிகளைத் தயாரிப்பதற்காகச் சென்னை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை 1955-ல் அமைக்கப்பட்டது.

நிறைந்த வசதியுடனும், பாதுகாப்புடனும் பயணம் செய்வதற்கு ஏற்றபடி அமைதியாக ஓடவும் லேசான எடை கொண்டவலுவுடன் கூடியதுமான இணைப்புப் பெட்டிகள் இப்போது தயாரிக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் அகல இருப்புப் பாதையில் ஓடக்கூடிய 350 மூன்றாம் வகுப்புப் பெட்டிகளை மட்டுமே உற்பத்தி செய்வதற்கு ஏற்றவாறு இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பெட்டிகளில் இருக்கை வசதி, மின் விசிறி போன்றவற்றைப் பல்வேறு மண்டல இரயில்வே பிரிவுகள் செய்து தர வேண்டும். பின்னர் இரண்டாம் ஆண்டுத் திட்டத்தின் மத்தியில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்



யப்படும் அனைத்துப் பெட்டிகளுக்கும் இருக்கைகள், மின்சார விசிறிகள் போன்றவற்றை அமைப்பதற்கு வளாகத்தை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. இதற்குக் காரணம் வசதிகளைச் செய்து தருவதற்கு மண்டல இரயில்வே பணிமனைகளில் நிறுவுத் திறன் மிகவும் குறைவு. மேலும் அதிக அளவில் தொழில் நுட்ப உத்திகளைக் கைக்கொள்ளவும் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்திய இரயில்வேயின் பல்வேறு தேவைகளை இத்தொழிற்சாலை நிறைவு செய்கிறது. பிற நாடுகளுக்கும் இரயில் பெட்டிகளை ஏற்றுமதி செய்கிறது. அகல இருப்புப் பாதை குறுகிய இருப்புப் பாதை ஆகியவற்றிற்கான இரயில் பெட்டிகளையும் தூங்கும் வசதி கொண்ட இரயில் பெட்டிகள், அகல இருப்புப் பாதையில் செல்லும் குளிர்வசதியுடன் கூடிய முதல் வகுப்புப் பெட்டிகள், புறநகர் இரயில் போக்குவரத்திற்கான மின்சார இரயில் பெட்டிகள், டீசல் இரயில் கார்கள், இருப்புப்பாதை பதிவுக் கார்கள், இரண்டடுக்குப் பெட்டிகள், சமையல் வசதியுடன் கூடிய இரயில் பெட்டிகள், பாண்ட்ரி கார்கள், நுரை மெத்தையுடன் கூடிய தூங்கும் வசதிகொண்ட மூன்றடுக்குப் பெட்டிகள் ஆகியவற்றை இந்திய இரயில்வேத் துறைக்குத் தயாரித்து வழங்குவதும் இதன் பணியாகும். மேலும் இரயில் பெட்டிகளை உற்பத்திச் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. இரயில் பயணிப் பெட்டிகளை உற்பத்தி செய்வதில் உலகிலேயே மிக்ப்பெரிய தொழிற்சாலையாக இந்த இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு 750 இணைப்புப் பெட்டிகளை (பல வகையான பெட்டிகள்) உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும்.

இத்தொழிற்சாலையின் நிறுவத் திறன் 750 பெட்டிகள் என்றிருக்க 1984–85-ல் 825 இணைப்புப் பெட்டிகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டிலும் இதே அளவிற்கு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பு ரூ. 103 கோடியாக மதிப்பிடப்படுகிறது.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இத்தொழிற்சாலை குளிர்வசதியுடன் கூடிய முதல் வகுப்புப் பெட்டிகள், தூங்கும் வசதிகொண்ட இரண்டாம் வகுப்புப் பெட்டிகள், குளிர்வசதியுடன் கூடிய சேர் கார்கள், பவர் கார்கள், மின்சார இரயில்பெட்டிகள் இரண்டடுக்கு இரயில் பெட்டிகள், குளிர் வசதிகொண்ட தூங்கும் வசதியுடன் இரண்டடுக்குப் பெட்டிகள் உட்பட சுமார் 75 வகை கொண்ட 16,429 பெட்டிகளைத் (அனைத்து வசதிகொண்ட) தயாரித்துள்ளது.

தொழிற்சாலை— ஒரு கண்ணோட்டம்.
(31—12—1985 அன்றுள்ளபடி.)

| | |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. | ரூ. 10.25 கோடி |
| கூடுதல் செலவு .. .. .. | ரூ. 10.87 கோடி மொத்தம் ரூ. 21.12 கோடி. |
| உற்பத்தி தொடங்கியது .. .. | 2—1 —1955. |
| மொத்தப் பரப்பளவு (தொழிற்சாலையும் நகரியமும்). | 191.36 எக்டேர். |
| தொழிற்சாலை அமைந்துள்ள பரப்பளவு | 1,57,237 சதுர மீட்டர். |
| 31—12—1984-ல் உள்ள பணியாளர் எண்ணிக்கை. | 15,570 |
| நிறுவு திறன் .. .. .. | ஆண்டொன்றுக்கு அனைத்து வசதி கொண்ட 750 இணைப்புப் பெட்டிகள். |
| உற்பத்தி (1984 டிசம்பர் வரை) ... | 16,429 இணைப்புப் பெட்டிகள். |

1986—87 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்டம் :

1986—87 ஆம் ஆண்டு இத்தொழிற்சாலை சுமார் ரூ. 125 கோடி மதிப்புடைய 850 இணைப்புப் பெட்டிகளை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. அவற்றில் பின்வருவன அடங்கும் :

(அ) சென்டர் பேர்கப்லர், காற்றுத்தடைகள், வெளிநாட்டு வகை வெஸ்டிபுல், 110 மின்திட்ட அமைப்பு ஆகிய புதிய சாதனங்களைக் கொண்டு 12 ரேக்குகளுக்கான 323 இணைப்புப் பெட்டிகளை தென் பிராந்திய துரித இரயில் வண்டிகளுக்குத் தயாரித்து வழங்குதல்.

(ஆ) குறுகிய இருப்புப் பாதைக்கு குளிர் வசதி கொண்ட தூங்கும் வசதியுள்ள இரண்டடுக்குப் பெட்டிகள் :

(இ) வங்காள தேசத்திற்கு ஏற்றுமதி செய்ய 60 இரயில் பெட்டிகள் (7 வகை) தயாரித்தல்.



**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல் :**

ரூ. 37 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் இரயில் பெட்டிகளை உற்பத்திச் செய்வதற்கு ஏற்றவாறு இதன் திறனளவை உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 1986—87 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பழைய உதவாத எந்திரங்கள் தளவாடங்கள் ஆகியவற்றை மாற்றுதல், மேலும் அதிக இருக்கை வசதிக்கு வகை செய்தல், நவீன எந்திரங்களை நிறுவுதல் மூலம் நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றுதல், பல பாகங்களை ஒழுங்கு சேர்த்து பெட்டியாக உருவாக்கும் பிரிவை விரிவுபடுத்துதல், செய்முறைகளை நவீனப்படுத்துதல் ஆகியவற்றிற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14—11—1956 அன்று தொடங்கப்பட்டது. இது ஒருங்கிணைந்த தொழில் தொகுதி ஆகும். பின்வரும் தொழில் பிரிவுகள் அடங்கும் :—

(அ) திறந்த வகையிலான பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

(ஆ) அனல் மின் நிலையம்.

(இ) உரத் தொழிற்சாலை.

(ஈ) நிலக்கரி பாளங்கள் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை.

(உ) களிமண் சுத்தப்படுத்தும் ஆலை.

இச்சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையத்திற்கும் நிலக்கரி கட்டித் தயாரிப்புக் கரிம ஆலைக்கும் மூலப் பொருளாக உள்ளது. இரசாயன ஆலைகளில் பயன்படுத்தத் தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தேவைக்கு அனுப்பப்பட்ட பின்னர் தமிழ்நாடு மின்வாரியத்தின் மின் தொகுப்புக்கு அனுப்பப்படுகிறது. களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை பழுப்பு நிலக்கரி சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் கச்சா வெள்ளைக் களிமண்ணை செய்முறைபடுத்தி இதில் ஒரு பகுதியைத் தூளாக்கி தொழிற்சாலைப் பயனுக்கு உகந்ததாக விற்பனை செய்கிறது. லீக்கோ, சுட்ட நிலக்கரி ஆகியவை தொழில் எரிபொருளாக விற்பனை செய்யப்படுகின்றன.

தொழிற்சாலையின் நிறுவு திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(அ) சுரங்கம் 1 ஆண்டொன்றுக்கு 6.5 மிலியன் டன்.

(ஆ) அனல் மின் நிலையம் 1 600 மெ. வா.

(இ) உரத் தொழிற்சாலை : ஆண்டொன்றுக்கு 1,29,200 டன் யூரியா.

(ஈ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை; 2,62,000 டன்கள் கல்கரி ஆலை.

(உ) களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை : சுத்தப் படுத்தப்பட்ட 6,000 டன்.

(ஊ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலையில் உற்பத்தியாகும் தார்ப்பொருள்களிலிருந்து கீழ்க்கண்ட துணைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன :

| | | ஆண்டுத் திறனளவு (டன்னில்) |
|---|---|---|
| (1) | தார் | 29,500 |
| (2) | நியூட்ரல் எண்ணெய் | 2,900 |
| (3) | கார்பாலிக் அமிலம் | 880 |
| (4) | ஆர்த்தோ கிரிசால் | 120 |
| (5) | எம்.பி. கிரிசால் | 590 |
| (6) | கைலினோ | 135 |
| (7) | எம். பி. பினால் | 290 |

31—12—1985 உள்ளபடி முதலீடு (ரூபாய் லட்சத்தில்).

மூலதன பங்கு

(பங்கு மூலதனத்திற்குக் கொடுத்த முன்பணம் ரூ. 68,262.42 ரூ. 580 லட்சம் உட்பட).





நடப்பாண்டில் சாதனை (1985 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை).

| | | |
|---|---|---|
| 1. | லிக்னைட் | 50.94 டன் |
| 2. | மின்சக்தி (மில்லியன் யூனிட்டுகள்) | 2,865 |
| 3. | யூரியா டன் | 89,326 |
| . | கரி (டன்) | 1,39,302 |
| 5. | நெக்கோலின் | 1,140 |

கட்டுமானத் திட்டங்கள்

கீழ்க்காணும் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன :

(அ) ஆண்டொன்றுக்கு 4.7 மெட்ரிக் டன் லிக்னைட் கிடைக்கும் வகையில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்.

(ஆ) 630 மெகாவாட் திறனுள்ள இரண்டாம் அனல் மின் உற்பத்தி நிலையம்.

இரண்டாவது சுரங்கம் :

மேற்பரப்பு அகற்றும் திட்டங்கள் மூன்றும் நல்ல முறையில் செயல்படுகின்றன. சுரங்கத்தை முழுமையாக மேம்படுத்த 270 எல். எம். 3 மேற்பரப்பை அகற்ற வேண்டும். இவ்வாறு அகற்றும் பணி 1985 ஜூன் மாதத்தில் முடிவடைந்தது. 1985 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 152.51 எல். எம். 3. அளவில் மேற்பரப்பை அகற்றியிருப்பது திட்டமிட்ட இலக்கினைக் காட்டிலும் 46 சதவீதம் கூடுதலாகவே உள்ளது. இச்சுரங்கம் தொடங்கப்பட்டதிலிருந்து 1985 டிசம்பர் வரை மேற்பரப்பு அகற்றப்பட்ட மொத்த அளவு 384.07 ஆகும்.

லிக்னைட்டு திட்டம் 27—3—1985 அன்று செயற்படத் தொடங்கியது. இது நாள் வரை 71,000 டன் லிக்னைட் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையம் : முதல் கட்டம்-

210 மெகா வாட் திறனுள்ள மூன்றாவது மின் உற்பத்தி நிலையத்தை நிறுவும் பணி (இது முதற்கண் தொடங்கப்படும்) முன்னோடி நிலையில் உள்ளது. இப்பிரிவு 1986 மார்ச்சு மாதத்தில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது, முதலாவது மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இவை முறையே 1987 மார்ச்சு மாதத்திலும் 1988 மார்ச்சு மாதத்திலும் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விரிவாக்கத் திட்டங்கள் :

மத்திய அரசு கீழ்க்காணும் விரிவாக்கத் திட்டங்களுக்கு 1983 பிப்ரவரி மாதத்தில் அனுமதி வழங்கியது :

(அ) இரண்டாவது சுரங்கம் விரிவாக்கம் 4.7 மெட்ரிக் டன்னிலிருந்து 10.5 மெட்ரிக் டன்னாக அதிகரித்தல்.

(ஆ) இரண்டாவது அனல் மின் நிலைய விரிவாக்கம் 630 மெகா வாட்டிலிருந்து 1,470 மெகா வாட்டாக அதிகரித்தல்.

இரண்டாவது சுரங்கம்—இரண்டாவது கட்டப்பணி :

1,400 லிட்டர் B.W.E. 3,700 லிட்டர் B.W.E. 4 2,400/2,000 மி.மீ. அகலமுடைய கன்வேயர் பெல்டுகள் ஆகியவற்றிற்கு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

நேரடி வேலைவாய்ப்பு:

இரண்டாவது சுரங்கத்திற்கும் இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கும் (முதலாவது, இரண்டாவது கட்டப் பணிகள் உட்பட) மொத்தம் 13,050 பேர் கூடுதலாக தேவைப்படுவர். ஆயினும் பெரும்பாலான இயந்திரங்களும் சாதனங்களும் அதிக நுட்பம் வாய்ந்தவையாகவும் நவீன சாதனங்களும் இருப்பதால் உயரிய நுட்பத்திறன் வாய்ந்த தொழிலாளர்களே இதற்குப் பெரும்பாலும் தேவைப்படுவர்.

மறைமுகமான வேலைவாய்ப்பு :

இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்தில் முதலாவது கட்டுமானப் பணி நடைபெறும் இடத்தில் ஒப்பந்தக்காரர்கள் ஏராளமான தொழிலாளர்களை இப்போது வேலைக்கு அமர்த்தியிருக்கின்றனர். தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 2,700 பேர் ஆகும். இரண்டாவது சுரங்கத்தின் இரண்டாம் கட்டப் பணியும். இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணியும் தொடங்கும்போது ஒப்பந்தக்காரர்கள் ஏராளமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவர்



என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற் சொன்னவை தவிர மேற்குறிப்பிட்ட விரிவாக்கத் திட்டங்களின் பயனாக இன்னும் அதிகவேலை வாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை.:

டெலிபிரிண்டர்களையும் துணை சாதனங்களையும் தயாரிப்பதற்காக இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் ing. .C Ollvetti நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1960 டிசம்பரில் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம் ஆரம்பக் கட்டத்தில் 1964-ஆம் ஆண்டிற்குள் ஆண்டுக்கு 1,500 தொலைவரி தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கும் திறனை எட்டியது பின்னர் இத்திறனளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது இந்த நிறுவனம் ஆண்டிற்கு 8,500 தொலைவரி தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது.

நாட்டிலேயே பலவகையான தொலைவரித் தட்டச்சுப் பொறிகளையும் அவை தொடர்பான சாதனைங்களையும் தயாரிக்கும் ஒரே தொழிற்சாலையான இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் அஞ்சல் தந்தி துறை, பாதுகாப்புப் படை இரயில்வே விமானப் போக்குவரத்துத் துறை. செய்தி நிறுவனங்கள் மற்றும் தனியாரின் தேவையை நிறைவு செய்கிறது.

அஞ்சல், தந்தித் துறையிடமிருந்து குத்தகைக்கு விடப்பட்டுள்ள சர்கியூட்டுகளில் தொலை வரித் தட்டச்சுப் பொறிகளை இயக்குபவர்களுக்கு விற்கப்பட்ட எந்திரங்களையும் அது தொடர்பான சாதனங்களையும் பழுது பார்த்துச் செப்பனிடும் பணியை இந்த நிறுவனம் மேற்கொள்கிறது.

இந்த நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 592 இலட்சமாகும். 31—3—1985 அன்றுள்ளபடி இத்திட்டத்திற்கு பயன்படுத்திய மூலதனம் ரூ. 18.62 கோடியாகும்.

1984–85 இல் இந்த நிறுவனம் 7,680 தொலைவரித் தட்டச்சுப்பொறிகளை உற்பத்தி செய்தது. அதே ஆண்டில் ரூ.106.06 இலட்சம் மதிப்புடைய உதிரிப்பாகங்களையும் உற்பத்தி செய்தது.

**1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் வரையில் 5749 தொலைவரித் தட்டச்சுப் பொறிகளை மட்டுப் உற்பத்தி செய்தது.**

இதன் பல்திறப்படுத்தும் திட்டத்தில் ஒரு பகுதியாக இந்த நிறுவனம் மின்சார தட்டச்சுப் பொறிகளையும், மின்னணு தொலைவரி தட்டச்சுப் பொறிகளையும் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டு மின்சாரத் தட்டச்சுப் பொறிகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில் 90 சதவிகிதம் பணி முடிந்து விட்டது. இந்த நிறுவனம் 1986 ஆம் ஆண்டு ஜுன் மாதத் தொடக்கத்தில் உள்நாட்டு மின்சாரத் தட்டச்சுப் பொறிகளை தயாரித்து வழங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. வெவ்வேறு மாநிலங்களிலிருந்து வரக்கூடிய திட்டவட்டமான தேவைக் குறிப்புகளைப் பொறுத்து உள்நாட்டு மாதிரியிலான தேவனாகிரி மின்சாரத் தட்டச்சு பொறிகளையும் பிற மொழிகளில் அமைந்த மின்சார தட்டச்ப் பொறிகளையும் உற்பத்திசெய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம், ஓசூரில் மின்னணு தொலைவரித் தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்க பிரான்சு நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் சாகெம் என்ற நிறுவனத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஓசூரில் கட்டுமானப் பணி தொடங்கி விட்டது. 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் இது முடிவடையும். உடனுழைப்பு நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்படும் மின்னணு தொலைவரித் தட்டச்சு கருவிகளை சென்னை, கிண்டியிலுள்ள இந்த நிறுவனத்தின் தொழிற்சாலையில் ஒருங்கு சேர்த்து தட்டச்சுப் பொறியாக உருவாக்க முதற்கண் திட்டமிடப்பட்டுள்ளது. தேவநாகரி மின்சார தட்டச்சுப் பொறிகளையும் பிற மொழியில் அமைத்து மின்னணு தொலைவரித் தட்டச்சுப் பொறிகளையும் தயாரிக்க இந்நிறுவனம் திட்டம் தீட்டியுள்ளது.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம்
உதகமண்டலம்.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனம் 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது.

உற்பத்தி அளவு :

இந்நிறுவனம் நுட்பமான புகைப்படச் சுருள்களையும் காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஒருங்கிணைந்த உற்பத்தியில் அடங்கும் உற்பத்திப் பொருட்களாவன :—

(1) திரைப்பட பாசிடிவ் படச்சுருள்-கருப்பு-வெள்ளை
(2) திரைப்படச் சுருள் ஒலி நெகடிவ்
(3) மருத்துவ எக்ஸ் கதிர் படச்சுருள்
(4) புகைப்படக் காகிதம்



பெரிய படச்சுருள்களைச் சிறியனவாக மாற்றும் உற்பத்தியில் அடங்கும் பொருள்கள் :

(1) திரைப்பட கலர் பாசிடிவ் படச்சுருள்
(2) அமெச்சூர் நேரல் திரைப்படச்சுருள்-கருப்பு, வெள்ளை
(3) தொழில் எக்ஸ் கதிர் படச்சுருள்
(4) கிராபிக் ஆர்ட்ஸ் படச்சுருள்
(5) கலர் காகிதம்

இவை தவிர, எக்ஸ் கதிர் படச்சுருளை கிராபிக் ஆர்ட்ஸ் படச்சுருளைக் கழுவுவதற்காக இரசாயனப் பொருள்கள் தயாரிப்பதும் தயாரிப்புப் பகுதியில் ஒரு பகுதியாகும்.

நிறுவுத் திறன் :

இந்த நிறுவனம் ஆரம்பத்தில் 6.15 மில்லியன் சதுர மீட்டர் திரைப்படச் சுருள்களையும், காகிதங்களையும் உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருந்தது. 1981–82-ல் தொழிற்சாலையில் செய்த மாற்றங்களையும், 1967 ஆம் ஆண்டு வணிக உற்பத்தி தொடங்கியதிலிருந்து செய்து கொடுத்த வசதிகளையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த நிறுவுத் திறன் 7,673 மில்லியன் சதுர மீட்டர்களாக நிறுவனம் அதிகரித்திருந்தது. நிறுவுத் திறனை அதிகரித்த பின்னர் உதகமண்டலத்திலும் சென்னை அம்பத்தூரிலுமுள்ள இந்த நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் ஒருங்கிணைந்த உற்பத்திக்கும் பெரிய படச் சுருள்களைச் சிறியனவாக மாற்றும் உற்பத்திக்கும் மொத்த உற்பத்தித் திறன் 15,324 மில்லியன் சதுர மீட்டர்களாகும்.

| சாதனை. | 1984–85 கணக்குகள். | 1985–86 ஆம் ஆண்டுக்கு எதிர் பார்க்கப் படும் உற்பத்தி. |
|---|---|---|
| உற்பத்தி அளவு (மில்லியன் சதுர மீட்டர்). | 12,193 | 12,321 |
| உற்பத்தி மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 9,683 | 12,000 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 10,041 | 11,550 |
| ஆதாயம் (வரி செலுத்துவதற்கு முன்னர்) (ரூபாய் இலட்சத்தில்). | 631 | 700 |

முதலீடு:

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,632 இலட்சமாகும். இது தவிர 31–3–1985 ஆம் நாள் நிலவரப்படி இந்நிறுவனம் இந்திய அரசிடமிருந்து நீண்ட காலக் கடன் தொகையாக ரூ. 1,481 இலட்சம் பெற்றுள்ளது.

வேலை வாய்ப்பு:

31–12–1985 ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி இந்நிறுவனத்தில் 3,289 பேர் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனம் 32 துணைத் தொழில் பிரிவுகள் மூலம் 1,000 பேருக்கு பிறவகையில் வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

நடப்பு ஆண்டில் சாதனை:

நடப்பு ஆண்டில் 12,321 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 8,115 இலட்சம் மதிப்புடைய 9.068 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. இதைப் போன்றே இக்கால அளவிற்கான விற்பனை ரூ. 6,966 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டிருக்க ரூ. 6,553 இலட்சம் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

விரிவாக்கத் திட்டங்கள்:

கூடுதல் மேல் பூச்சு தொழில் பிரிவு ரூ. 200 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் முடிக்கப்பட்டு 13–1–1985 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனத்திற்கு அதிகப்படியாகத் தேவைப்படும் அதாவது ரூ. 1.8 மில்லியன் சதுர மீட்டர் எக்ஸ் கதிர்படச்சுருளை வழங்குவதற்கும் அமைச்சூர் ரோல் படச் சுருள்களை ஒருங்கிணைந்த முறையில் தயாரிக்கவும் இத் தொழில் பிரிவு உதவியாக இருக்கும்.

அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்தை அமைக்கும் திட்டம் குறித்த பணி ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நடந்தேறி வருகிறது. இந்நிறுவனம் 1986 ஆம் ஆண்டு மே திங்களில் தயார் நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



காந்த நாடா தயாரிப்புத் தொழிற்சாலை:

உதகமண்டலத்தில் ரூ. 1,000 இலட்சம் முதலீட்டில் பல்வேறு வகை காந்த நாடா தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றினை நிறுவ அரசின் ஒப்புதல் கிடைத்துள்ளது. வெளி நாட்டு உடனுழைப்பிற்கு இந்நிறுவனம் செய்து கொண்ட விண்ணப்பத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

பாலியெஸ்டர் எக்ஸ் கதிர், (கிராபிக்) ஆர்ட் படச் சுருள்களை உற்பத்தி செய்தல்:

உதகமண்டலத்திலுள்ள இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனத்தை விரிவுபடுத்தும் ஒரு பகுதியாக ரூ. 170 கோடி செலவில் பாலியெஸ்டர் எக்ஸ் கதிர் (கிராபிக் ஆர்ட்) சுருள் தயாரிக்கும் பிரிவை ஏற்படுத்துவது குறித்து இந்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. தூய்மைக்கேடு கட்டுப்பாடு என்ற நோக்கில் ஒப்புதலைப் பெறுவது குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.. இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

ரூ. 200 கோடி செலவில் திரைப்படச் சுருள் தயாரிக்கும் திட்டத்தை உதகமண்டலத்தில் ஏற்படுத்த விரைந்து ஒப்புதல் வழங்குமாறு வற்புறுத்தி முதல்வர் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பாரத் கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி :

திருச்சியிலுள்ள உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை 1960 ஆம் ஆண்டுக்கு முன்னமேயே திட்டமிடப்பட்டு 1965 ஆம் ஆண்டு ரூ. 152.27 கோடி மூலதனத்தில் உற்பத்தியைத் தொடங்கியது. தொடக்கத்தில் 24.5 கோடி முதலீடு செய்யப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 750 MWC கொண்ட கொதிகலன் உதிரிபாகங்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் இந்த தொழிற்சாலை வடிவமைக்கப்பட்டது. இது இந்திய-செக்கோஸ்லேவேக்கியா பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்துடன் செக்கோஸ்லேவோக்கியா உடனுழைப்புடன் தொடங்கப்பட்டதாகும்.

குறிப்பட்ட காலத்திற்குள் இதன் உற்பத்தித் திறனை எய்தியது. கூடுதலாக ரூ. 4.08 கோடி ரூ. 17.86 கோடி முதலீடு செய்து முறையே ஆண்டொன்றுக்கு 1,100 மெகா வாட், 2,500 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் விரிவாக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

விரிவாக்கத் திட்டத்தின் அடுத்தக் கட்டப்பணி ரூ. 35.48 கோடி செலவில் அண்மையில் முடிக்கப்பட்டுள்ளது. இதனால் இத் தொழிற்சாலையின் திறன் ஆண்டொன்றுக்கு 4,000 MWC ஆக உயர்ந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக அதற்கிணையாக வேறு பொருட்களைத் தயாரிக்கும் ஒரு முயற்சியாக ரூ. 58.2 கோடி முதலீட்டுடன், 40,000 டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் பற்றவைப்பு இணைப்பில்லாத உருக்குக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இது இபபோது வணிக உற்பத்தியைப் தொடங்கியுள்ளது.

திருச்சியில் தொழிற்சாலை அடைப்பிதழ்களைத் (Va ves) தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் திறன் ரூ. 5.67 கோடி முதலீட்டுத் திட்டத்தின் மூலம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

திருச்சியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனத்தில் 18,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருச்சி பாரத் கனரக மின் நிறுவனத்தின் பயிற்சி நிலையம் மனித ஆற்றலை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பணிப்பண்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் நன்முறையில் செய்யப்பட்டுள்ளன. 'பெல்' நிறுவனம் இவ்வகையில் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டும் வகையில திருச்சி 'பெல்' நிறுவனம் தொடர்ந்து பல தேசிய பன்னாட்டுப் பரிசுகளைப் பெற்றுள்ளது.

துணை / சிறு தொழிற்பேட்டை 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இப்போது பாரத் கனரக மின் நிறுவனத் துணை/சிறு தொழில் பிரிவுகளில் சுமார் 12,000 பேர் பணிபுரிகின்றனர். ஆனால், 1969 ஆம் ஆண்டு 200 பேர் மட்டுமே பணிபுரிந்தனர். துணை/சிறு தொழில் பிரிவுகள் அண்டை மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. துணை/சிறு தொழில்கள் பிரிவுகளின் வளர்ச்சி பாரத் கனரக மின் நிறுவனத்தின் விரைவான வளர்ச்சிக்கு இணையாக உள்ளது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனம் 1967–68 ஆம் ஆண்டில் ஆதாய—இழப்பு அற்ற நிலையை அடைந்தது. 1984-85 ஆம் ஆண்டில திருச்சியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனம் அரசுக் கருவூலத்திற்கு ரூ. 106 கோடி ஈட்டித் தந்துள்ளது. 1—1—1968 ஆம் நாளன்று இந்நிறுவனத்தில் மனித ஆற்றல் 18,435 ஆகும்.



பெல் நிறுவனம் சமூக விழிப்புணர்வைக் காட்டி வருவதுடன் சமுதாயப் பணியினைச் செய்து வருகின்றது. இந்நிறுவனம் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் அருகிலுள்ள கிருஷ்ண சமுத்திரம், காந்தலூர் கிராமங்களுக்கு உதவும் வகையில் இக்கிராமங்களில் பள்ளிக்கூடங்கள, சமுதாய சுகாதார மையங்கள், தெரு விளக்குகள் ஆகியவற்றை அமைத்து வருகின்றது. சமீபத்தில் திருச்சி பெல் நிறுவனம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அருகிலுள்ள கீழக்குறிச்சி கிராமத்தில் கதிரொளி விசையில் இயங்கும் தெரு விளக்குகளை அமைத்துள்ளது. இந் நிறுவனம் காற்றாலைகளை நீரேற்றுப் பொறிகள் அமைத்துள்ளதுடன் வானொலி, தொலைக்காட்சி, போன்ற செய்தித் தொடர்பு வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

இந்திய மருந்துகள்— மருந்துப் பொருள்கள் உற்பத்தி நிறுவனம், நந்தம் பாக்கம்:

166 வகையான அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்புக் கென்று ரஷிய நாட்டின் கூட்டு முயற்சியுடன் இத்தொழிற்சாலை 1961-ல தொடங்கப்பட்டது. ரூ. 5 கோடி மூலதனத்துடன், மத்திய அரசின் நிறுவனமாக பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் அமைச்சகத்தின் பொறுப்பில் இத்தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

ஆண்டுக்கு 2·5 மில்லியன் கருவிகள் உற்பத்தி செய்யும் உரிமம் பெற்று அதே அளவு உற்பத்தி செய்ய நிறுவனத் திறன் கொண்டு 1965 செப்டம்பரில் அறுவை சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி தொடங்கியது. மருத்துவத் தொழிலில் மேலாட்டுப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்தியாவில் ரஷிய நாட்டு வடிவமைப்புப் பொருள்களுக்கு வரவேற்பில்லாது போயிற்று.

இந்த அடிப்படையில் இந்திய மருத்துவத் துறைக்கு ஏற்றாற் போல் ரஷிய வடிவமைப்பை மாற்றும் பணியையும் மருத்துவத் துறைக்குப் புதிய கருவிகள் பலவற்றைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தும் பணியையும் இத் தொழிற்சாலை தொடங்கியது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, மணலி:

இத்தொழிற்சாலை 1965-ல் நிறுவப்பட்டது. இது 1960-ல் உற்பத்தியைத் தொடங்கியது. இது ஆண்டொன்றுக்கு 25 மெட்ரிக் டன் குருட் எண்ணெய் சுத்திகரிக்கும் நிறுவனத் திறன் வாய்ந்தது. இது மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய் அதிவேக டீசல், மிதவேக டீசல், ஊதுலை எண்ணெய் வகைகள், சமையல் எரி வாயு, மசகெண்ணெய், இரச கற்பூரத் தைலம் முதலான பெட்ரோலியப் பொருட்களைச் சுத்திகரிக்கிறது.

ரூபாய் 13.5 கோடி ரூபாயாக இருந்த இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிகரப் பங்கு மூலதனம் 1984 பிப்ரவரியில் 135 கோடியாக உயர்த்தப்பட்டது. இத் தொழிற்சாலை சுமார 2,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் சுமார் 3,000-க்கும மேற்பட்டோருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

உற்பத்தி உயர்வுக்குத் தடையாக இருந்த சில இடையூறுகளைக் களைந்தும், சமசீர் சாதனங்கள் (Balancing equipment) சிலவற்றை நிறுவியும் இந் நிறுவனத் திறன் அளவு 2.5 மில்லியன் டன்னிலிருந்து 2.8 மில்லியன் டன்னாக பின்னர் உயர்த்தப்பட்டது. அதன் பிறகு இந்த சுத்திகரிப்பு ஆலை அதன் திறனை இரண்டு மடங்காக அதாவது ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன்னாக உயர்த்தியுள்ளது. ஆண்டொன்றுக்கு 20,000 டன் பாரபின் மெழுகு உற்பத்தி செய்யும் பாரபின் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவியுள்ளது.

ரூபாய் 17,74 கோடி செலவில் கட்டுமானம் பெற்ற இந்த பாரபின் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை 31—3—1984-ல் இருந்து உற்பத்தியைத் தொடங்கியது. அதில் '' கிலோ காண்ட்ராக்டிங் '' தொழிற்சாலை மட்டும் செயல்படவில்லை அது விரைவில் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப் படுகிறது. தீப்பெட்டிகள், மெழுகு வத்திகள் முதலானவற்றின் உற்பத்திக்குத் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில், மிகச் சிறு தொழில் துறைகள் பயன்படுத்திவரும் தீக்குச்சி, மெழுகு நிர்ணய (Standard) தர மெழுகு முதலியவற்றை விநியோகிக்க '' சிட்கோ '' நிறுவனம் இந்த சுத்திகரிப்பு ஆலையின் விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளது. '' கிலோ காண்ட்ராக்டிங் '' தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது. வெள்ளை நிற பாரபின் இத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருளாகும். நிர்ணய தரத்திற்கேற்ப இதன் உற்பத்திப் பொருள்கள் இருக்கும்.

புதிய தொழிற்சாலைத் திட்டங்கள்.

(அ) மசகெண்ணெய் உற்பத்தி விஸ்தரிப்பு:

மசகெண்ணெயை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உற்பத்தித் திறனை ரூபாய் 94.0 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு சுமார் 270,000 டன்னாக (ஆண்டொன்றுக்கு 50,000 டன் நிலையான இருப்பு (Bright Stock) உட்பட) விரிவுபடுத்தக் கருதப் பட்டுள்ளது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத் திட்டப் பணியைச் செயற்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.



(ஆ) புரோபைலீன் உற்பத்தி :

ஆண்டொன்றுக்கு சுமார் 16,000 டன் முதல் 17,000 டன் வரை ரூபாய் 13.8 கோடி மதிப்பீட்டுச் செலவில் புரோபைலீன் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றினை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப்பணி 1988 மத்தியில் முடிக்கப்பெறுமென எதிர் பார்க்கப்படுகிறது. (இ) சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் மண்ணெண்ணெய் இருப்பை (Kerosene fuel stock) பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 50,000 டன் லீனியர் ஆல்கைல் பெஞ்சின் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு (டிட்கோ/ஸ்பிக் கூட்டு முயற்சி) உரிமம் ஒன்று வழங்கப்பட்டு உள்ளது.

(இ) நறுமணம் பொருள்கள் உற்பத்தி:

ஆண்டொன்றுக்கு 1,50,000 டன் சுத்திகரிக்கப்பட்ட டெரப்தாலிக் அமிலம் ( Purified terephthalic acid ) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு தோராயமாக ரூபாய் 600 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை உர நிறுவனம் , சென்னை:

சென்னை உர நிறுவனம், மத்திய அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1966 டிசம்பரில் தொடங்கப்பட்டது. இதில் மத்திய அரசு 51 சதவீதமும், அமெரிக்காவில் உள்ள அமோகோ இந்தியா நிறுவனமும், ஈரானில் உள்ள டெஹரானிலுள்ள தேசீய ஈரானிய எண்ணெய் கம்பெனியும் ஒவ்வொன்றும் 24.5 சதவீதம் மூலதனப் பங்குகளை வைத்துள்ளன. 1985-ஆம் ஆண்டில் பங்கு தாரர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பலனாக,'' அமோகா இந்தியா '' கம்பெனியின் பங்கு முழுவதையும் மத்திய அரசும், தேசீய இரானியர் எண்ணெய்க் கம்பெனியும் வாங்கியுள்ளது. எனவே, இந்த உர நிறுவனத்தில் தற்போதுள்ள பங்கு விவரங்கள் வருமாறு : மத்திய அரசு 67.55 சதவீதம் ; தேசீய ஈரானிய எண்ணெய்க் கம்பெனி 32.45 சதவீதம் : சென்னை உர நிறுவனத்தின் நிறுவு திறன் நாளொன்றுக்கு அமோனியா 750 மெ. டன், யூரியா 885 மெ. டன். என். பி. கே. காம்ப்ளக்ஸ் உரம் 1,800 மெ. டன் ஆகும். இந் நிறுவனம் 1971 நவம்பர் முதல் வர்த்தக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

சென்னை உர நிறுவனம் பணியாளர்களுக்கு ஏலாமை ஏற்படுத்தும் காயம் ஏதுமில்லாமல் 19.80 மில்லியன் மனித நேரங்களை ஈட்டித் தொடர்ந்து உலக சாதனை புரிந்து வருகிறது.

சென்னை உர நிறுவனத்தின் முதன்மையான அங்காடிப் பகுதிகள் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகியவையாகும். சென்னை உர நிறுவனம் தமது உற்பத்திப் பொருள்களை மேற்படி அங்காடிப் பகுதிகளுக்கு நேரடியாக விற்பனை செய்கிறது. '' விஜய் '' என்ற பெயரில் சென்னை உர நிறுவன உற்பத்திப் பொருள்கள் அறிமுகப் படுத்தப்படும். எல்லா இடங்களிலும் நன்கு பிரபலமாகி அமோக அளவில் விற்பனையாகியுள்ளது.

31—12—1985 அன்று இந்நிறுவனத்தில் 1,341 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். நவீன அறிவியல் சாகுபடி முறையை உழவர்கள் பின்பற்றச் செய்யும் நோக்கத்துடன் உழவர்களுக்குப் பல பணிகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை உர நிறுவனம் வேளாண்மை உற்பத்திக்கான அண்மைக்காலத் தொழில் நுட்பங்களை உழவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், நீண்ட கால வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் கிராமப்பணி ஏற்புத் திட்டங்கள், ஒலி—ஒளிக்காட்சித் திட்டங்கள் நுகர்வோர் தொடர்பு முனைப்புத் திட்டங்கள் ஆகிய திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை உர நிறுவனம், ரூபாய் 550 கோடி செலவில் நாளொன்றுக்கு 1,350 மெ.டன் அமோனியா உற்பத்தி செய்யும் இயந்திரமும், நாளொன்றுக்கு 2,000 மெ. டன். யூரியா உற்பத்தி செய்யும் இயந்திரமும், நாளொன்றுக்கு 800 மெ. டன் கூடுதலாக டி.ஏ.பி. உற்பத்தி செய்யும் இயந்திரமும் நிறுவுவதன் மூலமாக தமது உற்பத்தியை இரட்டிப்பாக்கக் கருதியுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு இம்மாநில அரசு மத்திய அரசை அமைச்சர் அளவில் வற்புறுத்தி வருகிறது.

படைக்கலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி:

இத்தொழிற்சாலை சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இத்தொழிற்சாலையில் அலுவலர்கள் பணியாளர்கள் தொழில் அமைப்பு, தொழிலாளர்கள் உட்பட 2,900-க்கும் மேற்பட்டவர்கள் தற்போது பணிபுரிகின்றனர்.

இராணுவத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இத்தொழிற்சாலையில் பல்வேறு வகை சிறிய நடுத்தர படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தித் திறன் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திறனளவுகள் இத்தொழிற்சாலையிலேயே ஏற்படுத்தப்படும்.



திருச்சிராப்பள்ளி படைக்கலன்கள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அருகாமையில் சிலவகை வெடிமருந்து குண்டுகள் தயாரிப்பதற்கான தனித் திட்டம் ஒன்று பாதுகாப்பு அமைச்சகத்தில் உருவாகி வருகிறது. முதலமைச்சர் இதற்காக 4—3—1984 அன்று அடிக்கல் நாட்டினார். ரூபாய் 12 இலட்சம் செலவில் 170 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தி, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் ஒப்படைக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 376 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம் செயற்படுத்தி வருகிறது.

சேலம் உருக்காலை, சேலம்.

சேலம் உருக்காலை மத்திய அரசு நிறுவனமான இந்திய உருக்காலை நிறுவனத்தின் ஒரு பிரிவாகும் (SAIL) 2,20,000 டன் எவர் சில்வர் மின் உருக்கிகள், ஏனைய தனி உருக்குகள் ஆகியவற்றை இரு நிலைகளில் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றினை அமைக்கவுள்ளது என்று சேலம் உருக்காலை தனது திட்டம் குறித்த விரிவான அறிக்கையில் தெரிவித்துள்ளது. பிந்திய ஒருங்கிணைப்புக் கொள்கை அடிப்படையில் இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு மட்டுமே இசைவளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி 13—9—1981 அன்று தொடங்கப்பட்டது. வணிக ரீதியான உற்பத்தி 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கப் பட்டது.

இந்த முதல் கட்டப் பணியில் இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர்சில்வர் மென் உருக்குத் தகடுகள், சுருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது. தற்சமயம், உருக்குப்பட்டைகள் இரு பொருட்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. மூலப் பொருட்களை உள்நாட்டிலேயே பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இத்தொழிற்சாலையின் முதல் கட்டத்தில் 1,380 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையில் உற்பத்திப் பிரிவு பராமரிப்பு கட்டுமானம் பொது நிருவாகப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் உட்பட இன்றுள்ளபடி 1,221 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

பணியிடத்தில் கட்டுமானப் பணி உச்ச நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சுமார் 4,000 முதல் 6,000 பணியாளர்கள் பணி புரிந்தனர். கட்டிடக் கட்டுமானப் பணியிலும் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும் பராமரிப்புப் பணியிலும் தற்போது சுமார் 400 பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

[1986 ஏப்ரல் 23

இத்தொழிற்சாலையின் முதல் கட்ட மூலதனச் செலவு 181.19 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை தொடங்கப்பட்டதிலிருந்து 1983 டிசம்பர் திங்கள் வரை 51,467 டன் உருக்கிகளை உற்பத்தி செய்துள்ளது. ஆஸ்டெனைடிக் சிதைவு உலோகம் (Martensite) இரும்பு சார்ந்த உலோகத் தரங்கள் உட்பட பலவித செய்முறை வேலைகள் நடத்துவதற்கேற்ற வகையில் இத்தொழிற்சாலை ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும், இத்தொழிற்சாலை இத்தகைய உலோகங்களைத் தரப்படுத்துவதிலும் வேலை நிறைவு செய்வதிலும் பல்வேறு பருமன்களில் அவற்றைத் தயாரிப்பதிலும், வெற்றிகரமாகப் பணியாற்றி வருகிறது. பல்வேறு சாதனத் தயாரிப்பாளர்களின் தேவைக் குறியீடுகளுக்கு ஏற்ப இரசாயனத் தொழில் சாதனம், பஞ்சாலை எந்திரங்கள், பால் பண்ணை இரசாயன உர உற்பத்திச் சாதனங்கள் முதலியவை இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

இத்தொழிற்சாலை தொடங்கிய நாளிலிருந்து, உண்மையில் செய்யப்பட்ட உற்பத்தி, திட்ட இலக்குகளில் நிறைவேறிய சதவீதம் ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | உற்பத்தி (டன்களில்) | நிறைவேற்றிய சதவீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1981-82 .. .. .. | 3,214 | 101 |
| 1982-83 .. .. .. | 6,747 | 109 |
| 1983-84 .. .. .. | 6,934 | 73 |
| 1984-85 .. .. .. | 17,127 | 162 |
| 1985 டிசம்பர் வரை .. | 17,445 | 113 |

தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களின் உற்பத்தித் திறனை உரிய அளவு பயன்படுத்துவதற்காக 55.78 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், இரண்டாம் சென்ஸிமிர் (Second sendzimir) ஆலை நிறுவுவதன் மூலம் இந்த ஆலையின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் இரும்பு உருக்கு தயாரிப்பு, உருக்கினை உருக்கிப் பொருள்கள் தயாரிக்கும் முறை ஆகியவற்றில் கணிசமான அளவிற்குத் தொழில் நுட்ப மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இத்தொழிற் நுட்ப வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டு இந்திய உருக்காலை நிறுவனப் பொறியியல்-தொழில் நுட்ப நிலையம், வடிவமைப்புப் பிரிவு ஆகியவை குறித்து விரிவான திட்ட அறிக்கையை நாளது வரையில் தயாரிக்கத் தொடங்கியது, பொறியியல்—தொழில் நுட்ப நிலையம் அதன் அறிக்கையை அனுப்பியுள்ளது. அதனை இந்திய உருக்காலை நிறுவனம் ( SAIL ) பரிசீலித்து வருகிறது.



1986 ஏப்ரல் 23]

விற்பனை வளர்ச்சி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன், விற்பனை வளர்ச்சி நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. விற்பனை வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு இணையாக உற்பத்திப் பொருள் மேம்பாட்டுத் திட்டங்கள் பலவற்றையும் இத்தொழிற்சாலை வகுத்துள்ளது.

இத்தொழிற்சாலைக்கருகில் 785 வீடுகள் அடங்கிய நவீன நகரியம் ஒன்று கட்டப்பட்டது. இக்குடியிருப்புப் பகுதிகளில் 18 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை தொடக்கப் பள்ளி, நல நிலையம், கடைகள் தொகுதி போன்ற குடியிருப்பு சாராக் கட்டிடங்களும் அடங்கும்.

பாரத கனரக மின் நிறுவனம் (கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை)

இத்தொழிற்சாலை, வட ஆற்காடு மாவட்டம் இராணிப் பேட்டையில் 57,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் அமைக்கப் பெற்றுள்ளது. இது சுமார் 4,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பளிக்கிறது.

இத்தொழிற்சாலை கட்டுமான நிலைகளிலேயே உற்பத்தியைத் தொடங்கி, முதலாண்டில் அதாவது 1982-83 ஆம் ஆண்டில் சுமார் 17,000 மெட்ரிக் டன் உற்பத்தியை எய்தியது. நிதியாண்டில் அதாவது 1984—85 ஆம் ஆண்டில் சுமார் 38,600 மெட்ரிக் டன் உற்பத்தி எய்தப்பட்டது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் துணை தொழிற் பிரிவுகளை மேம்படுத்துவதற்காக சுமார் 43 தொழில் முனைவோர்கள் தயாராக உள்ளனர். பெரும்பான்மையான துணைத் தொழிற் பிரிவுகளில் உற்பத்தி தொடங்கப்பட்டது. 1984—85 ஆம் ஆண்டில் சுமார் 15,000 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டது.

இத்தொழிற்சாலையில் இதுவரை முன்னாள் நில உரிமையாளர்கள் குடும்பங்களிலிருந்து சுமார் 525 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்குள் சரக்குகளை எடுத்துச் செல்வதற்காக இரயில்வே சிறிய பக்க இருப்புப் பாதை போடும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

எண்ணெய் எரிவாயுக் கமிஷனின் தமிழ்நாட்டில் பெட்ரோலியம் ஆய்வு.

எண்ணெய் எரிவாயுக் கமிஷன் தென் பிராந்தியத் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் 25,000 ச.கி.மீ. கொண்ட கடற்கரைப் பகுதியிலும், 23,000 ச.கி.மீ. தொலைவில் கடல் பகுதியிலும் இக்கமிஷன் பெட்ரோலிய ஆய்வு நடத்தி வருகிறது. படி நிலப்பகுதி முழுவதிலும் அதை ஒட்டிய தீபகற்ப பகுதியிலும் புவிஇயல் இயற்புவியியல் வேதியியல் ஆய்வுகளை விரிவாக இக்கமிஷன் நடத்தி வருகிறது. ''ஜுராஸிக்'' காலத்திலிருந்து அண்மைக் காலம் வரை இங்கு கிடைக்கும் படிமங்கள் பாறை வடிவில் உள்ளன.

2. மேலே காணப்பட்ட புள்ளி விவர அடிப்படையின் பேரில் காவிரி வடிநிலப் பகுதியில் மொத்தம் இதுவரை 38 கிணறுகளில் துளையிட்டதில், காரைக்கால், கோவில்களப்பால், நரிமணம், மாதனன் மற்றும் மூன்று தொலை கடல் பகுதிகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டன. கோவில் களப்பால் பகுதியிலுள்ள கிணற்றில் துளையிடும் விரிவாக்கப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேலும் இதைப்போன்று நரிமணம் காரைக்கால், பி.எச். 9 போன்ற பகுதிகளில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் நமது முதல் அமைச்சர் அவர்கள் பிரதம மந்திரி அவர்களுக்கு கீழ்க்கண்டவை குறித்து ஒரு நேர்முக கடிதம் எழுதியுள்ளார்:

(1) காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் எரிவாயுக் கமிஷனால் எண்ணெய் துருவும் பணியைத் துரிதப்படுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்குதல்;

(2) துளைபோடும் 'ரிக்' எந்திரங்களை அதிகப்படுத்தி காவிரி வடிநிலப் பகுதிகளில் எண்ணெய் துருவும் பணியினைத் துரிதப்படுத்தல்;

(3) 7-வது ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில், 1986-87 ஆரம்பத்தில் உலக வங்கியின் உதவியினை நாடல்.

3. மைய அரசு 6-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் காவிரிப் படுகைகளில் எண்ணெய் துருவும் பணிக்காக ரூ. 135 கோடி செலவு செய்திருந்ததாகவும், அதேபோல் 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதைவிட இருமடங்கு அதிகம் செலவிடவுள்ளதாகவும், உலக வங்கியின் உதவியை நாடவில்லையென்றும் இரஷ்ய நாட்டுடன் ஒருங்கிணைந்த எண்ணெய் துருவும் பணியை காவிரிப் படுகைகளில் தொடங்க உள்ளது என்றும் மைய அரசு தெரிவித்துள்ளது.



4. தஞ்சாவூர் மாவட்டம், நரிமணம் பகுதியில் 1 கிலோமீட்டர் பரப்பளவிற்கு பெட்ரோலிய ஆய்வு உரிமம் எண்ணெய் எரிவாயுக் கமிஷனுக்கு அக்டோபர் 1985-ல் 4 ஆண்டுகளுக்கு வழங்கப் பட்டது. அந் நிறுவனம் பெட்ரோலியம் துருவும் பணியை 1-4-1985 முதல் ஆரம்பித்தது. தற்போது எண்ணெய் எரிவாயுக் கமிஷன் அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பெட்ரோலிய ஆய்வு உரிமத்தை சுரங்கக் குத்தகையாக மாற்றி 20 ஆண்டுகளுக்கு குத்தகை வழங்க அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. அந்நிறுவனத்திற்கு சுரங்கக் குத்தகை வழங்கு முன்னர் நரிமணம் பகுதியில் 1 சதுர கி.மீ. பரப்பிற்குட்பட்ட பகுதியில் முன்னுழைவு செய்து குறிப்பிட்டபடி அது தனது உற்பத்தியினைத் தொடங்க அரசு முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நிதியுதவி, தவறான நிர்வாகம் மற்றும் வேறு பல காரணங்களினால் நலிவுறும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காக அரசு தமிழ்நாடு விடுப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ன் கீழ் இந்நிறுவனங்களை விடுப்பு நிறுவனமாக அறிவிக்கின்றது. விடுப்பு நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் உதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கு இச்சட்டம் வழி செய்கிறது. இச் சட்டத்தின் கீழ் விடுப்பு நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்றும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவை, பின் வருமாறு:—

திருவாளர்கள்.

1. ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

2. சதர்ன் ஸ்விட்ச்கியர்ஸ் லிமிடெட், சென்னை.

3. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

4. மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

5. அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

6. பிளாஸ்டிக் ரெஸின் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சாகுபுரம், திருநெல்வேலி.

7. மாருதி கிரிஸ்ட்டல்ஸ் சால்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.

8. சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.

9. குன்னியூர் பேப்பர் அண்டு போர்ட் மில்ஸ் லிமிடெட், சென்னை.

10. தி ஜெனரல் ரிப்ளெக்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை.

சேலத்திலுள்ள சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு நடைமுறை மூலதனத்திற்காக இந்தியன் வங்கி அளித்துள்ள ரூ. 14.35 இலட்சங்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

நலிவுற்ற தொழில் பிரிவுகள் நிதிப் பற்றாக்குறையினால் விற்பனை வரி பாக்கிகளையும் பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலப தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத்தொழில் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மத்திய மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேலும் இதற்கான விற்பனை விலைச் சலுகைகளையும் அளிக்கின்றது.

தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் (டாசல்).

தமிழநாடு பீங்கான் நிறுவனம், 14—12—1973-ல் ரூ. 200 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தோற்றுவிக்கப்பட்டது. பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக, பீங்கான் சம்பந்தப்பட்ட தொழிற்பிரிவுகளைக் கொண்டு இந்நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இத் தொழிற் பிரிவுகள் பெரும்பாலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில்



அமைந்துள்ளன. இந்நிறுவனத்தின் தொழிற் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| தொழிற்பிரிவுகள் | உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் (பணி வசதிகள் அளிக்கப்படுபவை.) |
|---|---|
| (1) | (2) |
| 1. வர்த்தகப் பிரிவுகள் : | |
| 1. டாசல் பீங்கான் தொழிலகம், விருத்தாசலம். | தூப்புரவு சாதனங்கள், பீங்கான் கோப்பை, தட்டுவகை மற்றும் பீங்கானிலான மின் காப்பு பொருட்கள். |
| 2. டாசல் கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம். | கற்குழாய்கள் மற்றும் அதன் சிறப்பு வகைகள். |
| 3. டாசல் இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை. | உயர்தரமுள்ள கம்பி அறுவை வகை செங்கற்கள்.( w e c t b i ks). |
| 2. பீங்கான் தொழில் வளர்ச்சி நோக்குடைய பிரிவுகள்.— | |
| 4. பீங்கான் தொழிற் பேட்டை, விருத்தாசலம் (முகவர் அடிப்படையில் நடத்தப்படுவது). | பீங்கான் சிறுதொழில் முனைவோர்களுக்கு சலுகை வாடகையில் தொழிற் கூடங்களை அளித்தல். |
| 5. டாசல் பீங்கான் பணி வசதி நிலையம், விருத்தாசலம். | விருத்தாசலத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பீங்கான் சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு பதப்படுத்தப்பட்ட களிமண், வண்ணம் மற்றும் கீழ்மட்ட சூளை, சுரங்கச் சூளையில் எரியூட்டு வசதி செய்து தருதல். |
| 3. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு நோக்கில் நடத்தப்படும் பிரிவுகள் : | |
| 6. டாசல் கலைப்பொருள் நிலையம், விருத்தாசலம் | கலைவண்ணமுள்ள மட்பாண்டங்கள். |
| 7. டாசல் பீங்கான் மையம், ஓமலூர். | பல்வகை வடிவமைப்புள்ள ஊறுகாய் ஜாடிகள், வெப்பந்தாங்கிச் செங்கற்கள் மற்றும் கலைவண்ணப் பொருட்கள். |

2. விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு குறைந்த வாடகையில் தொழிற்கூடங்களை அளிக்கிறது. இத்தொழில் முனைவோர்களுக்கு, பதப்படுத்தப்பட்ட மூலப்பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்களை நவீன சுரங்கச் சூளையில் சுட்டுக்கொடுப்பது மூலமாகவும் அந்த பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

3. டாசல் நிறுவனத்தால் பயிற்சி நோக்கில் நடத்தப்படும் தொழிற் பிரிவுகள், குறைந்த படிப்பறிவுடைய கிராமப்புற இளைஞர்களுக்கு, பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்க உத்திகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஓமலூரில் உள்ள பீங்கான் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊறுகாய் ஜாடிகளும், திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையில் உற்பத்தியாகும் கம்பி அறுவை வகை செங்கற்களும் தரத்தில் சிறந்தவையாக பெயர் பெற்றுள்ளன.

4. நம் மாநிலத்திலும், அண்டை மாநிலத்திலும் விற்பனையை விரிவாக்கும் நோக்கத்துடன் டாசல் நிறுவனம், சென்னை, பெங்களூர் மற்றும் எர்ணாகுளத்தில் விற்பனை நிலையங்களை நடத்திவருகிறது. தற்போது, பூம்புகார் கைவினைப் பொருட்கள் நிறுவனம், புதுடில்லி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள தனது விற்பனை நிலையங்கள் வாயிலாக, டாசல் நிறுவனத்தின் கலை வண்ணப் பொருட்களை, மொத்த விற்பனை மதிப்பில் 10 சதவீதம் தரகு பெற்றுக்கொண்டு விற்பனை செய்து தர சம்மதித்துள்ளது. டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால், இம்மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந்நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 1,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

5. 1984–85 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் அனைத்து தொழிற்பிரிவுகள் மொத்தம் ரூ. 239.44 இலட்சம் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்தன. 1985–86-ல் அவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 252.00 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடும் மழை, மின் வெட்டு, நிலக்கரி விநியோகத்தில் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும், இந்நிறுவனம் 1983–84-ல் செய்யப்பட்ட உற்பத்தியைக் காட்டிலும் 1984–85-ல் 16 சதவீதம் அதிக உற்பத்தியை எட்டியுள்ளது. 1984–85-ஆம் ஆண்டில் டாசல்



நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ. 62.66 இலட்சம் ஆகும். 1985-86 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் இயக்கம் ரூ. 51.56 இலட்சம் இழப்பில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. விருத்தாசலம் பீங்கான் தொழிலகத்தில் உள்ள சுரங்கச் சூளை பழுதடைந்ததால், பிப்ரவரி 85 முதல் ஜுன் 85 வரை இப்பிரிவில் உற்பத்தி ஏதும் செய்யப்படவில்லை. மேலும் மூலப் பொருட்கள், உலை எண்ணை போன்ற இடுபொருட்களின் சீரான விலை ஏற்றம் மற்றும் ஊதியச் செலவுகளில் ஏற்றம் ஏற்பட்டது. ஏற்படும் அதிக செலவினத்திற்கேற்ப உற்பத்திப் பொருட்களின் விலை மதிப்பை அதிகரிக்க டாசல் நிறுவனத்தால் இயலவில்லை. மேலும் அங்காடியில் கடும் போட்டி நிலவுவதால் அதிக உற்பத்திச் செலவை முழுவதும் சரிக்கட்டும் வகையில் டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்த முடியவில்லை. எனினும், உற்பத்திச் செலவை ஓரளவேனும் ஈடுகட்ட டிசம்பர் 1985 முதல் டாசல் நிறுவனம் தனது உற்பத்திப் பொருட்களின் விலையை பீங்கான் உற்பத்தியில் பெயர்பெற்ற நிறுவனங்களான பாரி, நெய்சர் போன்ற நிறுவனங்களின் பொருட்களின் விலையை விட சிறிதளவே குறைந்த அளவில் திருத்தியமைத்துள்ளது. போட்டி உற்பத்தியாளர்கள் பின்பற்றும் முறையைக் கையாண்டு அதன்மூலம் டாசல் நிறுவனம் அதன் உற்பத்திப் பொருட்களின் முதல் தர வகையின் (First Class items) சதவிகிதத்தை அதிகரித்துள்ளது.

7. விருத்தாசலம் கற்குழாய் தொழிலகத்தில் உள்ள கீழ்மட்டச் சூளைகள் அதிக அளவு நிலக்கரியை பயன்படுத்தி எரியூட்டப்படுவதாக அமைக்கப்பட்டுள்ளதால், இதனால் ஏற்படும் அதிக உற்பத்திச் செலவினை டாசல் நிறுவனத்தால் குறைக்க இயலவில்லை. மேலும் இப்பிரிவின் உற்பத்திப் பொருட்கள் தரத்தில் சிறந்தவை என்றாலும் அதற்கேற்ப அவற்றின் விற்பனை விலையை உயர்த்தவும் இயலாது; ஏனெனில், தொடர் சுடு சூளைமுறை மூலம் எரியூட்டப்பட்ட பொருட்கள் அங்காடியில் மலிந்த விலையில் கிடைக்கின்றன. இந்நிலையில், இப்பிரிவில் நிலக்கரி உபயோகத்தை குறைக்கும் வகையிலும் தேவையான உற்பத்தித் திறனை எய்தவும், தொடர் சுடு சூளை ஒன்றினை நிர்மாணிக்கும் திட்டம் ஒன்றை டாசல் நிறுவனம் அரசுக்கு அனுப்பியது. இத்திட்டம் அரசால் ஏற்கப்பட்டு, திட்டத்தைச் செயலாக்க டாசல் நிறுவனத்திற்கு ரூ. 24.60 இலட்சம் பங்கு மூலதன உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1986–87-ல் டாசல் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் கற்குழாய் தொழிற்பிரிவில் தற்போது உண்டாகும் எரியூட்டும் செலவு மூன்றில் ஒரு பங்காக (1/3) குறைக்கப்பட்டு 1987–88 ஆம் ஆண்டிலிருந்து இப்பிரிவு ஆதாயத்துடன் செயல்படும் என்றும் எதிர்பார்க்கலாம்.

8. டாசல் நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் :

டாசல் நிறுவனத்தின் இயக்கத்தைச் செம்மைப் படுத்தவும் கிராமப் புறங்களில் அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் பீங்கான் தொழில்களைத் தொடங்கவும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் (1985–90) கீழ்க்கண்ட திட்டங்களை அரசு உதவியுடன் நிறைவேற்ற டாசல் நிறுவனம் உத்தேசித் துள்ளது :—

(1) மின்னணுவியல் சார்பான பீங்கான் பொருட்கள் உற்பத்தி செய்தல் ;

(2) பீங்கான் இழைகளைத் தயாரித்தல் ;

(3) பெரியார் மாவட்டத்தில் பளிங்குத் தரை ஓடு மற்றும் சுவர் ஓடுகள் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல் :

(4) திருமழிசையில், இயந்திரச் செங்கற் தொழிற் சாலையில் உள்ள அடிப்படை வசதிகளைப் பயன்படுத்தி பளிங்கு சுவர் ஓடுகள் தயாரித்தல் ;

(5) திருமழிசையில் தொழிற்பேட்டை அமைத்தல் :

(6) சேலம் மாவட்டம், ஓமலூரில் ஒரு தொழிற்பேட்டை அமைத்தல் ;

(7) பீங்கான் தொழிலுக்குத் தேவையான இயந்திரங் களை உற்பத்தி செய்தல் ; மற்றும்

(8) மனைப் பொருட்கள் பிரிவை நவீனப்படுத்துதல்.

9. மேற்குறிப்பிட்டவைகளில் முதல் நான்கு திட்டங்களை கூட்டுத் துறையில் செயல்படுத்த பரிசீலிக்கும்படியும் பீங்கான் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் திட்டத்தை (இனம் 7) தனியார் துறைக்கு விட்டுவிடலாம் எனவும் டாசல் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டங்களைப் பொறுத்த வகையில் (இனம் 5, 6 ) உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற் பேட்டைகளில் தொழிற் கொட்டகைகளைக் கட்டி, அவைகளை பீங்கான் தொழில் முனைவோர்களுக்கு தவணை முறைக் கொள்முதல் அடிப்படையில் (hire purchase basis) அவ்வப்போது ஒதுக்கீடு செய்யும்படி டாசல் நிறுவனத்திற்கு ஆலோசனை தரப்பட்டுள்ளது. இதன்பேரில், இம்மாதிரி தொழிற் கொட்டகைகள் தேவைப்படும் பீங்கான் தொழில் முனைவோர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்று டாசல்



நிறுவனம் தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளது. இதற்கான வரவேற்பினைப் பொறுத்து. தொழிற்பேட்டை நிறுவுவதற்குத் தேவையான முதலீட்டைக் கணித்து டாசல் நிறுவனத்திற்கு தேவைப்படும் தொகையை தக்க சமயத்தில் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. மேற்கண்ட திட்டங்களைத் தவிர 1986–87 ஆம் ஆண்டில் ரூபாய் 20.00 இலட்சம் செலவில் அரசு உதவியுடன் கீழ்க்கண்ட பீங்கான் திட்டங்களை நிறைவேற்ற டாசல் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

1. பீங்கான் தொழிலகம், விருத்தாசலம்.

(1) சுரங்கச் சூளையை செம்மைப்படுத்துதல் மற்றும் பீங்கான் இழைகளை உபயோகப்படுத்தத் தொடங்குதல்.

(2) சிம்ப்ளெக்ஸ் எரிசாதனத்தை (Simplex burners) அறிமுகப்படுத்துதல்.

(3) பெருமளவு உலர்கலனை (Bulk dryers) அறிமுகப்படுத்துதல்.

(4) தரநிர்ணயக்கட்டுப்பாடு சோதனைச் சாலை ஒன்று ஏற்படுத்துதல் ;

(2) கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம்.

(1) பொருட்களை இருப்பில் வைப்பதற்காக மூன்று கொட்டகைகளைக் கட்டுதல்.

(2) அரவைத் திறனை அதிகப்படுத்தும் இயந்திரச் சாமான்கள் வாங்குதல்.

11. மேற்கண்ட செயல்முறைகளையும், திட்டங்களையும் மேற்கொண்டு செயல்படுத்துவதன்மூலம் டாசல் நிறுவனத்தின் இயக்க வரம்பு விரிவாக்கப்பட்டு அதனால் இந்நிறுவனம் வணிக முறையில் ஆதாயத்துடன் இயங்குவதற்கான முன் னேற்றம் ஏற்படுவது மட்டுமல்லாது, கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தின் பணிகள், கனிம ஆய்வுகள் மற்றும் கனிம நிர்வாகம் என இரு வகைப்படும்.

இத்துறை, கனிமம் சார்ந்த தொழில்களை அமைப்பதில் விரைவாக மாறிவரும் தொழில் நுட்பவியல்/உற்பத்தி செயல் முறைகளுக்கேற்ப கனிம அமைப்புகளை முறையாக விரிவான கனிம ஆய்வு முறைகளை மேற்கொண்டு மதிப்பீடு செய்கிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இத்துறை நுண்ணிய உபகரணங்களையும் ஒன்றோடொன்று தொடர்புள்ள சிறந்த அறிவியல் முறைகளையும் கனிம ஆய்வுப்பணிகளில் பயன் படுத்தி சிறந்த அமைப்பாக விளங்குகிறது. இச்சிறந்த நிபுணத்துவத்தையும் அடிப்படை வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இத்துறையினை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு சிராமிக்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் போன்ற அரசுத்துறை கழகங்கள் தங்களின் சுரங்கக் குத்தகைப் பகுதிகளிலும் காணப்படும் கனிமம் அவைகளின் நவீன திட்டங்கள் மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கும் தேவையான கனிம மூலப் பொருட்களை தரம் மற்றும் இருப்பளவு முதலியனவற்றை மறு மதிப்பீடு செய்யுமாறு இத்துறையினை கேட்டுக் கொள்கின்றன. இத் துறையின் பணி மேற்கூறிய வர்த்தகக் கழகங்கள் நிதி உதவி கழகங்களை கனிமத்தரம் மற்றும் இருப்பளவு முதலியவற்றை அரசு உத்திரவாதத்துடன் அளித்து நிதிக்காக அணுகுவதற்கு பெரிதும் உதவுகின்றன.

இத்துறை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள கனிம ஆய்வுகள் முன்னரே முறையாக திட்டமிடப்பட்டு இந்திய புவியியல் ஆய்வுக்கழகம் மற்றும் இந்திய சுரங்கங்கள் அமைப்பு முதலிய அங்கத்தினர்களைக் கொண்ட மாநில புவியியல் செயற்பாட்டுக் குழுவில் கலந்தாலோசிக்கப்படுகிறது. இதன் மூலம் ஒரே களப்பணி ஆய்வுகள் ஒரேசமயத்திலும் மீண்டும் நடைபெறா வண்ணம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. மும்முறை ஆய்வுகள் முடிவுகளின் மூலம் துறப்பண ஆய்வு போன்ற விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊக்க மூட்டும் முடிவுகள் கண்டறியப்பட்ட இடங்களில் திட்ட செயல்முறைகள் தனியே தயாரிக்கப்பட்டு விரைவான முடிவுகளை அறிய களப்பணி ஆய்வுகள் விரைவாக முடிக்கப்படுகின்றன.

சமீபகாலத்தில் இத்துறைக்கு மாற்றப்பட்டுள்ள கனிம நிர்வாகப்பணியிலும் பெரும்பங்கு வகிக்கிறது. மாவட்ட அளவில் உதவி இயக்குநர்கள் பெருவகை கனிம குத்தகை மனுக்களை பரிசீலித்து அரசிற்கு பரிந்துரை செய்வதிலும் சிறுவகை கனிம சுரங்கங்களை குத்தகை-ஏலம் விடும் முறைகளிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பெரிதும் உதவுகின்றனர். முன்னர் மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் பணி புரிந்து வந்த தனிச் சுரங்க பணியாளர்கள் இத்துறைக்கு மாற்றப் பட்டுள்ளனர். உதவி இயக்குநர்களின் முறையான குறுகிய கால சுரங்க ஆய்வுகளின் மூலமும் கனிம அனுமதிச் சீட்டு முறையாலும், சட்டத்திற்குப் புறம்பான முறையில் கனிமங்களை வெட்டியெடுத்துக் கொண்டு செல்லும் செயல் பெரிதும்



கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையினை மேலும் வலிவுடன் செயல்படுத்தி கனிம வருவாய் இழப்பினைக் கட்டுப்படுத்த முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன:—

**கனிம ஆய்வுப்பணிகள்:**

1985–86 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப் படும் கீழ்க்கண்ட ஆய்வுப்பணிகள் அவைகளின் பரந்த அமைப் பளவு மற்றும் ஊக்கமூட்டும் முடிவுகளின் காரணமாக 1986–87 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டுள்ளன.

(1) தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டம் மகாராசகடைப் பகுதிகளில் தங்கம் கிடைப்பதற்கான ஆய்வு. இப் பணியில் முதல்கட்ட பகுதி 1983 ஆம் ஆண்டு மத்தியில் முடிவுற்றது. இரண்டாம் நிலை ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் கல்லங்குறிச்சி, ரெட்டிபாளையம் மற்றும் புதுப்பாளையம் பகுதிகளில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலையின் விரிவாக்கத் திட்ட தேவைகளை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் படிந்த வகை விரிவான சுண்ணாம்புக்கல் ஆய்வுப் பணி.

(3) காமராசர் மாவட்டம் ஆலங்குளத்தில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன ஆலையின் சுரங்க குத்தகைப் பகுதிகளில் காணப்படும் படிகவகை சுண்ணாம்புக்கல் பற்றிய ஆய்வு.

(4) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 5.0 கி.மீ. ஆரப் பகுதியில் காணப்படும் குத்தகையற்ற சுண்ணாம்புக்கல் அமைப்புகளை இவ்வாலையில் கூடுதல் தேவைகளுக்காக கண்டறியும் பணி.

(5) பெரியார் மாவட்டம் காங்கேயம் பகுதியிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் சின்னதாராபுரம் பகுதியிலும் வெங்கக்கல் மற்றும் பெல்சுபார் கனிம ஆய்வு.

(6) தென் ஆற்காடு மாவட்டம் மாமண்டூரில் செம்புக் கனிம செறிவு பற்றிய மறு ஆய்வுப்பணி.

(7) தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் காவிரிபூம் பட்டினத்தில் இல்மனைட், கார்னட், சிர்கான் போன்ற கனகனிமங்களுக்கான ஆய்வு. மேற்குறித்த ஆய்வுப்பணிகளுடன் இத்துறை கீழ்க்கண்ட சிறப்பு வகை களப்பணி ஆய்வுகளையும் மேற்கொண்டது.

(8) சிறு சிமெண்ட் ஆலைகளை அமைப்பதில் அமைப்பு பற்றிய ஆய்வுகள்.

(9) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்ட நில நடுக்கம் பற்றிய களப்பணி சோதனைகள்.

(10) நீலகிரி மாவட்டத்தில் கட்டுமான பணிகளுக்காக நிலச்சரிவுகள் கண்ணோட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரை அனுமதி அறிக்கைகள்.

(11) திருவண்ணாமலை பகுதிகளில் காணப்படும் தரம் குறைந்த இரும்புத்தாதுவினை பயன்படுத்தி ஸ்பாஞ்ச் இரும்பு உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி சென்னை தேசீய உலோகவியல் ஆய்வுக்கூடம் மற்றும் ஆந்திரப் பிரதேசம், கம் மத்தில் அமைந்துள்ள ஸ்பாஞ்ச் அயர்ன் இந்தியா லிமிடெட் நிறுவனம் இவற்றுடன் கூட்டாக இணைந்து மேற்கொள்ளப்படும் சோதனைப் பணிகள்.

(12) சென்னை இந்திய தொழில் நுட்பவியல் கழகத்தில் அமைந்துள்ள G-EXEL முறை கம்ப்யூட்டரில் புவியியல் தகவல் சேகரிக்கும் பணி முதலியன.

இத்துறையின் இரசாயன ஆய்வுக்கூடம் இவ்வாண்டில் 1,362 மாதிரிகளை சோதனை மேற்கொண்டது. இந்த அளவானது முந்தைய ஆண்டை விட 30 விழுக்காடுகள் அதிகமானதாகும்.

நீலகிரி மாவட்டத்தில் இத்துறை முன்னர் கண்டறிந்த நிலச் சரிவுகளின் பாதிப்பு மற்றும் இடப்பெயர்ச்சியினை தொடர்ந்து கண்காணிக்கவும், குன்னூர், ஊட்டி பகுதிகள் மற்றும் கூடலூர், வட்டம் முழுவதிலும் சுமார் 1,400 சதுர கி. மீ. பகுதிகளில் நிலச்சரிவிற்குட்படக் கூடிய பகுதிகளைக் கண்டறியவும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இத்துறை புவி-நுட்பவியல் அமைப்பினை குன்னூரில் அமைத்துள்ளது. இப் பகுதியின் வரைப்படங்கள் தயாரிப்பில் விமான புகைப்படங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. அரசின் ஆணைக்கிணங்க புவி-நுட்ப வியல் அமைப்பு, பல இடங்களை நிலச்சரிவு அடிப்படையில் ஆய்வு செய்து நிலச்சரிவுகள் ஏற்படா வண்ணம் அல்லது நிலச் சரிவுகளின் சேதத்தை மிகவும் குறைப்பதற்கான வழி முறைகளை அறிவுறுத்துகின்றன. இத்திட்டம் ரூ. 14.56 இலட்சங்கள் இத் திட்ட மதிப்பீட்டில் சுமார் மூன்றாண்டு காலத்திற்கு செயல் படுத்தப்படும். இதன் மூலம் நிலச்சரிவுகளின் இடப்பெயர்ச்சி தகுந்த தொழில் நுட்ப முறைகளுடன் அறிவியல் அடிப்படையில் முதல் முறையாக இம்மாநிலத்தில் சோதனையிடப்படுகின்றன.

கனிம சோதனைக்கூடம் :

சேலத்தில் அமைந்துள்ள கனிம சோதனைக்கூடம் குறைந்த தரம் உள்ள மாக்னசைட், இரும்புத்தாது, வெங்கக்கல், சிலிக்கா மணல் முதலிய கனிமங்களை மேம்பாடு செய்யும் உயர் ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட



சுமார் 80 சோதனை மாதிரிகள் இங்கு பகுப்பாய்வு செய்யப் பட்டன. இந்த ஆய்வுக்கூடத்தை தமிழ்நாடு மாக்னசைட் நிறு வனத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இங்கு அமைந்துள்ள அடிப்படை வசதி களைக்கொண்டு தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் இங்கு உயர் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும். இக்கழகம் நவீன மற்றும் நுண்ணிய கனிம மேம்பாட்டு முறைகளை மேற்கொண்டு தரம் குறைந்த மற்றும் அதிக சிலிக்கா கொண்ட மாக்னசைட் கனி மத்தை மேம்படுத்தி உற்பத்தியைப் பெருக்க திட்டமிடப்பட்டுளது

கனிம ஆய்வுப்பணியில் புதுத்திட்டங்கள் :

1986–87 ஆம் ஆண்டில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மூன்று புதிய திட்டங்களை அரசு அங்கீகரித்துள்ளது. அவையாவன :—

(1) தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டத்தில் மகராச கடை மற்றும் நாரளப்பள்ளி காப்புக் காட்டுப் பகுதிகளில் தங்கம் கிடைப்பதற்கான விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளுதல்.

1983 ஆம் ஆண்டு முதல் தங்கம் பற்றிய விரிவான ஆய்வு கள் மேற்கொள்ளப்பட்டன. தரை மற்றும் நீர் குழிகளிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் ஊக்கமூட்டும் சோதனை முடிவுகளின் மூலம் இந்த ஆய்வுப்பணிகளின் செயல் முறைகளை அதிகரிக்க திட்டமிடப்பட்டு, அரசு இதற்கென தனியாக ஒரு திட்டத்தினை அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின் விரிவான புவியியல் ஆய் வுப்பணிகளுடன், துறப்பண ஆய்வு அதிக ஊக்கமூட்டும் பகுதி கள் புவி இரசாயன மாதிரிகள் சேகரித்தல் முதலிய பணிகளும் அடங்கும். இத்திட்டத்தினை உடன் செயல்படுத்த ஆவன செய் யப்பட்டுள்ளன.

(2) தென்ஆற்காடு மாவட்டத்தில் சுரங்க குத்தகையற்ற பகுதிகளில் லிக்னைட் கிடைப்பது பற்றிய விரிவான ஆய்வு செய்யும் பணி.

சுமார் 110 சதுர கி.மீ. பகுதியில் வடக்கில் கம்மாபுரத்தி லிருந்து தெற்கே சிறிமுஸ்ணம் வரையுள்ள சுரங்க குத்தகை யற்ற பகுதிகளில் லிக்னைட் கிடைப்பது பற்றி உறுதி செய் வதற்கான ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில், நிலத்தடி நீர் அமைப்பு பகுதி தாது மற்றும் மேல்மண் சத விகிதம் முதலிய அடிப்படை தகவல்களைக் கண்டறிந்து பொரு ளாதார அடிப்படை சுரங்க முறைகளுக்கு திட்டமிடப்பட்டுள் ளது. இது தொடர்பான பணி தொடர்ந்து நடைபெற்று வரு கிறது.

(3) கனிம ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்காக இந்திய நில அளவை கழகத்திலிருந்து பல அளவைகளில் சுமார் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் விமான புகைப்படங்கள் வாங்குவது.

இத்துடன் புவி பௌதீக மற்றும் புவி இரசாயன பிரிவுகளை புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கனிம வருவாய் :**

கடந்த ஐந்து ஆண்டுகளின் கனிம வருவாய் கீழே தரப்பட்டுள்ளது. இதன் மூலம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை தனியாக அமைக்கப்பட்ட பின்னர் கனிம வருவாய் பெருமளவில் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கனிம வருவாய்

| ஆண்டு. | மொத்த கனிம வருவாய். | மாக்னசைட் விற்பனை மூலம் வருவாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) | |
| 1981–82 .. .. .. | 433.08 | 260.00 |
| 1982–83 .. .. .. | 574.82 | 308.20 |
| 1983–84 .. .. .. | 742.87 | 459.78 |
| 1984–85 .. .. .. | 841.53 | 447.51 |
| 1985–86 (அக்டோபர் முடிய) | 547.79 | 295.76 |

1985 ஆம் ஆண்டு அக்டோபர் முடிய பெருவகை கனிம உரிமவரி, தலவரி மற்றும் தலவரிகளின் உபரிவரி முதலியவற்றின் மூலம் ரூ. 252.03 இலட்சங்கள் வருவாய் கிடைத்துள்ளது. ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டதன் மூலம் ரூ. 1,53,000 வருவாய் கிடைத்துள்ளது. இதில் ரூ. 91,000 புதிய ஒப்புதல் சான்றிதழ்கள் மூலமும் ரூ. 62,500 சான்றிதழ்கள் புதுப்பித்தல் மூலமும் கிடைத்துள்ளது.

மேற்குறித்த காலத்தில் 432 ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டன. (புதியன மற்றும் புதுப்பித்தல்) இத்துடன் பெருவகை மற்றும் சிறுவகை கனிமங்களுக்காக 55 உயர்நீதிமன்ற வழக்குகளும், வழக்குகளின் மேல்முறையீட்டு மனுக்களும் பரிசீலிக்கப்பட்டன.



**சுரங்க குத்தகை மனுக்கள் பரிசீலித்தல் :**

| | |
|---|---|
| 1981–82 .. .. | 81 |
| 1982–83 .. .. | 98 |
| 1983–84 .. .. | 100 |
| 1984–85 .. .. | 237 |
| 1985–86 (1985 டிசம்பர் முடிய). | 91 |

**ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது மற்றும் வருவாய் :**

| ஆண்டு. | புதியன. | | புதுப்பித்தல். | |
|---|---|---|---|---|
| | எண். | ரூபாய். | எண். | ரூபாய். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1981–82 .. | 107 | 53,500 | 204 | 53,500 |
| 1982–83 .. | 175 | 87,500 | 219 | 54,750 |
| 1983–84 .. | 111 | 55,500 | 118 | 39,500 |
| 1984–85 .. | 198 | 99,000 | 266 | 66,500 |
| 1985–86 .. (சனவரி 1986 முடிய). | 182 | 91,000 | 250 | 62,500 |

சர்க்கரைத் தொழில்.

புதுப்பிக்கக்கூடிய மூலப்பொருட்கள் கிடைக்கக் கூடியதும், பலதரப்பட்ட மண் வகைகளிலும், மாறுபட்ட சீதோஷ்ணநிலைகளிலும் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பினை அடிப்படையாகக் கொண்ட சர்க்கரை உற்பத்தி தொழிலே, இம்மாநிலத்தின் கிராமப் புறங்களுக்கேற்ற விவசாய தொழிற்பிரிவாகும். எனவே, இத்தொழில், வேளாண்மை மற்றும் தொழிற்துறையை இணைக்கும் பாலமாக விளங்குகிறது. கரும்பு உற்பத்தியைத் தவிர இது கிராமப்புறத்தில் தொழில் வளர்ச்சியை அபிவிருத்தி செய்ய உதவுகிறது. சர்க்கரைத் தொழில் விளை பொருள்கள் அறுவடைக்குப் பின் ஆதாயமான விலை பெறுவதற்கான வழி வகை செய்து கொடுக்கிறது. கரும்பைத் தவிர வேறு எந்த வேளாண் விளை பொருளும் விலைகளைப் பொறுத்தமட்டில் நிறுவன ரீதியான பாதுகாப்பு பெறுவதில்லை. இத் தொழிலில் முக்கிய உற்பத்தியான சர்க்கரை, மக்கள் உபயோகிக்கும் பண்டங்களில் முக்கியமானவைகளில் ஒன்றாக உள்ளது. இதன் முக்கிய நோக்கமானது சர்க்கரையை உற்பத்தி செய்வது. உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை, கிராமம், நகரம் என்ற பாகுபாடில்லாமல், ஏழை பணக்காரர் என்ற வேறுபாடுகள் இல்லாமல் எல்லாத் தரப்பு மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் மாநில அரசு காட்டும் ஆர்வத்தில்தான் இந்தத் தொழிலின் வளர்ச்சி அமைந்திருக்கிறது என்று கூற முடியாது. எனவே, சர்க்கரைத் தொழிலின் ஒழுங்கான வளர்ச்சியை மேம்படுத்தவும் குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இயக்கத்தை சீர்படுத்தவும் தமிழக அரசு

1969 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சர்க்கரை இயக்ககத்தை புதியதாக உருவாக்கியது. இவ்வியக்ககம் சர்க்கரை தொழில் சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களையும் கவனித்து வருகிறது.

தற்போது கூட்டுறவுத் துறையில் 11 சர்க்கரை ஆலையும் தனியார் துறையில் 10 சர்க்கரை ஆலையும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலையும் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மத்திய அரசு, 1984 ஆம் ஆண்டு மே திங்களில் தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலை அமைக்க அனுமதி அளித்தது. இந்த சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் தலைஞாயிறு கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலை தனது அரவையை 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் தமிழகத்தில் 30 புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் 22 இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்க 28 விண்ணப்பங்களை மாநில அரசிற்கு சர்க்கரைத்துறை இயக்குநரகம் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது.

தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் :

தமிழக சர்க்கரை ஆலைகளின் 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் பொதுவான செயல்பாட்டு விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு போன்ற விவரங்களும் 1985–86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு கொண்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| சர்க்கரை ஆண்டு. | பிழியப் பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரையின் அளவு. | சர்க்கரை கட்டுமானம் (விழுக் காடுகள்). | நிறுவிய பிழி திறனை பயன் படுத்திய அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் டன்களில்.) | | |
| 1982–83 .. | 72.02 | 6.51 | 9.04 | 101 |
| 1983–84 .. | 45.55 | 4.24 | 9.30 | 60 |
| 1984–85 .. | 62.87 | 6.00 | 9.54 | 83 |
| 1985–86 மதிப்பீடு. | 65.77 | 5.97 | 9.07 | 83 |



இம்மாநிலத்தில் 1985–86 ஆம் ஆண்டில் 65.77 இலட்சம் டன்கள் மட்டுமே கரும்பு அரவை செய்யப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

1984–85 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 6 இலட்சம் டன்களாக இருந்தது. 1985–86 ஆம் ஆண்டில் 5.97 இலட்சம் டன்களாக இருக்கும் என் எதிர்பார்க்கப்படுகின்றது.

3. கரும்பின் விலை :

1985–86 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சதவீத சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை டன் ஒன்றிற்கு ரூ. 165 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. 8.5 சதவீதத்திற்குக் கூடுதலாக இருப்பின் 0.1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றிற்கு 19.412 பைசா வீதம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. கரும்பு உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு விலை ஆதாயமற்றது என முறையீடுகள் எழுந்ததாலும், வேளாண்மை இடு பொருள் விலை, கூலி உயர்வு ஆகியவற்றை கருத்திற்கொண்டு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 195 என்று 1985–86 ஆம் ஆண்டிற்குக் கொடுக்க வேண்டும் என தமிழக அரசு சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறியுள்ளது. சர்க்கரை கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் விழுக்காடுக்கு 22.9411 பைசா வீதம் அதிகமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

1984–85 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளிடம் பதிவு செய்து கரும்பு வழங்கும் கரும்பு பயிரிடுவோர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 10 மானியமாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மானியம் 1984–85 ஆம் ஆண்டில் ஆலையிடம் பதிவு செய்த கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

4. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் :

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் தமிழக அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்நிறுவனம் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

5. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் :

பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கென தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. தற்பொழுது இம்மாநிலத்தில் கீழே குறித்துள்ள மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் இயங்கி வரு கின்றன :—

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சி ராப்பள்ளி மாவட்டம்.

(3) மதுரா சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.

சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் : (Co-Generation Plant).

சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களை பயன்படுத்தி கரும்பு சக்கையை எரி பொருளாக பயன்படுத்தி அதிக அளவில் மின்சாரம் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான மின்சாரம் போக உபரி மின்சாரத்தை மின்சார வாரியத்திற்கு வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஒரு கோ-ஜெனரேஷன் பிளாண்ட் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அமைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. திட்டத்தின் மொத்த செலவு ரூ. 10 கோடிக்கு மேல் போகாது என்றும் மின் உற்பத்தி செலவு ஒரு யூனிட்டுக்கு 80 பைசாவாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டத்தை அமல்படுத்தும் சர்க்கரை ஆலை களுக்கு மாநில அரசும், மைய அரசும், கலால் வரிச் சலுகை, வெளிச் சந்தையில் சர்க்கரை விற்பனை, கொள் முதல் வரி மான்யம் மற்றும் குறைந்த அளவில் கரும்புத்தீர்வை வசூலித்தல் போன்ற சலுகைகளை அளித்தால்தான், இத்திட்டம் செயல் படுத்த இயலும். இத்திட்டத்திற்காக மைய அரசு ரூபாய் 196 இலட்சம் மான்யமாக அளித்துள்ளது. இந்த செயற் குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.



7. கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம் :

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் கரும்பு மீதான மேல் வரி (செஸ்) அரசுக்கு செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந் துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற் போதுள்ள சாலைகளை பராமரித்தல் போன்ற இனங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத் திற்கு ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. வேலை வாய்ப்பு :

சர்க்கரை தொழில் பெருமளவில் நேரடி வேலை வாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது.

இணைப்பு.

**சர்க்கரை ஆலைகளின்** அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.

| வரிசை எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1984–85 நாளொன்றுக்கு பிழிதிறன் (டன்களில்). | 1983–84. பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன்களில்.) | 1983–84. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு (டன்களில்.) | 1983–84. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்). | 1984–85. பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன்களில்.) | 1984–85. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு (டன்களில்.) | 1984–85. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடுகளில்). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| **1. கூட்டுறவுத்துறை—** | | | | | | | |
| 1. ஆம்பூர் | 2,200 | 1,15,034 | 11,831 | 10.29 | 1,97,666 | 20,577 | 10.41 |
| 2. மதுராந்தகம் | 1,750 | 2,75,316 | 25,900 | 9.41 | 2,58,438 | 24,117 | 9.33 |
| 3. அமராவதி | 2,000 | 1,13,326 | 11,588 | 10.23 | 2,87,180 | 30,142 | 10.50 |
| 4. சேலம் | 2,500 | 3,01,665 | 26,673 | 8.84 | 3,31,287 | 31,530 | 9.52 |
| 5. கள்ளக்குறிச்சி | 2,000 | 2,04,015 | 17,875 | 8.76 | 2,76,140 | 26,055 | 9.44 |
| 6. நேஷனல் | 1,500 | 1,80,277 | 17,348 | 9.62 | 2,36,829 | 23,451 | 9.90 |
| 7. தர்மபுரி | 1,250 | 1,65,608 | 17,884 | 10.80 | 2,23,143 | 23,174 | 10.39 |
| 8. வேலூர் | 1,250 | 2,01,062 | 19,802 | 9.85 | 2,32,880 | 22,069 | 9.48 |
| 9. திருப்பத்தூர் | 1,250 | 59,067 | 5,715 | 9.68 | 1,75,001 | 17,888 | 10.22 |
| 10. செங்கல்ராயன் | 1,250 | 2,31,032 | 21,612 | 9.35 | 3,27,750 | 29,944 | 9.14 |
| 11. திருத்தணி | 1,250 | 4,345 | 186 | 4.29 | 1,23,624 | 10,275 | 8.31 |
| | 18,200 | 18,50,747 | 1,76,414 | 9.54 | 26,69,938 | 2,59,222 | 9.70 |
| **2. தனியார் துறை—** | | | | | | | |
| 12. இஐடி பாரி | 4,000 | 3,30,076 | 27,952 | 8.47 | 2,92,049 | 25,373 | 8.69 |
| 13. காவேரி சுகர்ஸ் | 1,250 | 1,36,498 | 12,892 | 9.45 | 1,64,300 | 15,987 | 9.73 |
| 14. டெக்கான் சுகர்ஸ் | 1,850 | 1,54,610 | 12,842 | 8.31 | 2,65,088 | 23,783 | 8.97 |
| 15. தென் இந்தியா | 2,700 | 2,39,033 | 19,989 | 8.36 | 3,19,090 | 27,366 | 8.53 |
| 16. அருணா சுகர்ஸ் | 4,000 | 5,82,450 | 55,436 | 9.52 | 5,83,782 | 54,759 | 9.38 |
| 17. சக்தி சுகர்ஸ் | 4,000 | 3,39,704 | 34,375 | 10.12 | 6.97,491 | 70,103 | 10.05 |
| 18. கோத்தாரி சுகர்ஸ் | 2,000 | 2,64,486 | 23,870 | 9.03 | 2,79,523 | 26,822 | 9.60 |
| 19. திரு ஆரூரான் | 2,000 | 2,69,269 | 24,365 | 9.05 | 2,38,546 | 24,116 | 9.05 |
| 20. பொன்னி சுகர்ஸ் | 1,250 | 42,556 | 3,854 | 9.06 | 2,40,290 | 23,352 | 9.72 |
| | 23,050 | 23,58,682 | 2,15,575 | 9.13 | 30.80,109 | 2,91,661 | 9.47 |
| **3. பொதுத் துறை—** | | | | | | | |
| 21. அறிஞர் அண்ணா | 1,250 | 1,87,560 | 16,662 | 8.88 | 2,34,058 | 21,494 | 9.18 |
| 22. பெரம்பலூர் | 1,250 | 1,62,670 | 15,352 | 9.44 | 2,54,375 | 23,961 | 9.42 |
| 23. மதுரா சுகர்ஸ் | 1,250 | 4,427 | 345 | 7.80 | 49,308 | 3,602 | 7.31 |
| | 3,750 | 3,54,657 | 32,359 | 9.14 | 5,37,741 | 49,057 | 9.12 |
| ஆக மொத்தம் | 45,000 | 45,64,086 | 4,24,348 | 9.29 | 62,87,788 | 5,99,940 | 9.54 |

மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை :

மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்பிரிவுகளை சிறப்பாக ஊக்குவிக்கும் பொருட்டு தலைமைச் செயலகத்தில் 1984 ஆம் ஆண்டு மே திங்களில் புதிதாக ஒரு துறை தோற்றுவிக்கப்பட்டது. மின்னணுவியல் துறையில், இத்துறை மாநில அரசின் பெரிய நிறுவனமான தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் பொறுப்புகளையும், தொழில் மற்றும் வாணிபத் துறையின் வாயிலாக ஏனைய மின்னணுவியல் வளர்ச்சித் திட்டங்களின் நிர்வாகப் பொறுப்பினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழ்நாடு மின்னணுக் கழகம் :

மாநில அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணுக் கழகம், இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்தினை தனது தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோளை அடைவதற்காக, அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுடன், உள்நாட்டில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் வசதி செய்து தருகிறது. இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 5 கோடியாகும். அதில் 1—3—1986 வரை தமிழக அரசு ரூ. 3.24 கோடி முதலீடு செய்துள்ளது. கீழே தரப்பட்டுள்ள செயலாக்கம் பற்றிய புள்ளி விவரங்கள் தமிழ்நாடு மின்னணுக் கழகம் அண்மை ஆண்டுகளில் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளதை விளக்கும்.

| ஆண்டு. | எல்காட்டின் தனிப்பட்ட திட்டங்களின் உற்பத்தி. | எல்காட் மற்றும் அதன் கூட்டுத்துறை நிறுவனங்களின் மொத்த உற்பத்தி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1983–84 .. | 26.79 | 26.79 |
| 1984–85 .. | 113.12 | 330.12 |
| 1985–86 .. | 337.00 | 1,000.00 |
| 1986–87 .. | 630.45 (மதிப்பீடு) | 1,500.00 |



"எல்காட்" இதுவரை சுமார் 400 பேர்களுக்கு அதன் சொந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்துள்ளது. 1986–87-ல் இவ்வெண்ணிக்கை 500 ஆக உயரும். கூட்டு முயற்சித் திட்டங்களின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 1986–87-ல் சுமார் 500 ஆக இருக்கும். இந்தத் திட்டக் காலத்தில் அவ்வெண்ணிக்கை 3,000 ஆக உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(1) எல்காட் முற்றிலும் சொந்தமாக நடத்தும் (பொதுத் துறை) திட்டங்கள் :

(அ) அலுமினிய மின்னாற்பகுப்பு கொள்கலன்கள் : இத் தொழிற்சாலை தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த முதலீடு ரூ. 179.31 இலட்சமாகும். மிகக் குறுகிய கால அளவில், அதாவது 18 மாதங்களில் இது நிறுவப்பட்டு, 1983 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொள்கலன்கள் விற்பனைச் சந்தையில் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. இத் தொழிற்சாலை தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப் பெரிதும் உபயோகிக்கப்படும் உதிரி உறுப்புகளை தயார் செய்கின்றது. இத்தொழிற்சாலையின் உற்பத்தி 1985–86-ல் ரூ. 178 இலட்சமாக இருந்தது. 1986–87-ல் ரூ. 380 இலட்சமாக உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

(ஆ) எண்காட்டும் எலக்ட்ரானிக் கைக்கடிகார உற்பத்தி : எண் காட்டும் மின்னணுக் கடிகாரங்களை பொதுத் துறையில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்னும் மைய அரசின் கொள்கை அடிப்படையில் தொடங்கப்பட்ட இத்திட்டமானது அரசால் அங்கீகரிக்கப்படாத, சட்ட விரோதமாக தயாரித்து, மிகவும் மலிவான அரை விலைக்குக் கிடைக்கக் கூடிய, பொய்த் தயாரிப்புப் பெயர்கள் கொண்ட போலி கைக் கடிகாரங்கள் விற்பனைச் சந்தையில் போட்டி விற்பனையை எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இந்நிலை, உண்மையான கைக் கடிகாரங்களின் தரம் மற்றும் நெடுநாள் நீடித்து நிற்கும் தன்மை ஆகியவைகளை மக்கள் உணர ஆரம்பித்திருப்பதால் விரைவில் உறுதியாக மாறும். கடிகாரங்களின் விற்பனை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதுடன், மக்கள் மத்தியில் குறிப்பாக, உபயோகிப்போர் மத்தியில், "எல்காட்"டின் பெயரை நிலை நாட்ட உதவுகின்றது.

(இ) ஒப்பந்தப் பிரிவு : ஒப்பந்தப் பிரிவின் விற்பனை அளவு வெகுவாக அதிகரித்துள்ளது. 1983–84ல் இப்பிரிவின் விற்பனை அளவு ரூ. 3.29 இலட்சமாக இருந்தது. 1984–85-ல் ரூ. 24.58 இலட்சத்தாக உயர்ந்தது. 1985–86-ல் ரூ. 50 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1985–86-ல் ரூபாய் 18.60 இலட்சம் மதிப்புள்ள 3,100 வானொலிப் பெட்டிகளை இப்பிரிவு ஊராட்சிகளுக்கு வழங்கியுள்ளது. 1986–87ல்

ரூ. 24 இலட்சம் மதிப்புள்ள 4,000 வானொலிப் பெட்டிகளை இப்பிரிவு விற்பனை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர இந்தியாவில் உள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கான பொறுப்பு நிறுவனம், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் போன்ற பல்வேறு அமைப்புகளுக்குத் தேவைப்படும் உயர் தொழில் நுட்பம் வாய்ந்த கருவிகளையும் இப்பிரிவு தயாரித்து வழங்குகிறது.

(ஈ) இரு வழி ரேடியோ தொடர்பு அமைப்பு : இங்கிலாந்தில் உள்ள மார்க்கோனி நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் ''எல்காட்'' நிறுவனத்தின் தகவல் தொடர்புக் கருவிப் பிரிவானது 1985 ஏப்ரலில் இருந்து தவகல் தொடர்புக் கருவிகளை விற்பனைக்காக உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 150 இலட்சம். சென்னையை அடுத்த திருவான்மியூரில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகளான காவல் துறை, நல்வாழ்வுத் துறை ஆகியவற்றிற்கும், இரயில்வேக்கும் இக்கருவிகள் தயாரித்து அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் உற்பத்தி மதிப்பு 1985–86-ல் ரூ. 60 இலட்சமாகவும், 1986–87-ல் ரூ. 120 இலட்சமாகவும் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் பெரிய செயல் திட்டங்களுள் ஒன்றாக விளங்குவதுடன் தகவல் தொடர்பு உயர் தொழில் நுட்பத் துறையில் தமிழ்நாடு மின்னணுக் கழகம் நுழைந்துள்ளதற்கு அடையாளமாக அமைந்துள்ளது.

(உ) விற்பனை செய்ய உதவி: தனியார் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் குவார்ட்ஸ் அனலாக் சுவர்க் கடிகாரங்களை (Quartz Analog Wall Clock) இந்நிறுவனம் விற்பனை செய்து உதவி வருகிறது. 1983–84-ல் 334 கடிகாரங்களும், 1984–85-ல் ரூ. 6.55 இலட்சம் மதிப்புள்ள 2,248 கடிகாரங்களும் விற்கப்பட்டன. 1985–86-ல் ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும், 1986–87-ல் ரூ. 14 இலட்சம் மதிப்புள்ள கடிகாரங்களும் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கூட்டு முயற்சித் திட்டங்கள் : எல்காட் நிறுவனத்தின் மிகவும் இன்றியமையாத பங்கு, இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு கிரியா ஊக்கி போன்று அமைந்து தனியார்தொழில் முனைவோர்களின் தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பது மற்றும் கூட்டு முயற்சித் திட்டங்களை மேம்படுத்துதல் போன்றவையாகும். கூட்டு முயற்சித் திட்டங்களில், இந்நிறுவனத்தின் பங்காக 26 சதவீதம், தனியார் தொழில் முனைவோர் பங்கு 25 சதவீதம். மீதமுள்ள தொகையை பொது மக்களிடமிருந்து பெற்று, கூட்டு முயற்சித் திட்டங்களை இந்நிறுவனம் ஏற்படுத்துகிறது. கூட்டு முயற்சித் தொழில்களின் மொத்த உற்பத்தி மதிப்பு 1985–86-ல் ரூ. 637 இலட்சமாக



இருக்கும் என்றும், அடுத்த ஆண்டு ரூ. 875 இலட்சமாக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 20 கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் உற்பத்தி தொடங்கியுள்ள கூட்டு முயற்சிகளின் விவரம் பின்வருமாறு :—

| உற்பத்தி செய்யப்படும் பொருள். | கூட்டு முயற்சியின் பெயர். | 1985–86-ல் உற்பத்தி மதிப்பு. | 1986–87-ல் உற்பத்தி மதிப்பு (எதிர் பார்க்கப் படுவது). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) கறுப்பு மற்றும் வெள்ளை, மற்றும் வண்ண தொலைக் காட்சிப் பெட்டிகள். | திருவாளர்கள் ஹேப்பி ஹவுஸ் டி.வி.மானுபாக்சரிங் டிவிஷன் லிமிடெட். | 580 | 750 |
| (2) மின்கணிப்புப் பொறிகளின் பயன்பாட்டுத் திட்டங்கள் (முழுமையும் ஏற்றுமதிக்காக). | திருவாளர்கள் அட்வன்ட் கம்ப்யூட்டர்ஸ் லிமிடெட். | 25 | 50 |
| (3) கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள். | திருவாளர்கள் ருக்மணி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். | 7 | 25 |
| (4) மின்சார கட்டுப்பாட்டு கருவிகள். | திருவாளர்கள் எல்காட் பவர் கண்ட்ரோல்ஸ் லிமிடெட். | 25 | 50 |

[1986 ஏப்ரல் 23

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (5) மைக்ரோ ப்ராசசர் அடிப் படையிலான தொழிற் கருவிகள். | லாம்ப்டா எல்காட் லிமிடெட். | 1 | 10 |
| (6) மின்னணு மருத்துவச் சோதனைக் கருவிகள். | கோடி. எல்காட் லிமிடெட். | 1 | 20 |

இம்மாநிலத்தில் விற்பனையாகும் தொலைக் காட்சிப் பெட்டிகளின் விற்பனை வரிசையில் 3வது இடத்தை "சியர்ஸ் எல்காட்" பெற்றுள்ளது. 1985–86-ல் 20,000 தொலைக் காட்சிப் பெட்டிகள் விற்கப்பட்டன. வரும் ஆண்டில் அதன் விற்பனை 30,000 வரை உயரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136477
N86-23
N286